# வணிகஜோதி

# VANIKA JOTHY

1983 - 1984

பத்தாவது ஆண்டுச் சிறப்பு மலர்

Annual Number Tenth Special Release

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் அச்சகம்

தொலைபேசி: *23853*

T' **Phone** : 23853

CHETTIAR PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகஜோதி

# VANIKAJOTHY

## 1983 - 1984

பத்தாவது ஆண்டுச் சிறப்பு மலர்

இதழாசிரியர்கள்:

செல்வி நடராஜா கலாநிதி

செல்வி இராமலிங்கம் யோகா

வர்த்தக மாணவர் மன்றம்,
யா/கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம்.

Commerce Students Association,
J/Canagaratnam M. M. V.
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஜோதி"யின் கதிர்கள்.....


ஆசியுரைகள்

1. குறை விருத்திப் பொருளாதாரங்களின் பொது இயல்புகள் பற்றிய ஒரு விளககம் கலாநிதி வி. நித்தியானந்தன் 1
2. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளும் உற்பத்திச் சாத்திய வளைகோடும் திரு. ந. பேரின்பநாதன் M. A. 25
3. சென்மதி நிலுவை - செல்வி. V. புஷ்பலதா 37
4. தேசிய வருமான மதிப்பீடும் அது தொடர்பான சில எண்ணக் கருக்களும் - செல்வி ம. அமிர்தா 41
5. எமது நாட்டிற்குப் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் தவிர்க்க முடியாதது செல்வன் K. இந்திரமோகன் 45
6. பணவீக்கமும் பணச்சுருக்கமும் செல்வன் V. சுதர்சன் 51
7. நவீன வர்த்தக உலகில் நிதிக் கணக்கியலின் பங்கு திரு. பா. பாலச்சந்திரன் 59
8. கணக்கீட்டில் சொத்து மதிப்பீடு திரு. கு. குணசிங்கம் 63
9. நிதிபாய்ச்சல் கூற்றுக்கள் திரு. T. இராஜரட்ணம் 71
10. கணக்கியல் கோட்பாடுகளும் அதன் வரையறைகளும் செல்வி ப. ராஜினி 85
11. இலாபநட்டக் கணக்கு தொடர்பான முக்கிய கணக்கீட்டு விகித ஆய்வு - செல்வன் V. சிவகுருநாதன் 93
12. வர்த்தக வங்கிகள் (MERCHANT BANKS) செல்வன் க சதீஸ் 97
13. தடையில்லா வணிகம் - செல்வன் இ. பிரபாகர் 101
14. செய்தித்தொடர்பும் செய்தித் தொடர்பு சாதனங்களும் செல்வி ருத் ஜெயமாலினி ஆறுமுகம் 107
15. தொழிற்பிரிவும் அதனால் ஏற்படும் விளைவுகளும் செல்வன் K. சிறிதரன் 111
16. மகாவலி அபிவிருத்தித்திட்டமும் நாட்டின் சுபீட்சமும் செல்வன் ந. முரளீகரன் 115
17. இலங்கையில் பொதுக் கூட்டுத்தாபனங்கள் திரு. க. தேவராஜா 119
18. சமூக விஞ்ஞானங்களில் புள்ளி விபரவியலின் பங்கு செல்வன் பெ. பசில் ஜெனதாஸ் 129
19. அளவையியல் ஒரு கண்ணோட்டம் செல்வன் T. ரெக்ஸ் சுரேந்திரா 143


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசிச் செய்தி

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவ மன்றம் ஆண்டு தவறாது 'வணிகஜோதி'யினை வெளியிடுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் 'வணிகஜோதி' யின் பத்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விசேட மலராக வெளியிடத் தீர்மானித்து செயல் புரிவதை பாராட்டுகின்றேன்.

மாணவ சமுதாயம் தனது கல்லூரியின் கருதுகோளுக்கும், ஸ்தாபன நலனுக்கும், அதனது வளர்ச்சிக்கும் அளிக்கின்ற இப்பங்களிப்பு ஒரு சாதனையாகும்.

அரசினர் பாடசாலைகளில் முன்னோடியான கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஒரு பூரணமான கல்வி நிலையம். பாடவிதானப் பெரும் பரப்பினை மாணவ உலகிற்கு வழங்கும் வளமுடைய நிலையமாக நிலைத்துள்ளது.

க. பொ. த. ப. உயர்வகுப்பு மாணவர்கள் வர்த்தகக் கல்விமூலம் உயர்கல்வியும்; உத்தியோக வாய்ப்பும் பெற வகைசெய்யும் முதன்மையான கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இச்சஞ்சிகை வணிகக்கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்களிக்குமென திடமாக நம்புகின்றேன்.

இத்துறையில் வழிகாட்டும் அதிபரையும், ஆசிரியர்களையும் போற்றுவதோடு; மாணவர்களின் தலையாய முயற்சி தங்கு தடையின்றித் தொடரவேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
30-10-1984.

ம. சிமியாம்பிள்ளை
கல்விப்பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நினைவிலிருந்து....

திரு இ. சச்சிதானந்தம் (அதிபர்)

கடந்த இரு ஆண்டுகள் - நினைவில் பளிச்சிடுகின்றன. எமது வர்த்தக மாணவ மன்றம் தங்கு தடையின்றித் தனது பணியினைத் தொடர 'உற்றுளி உதவிய' மேலவர் முன்னாள் அதிபர் திரு. இ. சச்சி தானந்தம் அவர்கள் என்பது மிகையாகாது.

தனது ஆளுமைச் சிறப்பாலும்; எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பதற்கு வழிகாட்டும் தற் திறமையாலும் வர்த்தக மாணவ மன் றம் தலைநிமிர்ந்து செயற்பட நெறிப்படுத்தியவர் அவர்.

பள்ளிப்பிள்ளைகளின் வகுப்பறைக் கல்வி நிறைவுபெறக் கல்லூரி அங்க சம்பூர்ண நிலைக்களனாக மிளிரவேண்டும் என்பதில் தளராத நம் பிக்கையும், விசுவாசமும் கொண்டுழைத்தவர் இப்பெரியார்.

இக்குறிக்கோளின் ஓர் அம்சமாக எமது மன்றத்துக்கென தனி யான நூலகம் ஒன்றை ஆக்கித்தந்து, அலுமாரியில் உறங்கிக் கிடந்த வணிக நூல்களை மாணவர்கள் படித்தறிய வழிவகுத்தமை நினைவகலா.

மேலும் கல்லூரி நிதியொதுக்கீட்டில் முன்னுரிமை தந்து, காலம் தவறாது 'வணிகஜோதி' வெளிவர வாய்ப்பளித்தமை நன்றிமறவா நெஞ்சங்களில் ஆழப்பதிந்துளது.

இன்று அதிபர் திரு. இ. சச்சிதானந்தம் அவர்கள் ஓய்வுபெற் றுள்ளார். எமது மன்றம் உள்ளவுரை வணிகஜோதி மலரும்; வணிக மன்ற நூலகம் வளரும், அதிபர் அவர்களின் நினைவு நிலைக்கும்.

❋ ❋ ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லோர்தம் நெஞ்சம் நயக்கும் கனகரத்தினம்
கல்லூரி ஆக்கிவைத்த கண்ணியனால் — சொல்லரிய
சீர்வணிக ஜோதி சிறப்புமலர் அன்னவனின்
பாதமுன்னர் வைத்தோம் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது அதிபரின் ஆசிச் செய்தி

பத்தாவது இதழாக இடர்பாடுகளிடையே "வணிகஜோதி" வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்; வர்த்தக மாணவர்களிடையே "வணிகஜோதி" ஆற்றும் பணி அளப்பரியது. பாடப்பரப்பின் அறிவையும், அனுபவத்தையும் ஊட்டவல்ல பல விடயங்களை உள்ளடக்கி வெளிவரும் "வணிகஜோதி" மாணவர் மத்தியில் நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

மாணவரின் ஆக்கத்திறனை வெளிக்கொணர்ந்து வளர்ப்பதற்கு இச்சஞ்சிகை உதவிபுரிகின்றது. வகுப்பறை மட்டத்துக்கு மேலாக, இக்கல்விப்பரப்பில் மாணவர் அடையும் அடைவுகளை ஆற்றுப்படுத்த, இச்சஞ்சிகை ஒரு கருவியாகப் பயன்படுகிறது. இத்துறையில் வணிக ஜோதி பெற்ற வெற்றியினைப் பாராட்டுகின்றேன்.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வணிகஜோதி, கல்லூரியின் வணிகத்துறையின் வரலாற்று ஏடாக அமைந்து, பாடசாலை, மாணவர், பழைய மாணவர், ஆசிரியர், பெற்றோர் அனைவரையும் திருப்திப்படுத்துவதோடு, தொழில் நிறுவனங்கள், பல்கலைக்கழகம், பாடசாலை சமுதாயம் ஆகியவற்றின் தொடர்பையும் மேலோங்கச் செய்கின்றது. கல்லூரி வளர்ச்சிக்கு இது சாதகமாக அமையும், வணிக ஜோதி தமிழ் மொழிபோல் நிலைத்து, வணிகத்துறைக்கு வளம்தேடித் தரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.


எமது வர்த்தக மாணவ மன்றத்திற்கும் அதன் உபகாப்பாளர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

*1984 - 11 - 30*

S. V. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR PRINCIPAL



**S. V. Arumugham** M. A.
S. L. E. S. Class V

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக

## சிரேஷ்ட வணிக விரிவுரையாளரின்

# ஆசியுரை

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வணிக மாணவர்கள் "வணிகஜோதி" இதழினை இவ்வருடமும் வெளியிடுவதனையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்களுடைய சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய இதழ்கள் பேருதவி புரியும். மாணவர்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே பல்கலைக்கழக, பல்தொழில் நுட்ப நிலைய பேராசிரியர்களுடைய கருத்துக்களையும் இம்மலர் தாங்கி வருவது விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

சில கல்லூரிகளின் இதழ்களைப் போலல்லாமல், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய "வணிகஜோதி" பத்தாவது இதழாக வெளிவருவது பாராட்டுக்குரியதாகும். பத்தாவது ஆண்டினை எட்டியுள்ள வணிக மன்றம், அதனை விசேடமாக நினைவு கூருவதற்காக இம்முறை பத்தாவது ஆண்டுச் சிறப்பு மலராக "வணிகஜோதியை" வெளியிடுகின்றது.

இம்மலரை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ள மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன், இம்மலருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, இந்த ஆசியுரையை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்,
நுகேகொடை. 25-10-1984.

சி. மாணிக்கவாசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்த நினைவுகள்.....

செல்வி அ. கந்தையா

செல்வி அ. கந்தையா அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகள் எமது வழிகாட்டிகளில் ஒருவராய் விளங்கியவர். 'கல்வியென்பது முது சொத்து' தலைமுறைக்குப் பேணப்படுவது. ஒரு தலைமுறையினர் தமது பங்களிப்பால் கல்விச் செல்வத்தைச் செழுமைப்படுத்தி அடுத்த பரம்பரைக்குக் கையளிப்பதே கல்விப்பணியென்ற கருது கோளுடன் பணியாற்றியவர் செல்வி அ. கந்தையா அவர்கள்

சொல்லின் செல்வி, அ. கந்தையா அவர்கள் பாடம் எடுக்கிறு ரென்றால் சித்திரப்பாவைகளாகிடுவோம். சோர்வு எம்மிடம் கண்டதும் கன்னல் தமிழில் ஹாஸ்யம் உதிரும். வகுப்பில் கலகலவெலி கற்சுவரி லெதிரொலிக்கும், அடுத்த கணம் எடுத்த பாடப்பரப்பின் கருப்பொருளை அழுத்திப்பாடம் நகரும், கடமையைக் கண் என்பர். சேவையே உயிர் நாடியாகக் கருதிப் பணியாற்றும் பண்பினர், அன்னாரின் கவிதை மலர்ச் செண்டு வணிகஜோதியை அலங்கரிக்கின்றது.

வற்றாத ஜீவ ஊற்றே கல்வி, அதனை மாணவர்க்குப் பரிவுடன் போதிப்போரே மாணவருலகம் ஏற்கும் ஆசான்கள். அந்த வரிசையில் உச்சாணியில் உயர்ந்து விளங்கும் நால்லாசிரியையின் நாமம் நன்றியுள்ள நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் யசம் பெற்ற செல்வம் பெறுக யாழ் இந்து மகளிரென வாழ்த்துகின்றோம். வளர்க செல்வியரின் கல்விச் சேவை.

## எங்கள் இதயத்தில்....

செல்வன் S. T. S. இராஜரட்ண வெளிநாட்டுக்குத் திரை கடல் தாண்டித் திரவியம் தேடச் சென்றுள்ளார். இவர் எமது மன்றத் தலைவர். இவ்வருட "வணிகஜோதி" மலரும் வேளையில் வெளிநாடு சென்றமை மன்றத்தினர் மனதில் நிலைத்து விட்டது. சிரேஷ்ட மாணவ தலைவராகிய இவரின் எதிர்காலம் செல்வச் செழிப்புடையதாக அமையக் கலைத் தெய்வத்தை வணங்குகின்றோம்.

பத்திராதிபர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றப் பொறுப்பாசிரியரின்

## ஆசியுரை



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வணிக மாணவ மன்றத்தின் பொறுப்பாசிரியர் என்ற முறையில் ஆசிச் செய்தியை நல்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரியின் அன்புச் செல்வங்களின் சிந்தனைத் துளிகளினாலும், வியர்வைத் துளிகளினாலும் உருவான இந்த பத்தாண்டு மலர் வணிகக் கல்வியின் வளர்ச்சிப்பாதையில் ஒரு முக்கிய மைற்கல்லாக அமையுமென்பதில் ஐயமில்லை.

இம் மலருக்கு நல்லாசிகள் கூறமுற்படும்போது, இதற்கு முன் மலர்ந்த ஒன்பது மலர்களையும் உருவாக்கி, வெளியிட்ட பழைய மாணவர்களையும், அவர்களை நெறிப்படுத்திய ஆசான்களையும் ஒருகணம் சிந்திக்கவே செய்கின்றேன். 'வணிகஜோதி'க்கு நீண்ட சரித்திரம் படைக்க தற்போதைய மாணவர்களின் வழிகாட்டிகள் அவர்கள் அன்றோ.

இன்றைய சூழ்நிலையில் இத்தகைய மலரை வெளியிடுதல் மிகவும் கடினமான செயலாகும். ஆயினும் வணிக மாணவ மன்றத்தினரின் திட சிந்தனை, விடாமுயற்சி, அயரா உழைப்பு என்பனவற்றின் வெளிபாடே இச்சிறப்பு மலராகும்.

வணிகச் சஞ்சிகைகளின் வரலாற்றில் மிகக் குறுகிய காலத்தில் கருகிய மலர்கள் அனந்தம், உயர் கல்வி நிறுவனங்கள் இரண்டினால் வெளியிடப்பட்டு வந்த 'வணிகதீபம்', 'வித்தியோதயம்' ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வணிகக் கல்விக்கு நல்கி உள்ளன. ஆயினும் இவ்விரு மலர்களும் தொடர்ந்தும் நறுமணம் பரப்ப முடியவில்லை. இலங்கையில் கல்லூரி மட்டத்தில் தொடர்ந்து வெளிவரும் ஒரே ஒரு வணிகச்சஞ்சிகை என்ற புகழைப் பாதுகாத்து, மென்மேலும் வளர்ச்சியடைய 'வணிகஜோதி'யை வாழ்த்துகின்றேன்.

*1984-11-30* வ. க. பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பு வருட செயற்குழு 83/84

| | |
|---|---|
| காப்பாளர்: | திரு. S. V. ஆறுமுகம் (அதிபர்) |
| துணைக் காப்பாளர்கள்: | திரு. வ. க. பாலசுப்பிரமணியம்<br>திரு. R. மருதலிங்கம்<br>திருமதி பா. கனகரத்தினம்<br>திரு. க. பழனிவேற்பிள்ளை<br>திரு. அ. உபயசேகரம் (பகுதித் தலைவர்) |
| மன்றப் பொறுப்பாசிரியர்: | திரு. வ. க. பாலசுப்பிரமணியம் |
| தலைவர்: | செல்வன் S. பிரபாங்கன் |
| உப தலைவர்: | செல்வன் S. விஜேந்திரன் |
| செயலாளர்: | செல்வி K. சுபாங்கி |
| உப செயலாளர்: | செல்வன் S. குலேந்திரன் |
| பொருளாளர்: | செல்வன் க. சதீஸ் |
| உப பொருளாளர்: | செல்வன் S. நிதீஸ்வரன் |
| இதழாசிரியர்கள்: | செல்வி R. யோகம்மா<br>செல்வி N. கலாநிதி |
| விளம்பரப் பொறுப்பாளர்கள்: | செல்வன் பெ. பசில் ஜெனதாஸ்<br>செல்வன் இ. பிரபாகர் |
| கணக்காய்வாளர்கள்: | திருமதி பா. கனகரத்தினம்<br>செல்வன் K. இந்திரமோகன் |

| வணிக நூல்நிலையப் பொறுப்பாளர்கள்: | செயற்குழு உறுப்பினர்கள்: |
|---|---|
| செல்வன் G. ஆனந்தகிருஷ்ணன் | செல்வி S. ராஜினி |
| செல்வி R. வசந்தகுமாரி | செல்வி K. மைதிலி |
| செல்வன் Y. சிவகுருநாதன் | செல்வி ம. அமிர்தா |
| செல்வி K. கமலினி | செல்வி K. வையந்திமாலா |
| செல்வி N. நந்தினி | செல்வன் K. V. யோகேஸ்வரன் |
| செல்வி இ. பிரேமினி | செல்வன் M. சத்தியலிங்கம் |
| செல்வன் P. B. பாலமுகுந்தன் | செல்வன் J. ஜெயவேந்தன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMMERCE STUDENTS' ASSOCIATION
# EXECUTIVE COMMITTEE 83-84



**Seated:** (*Left to Right*) Mrs. P. Kanagaratnam (*Vice Patron*), Miss K Subangie (*Secretary*), Mr. A. Upayasegaram (*Sectional Head*), Mr. S. V Arumugham (*Principal*), Mas. S. Pirabanghan (*President*). Mr. V. K. Balasubramaniam (*Vice Patron & Teacher incharge*), Mas. K. Sathes (*Treasurer*), Mr. R. Muruthalingam (*Vice Patron*), Miss R. Yogammah (*Editor*).

**Standing:** (*Left to Right*) Miss K. Vayanthymala, Miss N. Kalanithy (*Editor*), Miss N Nanthini, Miss M. Amirtha, Miss R. Premini, Miss S. Rajini, Miss K. Mythile, Miss K. Kamalini

**Standing:** *A bove* Mas. G. Aaanthekrishan, Mas. V. Sivagurunathan, Mas. S. Nitheeswaran, Mas. K. V. Yogeswaran, Mas S. Kulendran, Mas S. Vijendran, Mas. R. Pirabager, Mas. P. B. Balamukunthan, Mas. J. Jeyavanthan, Mas. M. Sathiyalingam, Mas. B. Basil Jenathas (*Business Manager*, Mas. K. Indramohan (*Auditor*).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டில் வர்த்தகப் பட்டப் படிப்பிற்கு தெரிவான
# எமது மன்ற உறுப்பினர்கள்



செல்வன் வே. துரைசிங்கம்



செல்வி S. நளினி

## க. பொ. த. ப (உயர்தர) பரீட்சை 1983ல்
## நான்கு பாடங்களில் சித்தியடைந்த எமது மன்ற உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வே. துரைசிங்கம் | S. நளினி |
| மு. பஞ்சலிங்கம் | ஐ. கமலராணி |
| சு. பரராஜசிங்கம் | க. கேமாவதி |
| க. சுந்தரகுமார் | மே. அ. ஜெயந்தி |
| க. அமிர்தலிங்கம் | செ. புஷ்பராணி |
| அ. சாள்ஸ் | ந. இரஞ்ஜினிதேவி |
| ச. மயில்வாகனம் | ந. சசிதா |
| ப. முருகானந்தன் | வை. செல்வராணி |
| பொ. உதயகுமார் | த. சிறிதேவி |
| ப. மீரா | கு. வதனு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில் சிறந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள்

# "ஸ்கைரேஸ் எலக்ரோன்ஸ்"

இல. 1 ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்

பழைய, புதிய சினிமாப்பாடல்கள், பக்திப்பாடல்களை
❋ தமிழ், ❋ இந்தி,
❋ ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும்
சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்வதற்கும்

❋ திரைக்கதை வசனங்கள் நாதஸ்வர கச்சேரிகள்
❋ நகைச்சுவைக் கதம்பங்கள் ஆகியவற்றை
ஸ்ரீரியோ முறையில் ஒலிப்பதிவு செய்வதற்கும்
வீடியோ TV றேடியோ
என்பவற்றை தொழில்நுட்ப முறையில் திருத்துவதற்கும்
I. C, ரான்சிஸ்ரர் மற்றும் ஒலிப்பதிவு சாதனங்களை
நிதான விலையில் பெறுவதற்கு நாடுங்கள்

# SKYROS ELECRON'S

**NO 1 Hospital Road,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் ஒரு சில வார்த்தைகள்

எமது கல்லூரி வர்த்தக மன்றம் 1970 ஆண்டு தொடக்கம் "வணிகஜோதியை" வெளிக்கொணர்கின்றது. கல்வியமைப்பில் நாட்டின் பொருளாதார வளம் முக்கிய இடம் வகிப்பதால் வர்த்தகக் கல்வி தனித்துவம் பெற்றுள்ளது. வர்த்தகக் கல்விக்குப் பிரசித்திபெற்ற எமது கல்லூரி வணிகத்துறைக் கல்விக்கு வேண்டிய உசாத்துணைச் சாதனங்களை வழங்குவதில் முன்னோடியாக விளங்கி வருவது கல்லூரிச் சமுதாயம் அறிந்ததே. இந்த வகையில் உருவானதே "வணிக ஜோதி".

"வணிக ஜோதி" போன்ற மலரினை வெளியிடுவது கடினமான காரியமாகும். பொருள் நிலை மட்டுமல்ல; வேறு புறச் சுமைகளும் சஞ்சிகை வெளியீட்டைத் தாமதப்படுத்துவதைச் சந்திக்க வேண்டியுள்ளது. வணிக மாணவமன்றத்தின் தளராத முயற்சியின் வெளிப்பாடே சஞ்சிகையை ஆண்டுதவறாது வெளிவரவகை செய்கின்றது என்பதனைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

எமது கல்லூரி நிர்வாகம் வணிகமன்றத்துக்கு ஆதரவு நல்குகின்றது. மன்றத்தின் உபகாப்பாளர்கள், எமது நல்லாசிரியர்கள் வழிகாட்டலின்றேல் இம்முயற்சி திருவினையாகாது. மேலசக மன்ற உறுப்பினரதும், நிர்வாகிகளதும் அயராத உழைப்பும், ஊக்கமுமே 'வணிகஜோதி' மணம்கமழ வகைசெய்கின்றது.

வணிகக்கல்வியின் வளர்ச்சிக்குப் பணிபுரியும் மலரினை முகர்ந்து பாருங்கள் - சுகம் தரும்; புலமைமிக்க அறிஞர்களின் கட்டுரைகளைக் கருத்துக்கெடுங்கள் - பெருவிருந்தாகும்; மாணவர்களின் சிந்தனைச் செல்வங்களை ஆய்ந்து அனுபவியுங்கள் - அறிவு விசாலமடையும்; வர்த்தகம், நிதி, கணக்கியல், பொருளியல் ஆகியபாடங்களின் உயிர் முடிச்சாக அமையும் "வணிகஜோதி" இத்துறை நவீன வளர்ச்சியை வெளியிடுகின்றது. மாணவரும் ஆசிரியரும் பயன்பெறுவதோடு, தமிழ்ச் சமுதாயமும் 'வணிகஜோதியால்' சகாயமடையும் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது.

மன்ற முயற்சி தொடர ஆதரவாளர்களின் கரங்கள் என்றும் எமது பக்கம் சார கலைவாணி அருள்வாளாக!

நன்றி,

இதழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்து வாழி மணம் கொண்டு என்றும்

வணிகத் துறைக்கென – ஒரு
வரலாறு படைத்த
கல்விக் கூடம்
கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்
கல்வியைக் கருத்தாய்
கற்பதுடன் நில்லாது
வணிகத் துறையின்
பெருமைகள் பேச
தமக்கென சஞ்சிகை ஒன்றை
மாணவர் மன்றம்
மகிழ்ந்தே அமைத்தது.
ஒளியைக் குறிக்கும் 'ஜோதி' அது
வணிகத்துள் கலந்து
'வணிக ஜோதியாய்'
மலர்ந்தே சிறந்தது.
மாணவர் அறிவை
வெளிக்குக் கொணர்ந்து
அவர்தம் ஆக்கத்துக்கு
ஊக்கம் கொடுத்து
அறிவு சான்ற
பெரியோர் பலரின்
ஆக்கமும் அங்கே
இடம்பெறச் செய்து
மாணவர் அறிவை வளர்க்க
விளக்காய் அமைந்தது 'ஜோதி.
ஆண்டுகள் பத்து கழிந்தன – எனினும்
ஆங்கதன் வளர்ச்சி குன்றிடவில்லை
கஷ்டங்கள் பல கண்ட போதும்
கொண்ட கொள்கையில்
உறுதியாய் நின்று
வளர்பிறை போன்று
வளர்ந்து வந்து
முழுமதி அன்ன பிரகாசத்துடன்
மாணவர் அறிவை
மலரச் செய்து
மலர்ந்து வாழி!
மணம் கொண்டு என்றும்.

செல்வி அ. கந்தையா
ஆசிரியை, யாழ். இந்துமகளிர் கல்லூரி
(முன்னாள் எமது மன்ற உப காப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைவின் தாக்கம்

"அடிமைப்பட்ட இந்தியா அடிமைப்படுத்தியவர்களை அடிமைப் படுத்தும்" என்று அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலக வரலாற்றுப் பேராசிரியர் ஆணல்ட் ரோயின்பீ கூறினர். அந்த வரலாற்றுப் பேராசிரியரின் கூற்று அரசியல் ரீதியாகச் செயல் உருப்பெறும் கால கட்டத்தில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இளம் சுதந்திர இந்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கட்கு என்ன தீர்ப்பினை வழங்கியதோ அதே தீர்ப்பினையே வளர்ந்துவிட்ட பாரதமும் அன்னை இந்திராவுக்கு வழங்கி விட்டது.

இந்திராகாந்தி அவர்களின் மறைவு இந்திய உள்நாட்டு அரசியலில் மட்டுமல்ல உலக அரசியலிலேயே பெரியதொரு தாக்கத்தினை ஏற்படுத்தப் போகின்றது.

இன்றைய உலகத் தலைவர்களுள் இந்திரா அம்மையார் அரசியல் வயதால் மூத்தவர். வல்லரசுகள் மத்தியில் சமன் நிலைப்பாட்டினை ஏற்படுத்தி வைத்திருக்கும் தனித்துவமான ஆற்றல் நேற்றுவரை அவரிடமே இருந்து வந்தது. இந்த நிலையை இனி வகிக்கக் கூடியவர் அண்மைக் காலத்தில் தோற்றுவர் என்ற நிலை இல்லை. அது வெறுமையாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய சுதந்திர நாடுகளுக்கு மட்டுமல்ல, பொருளாதார வளர்முக நாடுகளுக்கும் இந்திராகாந்தி அவர்களின் ஆற்றல் பாதுகாப்பு அரணாக அமைந்திருந்தது. அணிசேரா நாடுகள் நூற்று ஒன்றின் இன்றைய தலைவி இந்திரா அம்மையார். இந்த அணியின் தலைமை பல நாடுகட்கு மாறியது உண்டு. பாரத நாட்டின் தலைமையின் பின் அணிசேரா இயக்கமும் ஓர் வல்லரசு அந்தஸ்தினைப் பெற்றுவிட்டது. அணிசேரா அமைப்பு இந்நிலை எய்தியமைக்கு இந்திராகாந்தி அவர்களின் தலைமைத்துவமே காரணம் என்பதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

போரின் கரங்கள் உலகின் கதவைத் தட்டுகின்றன. தட்டுகின்ற அந்தக் கைகளைத் தட்டிக் கேட்பவர் — கேட்கக்கூடிய ஆற்றல் பெற்றவர் இந்திரா அம்மையார் ஒருவரே நேற்றுவரை உலக அரங்கில் இருந்தார். இத்தனையும் இன்று உலக அரங்கில் வெறுமையாகிவிட்டன.

பாரதம் ஒரு தீபகற்பம் — இல்லை அது ஒரு துணைக்கண்டம். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமையும் அதற்கு உண்டு. இந்திரா அம்மையார் ஒரு பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமர் என்ற பெருமையை மட்டும் கொண்டிருக்கவில்லை, பல ஜாதி, இன, மத, மொழி பேதங்களைக் கொண்ட பென்னம்பெரிய தேசத்தைத் தொடுத்து வைத்திருக்கும் ஒரு கதம்ப மாலையாகவும் அவர் பெருமை பெற்றிருந்தார்.

அன்று அண்ணல் காந்தியடிகள் மறைந்தபொழுது பாரத நாட்டில் தடக்கி வீழ்ந்த இடமெல்லாம் தேசியத் தலைவர்கள் தென்பட்டார்கள். இன்று பாரத நாட்டில் அந்த நிலை இல்லை. அம்மையார் அவர்களுடன் அத்தகைய - முழு நாடு தழுவிய தேசியத் தலைமை கேள்விக் குறியாகத் தொக்குநிற்கின்றது என்ற கசப்பான உண்மையை நாம் மறைத்துவிட முடியாது.

அண்ணல் காந்தியடிகளின் உயிரை எந்த மதவெறி கடத்திச் சென்றதோ அதே மதவெறி மீண்டும் முப்பத்தேழு ஆண்டுகளின் பின் அன்னை இந்திராவின் உயிரையும் கடத்திச் சென்றிருக்கின்றது. இந்த இரு துயர சம்பவங்கட்கும் இடையில் உள்ள நிலைமை அல்லது ஒற்றுமை அவற்றின் முன் பின் விளைவுகள் நிச்சயம் அறிஞர்களின் ஆய்வுக்குரியதாகும்.

அன்னை இந்திராகாந்தி அவர்களின் மறைவின் தாக்கம் இந்திய துணைக்கண்டத்தில் மட்டுமல்ல ஐந்து கண்டங்களிலும் எதிரொலிக்கப் போகின்றது. இந் நிலையை பாரத துணைக் கண்டமும் உலகமும் எப்படி அணுகப்போகின்றன. இதுவே இன்றைய உலகின் அவசரமும் அவசியமுமான உடனடித் தேவை.

05-11-84

இதழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினையுள் ஒற்றுமை:

# குறைவிருத்திப் பொருளாதாரங்களின் பொது இயல்புகள் பற்றிய ஒரு விளக்கம்

கலாநிதி வி. நித்தியானந்தன்
தலைவர், வணிகவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம்:

இன்று பொருளியலின் ஒரு பிரதான பகுதியாக விளங்கும் அபிவிருத்திப் பொருளியல் குறைவிருத்திப் பொருளாதாரங்களின் பிரச்சினைகளையே தனக்குரிய கருப்பொருளாகக் கொண்டு வளர்ச்சியடைந்ததொன்றாகும். இப் பிரச்சினைகள் பற்றிய பகுப்பாய்வினை மேற்கொண்டு, அவற்றுக்கான தீர்வுகளை அலசி ஆராய்ந்து, குறைவிருத்தி நாடுகளின் பொதுவான அபிவிருத்திக்குதவுவதே அபிவிருத்திப் பொருளியலின் முக்கிய நோக்கமாகும். அவ்வாறு செய்ய முற்படும்போது, பிரச்சினைகளைத் தனி நிலையில் இனம் காண்பதற்கு முன்னதாகக் குறைவிருத்தி நாடுகள் பற்றிய பொதுவான ஒரு கண்ணோட்டம் முதற்கண் அவசியமாகின்றது எனலாம். அவ்வாறான ஒரு முயற்சியின் வழி குறைவிருத்திப் பொருளாதாரங்களின் பொது இயல்புகளை வெளிக்கொணர்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இத்தகைய ஒரு கண்ணோட்டம், இந்நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளின் பரப்பினையும் முக்கியத்துவத்தினையும் எடுத்துக்காட்டவல்லதாயிருப்பதுடன், அவை எழும் அடிப்படையை நன்கு புரிந்து கொள்வதற்கும் வாய்ப்பளிப்பதாயிருக்கும். குறைவிருத்தி நாடுகளின் பிரச்சினைகள் புலவும் குறைவிருத்தி நிலையின் வெளிப்பாடுகள் எனக் கொள்வோமாயின், குறைவிருத்தி நிலை என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கும், ஈற்றில் அதனைத் தகுந்தபடி வரையறை செய்வதற்கும் நாடுகளை இணைந்த வகையில் நோக்குவது பெரிதும் பயனுடையதாயிருக்கும். அதுமாத்திரமின்றி, இலங்கை போன்ற ஒரு தனி நாட்டினைப் பொறுத்தவரை அதன் பிரச்சினைகள் தனித்துவம் வாய்ந்தவையல்ல. உலகின் பெரும்பாலான நாடுகள் அவை போன்ற சிக்கல்களினுற் பீடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து அமைதி காண்பதற்கும், அதே அடிப்படையில், அவற்றைத் தீர்க்கும் வகையில், நாடுகள் சர்வதேச மட்டத்தில் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கும் இது உதவும். ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் அபிவிருத்தி பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடு (UNCTAD) போன்ற இணைப்புகள் ஏற்படுவதும், அவற்றின்வழி பிரச்சினைகள் பற்றிய ஒருமித்த அணுகுமுறைகள் பிறப்பதும் இதன் மூலமே சாத்தியமாயிற்று.

ஆனால் இவ்வாறு செய்ய முற்படுமிடத்துக் குறைவிருத்தி நாடுகள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய சக்திகளைவிட அவற்றை வேறுபடுத்தும் காரணிகளே அதிகமானவை என்பது கருத்திலெடுக்கப் படவேண்டிய தொன்றாகும். ஏனெனில், குறைவிருத்திப் பிரதேசங்கள் எனக் குறிக்கப்படுபவை, இன்று உலகின் பெரும்பாலான மக்களை உள்ளடக்கியிருப்பதுடன், பெரும்பான்மையான நாடுகளையும் கொண்டுள்ளன. உலகின் ஏறக்குறைய மூன்றிலிரண்டு பகுதி மக்கள் வாழும் 141 நாடுகள் இன்று குறைவிருத்தி நாடுகள் எனக் கொள்ளப்படுகின்றன இவையே மூன்றாவது அகிலம் எனவும் அழைக்கப்படுகின்றன. மிகுதி மூன்றிலொரு பகுதி மக்கள் வதியும் ஏறக்குறைய 24 நாடுகள் மாத்திரமே அபிவிருத்தியடைந்தவை எனக் கருதப்படுகின்றன. ஆகவே மூன்றாவது அகிலத்தைச் சார்ந்த நாடுகள் பணரீதியாக வறியவை என்ற பொதுத்தன்மையைக் கொண்டு காணப்பட்டாலும் ஏனைய அம்சங்களாகிய பரப்பளவு, மக்கள் தொகை, கலாச்சாரம், பொருளியல் நிலை, சமூக, அரசியல் அமைப்பு என்பவற்றைப் பொறுத்தவரை பெரும் வேறுபாடுகளைத் தம்மகத்தே கொண்டனவாக விளங்குகின்றன.

மேற்கூறிய வகையிலான வேறுபாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள் மத்தியிலும் காணப்பட்டாலும், அவை குறைவிருத்தி நாடுகளின் அளவுக்கு முக்கியத்துவம் பெறுவதில்லை. இதன் பின்னணியிலான ஒரு முக்கிய உண்மை யாதெனில், அபிவிருத்தியின் உயர் மட்டங்களில் நாடுகளுக்கிடையிலும், மக்களுக்கிடையிலும் ஏற்படக்கூடிய வேறுபாடுகள் பலவும் முற்றாக மறைக்கப்பட்டு விடுகின்றன என்பதாகும். ஆகவே அபிவிருத்தியடைந்த நாடுகளை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து, அவற்றின் மத்தியிலான சமூக, கலாச்சாரப் பின்னணி எவ்வாறிருந்தாலும் அவை ஏறக்குறைய ஒருமித்த வாழ்க்கை முறையைக் கொண்டவையாகவும், ஒரே நோக்குடையவையாகவும் காணப்படுவதுடன், ஏனையவற்றைவிடப் பொருள்முதல் அம்சங்களிலேயே கூடிய அக்கறையுடையவையாகவும் விளங்குகின்றன. மேலும் அவற்றை வேறுபடுத்தும்போது கூடப் பொருளாதார முகாமைக்கு முக்கியத்துவம் அளித்து முதலாளித்துவ நாடுகள், சமவுடைமை நாடுகள் எனப் பாகுபடுத்துவது வழக்கமாக உள்ளதேயன்றி, ஏனைய இயல்புகள், பொதுவாகக் கருத்தில் எடுக்கப்படுவதில்லை. ஆனால் குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை சமூகம், கலாசாரம், பண்பாடு, அரசியலமைப்பு என்பவை முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவது மாத்திரமின்றி அவை பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு தடையாகவும், பல சந்தர்ப்பங்களில் அமைந்துள்ளன. எனவே குறை விருத்தி நாடுகளின் ஒருமித்த தன்மைகள் எவை என நோக்குவதற்கு முன்னதாக, அவற்றிடையே பிரிவினைக்குரிய அம்சங்களாகக் காணப் படுவன பற்றிக் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகின்றது.

பிரிவினை அம்சங்கள்:

குறைவிருத்தி நாடுகள் மத்தியிலான அமைப்பு ரீதியான வேறு பாடுகள் பலதரப்பட்ட அடிப்படைகளிலிருந்து எழக்கூடியவையாக இருந்தபோதும், அவற்றை வசதி கருதி நாம் ஏழு பிரதான பிரிவு களுக்குள் அடக்கிக் கொள்ள முடியும். குறைவிருத்தி நாடுகள் பெரு மளவுக்குப் பரந்துள்ள ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளை மேற்கோள் காட்டி இவ்வடிப்படைகளை விரிவுபடுத்தலாம்.

1. பருமனும் வருமான மட்டமும்:

முதல் நிலையில், இலகுவாக வெளிப்படக்கூடிய வேறுபாடு நாடு களுக்கிடையிலான பருமன் பற்றியதாகும். பருமன் என்னும்போது அது தனியே புவியியல் அம்சத்தினை மாத்திரமின்றிச் சனத்தொகை, வருமானம் என்பவற்றையும் உள்ளடக்குவதாகும். ஐக்கிய நாடுகள் சபையில் முழுமையான அங்கத்துவம் பெறும் நாடுகளுள், நாம் ஏற் கனவே சுட்டிக்காட்டியபடி, இன்று 141 நாடுகள் குறைவிருத்தி நாடு கள் எனக் கருதப்படுகின்றன. இவற்றுள் 72 நாடுகள் 15 மில்லியன் மக்களுக்குக் குறைவான சனத்தொகையைக் கொண்டிருக்க, இன்னும் 51 நாடுகள் 5 மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையை உடை யவையாகும். இந்தியா, எகிப்து, நைஜீரியா, பிரேசில் போன்ற சனத் தொகை மிகுந்த பெரிய நாடுகளுடன் இணைந்த வகையில் நேபாளம், ஜோர்டான், பரகுவே, இலங்கை போன்ற சிறிய நாடுகளும் குறை விருத்திப் பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. பரப்பளவு சனத் தொகை என்பவற்றைப் பொறுத்தவரை ஏற்படக்கூடிய வேறுபாட்டின் உயர்ந்த நிலையாக எடுத்துக்காட்டக்கூடியது இந்தியாவுக்கும் மேற்கு ஆபிரிக்காவைச் சார்ந்த கம்பியா என்ற நாட்டுக்குமிடையிலான வேறு பாடாகும். இந்தியா 660 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் தொகை யைக் கொண்டிருக்கப் பின்னையது 6 லட்சத்துக்கும் குறைவான தொகை யினரையே கொண்டுள்ளது. நாடுகளின் வேறுபடும் பருமன் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தன்மையைப் பெரிதும் மாறுபடச் செய்யக்கூடியதொன்றாகும். நாடொன்றின் பருமன் கூடியிருக்குமிடத்து அது வளங்களின் கொடையை அதிகரிப்பது மாத்திரமின்றிப் பல்வகைப் படுத்துவதுடன், சந்தையை விரிவுபடுத்துவதற்கும் துணைபுரியும். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு அக் குறிப்பிட்ட நாடு இதர வெளி நாடுகளின்மீது தனது பொருளியல் தேவைகளுக்குத் தங்கியிருப்பதும் குறைவடையும். ஆனால் மறுபுறம், தேசிய இணைப்பு நிர்வாகக் கட்டுப்பாடு என்பவற்றை அதிகரித்த பருமன் சிக்கலுக்குள்ளாக்குவதுடன், ஒரு நாட்டினுள்ளே பிரதேச ரீதியான வேறுபாடுகள் பலமடைந்து செல்வதற்கும் காலாயிருக்கலாம். சிறிய நாடொன்றின் நிலையில் இப் பிரச்சினைகள் எதிர்மாறான தன்மையைப் பெறும்; அதனை நிர்வகிப்பது சுலபமாயிருந்தாலும், பொருளாதார வாய்ப்புகளைப் பொறுத்தவரை நாட்டின் சிறிய பருமன் வசதிக்குறைவுகளை உருவாக்கலாம். எனினும், ஒரு நாட்டின் பருமனுக்கும் அதன் தேசிய தலா வருமான மட்டத்திற்குமிடையே எந்தவிதமான ஒரு குறிப்பிட்ட தொடர்பும் நிலவுவதாகக் கூறமுடியாது. அதேபோல, அவ் வருமானத்தின் பரம்பலுக்கும் நாட்டின் பருமனுக்கும் மத்தியில் எந்த விதமான ஒரு போக்கினையும் எடுத்துக் காட்டுவதும் கடினமானது. இது விடயத்தில் மிக இலகுவாக முன்வைக்கப்படக்கூடிய உதாரணம் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளுக்கும் ஏனைய குறைவிருத்தி நாடுகளுக்குமிடையிலான வேறுபாடாகும். எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் தம் போன்ற ஏனைய குறைவிருத்தி நாடுகளுக்கு மேலாக மாத்திரமின்றிப் பல அபிவிருத்தியடைந்த நாடுகளையும்விட அதிகளவான தேசிய வருமானத்தை உழைத்துக்கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் அவ் வருமானத்தின் பரம்பல் மிகவும் சமமற்ற முறையில் அமைந்திருப்பதையும் சுட்டிக்காட்ட முடிகின்றது. ஆனால் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளைச் சாதாரண நிலைக்கு ஒரு புறநடை எனக் கொண்டு ஒதுக்கிவிட்டாற் கூடப் பருமனுக்கும் வருமானத்துக்குமிடையில் எதுவித தொடர்பையும் நிலைநாட்டுவது கடினமானதே. உதாரணமாக, இந்தியாவின் மிகப் பெரிய சனத்தொகையுடனும் அதன் தலா வருமான மட்டம் வருடாந்தம் 175 டொலருக்குக் குறைவாகக் காணப்பட, இந்தியாவிலிருந்து அதிக தூரத்தில் இல்லாத சிங்கப்பூர் ஏறக்குறைய 2.4 மில்லியன் மக்களை மாத்திரம் கொண்டிருந்தாலும் வருடாந்தம் 2,800 டொலருக்குக் குறையாத தலா வருமானத்தைக் கொண்டுள்ளது.

2. வரலாற்றுப் பின்னணி:

குறைவிருத்தி நாடுகள் பலவற்றினதும் வரலாற்றுப் பின்னணி பெரிதும் வேறுபடுவதாக அமைந்துள்ளது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கக் குறைவிருத்தி நாடுகள் அனைத்தும் மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் பலவற்றினதும் குடியேற்ற நாடுகளாயிருந்து சுதந்திரம் பெற்றன என்ற அளவில் ஒற்றுமைப்பட்டாலும், அந் நிலையிலிருந்து ஏற்பட்ட வளர்ச்சிகள் வேறுபட்ட வரலாற்றுப் பின்னணியை ஆக்கிக் கொடுக்கவல்லனவாயிருந்தன. அதற்கேற்ப நாடுகளின் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியும் பாதிக்கப்படுவதாயிற்று. குடியேற்ற நாட்டு ஆதிக்கம் செலுத்திய வல்லரசுகளுள் பிரித்தானியாவும், பிரான்சும் முதலிடம் வகித்தாலும் போர்த்துக்கல், நெதலாந்து, ஸ்பானியா, ஜேர்மனி, பெல்ஜியம் என்பனவும் குடியேற்ற நாடுகளைத் தம் கீழ் வைத்திருந்தன.

லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளைவிட முன்னதாகச் சுதந்திரம் பெற்றிருந்ததுடன், பெரும்பாலும் ஸ்பானிய அல்லது போர்த்துக்கேய ஆதிக்கத்துக்குட்பட்டவையாகவும் காணப்பட்டன. இது அவற்றின் பொருளாதார, சமூக கலாச்சார அம்சங்களை வேறுபட்ட ஒரு தன்மைக்குள்ளாக்குவதற்குக் காலாயிற்று. ஆசிய நாடுகள் மத்தியில் அவற்றின் குடியேற்ற நாட்டுப் பின்னணிக்கேற்ப மக்களின் கலாச்சார மரபுகள் பல்வகையினதாக அமைவதையும், சுதேசிய மக்களின் வாழ்க்கை முறையுடன் மேற்கத்திய வல்லரசுகளின் நாகரீகம் இணைந்துவிடத்து, அது பலதரப்பட்ட நிறுவன, சமூக அமைப்புக்களை உருவாக்கியிருப்பதையும் காணலாம். உதாரணமாக, இலங்கையிலும் இந்தியாவிலும் பிரித்தானியாவின் செல்வாக்கும், இந்தோனேசியாவில் டச்சுச் செல்வாக்கும், பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஸ்பானிய, அமெரிக்கத் தாக்கமும் பரந்திருப்பது தெளிவானது. இதன் காரணமாகவே சமீபத்திற் சுதந்திரமடைந்த ஆபிரிக்க நாடுகள் பலவும், தாம் ஆதிக்கத்துக்குட்பட்ட வல்லரசின் செல்வாக்கைத் தவிர்த்து ஆபிரிக்கமயமாவதிற் கூடியளவு கவனம் செலுத்தி வருகின்றன. எனினும் இம் முயற்சியில் அவை பெருமளவு வெற்றியடைந்திருப்பதாகக் கூறமுடியாது.

3. வளங்களின் கொடை:

வளங்களின் கொடை என்னும்போது, அது நிலம், அதிலான கனிப்பொருட்களும் மூலப் பொருட்களும் என்ற இயற்கை வளங்களையும், மக்களும் அவர்களது திறமையும் என்ற மனித வளங்களையும் உள்ளடக்கும். இவை இரண்டும் சமமாகப் பரந்திருத்தலே பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரை வாய்ப்புடையதாயினும், பல குறைவிருத்தி நாடுகளில் இயற்கை, மனித வளங்கள் மிகவும் சீரற்ற முறையிற் பரந்திருப்பதையும், அதுவே அவற்றின் குறைவிருத்தி நிலைக்கு ஓர் அடிப்படைக் காரணமாயிருப்பதையும் காணலாம். இத்தகைய சமமற்ற பரம்பலுக்குரிய உயர்நிலை எடுத்துக்காட்டுக்களாக மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் வளத்தையும், வங்காளதேசம், லாவோஸ், ரொகோ போன்ற நாடுகளின் மனித வளத்தையும் சுட்டிக்காட்டலாம். முன்னையவை மனித வளத்தைப் பொறுத்தவரையிலும், பின்னையவை இயற்கை வளங்களைப் பொறுத்தவரையிலும் பெரும் பற்றுக்குறை நிலையிலிருப்பதனால் அவை உரிய வகையில் அபிவிருத்தியடைய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரத்தில், மனித வளம் என்பது வெறுமனே மக்களின் எண்ணிக்கையை மாத்திரம் குறித்து நிற்பதொன்றல்ல என்பதும் கவனிக்கப்பட வேண்டியதொன்ருகும். அவர்களின் கலாச்சாரப்பின்னணி, முன்னேறுவதற்கான ஆர்வம், தொழில் செய்வதிலான அவர்களின் அணுகுமுறை, கல்வித்தரம் என்ற இன்னேரன்ன விடயங்களை அது உள்ளடக்குவதாயிருக்கும். மேலும், மக்களின் திறமையை வெளிக் கொணர்வதில் ஆட்சிமுறை, நிர்வாகம் என்பவற்றுக்கும் ஒரு பங்குண்டு. இயற்கை வளங்களில் ஏற்படக் கூடிய பற்ருக்குறையையும், மனிதவளம் தரமுடையதாயின், ஈடுசெய்ய முடியும், ஆனல் அதன் தர நிர்ணயம், ஒன்றுடனென்று தொடர்பு கொள்ளும், இனம், மதம், கலாச்சாரம், மரபுகள், ஆட்சிமுறை என்ற பலவேறு அம்சங்களில் தங்கியுள்ளது. அதற்கேற்ப நாடுகளின் பொருளாதார அமைப்பும், அதன் அபிவிருத்தி வேகமும் வேறுபடுகின்றன.

4. பொதுத் துறை, தனியார் துறை என்பவற்றின் சார்பு ரீதியான முக்கியத்துவம்:

மூன்ருவது அகிலத்தைச் சார்ந்த நாடுகள் அனைத்துமே பெரும் பாலும் கலப்புப் பொருளாதார முறைமைகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. எனினும் பொருளாதார அமைப்பில் தனியார் துறையும், பொதுத்துறையும் கொள்ளும் பங்கு நாட்டுக்குநாடு வேறு பட்டுச்செல்வதாக உள்ளது. இது குறிப்பிட்ட நாட்டின் வரலாற்று அரசியற் பின்னணிகள், அதன் பொதுவான பொருளாதாரக் கொள்கை என்பவற்றின் செயற்பாடாகவே விளங்குகிறதெனலாம். இவ்வகையில் லத்தீன் அமெரிக்க நாடுகள், பொதுவாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளை விடப் பெரியதொரு தனியார்துறையை வைத்திருக்கின்றன. ஆபிரிக்க நாடுகளில் மனித வளம் ஓரளவுக்கு மட்டுப்படுத்தப் பட்டிருப்பதால், அதனைப் பல்வகை முயற்சிகளிற் சிதறவிடாமல் ஒருமுகப்படுத்திச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற கருத்தில், தனியார் முயச்சியை விடப் பொதுத் துறை முயற்சிகள் பரவலாக வலியுறுத்தப்பட்டு வந்துள் ளன. இந் நாடுகளில் அனுமதிக்கப்பட்ட தனியார் முயற்சிகள் பெரு மளவில் அபிவிருத்தியடைந்த அந்நிய நாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டவையாகவே இருந்து வந்துள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

தனியார் துறைக்குக் கணிசமான முக்கியத்துவம் அளிக்கப்படும் நாடுகளிலும், அத்துறையிலான அந்நிய உடைமைகளின் அளவும், செல் வாக்கும் நாடுகளிடையே வேறுபாட்டை ஏற்படுத்தும் இன்னெரு தனிக் காரணியாக அமைகின்றன. அந்நிய உடைமை வளர்ந்து செல்வ தொன்ருக இருக்குமாயின், அது ஏனைய நாடுகளில் இல்லாத சில புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை இக் குறிப்பிட்ட நாட்டைப் பொறுத்தவரை உருவாக்குவ தாயிருக்கலாம். அவற்றின் லாப அளவு, அதன் எந்த அளவை வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கவேண்டும். மற்றும் நிறுவனங்களின் மீதான பொதுவான கட்டுப்பாடு என்பவை இவற்றிற் சிலவாகும்.

பொதுத் துறை, தனியார் துறை என்பவை பெறும் முக்கியத்துவம் அரசாங்கத்தின் பொதுவான பொருளாதாரக் கொள்கையின் செயற் பாடாக இருந்தாலும், இவ்விரு துறைகளில் எது கூடியளவான முக்கியத் துவம் பெறுகின்றது என்பதற்கேற்ப அரசாங்கம் பின்பற்றும் ஏனைய பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைந்து செல்லலாம் உதாரண மாக, வேலைவாய்ப்புகளைப் போதியளவு உருவாக்கும் கொள்கையை எடுத்துக்கொள்வோமாயின், பொதுத்துறை பெரிதாயிருக்கும் நாடுகளில் நேரடியான அரசாங்க முதலீடுகளின் வடிவில் அது செயற்படுத்தப் படும். ஆனால் தனியார் துறையினூடாக அமுல் நடத்தப்படுகின்றதாயின் தனியார் நிறுவனங்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கக்கூடிய வகை யில் முதலீடுகளை அமைத்துக் கொள்வதற்கு அவற்றிற்கு வரி நிவாரணம் போன்றன வழங்கப்படவேண்டியிருக்கும். ஆகவே பரந்த அளவிலான வேலையின்மை என்ற பிரச்சினை பொதுவாக இருந்தாலும் அதற்கான தீர்வு பொதுத்துறை, தனியார்துறை என்பவற்றின் சார்பு ரீதியான முக்கியத்துவத்துக்கேற்ப வேறுபட்டுச் செல்கின்றது.

5. விவசாய, கைத்தொழில் அமைப்புக்களின் தன்மை!

பொதுவாக நோக்குமிடத்து, விவசாயத் துறை பெறும் அதிகள வான முக்கியத்துவம், கைத்தொழில் துறை தகுந்தளவு வளர்ச்சி பெறுமை என்பனவே குறைவிருத்தி நாடுகளின் பண்பாக எடுத்துக் காட்டப்பட முடியும். எனினும், தனித்தனியாக இத்துறைகளை எடுத்துப் பார்க்குமிடத்து, அவற்றின் தன்மை, தராதர முக்கியத்துவம் என்பன நாடுகள் மத்தியிற் பெருமளவு வேறுபட்டுச் செல்வதை அவதானிக்க லாம். பெரும்பாலான குறைவிருத்தி நாடுகளில் விவசாயமான்து ஒரு தொழில் நடவடிக்கையாக மாத்திரமன்றிச் சமூக, கலாச்சார அம்சங் களுடன் இணைந்த ஒரு வாழ்க்கை முறையாகவே வளர்ந்துள்ளதென லாம். எனினும் விவசாய முறைகளின் அமைப்பு, போக்கு என்பனவும் நில உடைமை முறையும் ஆசிய. ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடு களிடையே பெரிதும் வேறுபடுகின்றன. இவ்வகையில் லத்தீன் அமெரிக்க விவசாய அமைப்பு ஓரளவுக்கு ஆசிய அமைப்பை அணுகுவதாகக் கூற லாம். எனினும், கலாச்சார ரீதியாக அவைகூட ஒன்றிலிருந்து மற்றது பெரிதும் வேறுபட்டதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல, புதிதாக இந்நாடுகளில் வளர்ச்சியடைய முற்பட்டிருக்கும் கைத்தொழில், சேவைத்துறைகளிலும் பலத்த வேறுபாடுகளைச் சுட்டிக்காட்ட முடிகின்றது. லத்தீன் அமெரிக்க நாடுகள் பொதுவாக ஏனைய ஆசிய, ஆபிரிக்க நாடுகளைவிட முன்னேற்றமடைந்த கைத்தொழில் துறையைக் கொண்டிருப்பதாகக் கூறலாம். இதற்கு அவை அனுபவித்து வரும் நீண்டகால சுதந்திரம், உயர்மட்டத் தேசிய வருமானம், பெரும் கைத்தொழில் வல்லரசாகிய ஐக்கிய அமெரிக்கா அருகே இருத்தல் என்பன காரணங்களாகச் சுட்டப்பட முடியும். ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பலவும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் தரத்தை அடைவதற்கே பெரிதும் சிரமப்பட வேண்டியனவாக உள்ளன. ஆனால் 1960 களின் இறுதிக்கட்டத்திலும் 1970 களிலும் தாய்வான், தென் கொரியா, ஹொங்கொங், சிங்கப்பூர் போன்ற ஆசிய நாடுகள் கைத்தொழில் வளர்ச்சியில் ஓர் புதிய அணுகுமுறையைக் கையாண்டு கைத்தொழில் நாடுகளாகவே மாற முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மறுபுறம், இந்தியா மூன்றுவது அகில நாடுகளிடையே மிகப் பெரும் கைத்தொழில் துறையைக் கொண்ட ஒரு நாடாக விளங்குகிறது. எனினும் அதன் மிகப்பெரிய கிராமிய சனத்தொகையுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து, இத் துறையின் சார்பு ரீதியான முக்கியத்துவம் பெரிதும் குறைவடைந்து விடுகின்றது.

ஆகவே, குறைவிருத்தி நாடுகள், அடுத்த பகுதியில் நாம் எடுத்துக் காட்டுவதுபோல, ஒருமித்த பிரச்சினைகளைக் கொண்டவையாக இருந்தாலும், அவற்றைத் தீர்ப்பதற்கான அபிவிருத்தித் தந்திரம் குறிப்பிட்ட நாட்டின் முதல்தர (விவசாயம், காட்டுத் தொழில், மீன்பிடி), இரண்டாந்தர (கைத்தொழில்), மூன்றாந்தர (வணிகம், நிதி, போக்குவரத்து மற்றும் சேவைகள்) முயற்சிகளின் தராதர" முக்கியத்துவத்திற்கேற்ப வேறுபடுவதாயிருக்கும்.

6. வெளிநாட்டு அரசியல், பொருளாதார சக்திகளின்மீது தங்கியிருத்தல்:

இன்றைய நிலையில் உலகின் எந்த ஒரு நாடுமே சுயமாகத் தனித்தியங்க முடியாவிடினும், குறைவிருத்தி நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளை விட ஏனைய நாடுகளின்மீது தங்கியிருக்கும் தன்மை பொதுவாக அதிகமானதென்லாம். எனினும் இத் தன்மை வேறுபட்ட தராதர அளவில் அமைந்து, குறைவிருத்தி நாடுகள் மத்தியில் மாறுபாடு தோன்றுவதற்குப் பொறுப்பாயிருந்துள்ளது. சில நாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தங்கியிருக்க, இன்னும் சில மிகையான தாக்கத்திற்குட்பட்டு, அந்நிய நாடொன்றின் உறைவிடமாகவே மாறு விடுகின்றன. பிலிப்பைன்ஸ் மீது படிந்திருக்கும் அமெரிக்க செல்வாக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னைய நிலைக்குரிய சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். இவ்வாறான தங்கியிருத்தல் வெறுமனே பொருளாதார ரீதியான வெளிப்பாடுகளாயன்றி, மக்களின் வாழ்க்கை அமைப்பு, அதன் விழுமியங்கள், நுகர்வு, கல்வி, கலாச்சாரம் போன்ற பலவேறு அம்சங்களையும் செல்வாக்கினுக்குட்படுத்தக் கூடியதாகும். குறைவிருத்தி நாடுகள் பலவற்றினது அபிவிருத்தி வெளிநாட்டுச் சக்திகளில் அது தங்கியிருக்கும் தராதர அளவினால் நிர்ணயிக்கப்படுகிறதென்று கூறின் அது மிகையாகாது.

7. அதிகாரப் பரம்பலும், நாட்டினுள் அரசியல், நிறுவன அமைப்பும்:

குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திப் பிரச்சினைகளை நுணுகி நோக்குவோமாயின் அவற்றிற்கான தீர்வுகள், இறுதி நிலையில், நாடு பின்பற்றும் பொருளாதாரக் கொள்கைகளிலன்றி, அந் நாட்டின் அரசியல் அமைப்பிலும், அவ்வமைப்பில் அதிகாரம் பெற்றிருக்கும் ஆட்சியாளர் குழாம், அதன் நலன்கள், அது பின்பற்றும் கொள்கை என்ற இவை போன்றவற்றினாலேயே பெருமளவுக்கு நிர்ணயிக்கப்படுவதாகக் கூறலாம். ஒரு நாட்டில், எந்த ஒரு குழாம் அரசியல் ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் செல்வாக்குப் பெறுகிறதென்பது பெருமளவுக்கு அந்நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக வரலாறுகளின் விளைவேயாகும். லத்தீன் அமெரிக்காவின் பெரு நில முதலாளிகள், ஆபிரிக்காவின் உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள், மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் முதலாளிகளும், நிதி முகலாயர்களும், ஆசியாவின் நிலப் பிரபுக்கள், வட்டிக்குப் பணம் கொடுப்போர், கைத்தொழில் அதிபர்கள் எல்போர் இவ்வாறு பல்வேறு நாடுகளிலும் செல்வாக்குப் பெற்ற வகுப்பினருக்கான எடுத்துக்காட்டுகளாவர். எவ்வாறாயினும், பெரும்பாலான குறைவிருத்தி நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, ஒரு சிறிய, செல்வாக்கு மிக்க குழுவினரின் கட்டுப்பாட்டினுள் அகப்பட்டிருப்பதாகக் கூறலாம். பல குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தி, இத்தகைய கட்டுப்பாட்டின் தன்மைக்கேற்ப மாறுபட்டுச் செல்லக்கூடியதாயுள்ளது. அதனாலேயே பொருளாதார, சமூக அபிவிருத்தி கருத்துள்ளதொன்றாக இடம்பெற வேண்டுமாயின், இத்தகைய செல்வாக்கு மிக்க குழாம் பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட வேண்டும் அல்லது அவர்களுடைய ஆதரவு பெறப்பட வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இதன் கருத்து யாதெனில் ஒரு நாட்டின் நிறுவன ரீதியான அம்சங்களில் இணையான மாற்றங்கள் ஏற்படாவிட்டால் அந் நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்தி சாத்தியப்படாது என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, மேற்கூறிய வேறுபாடுகளிலிருந்து குறைவிருத்தி நாடுகளை நாம் பொதுமைப்படுத்தி அவற்றின் பிரச்சினைகளை ஆராய முற்பட்டாலும், அவை அடிப்படைத் தன்மை வாய்ந்த பல பிரிவினை அம்சங்களைக் கொண்டவை என்பது புலனாகின்றது இத்தகைய பிரிவினை அம்சங்களை முற்றாகப் புறக்கணிக்க முடியாத காரணத்தினாலேயே மூன்றாவது அகிலத்தைச் சார்ந்த நாடுகளை இன்று மூன்று பிரிவுகளாக நோக்குவதும் வழக்கமாகி உள்ளது. முதலாவதாக, குறிப்பிட்ட 141 நாடுகளுள் மிக வறியவையாகக் கருதப்படும் 42 நாடுகளை ஐக்கிய நாடுகள் சபை 'அபிவிருத்தியில் மிகக் குறைந்த நாடுகள்' என வகைப் படுத்தியுள்ளது. இவையே சிலசமயங்களில் 'நான்காவது அகிலம்' எனவும் குறிக்கப்படுகின்றன. வறிய நாடுகளுக்குள்ளும் இவை மிக வறியவை யாயிருப்பதால் சர்வதேச மட்டத்திலான உதவித் திட்டங்களில் இவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கருத்து இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாவதாக, எண்ணெய் ஏற்றுமதி செய்யாத 86 நாடுகள் சாதாரண குறைவிருத்தி நாடுகளாகக் குறிக்கப்படுகின்றன. இறுதியாக, எண்ணெய் வளம் மிக்க 13 எண்ணெய் ஏற்றுமதி நாடுகளும் ஒரு தனிப் பிரிவாகக் கணிக்கப்படுகின்றன.

ஆனால், மேற் கூறப்பட்ட பலதரப்பட்ட வேறுபாடுகளின் மத்தியிலும், குறைவிருத்தி நாடுகளிடையே ஒருமித்த பல இயல்புகளைக் காணக்கூடியதாயிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். இது அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளின் பாரதூரமான தன்மையைப் புலப்படுத்த வல்லதாயுள்ளது. இவ்வாறு குறைவிருத்தி நாடுகளை ஒருங்கிணைக்கும் அவற்றின் தன்மைகள் குறைவிருத்தி நிலையின் வெளிப்பாடாகத் தோன்றுவது கண்கூடு. அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்ட பிரிவினை நிலையிலும் நாடுகளை ஒருமைப்படுத்தக் கூடியளவுக்குக் குறைவிருத்தி இயல்புகள் மேலோங்கியிருப்பதன் காரணமாகவே தனியான ஓர் இயலின் துணை கொண்டு அவற்றை அணுக வேண்டியதும் அவசியமாயிற்று. அத்தகைய பொது இயல்புகள் யாவை என்பதை இனி நாம் நோக்க முற்படலாம்.

ஒருங்கிணைப்பு அம்சங்கள்:

பிரிவினைக்குரிய அம்சங்களைப் பாகுபடுத்தி நோக்கியது போன்றே குறைவிருத்தி நாடுகளை ஒற்றுமைப்படுத்தும் இயல்புகளையும் சில பிரிவுகளுக்குள் அடக்கிக் கொள்வது சுலபமாயிருக்கும். இவ்வாறு செய்யுமிடத்து, ஆறு பரந்த பிரிவுகளை அடையாளம் காணமுடியுமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. குறைந்த வாழ்க்கை மட்டம்:

குறைவிருத்தி நாடுகளிலுள்ள பெரும்பாலான மக்களின் வாழ்க்கை மட்டம் மிகவும் குறைந்த தரமுடையதொன்றாகும். இவ்வாறான குறைந்த வாழ்க்கை மட்டம் இரு நிலைகளில் வெளிப்படுகின்றது. முதலாவதாக, அபிவிருத்தியடைந்த செல்வந்த நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இவர்கள் மிகக் குறைவான மட்டத்திற் காணப்படுகின்றனர். இரண்டாவதாக, உள்நாட்டிலேயே வசதி படைத்த, சிறிய உயர் குழாமொன்றின் தரத்துடன் ஒப்பு நோக்கும்போது, இவர்கள் மிகவும் கீழ் நிலையில் உள்ளனர். இத்தகைய குறைவு மட்டத்தினைத் தொகை ரீதியாகவும், இதர சில பண்பு ரீதியான சுட்டிகளினாலும் எடுத்துக்காட்ட முடியும்.

தொகை ரீதியான குறிகாட்டிகளுள் நாடுகளின் தேசிய வருமானம் பற்றிய தரவுகளே முக்கியமானவையாகும். இத் தரவுகள் தேசிய மதிப்பீடுகள் என்ற காரணத்தினால் அவற்றின் அளவீட்டிற் குறைபாடுகள் ஏற்படக்கூடியதாயிருப்பதுடன் செலாவணி மாற்று விகிதத்திலான மாறுபாடுகளினாலும் இவற்றை ஒப்பிடுவது அதிக திருப்தியுடையதாக இல்லாமலிருக்கலாம். எனினும், குறைவிருத்தி நாடுகளின் குறைந்த வாழ்க்கை மட்டத்தினை வெளிப்படுத்துவதற்கு இவை போதியளவில் உதவி செய்கின்றன.

ஒரு நாட்டின் பொருளியல் நலனைச் சார்பு நிலையில் வெளிப்படுத்துவதற்குரிய ஒட்டுமொத்தமான சுட்டியாக நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி கருதப்படுகின்றது. பொருளாதார நடவடிக்கைகளின் ஓர் அளவீடாகவும் இதுவே பயன்படுகின்றது. உலக நாடுகள் எல்லாவற்றினதும் மொத்த உற்பத்தி, 1980-ம் ஆண்டு ஏறக்குறைய 7900 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டது. இதில் 6,500 பில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட ஒரு தொகை அபிவிருத்தியடைந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்பட 1,400 பில்லியன் டொலர்களுக்கும் குறைவான ஒரு தொகையே குறைவிருத்தி நாடுகளில் ஆக்கப்பட்டது. இதனை உலக சனத்தொகைப் பரம்பலுடன் ஒப்பிட்டு நோக்குவோமாயின், உலக மொத்த வருமானத்தின் ஏறக்குறைய 83 சதவீதம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் உலக மக்களின் மூன்றிலொரு பகுதிக்கும் குறைவானவர்களால் ஆக்கப்பட, உலக மக்களின் மூன்றிலிரு பகுதிக்கும் மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்து உலக மொத்த வெளியீட்டின் 17 சதவீதத்தை மாத்திரம் ஆக்கிக் கொண்டனரென்பதைக் காணலாம். இது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், குறைவிருத்தி நாடுகளுக்குமிடையிலான தலா வருமானத் தரவுகளில் நன்கு வெளிப்படுகின்றது. குறைவிருத்தி நாடுகளின் சராசரியான தலா வருமானம் அபிவிருத்தியடைந்த நாடுகளின் வருமானத்தின் பதினைன்கின் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியேயாகும். இவ் வேறுபாட்டின், உயர்மட்டமாகச், சுவிற்சர்லாந்தின் 1979-ம் ஆண்டுக்கான தலா வருமானம் 13,920 டொலர்களாக இருக்க வங்காள தேசத்தில் அது 90 டொலர்களாக மாத்திரமே காணப்பட்டமையைச் சுட்டிக் காட்ட முடியும். இங்கு சுவிற்சர்லாந்தின் தலா வருமானம் வங்காள தேசத்தினுடையதைப் பார்க்கிலும் 150 மடங்குக்கும் அதிகமானதென்பதை அவதானிக்கலாம்.

குறைவிருத்தி நாடுகளின் தலா வருமானம், அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, மிகக் குறைந்த ஒரு மட்டத்திலிருப்பது மாத்திரமன்றி, அதன் வளர்ச்சி வேகமும் மிக மெதுவானதாகவே காணப்படுகின்றது. உதாரணமாக, 'அபிவிருத்தியில் மிகக் குறைந்தவை' என ஐக்கிய நாடுகள் சபையாற் குறிக்கப்பட்ட நாடுகள் 1960 — 1977 காலப்பகுதியில் தமது மொத்தத் தேசிய உற்பத்தியை வருடாந்தம் 2.4 சதவீத வேகத்திலேயே வளர்த்துக்கொண்டன. மறுபுறம், ஏனைய சாதாரண குறைவிருத்தி நாடுகள் இதே காலப்பகுதியில் ஏறக்குறைய 6.1 சதவீத வளர்ச்சி வேகத்தைக் காட்டி நின்றன. எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடாத மூன்றுவது அகிலத்தைச் சார்ந்த நாடுகளை மொத்தமாக எடுத்து நோக்குமிடத்து, அவற்றின் வருடாந்த வளர்ச்சி வேகம் ஏறக்குறைய 5.5 சதவீதமாகக் காணப்பட்டது. அதே நேரத்தில், அபிவிருத்தியடைந்த நாடுகள் தாம் எடுத்துக்கொண்ட 1960 — 1977 காலப்பகுதியில் தமது மொத்தத் தேசிய உற்பத்தியை வருடாந்தம் ஏறக்குறைய 4.9 சதவீத வேகத்தில் வளர்த்துக் கொண்டிருந்தன. இது குறைவிருத்தி நாடுகளின் சராசரியை விடக் குறைவாக உள்ளபோதும் குறைவிருத்தி நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளை விட மிகக குறைவான ஒரு மட்டத்திலிருந்தே தமது அபிவிருத்தி முயற்சியை ஆரம்பித்தன என்பது கணிப்பிலெடுக்கப்பட வேண்டும். மேலும், இரு வகை நாடுகளுக்குமிடையிலான சனத்தொகை வளர்ச்சி வேகமும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். குறைவிருத்தி நாடுகள் எல்லாவற்றையும் ஒருமித்து நோக்குமிடத்து, அவற்றின் சனத்தொகை வளர்ச்சி வேகம் வருடாந்தம் சராசரி 2.1 சதவீதமாயிருக்க, அபிவிருத்தியடைந்த நாடுகள் 0.6 சதவீத வளர்ச்சி வேகத்தை மட்டுமே கொண்டிருந்தன ஆகவே இந் நிலையில், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் குறைவிருத்தி நாடுகளுக்குமிடையிலான தலா வருமான இடையீடு வருடமொன்றுக்கு 0.9 சதவீத வேகத்தில் விரிவடைந்து செல்வதாக மதிப்பிடப்படுகின்றது. 'அபிவிருத்தியில் மிகக் குறைந்தவை' என நாம் வகைப்படுத்திய நாடுகளைத் தனியாகப் பிரித்தெடுத்துப் பார்ப்பின் இந்த விகிதாசாரம் 1.5 ஆக உயர்வடைகின்றது. இதனாலேயே அபிவிருத்தியடைந்த நாடுகள் மேன்மேலும் உயர்நிலை வளர்ச்சிக்குட்படக் குறைவிருத்தி நாடுகள் பின்தங்கியவையாகவே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் செல்வந்தருக்கும் வறியவர்களுக்குமிடையே வளர்ந்து செல்லும் இடையீடு, மேற்கூறிய வகையில், (அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் குறைவிருத்தி நாடுகளுக்குமிடையிலான), நாடுகளின் மட்டத்தில் மாத்திரம் வெளிப்படுவதொன்றல்ல ஏற்கெனவே குறிப்பிட்டபடி உள்நாட்டிலும் இதன் பிரதிபலிப்பை எடுத்துக்காட்ட முடியும். ஒரு நாடு உழைத்துக்கொள்ளும் வருமானம் அந் நாட்டு மக்கள் மத்தியில் எவ்வாறு பங்கிடப்படுகிறதென்பதைக் கொண்டு இதனை அறிந்து கொள்ளலாம். நாட்டின் வருமானப் பரம்பலில் ஏற்படக் கூடிய வேறுபாடுகள் உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவானதொன்றெனினும், குறைவிருத்தி நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அதிகளவு சமமற்ற வருமானப் பங்கீட்டைக் கொண்டவையென்பது கவனிக்கத்தக்கது. வருமானப் பங்கீட்டுக்குரிய பருமட்ட அளவீடாக ஒரு நாட்டின் கீழ் மட்டத்தில் வறிய நிலையிலிருக்கும் 40 சதவீத மக்களும், உயர் மட்டத்திற் செல்வந்த நிலையிலிருக்கும் 20 சதவீத மக்களும் அந் நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தில் எந்த அளவான பங்கினைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதைக் கொள்வது பொதுவான ஒரு வழக்கமாகும். இதன்படி நோக்குமிடத்து, பிரேசில், கொலம்பியா, மெக்சிக்கோ, கென்யா போன்ற நாடுகளில் வருமானச் சமமின்மை மிக அதிகமாகவும், இந்தியா, தன்சானியா, சிலி போன்ற நாடுகளில் சமமின்மை மிதமாகவும் இருப்பதைக் காணலாம். இதன் கருத்து உயர் மட்ட வகுப்பினர் தேசிய வருமானத்திற் கூடியளவான பங்கினையும், தாழ் மட்ட வகுப்பினர் (பெரும்பான்மையாகவிருந்தும்) குறைவான பங்கினையும் பெறுகிறார்கள் என்பதேயாகும், ஆனால் அபிவிருத்தியடைந்த கனடா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் வருமானச் சமமின்மை குறைவாகக் காணப்படுகின்றது. அதாவது நாட்டின் தேசிய வருமானம் அதனை ஆக்கும் மக்கள் மத்தியிற் பெருமளவுக்குச் சமமாகவே பங்கிடப்படுகின்றது. குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை ஏற்கனவே குறைவாக உள்ள தேசிய வருமானம் சமமற்ற முறையிலும் பங்கிடப்படுகிறதாயின், அதன் மூலம் குறைவு வருமானத்தைப் பெறும் கீழ் மட்டத்திலான பெரும்பான்மை மக்கள் கூரிய வறுமையாற் பீடிக்கப்பட்டவர்களாகின்றனர். குறைந்த வாழ்க்கை மட்டத்தின் வெளிப்பாடுகளாக நாம் எடுத்துக்காட்டக் கூடிய பண்பு ரீதியான இயல்புகள் பலவும் இவ்வாறான வறுமையின் விளைவுகளேயாகும். ஆகவே குறைவிருத்தி நாடுகளின் உயர் மட்ட செல்வந்த வகுப்பினர் இந்த இயல்புகளைப் பொறுத்த வரை அவற்றினாற் பாதிக்கப்படாத ஒரு புறநடையாகவே விளங்குவர்.

பண்பு ரீதியான இயல்புகளுள், மூன்றாவது அகிலத்தைச் சார்ந்த பெரும்பாலான மக்கள் உணவு, ஊட்டமின்மை, பிணி, அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்படுதல் போன்றவற்றுக்கெதிராக எப்போதும் போராட வேண்டியவர்களாயுள்ளனரென்பது முக்கியமானதாகும். அதன் காரணமாக அவர்களுடைய வாழ்க்கை எதிர்பார்க்கையும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. 1980-ம் ஆண்டு அபிவிருத்தியடைந்த நாடுகளின் வாழ்க்கை எதிர்பார்க்கை சராசரி 74 வருடங்களாயிருக்கக் குறைவிருத்தி நாடுகளில் அது 60 வருடங்களாக மட்டுமே காணப்பட்டது. அபிவிருத்தியில் மிகக் குறைந்த நாடுகளின் நிலையில் அது இன்னமும் குறைவடைந்து 50 வருடங்களாகின்றது. அதேபோல முதலாவது பிறந்த தினத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் 'அபிவிருத்தியில் மிகக் குறைந்த' நாடுகளில் 1000 பிறப்புகளுக்குச் சராசரி 155 ஆகவும், சாதாரண குறைவிருத்தி நாடுகளில் 110 ஆகவும் காணப்பட, அபிவிருத்தியடைந்த நாடுகளில் 27 ஆக மட்டுமே காணப்பட்டது.

இத்தகைய பரந்த வேறுபாட்டுக்குரிய காரணம் வேண்டியளவான உணவு, வைத்திய வசதி என்பன குறைவிருத்தி நாடுகளிற் கிடையாமையே ஆகும். மனித வாழ்வுக்கு அவசியமான சத்துக் கூறுகள், புரதச் சத்து என்பவற்றைப் போதிய அளவுகளிற் பூர்த்தி செய்யக்கூடிய உணவை மக்கள் உட்கொள்வதில்லை. உதாரணமாக, ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் 60 சதவீத மக்கள் உணவிலான சத்துக்களின் குறைந்த பட்சத் தேவையைப் பூர்த்தி செய்யாதவர்களாகவோ அல்லது மிகுந்த கஷ்டத்தின் மத்தியிற் பூர்த்தி செய்பவர்களாகவோ தான் காணப்படுகின்றனர் இவ்வாறாகச் சத்துக் கூறுகளில் ஏற்படும் பற்றாக் குறை நிலையை 1975க்குரிய உலக தானிய வெளியீட்டின் ஏறக்குறைய 2 சதவீதத்தினைக் கொண்டு ஈடுசெய்ய முடியுமென மதிப்பிடப்படுகின்றது. ஆகவே இதிலிருந்து உணவு ஊட்டமின்மையானது உலக சனத்தொகை, உலக உணவு நிரம்பல் என்பவற்றுக்கிடையிலான சமநிலையின்மை காரணமாக ஏற்படுகிறதென்ற கருத்துத் தவறானதென்பதைச் சுட்டிக்காட்ட முடிகின்றது. உண்மையில் உலக வருமானப் பரம்பலிலான சமமின்மையே இதற்கான அடிப்படை விளக்கம் எனலாம். வைத்திய வசதிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், குறைவிருத்தி நாடுகளுக்குமிடையே பெரிதும் வேறுபடுவது ஒருபுறமிருக்கக், குறைவிருத்தி நாடுகளிலேயே இவை நகர்ப் புறங்களில் மாத்திரம் திரண்டிருப்பதனால், இதர பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்கள் பாதிப்படைகின்றனர். உதாரணமாக, இந்தியாவில் 80 சதவீதமான டாக்டர்களும் நகர்ப்புறங்களில் தொழில் செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் இந்திய நகர்ப்புறங்களில் தேசிய சனத்தொகையின் 20 சதவீதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினர் மட்டுமே வாழ்கின்றனரென்பது குறிப்பிடத்தக்கது. இதன் கருத்து நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்குப் போதியளவான வைத்திய வசதிகள் கிடைப்பதில்லை என்பதேயாகும்.

கல்வி வாய்ப்புக்களைப் பொறுத்த வரையிலும் குறைவிருத்தி நாடுகள் மிகவும் குறைபாடுடையனவையாகவே தென்படுகின்றன. ஆரம்ப நிலைப் பாடசாலைக் கல்வியைப் பரப்புவது குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தி முயற்சியில் முக்கியமான ஒரு நடவடிக்கையாக இருந்து வந்துள்ள போதிலும், இந் நாடுகளின் கல்வி மட்டம் பெருமளவு முன்னேறியிருப்பதாகக் கூறமுடியாது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் கல்வியறிவு விகிதம் 1980 அளவில், அவற்றின் சனத்தொகையின் 97 சதவீதமாகக் காணப்பட, 'அபிவிருத்தியில் மிகக் குறைந்த' நாடுகளில் அது 34 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. ஏனைய குறைவிருத்தி நாடுகளில் இது 63 சதவீதமாக விளங்கியது. அதே நேரத்திற் குறைவிருத்தி நாடுகளிற் போதிக்கப்படும் கல்வி நாட்டின் அபிவிருத்தித் தேவைகளை நன்கு கருத்திலெடுக்காததொன்று என்ற குற்றச்சாட்டும் கூறப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் அது வெறுமனே மேற்கத்திய முறைகளைப் பின்பற்றுவதொன்றாகவே உள்ளது. எனவே கல்வியின் முடிவிற் படித்தவர்களிடையிலான வேலையின்மை, அரைகுறை வேலையின்மை அவற்றின் மூலமான அமைதியின்மை, போன்ற பல புதிய பிரச்சினைகளை அது கிளப்பிவிடக் கூடியதாயுள்ளது.

ஆகவே குறைவிருத்தி நாடுகளின் குறைந்த வாழ்க்கை மட்டமானது, மேலே எடுத்துக்காட்டியவாறு, பலவேறு காரணிகள் ஒருமித்த வகையிற் செயற்படுவதன் மூலம் ஏற்படும் ஒரு விளைவென்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இவை மூன்றாவது அகிலத்தைச் சார்ந்த மக்களின் வாழ்க்கையைக் குறைந்த ஒரு தராதர நிலையில் வைத்திருப்பது மாத்திரமன்றி, அவர்களுடைய வாழ்க்கையிற் பல இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்து அவர்களது வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மேலதிக முன்னேற்றத்தையும் தடுத்து விடுகின்றது.

2. குறைந்த மட்ட உற்பத்தித் திறன்:

குறைவிருத்தி நாடுகளின் குறைந்த வாழ்க்கை மட்டத்தினை விட ஊழியத்தின் உற்பத்தித் திறன் குறைவாயிருப்பதும் இந்நாடுகளின் ஒரு மேலதிக குணதிசயமாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளிலான ஒரு தொழிலாளியின் சராசரி வெளியீட்டைவிடக் குறைவிருத்தி நாடுகளிலான ஒரு தொழிலாளியின் சராசரி வெளியீடு கணிசமானளவு குறைவானதென்பதே இதன் கருத்தாகும். இதற்குப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களைக் குறிப்பிட முடியும். ஊழியத்துடன் பொதுவாக இணைய வேண்டிய ஏனைய காரணிகளாகிய மூலதனம், முகாமை 'என்பன வேண்டிய அளவில் அல்லது தரமுடையதாகக் கிடைக்காவிட்டால் ஊழிய விளைதிறன் பாதிக்கப்படலாம்.

மூலதனம் என்று கூறும்போது, தனியே பண வடிவிலான மூலதனம் மாத்திரமன்றி, நாம் ஏற்கெனவே வளங்களின் கொடையில் ஏற்படக்கூடிய வேறுபாட்டின் போது குறிப்பிட்டது போல, மனித வடிவிலான மூலதனத்தையும் அது உள்ளடக்குவதாகும். முகாமைத் திறமை, தொழில் நுட்பத் திறமை போன்றவற்றை உள்ளடக்கும் மனித மூலதன இருப்பைக் கட்டியெழுப்புவதென்பது தகுந்த கல்வி வசதிகள், பயிற்சித் திட்டங்கள் என்பவற்றை வகுத்துக்கொள்வதிலும் சமூகரீதியான காரணிகளாகிய மதம், கலாச்சாரம் போன்றவற்றிலும் தங்கியிருப்பதாகும். ஆகவே விளைதிறன் அதிகரிப்பு என்பது பொருளாதார, சமூகக் காரணிகளின் சாதகமான செயற்பாட்டின் ஒரு விளைவாகவே ஏற்படுகின்றது. ஆனால் குறைவிருத்தி நாடுகளில் இவ்விரு வகையான காரணிகளுமே விளைதிறன் உயர்வுக்கு வாய்ப்புடையவையாக இருப்பதில்லை. தகுந்த கல்வி, தொழில்நுட்பப் பயிற்சி போன்றவற்றுக்கான நிதிவசதி இல்லாமலிருக்கலாம். அதேபோன்று சமூக வடிவிலான மதம், கலாச்சாரம் போன்றனவும் தடைகளை ஏற்படுத்தக்கூடும் இவ்வகையிற் குறைவிருத்தி நாடுகளின் குறைந்த மட்ட உற்பத்தித் திறன் நாம் ஏற்கெனவே நோக்கிய குறைந்த வாழ்க்கை மட்டத்தின் ஒரு தொடர்ச்சி எனவும் கூறமுடியும். கல்வி வசதிகளில் ஏற்படக் கூடிய மாறுபாடுகளுக்குப் புறம்பாக ஒருவனின் தேகாரோக்கியமானது உணவு ஊட்டமின்மை, புரதச்சத்துக் குறைவு போன்றவற்றினாற் பாதிக்கப்படுமாயின், அது அவனுடைய உற்பத்தித் திறனையும் நிச்சயம் பாதிப்பதாயிருக்கும். இது தொழில் செய்வதற்கான அவனது விருப்பினையும் தொழில் பற்றிய அவனது அணுகு முறையினையும் கூடச் செல்வாக்கினுக்குட்படுத்தும்.

ஆகவே குறைந்த வாழ்க்கைமட்டம், குறைந்தமட்ட உற்பத்தித் திறன் என்பன மூன்றுவது அகிலத்தைச் சார்ந்த நாடுகளது குறைவிருத்தி நிலையின் பிரதான வெளிப்பாடுகளாக மாத்திரமன்றி, அவையே குறைவிருத்தி நிலைக்குரிய முக்கிய காரணங்களாகவும் அமைந்துள்ளன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உயர்ந்த சனத்தொகை வளர்ச்சி விகிதமும், தங்கியிருத்தற் சுமையும்!

1980 களின் ஆரம்பமளவில் உலகின் மொத்தச் சனத்தொகை ஏறக்குறைய 4.3 பில்லியன் மக்கள் என மதிப்பிடப்பட்டது. இதில் மூன்றிலிரு பகுதிக்கும் மேற்பட்டோர் குறைவிருத்தி நாடுகளில் வாழ்ந்திருக்க மூன்றிலொரு பகுதிக்கும் குறைவானவர்களே அபிவிருத்தியடைந்த நாடுகளிற் காணப்படுகின்றனர். ஆகவே இதிலிருந்து உயர்ந்த சனத்தொகை குறைவிருத்தி நாடுகளுக்குரியதெனத் துணியமுடிகின்றது. சனத்தொகை வளர்ச்சியை விரைவுபடுத்தும் பிறப்பு, இறப்பு விகிதங்கள் இருவகை நாடுகளுக்குமிடையே வேறுபட்டு நிலவுகின்றன. அதுவும் குறிப்பாகப் பிறப்பு விகிதம் பெரிதும் மாறுபட்டிருப்பதுடன் மூன்றாவது அகிலத்தைச் சார்ந்த நாடுகளை இலகுவாக அடையாளம் காணக்கூடிய ஒரு முக்கிய குறிகாட்டியாகவும் விளங்குகின்றது.

குறைவிருத்தி நாடுகளின் பிறப்பு விகிதம், பொதுவாக, அபிவிருத்தியடைந்த நாடுகளினுடையதை விட மிக உயர்ந்தே காணப்படுகின்றது. இது இந்நாடுகளில் ஆயிரத்துக்கு 35 முதல் 40 வரை இருக்க, அபிவிருத்தியடைந்த நாடுகளிற் சராசரி 20 ஆகவே, அதாவது முன்னையதன் அரைவாசியாகவே, உள்ளது. எவ்வாறுயினும், ஆயிரத்திற்கு 30 என்ற அளவுக்குக் குறைந்த பிறப்பு விகிதத்தையுடைய குறைவிருத்தி நாடுகள் வெகு அருமை என்றே கூறிவிடலாம். இலங்கை இந்தக் கீழ் மட்ட எல்லைக்கு அண்மித்த ஒரு பிறப்பு விகிதத்தைக் கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிறப்பு விகிதத்தின் அளவுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் குறைவிருத்தி நாடுகளுக்குமிடையிலான இறப்பு விகிதத்தில் வேறுபாடு நிலவுவதில்லையென்பது கவனிக்கத்தக்கது. ஆரம்பத்தில் இறப்பு விகிதத்திலும் பரந்த வேறுபாடு நிலவியிருந்தபோதும், நாளடைவில் இது சுருங்கி வந்துள்ளது. குறைவிருத்தி நாடுகளின் சுகாதார நிலைமைகள் பெரிதும் சீர்திருந்தியிருப்பதுடன், சனத்தொகையை அழிக்கக்கூடிய பிரதான தொற்று நோய்கள் பலவும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதே இதற்குரிய பிரதான காரணமாகும். இது விடயத்தில், மேற்கத்திய தொழில்நுட்பம், உற்பத்தி முறை போன்றவற்றைக் குறைவிருத்தி நாடுகளிற் பதியவைத்து மேற்கத்திய நாடுகளின் அளவுக்கு நன்மை பெறுவது கடினமாயிருந்தபோதும் மேற்கத்திய சிகிச்சை முறைகள், நோய்த் தடுப்பு என்பன இந் நாடுகளிற் பெரு வெற்றியளித்திருப்பது குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடத்தக்கது. உண்மையில், இவ்வாறாக இறப்பு விகிதத்தில் ஏற்பட்ட குறைவைத் தொடர்ந்து பிறப்பு விகிதம் அபிவிருத்தியடைந்த நாடுகளின் தரத்துக்கு வீழ்ச்சியடையாமையே சனத்தொகை வளர்ச்சி விகிதம் குறைவிருத்தி நாடுகளில் உயர்வடைதற்கான முக்கிய காரணமாயிற்று. இதன் விளைவாக, மூன்றாவது அகிலத்தைச் சேர்ந்த பெரும்பாலான நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி விகிதம் வருடமொன்றுக்கு 2.1 சதவீதம் வரை அதிகரிக்க அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளில் அது 0.7 சதவீதம் வரைதான் உள்ளது.

இவ்வாறு பிறப்பு விகிதம் உயர்ந்திருப்பதன்மூலம் ஏற்படும் தாக்கம் யாதெனில், நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 15 வயதுக் குட்பட்டவர்களின் விகிதாசாரம் பெருமளவில் அதிகரிப்பதாகும் குறைவிருத்தி நாடுகளின் மொத்தச் சனத்தொகையுடன் பார்க்குமிடத்து 15 வயதுக்குட்பட்டவர்கள் ஏறக்குறையச் சரி அரைவாசியாகக் காணப்பட அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்த விகிதாசாரம் மொத்தச் சனத்தொகையின் ஏறக்குறையக் கால்வாசியேயாகும். ஆகவே இதன் கருத்து மூன்றாவது அகில நாடுகளின் உழைக்கும் சனத்தொகை, அபிவிருத்தியடைந்த நாடுகளின் அத் தொகையினரை விட, இரு மடங்கான குழந்தைகளைத் தாங்கிக்கொள்ள வேண்டியிருப்பதாகும். மறுபுறம், 65 வயதுக்கு மேற்பட்டவர்களின் விகிதாசாரம் அபிவிருத்தியடைந்த நாடுகளிற் குறைவிருத்தி நாடுகளை விட அதிகமானதாகும். இதற்கு, நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, அந் நாடுகளின் வாழ்க்கை எதிர்பார்க்கை உயர்ந்திருப்பது காரணமாகின்றது. ஒரு நாட்டின் 15 வயதுக்குட்பட்டவர்களையும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களையும் தான் 'தங்கியிருக்கும் சனத்தொகை' எனக் குறிப்பது வழக்கம். இவர்கள் 15 முதல் 64 வயது வரையுள்ள உழைக்கும் சனத்தொகையால் நிதி வடிவில் ஆதரவளித்துப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதே இதன் கருத்தாகும் இவ்வாறாக இளையோரையும் முதியோரையும் அடக்கிய முற்றான தங்கியிருத்தற் சுமை அபிவிருத்தியடைந்த நாடுகளிற் சனத்தொகையின் மூன்றிலொரு பகுதியாக மாத்திரம் காணப்படக் குறைவிருத்தி நாடுகளில் அது ஏறக்குறைய அரைவாசியாக உள்ளது. பின்னையவற்றில், இச்சுமையிலும் 90 சதவீதம் குழந்தைகளாயிருக்கச் செல்வந்த நாடுகளில் 66 சதவீதம் வரை மாத்திரமே குழந்தைகளாக உள்ளனர். ஆகவே இதிலிருந்து குறைவிருத்தி நாடுகளின் சனத்தொகை வேகமாக வளர்ச்சியடைந்து செல்வது மாத்திரமின்றி, நிலவுகின்ற சனத்தொகையிலும் பாரியதொரு பங்கினர் நாட்டின் வளங்களின் மீது கூடியளவு தாக்கத்தினை ஏற்படுத்தி நுகர்வு மட்டத்தை, உயர்த்துவோராக மாத்திரம் இருப்பதைக் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உயர்மட்ட வேலையின்மையும் கீழுழைப்பும் :

குறைந்த வாழ்க்கை மட்டத்தின் ஒரு பிரதான வெளிப்பாடாகவும், அதே நேரத்தில், அதற்குரிய ஒரு முக்கிய காரணமாகவும் விளங்குவது குறைவிருத்தி நாடுகளின் ஊழியம் முழுமையான அளவிற் பயன்படுத்தப்படாமையும், அவ்வாறு பயன்படுத்தப்படும் ஊழியம்கூட முழுப் பயன்பாட்டையும் வெளிக்கொணரக் கூடியளவுக்குத் திறமையாகப் பயன்படுத்தப்படாமையும் ஆகும். ஊழியத்தின் குறைவுப் பயன்பாடு இதிலிருந்து இரு வகைகளில் ஏற்படுவதைச் சுட்டிக்காட்ட முடிகின்றது. முதலாவதாகத் தொழில் செய்ய விரும்பும் முழு ஊழியத்துக்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியாமை. இதுவே திறந்த வேலையின்மை எனக் குறிக்கப்படுகின்றது. இரண்டாவது, கீழ் உழைப்பு நிலை. அதாவது தொழில் செய்யும் ஊழியம் தனது முழுத் திறமையையும் காட்டக்கூடிய வகையில் முழுமையாகப் பயன்படுத்தப்படாமை. இது வேலை செய்யக்கூடிய நேர அளவைப் பயன்படுத்தப்படாமை. இது வேலை செய்யக்கூடிய நேர அளவைப் பொறுத்தவரை (தினமும், வாராந்தம் அல்லது மாதாந்தம்) குறைவாக வேலைசெய்வதாகவோ அல்லது முழு நேரம் வேலை செய்தாலும், ஊழியத்தின் தகைமைக்குக் குறைவான நிலையில்வேலை செய்வதாகவோ இருக்கலாம். இத்தகைய கீழ் உழைப்பே மறைமுக வேலையின்மை என்றும் அழைக்கப்படுகின்றது.

குறைவிருத்தி நாடுகளின் சராசரி திறந்த வேலையின்மை, நடைமுறைத் தரவுகளின்படி, நகர வேலைப்படையின் 10 முதல் 15 சத வீதமாகும். ஆனால் வேலை வாய்ப்புக்களை நாடி நிற்கும் 15 முதல் 24 வயது வரையுள்ள வயதுப் பிரிவினரை எடுத்து நோக்குவோமாயின் இந்த விகிதாசாரம், பல குறைவிருத்தி நாடுகளில், ஏறக்குறைய இரு மடங்காக உயர்வடைவதைக் காணலாம். இதனுடன் கீழ் உழைப்பு நிலையிற் பயன்படுத்தப்படும் ஊழியத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இவையெல்லாவற்றையும் ஒன்றிணைந்து நோக்கின் பெரும்பாலான குறைவிருத்தி நாடுகளில் ஊழியத்தின் ஏறக்குறைய 30 சத வீதம் பய்ன்படுத்தப்படாது விரயமாகின்றதெனலாம்.

முந்திய பகுதியில் நாம் நோக்கியபடி சனத்தொகையும் வேகமாக வளர்ச்சியடையுமிடத்து, ஊழிய நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பை ஈடு செய்து வேலையின்மை விகிதாசாரத்தை ஒரேநிலையில் வைத்திருப்பதற்கே கணிசமான ஓரளவில் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டியதாயுள்ளது. மேலும் கிராமியப் புறங்களிலிருந்து நகர்ப்புறங்கள் நோக்கிக் குடிபெயர்ந்து செல்வோரின் விகிதாசாரம் கூடியிருக்குமாயின் நகர்ப்புற வேலையின்மை இன்னும் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதாயிருக்கும். உதாரணமாக, ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் கிராமிய மக்களின் நகர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறம் நோக்கிய குடிப்பெயர்வினுல் நகர வேலேப்படை வருடா வருடம் 5 முதல் 7 சத வீதத்தினுல் அதிகரிப்பதாகக் கருதப்படுகின்றது. குறை விருத்தி நாடுகளில் எழக் கூடிய பல அரசியல் சமூகப் பிரச்சினைகளுக்கும் வேலேயின்மை, கீழ் உழைப்பு என்பனவையே பெருமளவுக்குப் பொறுப்பா யிருப்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

5. விவசாய உற்பத்தி, முதல் விளைவு ஏற்றுமதி என்பவற்றில் மிகையாகத் தங்கியிருத்தல்:

மூன்முவது அகிலத்தைச் சேர்ந்த நாடுகளின் மிகப் பெருந்தொகை யான மக்கள் கிராமப் பகுதிகளிலேயே வாழ்வதுடன் கிராமத்தை அடிப் படையாகக் கொண்ட தொழில்களிலேயே ஈடுபட்டவர்களாகவும் உள்ள னர். குறைவிருத்தி நாடுகளில் ஏறக்குறைய 80 சத வீதத்தினர் கிராமிய அடிப்படையைக் கொண்டிருக்க அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்த விகிதாசாரம் 35 சத வீதத்துக்கும் குறைவானதேயாகும். வேலேப்படை என்பதைத் தனியாக எடுத்து நோக்குமிடத்துக் குறைவிருத்தி நாடுகளில் அதன் 66 சத வீதம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிடப்படு கின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இதன் ஒப்புநோக்கிய தரவு 21 சத வீதமாகக் குறைவடைகின்றது. இதற்கேற்ப மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் பங்கும் குறைவிருத்தி நாடுகளுக்கும் அபி விருத்தியடைந்த நாடுகளுக்குமிடையே வேறுபடுகின்றது. முன்னையதில் அது ஏறக்குறைய 32 சத வீதமாகவும் பின்னையதில் 8 சத வீதமாகவும் காணப்படுகின்றது.

குறைவிருத்தி நாடுகளிலுள்ள பெருந்தொகையான மக்கள் இவ் வாறாக விவசாயத்திலும் ஏனைய முதல் விளைவு உற்பத்தி நடவடிக்கை களிலும் ஈடுபட்டிருத்தல் பெருமளவுக்கு இயல்பானதென்றே கூறவேண் டும். வருமான மட்டம் குறைவாக இருக்கும் நிலேகளில் எந்த ஒரு மனிதனதும் முன்னுரிமை, அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, இருப்பிட வசதி என்பவை நோக்கியதாகவே இருக்கும். ஆனல் அதே நேரத்தில் விவசாயத்தின் விளைதிறன் மிகவும் குறைவானதாகவே தென் படுகின்றது. இதற்குப் பெருந்தொகையான மக்கள் நிலத்தின்மீது தங்கி யிருப்பது, அதாவது கிடைக்கக்கூடிய நிலத்தின் அளவுடன் ஒப்பிடும் போது மக்கள் தொகை அபரிமிதமாக இருப்பது, மாத்திரமன்றிப் பழைய மரபு ரீதியான நுட்ப முறைகள் கையாளப்படுவதும், ஒழுங்கு முறை தரக்குறைவாயிருப்பதும், வேண்டியளவான முதலீட்டு உள்ளீடு கள் பயன்படுத்தப்படாமையும் காரணமாகின்றன. மேலும், நில உடை மையில் ஏற்படக்கூடிய குறைபாடுகளினுற், பல சந்தர்ப்பங்களில், நிலத் தைப் பயிரிடுவோர் அதன் சொந்தக்காரராயிருப்பதில்லே. இதனுல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான தூண்டுதலும் ஏற்படுவதில்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைத் தாங்கிக் கொள்வதென்ற நிலையில் மாத்திரமன்றி நாட்டுக்கு வேண்டிய அந்நியச் செலாவணி உழைக்கும் ஏற்றுமதி நடவடிக்கைகளிலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட முதல் விளைவு நடவடிக்கைகளே பல குறைவிருத்தி நாடுகளிலும் முதலிடம் வகிக்கின்றன. மூன்றாவது அகிலத்தைச் சார்ந்த நாடுகளை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து, அவற்றின் ஏற்றுமதிகளில் 90 சத வீதம் வரை உணவு, மூலப்பொருட்கள், எண்ணெய், உலோகப் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கிய முதல் விளைவுப் பொருட்களேயாம். இதற்கு, இந்நாடுகளில் விவசாய அமைப்புப்பெறும் முக்கியத்துவம் ஒருபுறமிருக்க, அவற்றின் குடியேற்றநாட்டுவாதப் பாரம்பரியமும் ஒரு பிரதான காரணமாயமைகின்றது. குடியேற்ற நாட்டுவாதக் காலப்பகுதியில் இத்தகைய உற்பத்தி நடவடிக்கைகளையே ஆட்சியாளர் ஊக்குவித்தனர்.

குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தி முயற்சிக்கு அவற்றின் ஏற்றுமதி உழைப்புக்கள் அத்தியாவசிய தேவையாகின்றன. அந்நியத் தனியார் முதலீடுகள், வெளிநாட்டு உதவி என்பவற்றுக்குப் புறம்பாகக் குறைவிருத்தி நாடுகளின் அந்நியச் செலாவணியில் சராசரி 60 முதல் 75 சத வீதமான பங்கினை முதல் விளைவு ஏற்றுமதிகளே உழைத்துக் கொடுக்கின்றன. ஆனால், ஏற்றுமதிகள் பெறும் முக்கியத்துவத்தின் மத்தியிலும் கடந்த இரு தசாப்தங்களிற், குறைவிருத்தி நாடுகளின் ஏற்றுமதித் துறை வளர்ச்சி அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுமிடத்துக் குறைவடைந்து வந்திருப்பது கவனிக்கத் தக்கது. இவற்றின் இழப்பு அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளின் வர்த்தக அதிகரிப்பாகப் பரிணமித்திருப்பது இது விடயத்திற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, 1950-ம் ஆண்டு உலக வர்த்தகத்திலான குறைவிருத்தி நாடுகளின் பங்கு ஏறத்தாழ 33 சத வீதமாகும். அதன் பின்பு இந்த விகிதாசாரம் ஒவ்வொரு வருடமும் படிப்படியாகக் குறைவடைந்து வந்துள்ளது. 1980-ம் ஆண்டு இது ஏறக்குறைய 21 சத வீதத்தினை அடைந்திருந்தது. இதே காலப்பகுதியில் அபிவிருத்தியடைந்த நாடுகள் உலக வர்த்தகத்திலான தமது பங்கினை 60 சத வீதத்திலிருந்து 72 சத வீதமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதிற் பெரும்பகுதி அவை தம்மிடையே மேற்கொள்ளும் வர்த்தகமாகும். ஆனால் மூன்றாவது அகில நாடுகள் தம்மத்தியில் ஈடுபட்ட வர்த்தகம் 1960-ல் 28 சத வீதத்திலிருந்து 1979-ல் 2.5 சத வீதமாகக் குறைவடைந்திருந்தது. ஆகவே இதிலிருந்து அவை தமது பொருட்களை விற்பனை செய்வதற்குச் செல்வந்த நாடுகளின்மீது கூடியளவுக்குத் தங்கியிருக்க வேண்டுமென்பது தெளிவாகின்றது. இதன் ஒரு தொடர்ச்சியாகவே நாம் நோக்க முற்படும் குறைவிருத்தி நாடுகளின் இறுதி இயல்பு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சர்வதேசத் தொடர்புகளின் வழி ஏற்படக்கூடிய பாதிப்பு:

குறைவிருத்தி நாடுகள் மத்தியிலான பாதகமான இயல்புகளாக நாம் நோக்கிய குறைந்த வாழ்க்கைமட்டம், உயர்ந்த அளவிலான வேலையின்மை, வருமானப் பரம்பலிலான சமமின்மை என்ற பலவும், நுணுகிப் பார்ப்பின், செல்வந்த நாடுகளுடனுன தொடர்பின் வாயிலாகவே, பெரும்பாலும், தோன்றியிருந்ததுடன், இன்று அவை நீடித்திருப்பதற்கும் செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையில் அரசியல், பொருளாதார அதிகாரம் சமமற்ற வகையிற் பங்கிடப்பட்டிருப்பதே பெருமளவுக்குக் காரணமாயிருப்பதையும் காணலாம். சர்வதேச, வர்த்தக அமைப்பைச் செல்வந்த நாடுகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பது இதற்கான முக்கிய சாதனமாயிருந்தாலும், அது தவிர வெளிநாட்டு உதவி, தொழில்நுட்ப மாற்றம், தனியார் மூலதன மாற்றம் என்பவை பற்றி அபிவிருத்தியடைந்த நாடுகள் விதிக்கும் நிபந்தனைகளும் குறைவிருத்தி நாடுகளைப் பெரிதும் பாதிக்க வல்லனவாகக் காணப்படுகின்றன.

ஆனல் இத்தகைய நேரடி முறைகளைவிட மறைமுகமான பாதிப்புக்களும் குறைவிருத்தி நாடுகளைப் பெரிதும் தாக்கி அவற்றின் அபிவிருத்தியைத் தடுத்து நிற்கின்றன. அவற்றுள் முக்கியமானது முதலாவது, இரண்டாவது அகிலங்களைச் சார்ந்த நாட்டு மக்களின் வாழ்க்கை விழுமியங்கள், பெறுமதிகள், போக்குகள், நடத்தைகள், நிறுவனங்கள் என்பவற்றை மூன்ருவது அகிலத்தைச் சார்ந்த நாடுகளின் மக்களும் பின்பற்ற முற்படுவதாகும். இதன் ஒரு விளைவு யாதெனில், அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருத்தமற்ற அம்சங்கள் பல குறைவிருத்தி நாடுகளிற் புகுத்தப்படுவதன் மூலம், பின்னையவற்றின் அபிவிருத்தி முயற்சி கடினமடைவதாகும். இந் நிலைமைக்குரிய எடுத்துக்காட்டுகளாக மேற்கத்திய நாடுகளின் கல்வி முறை, பாடவிதானங்கள், தொழிற் சங்க ஒழுங்குகள், சுகாதார சேவைகள், என்பன குறைவிருத்தி நாடுகளிற் பின்பற்றப்படுவதைக் குறிப்பிடலாம். அதுமாத்திரமன்றி மேற்கத்திய பணித்துறை மரபுகள், நிர்வாகம் என்பனகூடக் குறைவிருத்தி நாடுகளின் சூழலைக் கருத்திலெடுக்காது பின்பற்றப்படுகின்றன. மேற்கு நாட்டு வாழ்க்கை முறை, விழுமியங்கள் என்பன குறைவிருத்தி நாடுகளிற் பரவுவதன் மூலம் ஏற்படும் இன்னெரு விளைவு யாதெனில், இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிற் கல்வி கற்றுத் தேர்ந்தவர்கள் உள்நாட்டு வாழ்க்கை நிலை, வாழ்க்கைத் தரம் என்பவற்றில் திருப்தியடையாது, இவற்றின் உயர் மட்டத்தை நாடி அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குப் பெயர்ந்து செல்வ தாகும். இவ்வகையிலான 'சர்வதேச மூளைசாலிகள் வெளியேற்றம்' எல்லாக் குறைவிருத்தி நாடுகளுக்குமுரிய ஒரு பொதுவான பிரச்சினை யாகக் காணப்படுகின்றது. இது அந் நாடுகளின் அபிவிருத்தியை மேலும் பின்தங்க வைக்கின்றதென்பதிற் சந்தேகமில்லை.

ஆகவே இதிலிருந்து, குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அமைப்புக்கள் சுயசார்புடையவையாக வளர்ச்சியடைவது கடினமான தென்பதை உணரமுடிகின்றது. மேற்கூறிய காரணிகளின் தேறிய விளை வாக மூன்றாவது அகிலத்தைச் சார்ந்த நாடுகளின் அபிவிருத்தி அந் நாடுகளுக்கு அப்பாற்பட்ட சில அந்நிய சக்திகளில் தங்கியுள்ளதென லாம். இச் சக்திகளின் செல்வாக்கினைக் குறைவிருத்தி நாடுகள் கட்டுப் படுத்த முடியவில்லையென்பதுடன் அவற்றிலிருந்து தம்மை முற்றாகத் துண்டித்துக் கொள்ள முடியாதவையாகவும் காணப்படுகின்றன.

முடிவுரை:

இக் கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்ட குறைவிருத்தி நாடுகளின் இயல்புகளிலிருந்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு எழும் குறை விருத்தித் தன்மையானது ஒரு நாட்டின் உள்நாட்டுக் காரணிகளினால் மட்டும் ஆக்கப்படுவதொன்றன்று என்பது தெளிவாகும். தேசியக் காரணிகளுடன் சர்வதேச சூழ்நிலைகளும் கருத்திலெடுக்கப்பட வேண் டும். உள்நாட்டு வெளிநாட்டு நிலைமைகளினின்றெழும் பொருளாதார, சமூக சக்திகளே நாட்டின் வறிய நிலைக்கும், அதன் அடிப்படையிலான ஏனைய இயல்புக்கும் காரணமாகின்றன. எனவே குறைவிருத்தி நாடு களின் அபிவிருத்தி முயற்சியானது, கட்டுரையின் முதற் பகுதியில் ஆராயப்பட்ட நாடுகளுக்கிடையிலான தனிப்பட்ட வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு, உண்ணாட்டு நிலையில் வகுக்கப்படும் தந்திரங்களுடன் தற்போது நிலவுகின்ற சர்வதேச பொருளாதார முறைமையைச் சீர்ப் படுத்தி மாற்றியமைக்கும் ஒரு முயற்சியாகவும் விளங்க வேண்டியது அவசியமாகும். சர்வதேசப் பொருளாதார முறைமை வறிய நிலையிலிருக் கும் குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தித் தேவைகளுக்குச் சார்பாக வும் மதிப்பளிப்பதொன்றாகவும் இருக்க வேண்டும். உலகின் பெரும் பான்மை மக்கள் குறைவிருத்தி நாடுகளில் தான் வாழ்கின்றார்கள் என்பதே இந்த வாதத்திற்கு வலுவளிப்பதற்குப் போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With The Best Compliments From

# IDEAL AGENCY

"ESSENCE CANAL"

STOCKISTS OF ALL VARIETIES OF ESSENCE, COLOURING MATTERS, BAKERY PRODUCTS, CAKE INGREDIENTS & GRHCERIES.

**267B, POWER HOUSE ROAD, JAFFNA.**

☎ 23648

---

With the Best Compliments of

# Ocean Trades

IMPORTERS AND DEALERS OF FISHING GEARS

**OCEAN TRADES**

**76, Hospital Road, Jaffna.**

☎ 22122



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*from*

# Rasam Motor Stores

## இராசம் மோட்டார் ஸ்ரோர்ஸ்

128, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

IMPORTERS DISTRIBUTORS OF

AUTOMOTIVE SPARE PARTS & ACCESSORIES,

SPECIALISTS IN ISUZU SPARE PARTS.

**128, Stanley Road, Jaffna.**

☎ 28888 Cable: **RASISUZU**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# FINE FIT

## TAILORING

FOR FASHIONABLE TAILORING & SHIRTINGS SUITINGS

**10, Bazaar Lane, JAFFNA.**

கண் கவரும் படங்களுக்கு

பேபி போட்டோ



படப்பிடிப்பாளர்கள்

திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளும் உற்பத்திச் சாத்திய வளைகோடும்

ந. பேரின்பநாதன், M. A.
விரிவுரையாளர்,
பொருளியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

பொருளாதார அமைப்பு முறைகள் எவ்வகைப்பட்டவையாக இருப்பினும் முதலாளித்துவ பொருளாதாரம், சமவுடமைப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரம் - சில பொதுவான பிரச்சனைகளை அவை எதிர் நோக்குவது ஒரு பொதுப் பண்பாக இருக்கின்றது. அவையே அடிப் படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் என்று கூறப்படுகின்றன. மனித குலத்தின் தேவைகளுடன் ஒப்பிடுகின்றபோது உற்பத்திச் சாதனங்கள் பற்றுக்குறையாக உள்ளமையே இப்பிரச்சனைகள் தோன்றுவதற்கு அடிப் படைக் காரணமாக அமைகின்றது இந்த அடிப்படைப் பிரச்சனைகள் யாவை? உற்பத்திச் சாத்திய வளைகோடு என்றால் என்ன? உற்பத்திச் சாத்திய வளைகோட்டின் உதவியுடன் இப் பிரச்சனைகளை எவ்வாறு விளக்கமுடியும்? என்பதைப் பற்றிக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்க மாகும்.

முதலில் உற்பத்திச் சாத்திய வளைகோடு என்றால் என்ன என்று நோக்குவோம். இதனை உற்பத்தி இயல் தகவுவளையி என்றும் அழைப்பர். உற்பத்திச் சாத்திய வளைகோட்டினை வரைவதற்கு பின்வரும் எடுகோள்கள் அவசியமானவையாக உள்ளன.

1) உற்பத்திக் காரணிகள் கொடுக்கப்பட்டவையாக உள்ளன.

2) தொழில்நுட்பத்தில் மாற்றம் இல்லை.


3) காலம் குறுங்காலமாகும்.

கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உச்ச அளவில் உற்பத்தி செய்யக்கூடிய பல்வேறு சேர்க்கைப்புள்ளிகளை தொடுத்து வரையப்படும் கோடே உற்பத்திச் சாத்திய வளைகோடாகும். இதனை வரைபடத்தில் பின்வருமாறு காட்டலாம். வரைபடமானது பின்வரும் புள்ளிகளின் அடிப்படையில் வரையப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சேர்க்கைப் புள்ளி | பாண் உற்பத்தி (மில்லியன் ரூத்தல்) | துப்பாக்கி மில்லியன் |
|---|---|---|
| A | 30 | 0 |
| B | 28 | 5 |
| C | 26 | 10 |
| D | 23 | 15 |
| E | 20 | 20 |
| F | 16 | 25 |
| G | 10 | 30 |
| H | 3 | 35 |
| I | 0 | 36 |




படம் - 1

A, B, C, D, E, F, G, H, I ஆகிய புள்ளிகளை இணைப்பதன் மூலம் உற்பத்திச் சாத்திய வளைகோட்டினை வரைந்து கொள்ளலாம். படம் 1 அதனையே விளக்கி நிற்கின்றது. கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகள் அனைத்தையும் பயன்படுத்துகின்றபோது உற்பத்திநிலையானது இக் கோட்டின் ஏதாவது ஒரு புள்ளியில் இருக்கும். உற்பத்திக் காரணிகள் முழுவதையும் பாண் உற்பத்தியில் பயன்படுத்தின் 30 மில்லியன் ரூத்தல் பாண் உற்பத்தி செய்யப்படும். அதே வேளையில் துப்பாக்கி உற்பத்தி எதுவும் நடைபெறமாட்டாது. மறுவழமாக நோக்கின் கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகள் முழுவதையும் துப்பாக்கி உற்பத்தியில் பயன் படுத்தின் 36 மில்லியன் துப்பாக்கிகளை உற்பத்திசெய்துகொள்ளலாம். ஆனால் பாண் உற்பத்தி எதுவும் நடைபெறமாட்டாது. இவ்விரு நிலைகளும் இரு வேறுபட்ட நிலைகளெனலாம். முதல் நிலையினை உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் A புள்ளியும் இரண்டாம் நிலையினை I என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளியும் காட்டி நிற்கின்றன. A புள்ளிக்கும் I புள்ளிக்கும் இடைப்பட்ட ஏதாவதொரு புள்ளியில் உற்பத்தி இருப்பின் இரு பொருட்களும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்யப்படும். உதாரணமாக D என்ற புள்ளியில் 23 மில்லியன் ரூத்தல் பாணும் 15 மில்லியன் துப்பாக்கியும் உற்பத்தி செய்யப்படும்.

உற்பத்திச் சாத்திய வளைகோட்டின் எந்த ஒரு புள்ளியும் கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகள் யாவும் பயன்படுத்தப்படுவதைக் காட்டி நிற்கின்றன. அதாவது நிறைதொழில்மட்ட நிலையினைக்காட்டி நிற்கின்றன. A புள்ளிக்கும் I புள்ளிக்கும் இடைப்பட்ட எந்த ஒரு புள்ளியிலும் நிறை தொழில் மட்டம் நிலவுகிறது. ஆனால் J என்ற புள்ளியானது உற்பத்திச் சாத்திய வளைகோட்டிற்குள் அமைந்து காணப்படுகிறது. இந்நிலையில் சில உற்பத்திக்காரணிகள் பயன்படுத்தப் படாமல் இருக்கலாம் அல்லது உற்பத்தியில் திறமை இன்மை நிலவலாம். K என்ற புள்ளி உற்பத்திச் சாத்தியவளைகோட்டுக்கு வெளிப்புறமாக அமைந்து காணப்படுகிறது. அப்புள்ளியினை குறிப்பிட்ட பொருளாதாரம் அடையமுடியாது. ஏனெனில் அப்புள்ளியினை அடைவதற்கு, கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகள் பற்றாக்குறையாக இருப்பதனால் ஆகும். எனவே OAI என்ற பகுதி உற்பத்திச் சாத்தியமாகும் புள்ளிகளை அடக்கி காட்டுவதாக உள்ளது.

உற்பத்திச் சாத்திய வளைகோடு மேலும் விளக்குவது யாதெனில் ஒரு பொருளைக் கூடுதலாக உற்பத்தி செய்யவேண்டுமாயின், இன்னொரு பொருளின் உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்பதாகும். உதாரணமாக B என்ற புள்ளியில் பாண் உற்பத்தி கூடுதலாகவும், துப்பாக்கி உற்பத்தி குறைவாகவும் உள்ளது. துப்பாக்கி உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் அதாவது B புள்ளியில் இருந்து E புள்ளி அல்லது G புள்ளிக்குச் செல்லவேண்டுமாயின் பாணின் உற்பத்தியைக் குறைக்கவேண்டி உள்ளது. பாண் உற்பத்திச் சாதனங்களைத் துப்பாக்கி உற்பத்தித் துறைக்கு மாற்றுகின்றபோதுதான் இதனைச் செய்ய முடியும். உற்பத்திக் காரணிகள் பற்றாக்குறையாக உள்ளமையே இதற்குக் காரணமாகும். ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்காக இன்னொரு பொருளை விட்டுக் கொடுப்பதை பொருளியலில் சந்தர்ப்ப செலவு அல்லது அமையச் செலவு என்று அழைப்பர். இதனைச் சிறிய உதாரணம் மூலம் விளக்கலாம். A என்பவரிடம் 5 ரூபா உள்ளதெனக் கொள்வோம். அவர் இரு தேவைகளை நிறைவேற்ற முயல்கிறார் என்றும் எடுத்துக் கொள்வோம். மதிய உணவுக்கு அல்லது திரைப்படம் பார்ப்பதற்கு அவர் 5 ரூபாவினைப் பயன்படுத்தலாம். மதிய உணவின் விலை 5 ரூபா என்றும், திரைப்படம் பார்ப்பதற்கான செலவு 5 ரூபா என்றும் எடுத்துக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால் இரு தேவைகளில் அவர் ஒன்றையே நிறைவேற்ற முடியும். மதிய உணவுக்கு அந்த 5 ரூபாவினைப் பயன்படுத்தினாராயின் அதற்கான சந்தர்ப்ப செலவு திரைப்படம் பார்ப்பதைத் தியாகம் செய்தமையாகும். திரைப்படம் பார்க்க அதனைப் பயன்படுத்தினாராயின் அதற்கான சந்தர்ப்ப செலவு மதிய உணவைத் தியாகம் செய்தமையாகும். இவ்வுதாரணத்திலிருந்து நாம் விளங்குவது யாதெனில் வருமானப் பற்றாக்குறையே இங்கு சந்தர்ப்ப செலவு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது என்பதாகும். பொருளாதாரம் முழுவதையும் எடுத்து நோக்குகின்றபோது உற்பத்திக் காரணிகளின் பற்றாக்குறையே சந்தர்ப்ப செலவு ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது. உற்பத்திக் காரணிகள் ஏராளமானதாக இருப்பின் எல்லாப் பொருட்களையும் எந்த அளவிலும் உற்பத்தி செய்துகொள்ளலாம், உற்பத்திக் காரணிகளின் பற்றாக்குறையாக இருப்பதால் இரு பொருட்களின் உற்பத்தியையும் ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியாமல் உள்ளது. எனவே காரணிகளின் பற்றாக்குறையே சந்தர்ப்ப செலவை ஏற்படுவதற்குக் காரணமாக உள்ளது. உற்பத்திச் சாத்திய வளைகோட்டின் சரிவு சந்தர்ப்ப செலவை விளக்குகின்றது. படம் 1 இல் காணப்படும் உற்பத்திச் சாத்திய வளைகோடு அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்ப செலவை விளக்குவதாக உள்ளது. நிலையான சந்தர்ப்ப செலவைக் காட்டும் உற்பத்திச் சாத்திய வளைகோடு நேரானதாக இருக்கும். அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்ப செலவு என்பது குறிப்பிட்ட ஒரு பொருளில் ஒரு அலகினை மேலதிகமாக உற்பத்தி செய்வதற்கு விட்டுக்கொடுக்க வேண்டிய மற்றப் பொருளின் அளவு கூடிக்கொண்டு செல்வதைக் குறித்து நிற்கின்றது. உதாரணமாக படம் 1 இல் A யில் இருந்து I புள்ளியை நோக்கிச் செல்லச் செல்ல ஒவ்வொரு அலகு துப்பாக்கியையும் மேலதிகமாகச் செய்வதற்கு விட்டுக்கொடுக்க வேண்டிய பாணின் அளவு அதிகரித்துச் செல்கின்றது. அதே போன்று I புள்ளியில் இருந்து A புள்ளியை நோக்கிச் செல்லச் செல்ல ஒவ்வொரு அலகு பாணையும் மேலதிகமாக உற்பத்தி செய்வதற்கு விட்டுக் கொடுக்கப்பட வேண்டிய துப்பாக்கியின் அளவும் அதிகரித்துச் செல்கின்றது நடைமுறை உலகில் அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்ப செலவு நிலையே காணப்படுகின்றது. உற்பத்திக் காரணிகளின் பற்றாக்குறையே சந்தர்ப்ப செலவு ஏற்படுவதற்குச் காரணமாக அமைவது போல, அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றுவதற்கும் உற்பத்திக் காரணிகளின் பற்றாக்குறையே காரணம் என்பதையும் இங்கு வலியுறுத்திக் கூறுதல் நல்லதாகும்.

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் முக்கியமாக ஆறு என வகைப்படுத்தப்பட்டுள்ளன அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் உற்பத்திச் சாத்திய வளைகோட்டினையும் தொடர்புபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குவோம். முதலாவது பிரச்சினையாக அமைவது ஒரு பொருளாதாரத்தில் உள்ள முழு உற்பத்திச் சாதனங்களும் முற்றாகப் பயன்படுத்தப்படுகின்றனவா? அல்லது சில உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்படாது வேலையற்று உள்ளனவா? என்பதாகும். சுருங்கச் சொல்லின் நாட்டில் நிறை தொழில் மட்டம் நிலவுகின்றதா அல்லது வேலையின்மை நிலவுகின்றதா என்பதாகும். மக்களது விருப்பங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்யத்தக்க வகையில் உற்பத்திக் காரணிகள் இல்லை. அவை பற்றாக்குறையாக உள்ளன. இவ்வாறு பற்றாக்குறையாகக் காணப்படும் உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்படாமல் வேலையற்று உள்ளனவா? என்று வினவுதல் ஆச்சரியத்தைத் தரலாம். ஏனெனில் மக்களின் தேவைகள் அதிகமாக உள்ளபோது கிடைக்கின்ற உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தித் தமது முக்கியமான விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முனைவார்களேயன்றிச் சாதனங்களைப் பயன்படுத்தப்படாமல் வீணாகக் கிடக்க விடமாட்டார்களல்லவா? அவ்வாறு வீணாகக் கிடக்க விடுதல் பொருளாதார விரயத்தையே கொடுக்கும். உதாரணமாக உழைப்பு என்ற உற்பத்திக் காரணியை எடுத்துக் கொள்வோம். உழைப்பு பயன்படுத்தப்படாமல் இருப்பது பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் நல்ல விடயமல்ல. வேலையில்லாத இளைஞர்கள் சமூகத்தில் இருப்பது பல தீய பழக்கங்களுக்கும் வழிவகுக்கும். எனினும் முதலாளித்துவ பொருளாதாரங்களில் வேலையின்மை என்பது அடிக்கடி எதிர்நோக்கப்படும் ஒரு பிரச்சினையாக அமைகின்றது. பெரும்பாலும் பொருளாதார மந்தநிலை தோன்றும்போது வேலையின்மை தோன்றுகின்றது. வேலையின்மை இருக்கக்கூடிய நிலையினை அதாவது உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலையினைப் படம் 1 இல் J என்ற புள்ளி காட்டி நிற்கின்றது. உற்பத்திச் சாதனங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும் நிலையினை படம் 1 இல் A, B, C, D, E, F, G, H, I, ஆகிய புள்ளிகள் காட்டி நிற்கின்றன.

பொருளியலில் முதலாளித்துவ பொருளாதாரங்களில் செழிப்பும் மந்தமும் மாறிமாறிக் காணப்படுவதற்கான காரணங்கள் பற்றி வர்த்தக சகட ஒட்டக் கொள்கையின் கீழ் விளக்கப்படுகின்றது. 1930 இல் உலகப் பெருமந்தம் ஏற்பட்டபோது முதலாளித்துவ நாடுகளில் குறிப்பாக ஐக்கிய ராச்சியத்தில் ஏறக்குறையக் காற்பங்கினர் வேலையின்றி இருந்தனர். இந் நிலை ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் நீடித்தது. உற்பத்திக் காரணிகள் ஏன் பயன்படுத்தப்படாமல் உள்ளன என்பது பற்றிய ஆய்வில் 1936-ல் ஜே. எம். கெயின்ஸ் (J. M. KEYNES) என்பவரால் வெளியிடப்பட்ட 'வேலை, வட்டி, பணம் என்பன பற்றிய பொதுக் கொள்கை' என்ற நூலில் முன்னேற்றகரமான கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கப்பட்டன. இந் நூலின் இத்தகைய ஆய்வுகள் பெரிதும் விருத்தியடைந்தன. இவ்வடிப்படைப் பிரச்சினையை ஆராய்வதாக பொருளியலில் 'பேரினப் பொருளியல்' என்ற பகுதி அமைகின்றது.

அடுத்த பிரச்சினையாக அமைவது என்ன பொருளை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்பதாகும். உற்பத்திக் காரணிகளின் அருமைத் தன்மையில் இருந்தே இப்பிரச்சினையும் எழுகின்றது. உற்பத்திக் காரணிகள் மித மிஞ்சியதாக இருப்பின் என்ன பொருளையும் எந்த அளவிலும் உற்பத்தி செய்யலாம். ஆனால் காரணிகள் பற்றாக்குறையாக அமைவதால் என்ன பொருளை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்ற பிரச்சினை தோன்றுகின்றது. பொருளாதாரம் நிறை தொழில் மட்ட நிலையில் உள்ளபோது ஒரு பொருளைக் கூடுதலாக உற்பத்தி செய்யவேண்டுமாயின் இன்னொரு பொருளைக் குறைவாக உற்பத்தி செய்யவேண்டி உள்ளது. படம் 1 இனை நோக்கினால் B என்ற புள்ளியில் பாண் உற்பத்தி கூடுதலாகவும், துப்பாக்கி உற்பத்தி குறைவாகவும் அமைகின்றது. துப்பாக்கி உற்பத்தியினை அதிகரிக்க வேண்டுமாயின் பாண் உற்பத்தியினைக் குறைக்கவேண்டும். அதற்கு பாண் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சாதனங்களைத் துப்பாக்கி உற்பத்திக்கு மாற்றுதல் வேண்டும். எனவே இந்த இரண்டாவது பிரச்சினை 'சாதன ஒதுக்கீடு' பற்றிய பிரச்சினையாக அமைகின்றது. உற்பத்திச் சாதனங்கள் பல பயன்பாடு கொண்டவையாக இருப்பதுவும் இப் பிரச்சினை தோன்றுவதற்குக் காரணமாகும். குறிப்பிட்ட ஒரேயொரு பயன்பாடுதான் ஒரு உற்பத்திக் காரணிக்கு இருக்குமாயின் அக் காரணியைக் குறிப்பிட்ட பொருளின் உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். அங்கே சாதன ஒதுக்கீட்டில் பிரச்சினைகள் அதிகம் தோன்றமாட்டாது. பல பயன்பாடுகள் உள்ளபோது எப் பொருளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்துவது என்ற பிரச்சினை தோன்றும். என்ன பொருளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவது என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலாளித்துவப் பொருளாதாரமோ, சம உடைமைப் பொருளாதாரமோ ஏதோ ஒரு முறையினைக் கையாள்தல் வேண்டும். சம உடைமைப் பொருளாதாரத்தில் இதனைச் செய்வதற்கு மத்திய திட்டமிடற் குழு பொறுப்பாக உள்ளது. ஆனால் முதலாளித்துவ பொருளாதாரத்தில் என்ன பொருளை எந்த அளவில் உற்பத்தி செய்யவேண்டும் என்பது விலைப் பொறிமுறையின் மூலமாகத் தீர்க்கப்படுகின்றது. கேள்வி, நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் இயங்கும் விலை முறையே முதலாளித்துவ பொருளாதாரத்தில் என்ன பொருளை எந்த அளவில் உற்பத்தி செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய கருவியாகத் தொழிற்படுகின்றது. இவ்விலை முறை பற்றிய ஆய்வு பொருளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் முக்கிய கிளையாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வுக் கிளையானது விலைக் கொள்கை அல்லது சிற்றினப் பொருளியல் என அழைக்கப்படுகின்றது.

எந்த முறையில் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பது அடுத்த பிரச்சினையாகும். ஒரு பொருளை உற்பத்தி செய்வவற்குப் பல வழிமுறைகள் உள்ளன. உதாரணமாகத் துணி உற்பத்தியினைக் கைத்தறி நெசவின் மூலமாகவோ அல்லது பெரிய தொழிற்சாலைகள் மூலமோ உற்பத்தி செய்யலாம், நெற் பயிர்ச்செய்கை செறிவுப் பயிர்ச்செய்கை மூலமோ அல்லது விரிவுப் பயிர்ச்செய்கை மூலமோ மேற்கொள்ளலாம். அதாவது குறிப்பிட்ட ஒரு பொருளின் குறிப்பிட்ட அளவு தொகையினை உற்பத்தி செய்வதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றில் எந்த முறையினைத் தெரிவு செய்வது என்ற தொழில்நுட்பத் தெரிவு பற்றிய பிரச்சினையாக இது அமைகிறது. தொழில் நுட்பமானது உழைப்புச் செறிவு வாய்ந்ததாகவோ, முதல் செறிவு வாய்ந்ததாகவோ அமையலாம்,

உற்பத்திக் காரணிகளின் அருமைத் தன்மையே தொழில்நுட்பத் தெரிவினைச் செய்யவேண்டிய நிலையினை உருவாக்குகின்றது. காரணிகள் மிதமிஞ்சி இருப்பின் எந்த வழியையும் கையாண்டு பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் உற்பத்திக் காரணிகள் அருமையாக இருப்பதால் ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குப் பல வழிகள் இருந்தபோதும் அவற்றில் செலவு குறைந்த வழியைத் தேர்வு செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறான தெரிவினை ஏற்படுத்துகின்றபோது தான் அருமையாக உள்ள உற்பத்திக் காரணிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்த முடியும்.

பல்வேறு வழிகளுக்கிடையே தெரிவு செய்வதென்பது உற்பத்திக் காரணிகள் கிடைக்கும் அளவிலும் அவற்றின் விலையிலும் தங்கியுள்ளது. ஒருசில காரணிகள் ஒப்பீட்டு ரீதியில் மற்றக் காரணிகளிலும் பார்க்க அருமையானதாக உள்ளன. உதாரணமாக இந்தியா, இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் முதல் என்ற காரணியிலும் பார்க்க உழைப்பு என்ற காரணி அதிகமாக உள்ளது. இந் நாடுகளில் முதலிலும் பார்க்க உழைப்பு என்ற உற்பத்திக் காரணி மலிவானதாக இருக்கும். இங்கு உழைப்பு செறிவுவாய்ந்த உற்பத்தி முறையினைப் பின்பற்றுவது செலவு குறைந்த முறையாக இருக்கும். இது பற்றிய விபரங்களைப் பொருளியலின் உற்பத்திக் கோட்பாடு என்ற பகுதி ஆராய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சமூகத்தில் உள்ள அங்கத்தவர் களிடையே எவ்வாறு பங்கிடப்படுகிறது என்பது அடுத்தபடியாக ஆர்வத்தினைத் தருகின்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகும். அதாவது தேசிய உற்பத்தியினைச் சமூகத்தில் உள்ள தனிப்பட்டவர்களுக்கிடையேயும் குழுக்களுக்கிடையேயும் எவ்வாறு பங்கிட்டுக் கொள்வது என்பதே இப் பிரச்சினையாகும். பழம் பொருளியலாளரான அடம் சிமித், றிக்காடோ ஆகியோர் இப் பிரச்சினை பற்றி அதிகம் கவனித்துள்ளனர். தொழிலாளர், முதலாளிகள், நிலப் பிரபுக்கள் ஆகியோரிடையே உற்பத்தியானது எவ்வாறு பங்கிடப்படுகிறது என்பது பற்றி ஆராயப்பட்டு வந்துள்ளது. நவீன பழம் பொருளியலாளர்கள் இவ் விடயத்தில் அதிக கவனத்தினைச் செலுத்தவில்லை. ஆனல் இக் காலத்தில் பங்கீடு பற்றிய விடயத்தில் பொருளியலாளரின் கவனம் அதிகரித்துள்ளது.


பண வருமானம் எவவாறு பங்கிடப் பட்டுள்ளது என்பதே உற்பத்திப் பங்கீட்டையும் தீர்மானிக்கின்றது. அதிக பணம் வைத்திருப்பவர்கள் அதிகளவு பொருட்களைக் கொள்வனவு செய்யும் வசதி படைத்தவர்களாக உள்ளனர். தேசிய உற்பத்தியில் பெரும் பகுதி அவர்களிடமே செல்லும். பண வருமானம் சமமாகப் பங்கிடப்பட்டிருப்பின் உற்பத்தியும் சமமாகப் பங்கிடப்படும். பணவருமானம் எவ்வாறு உழைக்கப்படுகின்றது? உற்பத்திக் காரணிகள் தமது சேவையை வழங்குவதன் மூலம் பண வருமானத்தினை உழைக்கின்றன. எனவே எக் காரணிக்குக் கூடுதலாக விலையுள்ளதோ, அக் காரணியைச் சொந்தமாக அதிகளவில் வைத்திருப்பவர் அதிக பண வருமானத்தினைப் பெறுகின்றார். அவர்களே நாட்டின் உற்பத்தியில் பெரும் பகுதியைப் பெறுகின்றார். உற்பத்திக் காரணிகளின் பங்கீடு சமமாக இருப்பின் தேசிய உற்பத்திப் பங்கீடும் சமமாக இருக்கும். உற்பத்திக் காரணிகளின் விலையினை அதன் கேள்வி, நிரம்பல் நிர்ணயிக்கின்றன. அரசாங்க நடவடிக்கைகள் பங்கீட்டை எவ்விதம் மாற்றியமைக்கின்றன என்ற விடயங்களும் தற்காலத்தில் ஆர்வம் தரும் விடயமாக அமைகின்றது. இது பற்றிய விபரங்களைப் பொருளியலில் பங்கீட்டுக் கோட்பாடு ஆராய்கின்றது.

உற்பத்திக் காரணிகள் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதே அடுத்த பிரச்சினையாகும். உற்பத்தியிலும் பங்கீட்டிலும் திறமை காணப்படுகின்றதா என்பதே இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். உற்பத்திக் காரணிகளின் அருமை என்பதில் இருந்துதான் இதுவும் தோன்றுகிறது. உற்பத்திக் காரணிகள் மிதமிஞ்சிய அளவில் இருப்பின் திறமை பற்றி அதிகம் கவலைப்படாமல் இருக்கலாம். ஆனல் உற்பத்திச் சாதனங்களோ அருமையானவை. அவற்றினைத் திறமையாகப் பயன்படுத்துகின்றபோது உச்ச உற்பத்தியினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறமுடியும். என்ன பொருட்களை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும்? அவை எவ்வாறு உற்பத்தி செய்யப்பட வேண்டும்? உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாருக்கிடையே பங்கிடப்பட வேண்டும் என்பவற்றை ஆராய்ந்த பின்னர் உற்பத்தியும், பங்கீடும் திறமையாக உள்ளனவா என வினவுதல் இயல்பான தொன்றேயாகும். ஒரு பொருளினது உற்பத்தியினைக் குறைக்காமல் இன்னொரு பொருளினது உற்பத்தியினை அதிகரிக்க முடியாது என்ற நிலை காணப்படுமாயின் அங்கு உற்பத்தியில் திறமை நிலவுகின்றது என்று கூறிக் கொள்ளலாம். மறுவழமாக நோக்கின் ஒரு பொருளினது உற்பத்தியைக் குறைக்காமல் இன்னொரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்ற நிலை காணப்படின் உற்பத்தியில் திறமையின்மை என்பது நிலவும். இதன் கருத்து யாதெனில் இன்னும் உற்பத்தியினை அதிகரிக்கக் கூடிய நிலை உள்ளது என்பதாகும். தற்போதைய உற்பத்தி முறையில் திறமையின்மை காணப்படுகின்றது. அதனை நீக்குவதன் மூலம் தேசிய உற்பத்தியினை அதிகரிக்க முடியும் என்பதையே திறமையின்மை என்பதற்கான விளக்கம் கூறி நிற்கின்றது. இதனை வரைபடம் 2 இன் மூலம் தெளிவாக விளக்கலாம்.




படம்-2

உற்பத்திச் சாத்திய வளை கோட்டில் அமைந்திருக்கும் புள்ளிகள் யாவும் உற்பத்தியில் திறமை உள்ளது என்பதைக் காட்டி நிற்கின்றது. ஏனெனில் அப் புள்ளிகள் ஒரு பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் இன்னொரு பொருளின் உற்பத்தியினை அதிகரிக்க முடியாது என்ற நிலையினைக் காட்டுகின்றன. உதாரணமாக A யிலிருந்து B புள்ளிக்குச் செல்லும்போதோ அல்லது B யிலிருந்து C புள்ளிக்குச் செல்லும்போதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது C யிலிருந்து I க்குச் செல்லும்போது பாணின் உற்பத்தியைக் குறைத்துத் துப்பாக்கி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதாவது உற்பத்திச் சாத்தியவளைகோட்டிற்குள் அமைந்திருக்கும்புள்ளிகள் திறமையற்ற நிலையினைக்குறிக்கின்றன. ஏனெனில் உற்பத்திச்சாத்திய வளைகோட்டுக்குள் தற்போதையநிலை இருக்குமாயின் ஒரு பொருளின் உற்பத்தியினைக் குறைக்காமல் இன்னொரு பொருளின் உற்பத்தியினை அதிகரிக்கலாம். உதாரணமாக J என்ற புள்ளியினை எடுத்துக் கொள்வோம். J என்ற புள்ளியில் உற்பத்தி நிலை இருக்கும்போது $oa_1$ என்றளவு பாணும் $oi_1$ என்றளவு துப்பாக்கியும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந் நிலையில் திறமையின்மையினை நீக்கினால் ஒரு பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் இன்னொரு பொருளின் உற்பத்தியினை அதிகரிக்கலாம். உதாரணமாக J என்ற புள்ளியிலிருந்து B என்ற புள்ளிக்குச் செல்லும்போது துப்பாக்கி உற்பத்தியைக் குறைக்காமல் பாண் உற்பத்தியை $a_1$ $a_2$ என்ற அளவால் அதிகரிக்கலாம். அல்லது J என்ற புள்ளியில் இருந்து D என்ற புள்ளிக்குச் செல்லும்போது பாண் உற்பத்தியைக் குறைக்காமல் $i_1$ $i_2$ என்ற அளவால் துப்பாக்கி உற்பத்தியை அதிகரிக்கலாம். J புள்ளியில் இருந்து C புள்ளிக்குச் செல்லும்போது இரு பொருட்களின் உற்பத்தியையும் ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியும். J புள்ளியில் உற்பத்தி நடக்கும்போதும்சரி B, C, D ஆகிய புள்ளிகளில் உற்பத்தி நடக்கும் போதும்சரி கொடுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகள் ஒரே அளவுடையவையே என்பது கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாகும்.

மேலும் ஒரு விடயத்தினை இங்கு அறிவுறுத்திக் கூறுதல் அவசியமாகும். உற்பத்திச் சாத்திய வளைகோட்டுக்குள் J என்ற புள்ளி அமைந்திருப்பதனால் வேலையின்மை நிலவுகின்றது என்பது இங்கு அர்த்தமல்ல. எல்லாக் காரணிகளும் முற்றாகப் பயன்படுத்தப் பட்டாலும் அவை திறமையான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதே இங்கு அவதானிக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும். பின்வரும் உதாரணத்தின் மூலம் அதனைத் தெளிவாக விளக்கலாம். ஒரு தொழிற்சாலையில் 100 தொழிலாளர் வேலை செய்கிறார்கள் என எடுப்போம். 100 தொழிலாளர்களும் திறமையாக வேலை செய்தால் உற்பத்தி நிலையானது உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் இருக்கும் 100 தொழிலாளர்களில் 80 பேர் மட்டும் வேலை செய்தால் உற்பத்தி நிலை உற்பத்திச்சாத்திய வளைகோட்டிற்குள் அமைந்திருக்கும். இது 20 தொழிலாளர்கள் வேலை செய்யாததால் ஏற்பட்ட நிலையைக் குறிக்கின்றது. அதே சமயத்தில் 100 தொழிலாளர்கள் வேலை செய்தாலும் அவர்கள் திறமையாக வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாவிடின் உற்பத்தி நிலையானது உற்பத்திச் சாத்திய வளை கோட்டிற்குள் தான் அமைந்திருக்கும். இந்த நிலையையே படம் 2 இல் உள்ள J புள்ளி காட்டி நிற்கின்றது.


பங்கீட்டில் திறமை என்பது ஒருவரது நலனைக் குறைக்காமல் இன்னொருவரது நலனை அதிகரிக்க முடியாத நிலையைக் குறிப்பிடுகின்றது மறுவழமாக நோக்கின் ஒருவரது நலனைக் குறைக்காமல் இன்னொருவரது நலனை அதிகரிக்கக்கூடிய நிலை காணப்படுமாயின் அது பங்கீட்டில் திறமையின்மையைக் குறிப்பதுடன் தற்போதைய பங்கீட்டு நிலை நியாயமற்றது. பொருளாதார நலனை உச்ச நிலையில் வைத்திருப்பதற்கு உகந்ததொன்றல்ல என்பதைக் குறித்து நிற்கின்றது. பங்கீட்டினை மாற்றியமைப்பதன் மூலம் பொருளாதார நலனை உச்சப்படுத்தலாம். பொதுவாக பொருளாதாரங்களில் உற்பத்தியிலும் பங்கீட்டிலும் திறமையின்மை காணப்படுகின்றது. இத் திறமையின்மைகள் நீக்கப்படும் போது தேசிய உற்பத்தியும் மக்கள் நலனும் உயர்த்தப்படும். ஆனால் இத் திறமையின்மைகளை நீக்குவதற்குச் செலவு ஏற்படும். இவ்வாறு ஏற்படும் செலவுகள் திறமையின்மைகளை நீக்குவதன் மூலமாகப் பெறும் நன்மைகளை விடக் குறைவாக இருக்குமாயின் திறமையின்மைகள் யாவை எனக் கண்டுபிடிப்பதிலும் அவற்றை நீக்குவதிலும் நேரத்தையும், முயற்சியையும் செலவிடலாம். வரக்கூடிய நன்மைகளை விடச் செலவுகள் கூடுதலாக இருப்பின் திறமையின்மைகளை நீக்க முனைதல் சிக்கனமற்ற விடயமாக அமையும். எவ்வாறெனினும் திறமையின்மைகளைத் துல்லியமாகக் கண்டு பிடிப்பது கடினமான காரியமாகும். எனவே திறமையின்மைகளை நீக்க முனைவது நல்லதா? அல்லது அவற்றை அப்படியே இருக்கத்தக்க வகையில் விடுவது சரியா? என்பது பற்றிச் சரியான விடையினை அளிக்க முடியாது உள்ளது. இது பற்றிய விடயங்கள் பொருளியலில் ஒரு பகுதியான சிற்றினப் பொருளாதாரத்தில் நலனாய்வுப் பொருளியல் (Welfare Economics) என்ற பகுதிக்குள் ஆராயப்படுகின்றது.

ஆறுவது பிரச்சினை பொருளாதார வளர்ச்சி பற்றியதாக அமைகிறது. பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு வருடாவருடம் அதிகரிக்கின்றதா அல்லது நிலையாக இருக்கின்றதா என்பது பற்றியதே இப் பிரச்சினையாகும். பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு அதிகரிக்கின்றபோது எதிர் காலத்தில் கூடுதலான பொருட்களை உற்பத்தி செய்யமுடியும். கூடுதலாக பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றபோது மக்கள் பெருமளவு பொருட்களை நுகர முடியும். இதனால் மக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வாழ்க்கைத் தரம் உயரும். இதுவே பொருளியலின் இறுதி நோக்க மாகும். பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி இயலள வானது வருடா வருடம் அதிகரித்துக் கொண்டு செல்வதையே பொரு ளாதார வளர்ச்சி என்பர். பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதை உற் பத்திச் சாத்திய வளைகோடு மேல் நோக்கி நகர்வதன் மூலம் காட்டு கின்றது. இதனைப் படம் 3 விளக்குகின்றது.



படம் 3

ஆரம்பத்தில் உற்பத்திச் சாத்திய வளைகோடு AI என்பதாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதனைக் காட்டும் உற்பத்திச் சாத்திய வளைகோடு $A_1I_1$ ஆகும். முன்பிலும் பார்க்கக் கூடுதலான அளவு பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதையே இது காட்டி நிற்கின்றது. உதாரணமாக C என்ற புள்ளியில் இருந்து D என்ற புள் ளிக்குச் செல்கையில் இரு பொருட்களிலும் முன்பிலும் பார்க்கக் கூடுத லாக உற்பத்தி செய்ய முடியும். பொருளாதாரத்தின் உற்பத்தி இயலள வானது, உற்பத்திக் காரணிகளின் அளவில் அதிகரிப்பு ஏற்படும்போதோ அல்லது தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்படும் போதோ அதிகரிக் கும்.

பொருளாதார வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் அடம்சிமித் காலம் தொட்டுப் பொருளியலில் இடம்பெற்று வந்துள்ளன. எனினும் இடைக் காலத்தில் நவீன பழம் பொருளியலாளர்கள் இதில் அதிக கவனத் தினைச் செலுத்தவில்லை. ஆனல் தற்போது என்றுமில்லாத அளவிற்கு பொருளாதார வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் பல வெளிவந்து கொண் டிருக்கின்றன. எதிர் காலத்தில் இது பற்றிய அறிவு மேலும் விருத்தி யடையும் என்று நம்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதியே" உனது நறுமணம் எங்கும் பரவ

எமது நல்லாசிகள் பல.

உங்கள் குடும்பத்தின்

அன்றாடத் தேவைகளை

பொங்கும் மகிழ்வுடன்

என்றும் நிறைவு செய்வது

# 'FAMILY SHOP'

- உணவுப் பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- அலங்காரப் பொருட்கள்
- அன்பளிப்பு வகைகள்
- பால்மா, சோப், நூல்வகைகள்
- இன்னும் பல, பல

# 'பெமிலி சொப்'

(யாழ் கனகரத்தினம் [ஸ்ரான்லி] கல்லூரிக்கு அருகாமையில்)

425, (793) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில் முன்னணி நிறுவனம்!

# நொதேண் பெஸ்ட் இன்ஸ்ரிரியூட்

| A/L | | O/L | |
|---|---|---|---|
| பொருளியல்: | கிருஷ்ணானந்தன் | கணிதம் | V. T. இராஜேந்திரா<br>P. ஜெயக்குமார் |
| வர்த்தகம்: | இலங்கா | விஞ்ஞானம்: | பஞ்சரட்ணம்<br>பாலசுப்பிரமணியம் |
| கணக்கியல்: | மரியதாஸ்<br>மகேந்திரன் | ஆங்கிலம்: | மகாலிங்கம்<br>ஜோசப் |
| அளவையியல்: | பிரபல ஆசிரியர் | தமிழ்: | சரவணன்<br>வைகுந்தவாசன் |
| புவியியல்: | சண் | சமூகக்கல்வி: | மஃறூப் |
| தமிழ்: | சரவணன் | சுகாதாரம்: | இலங்கராஜா |
| இ. நாகரீகம்: | பிரபல ஆசிரியர் | | |
| அரசியல்வரலாறு | மஃறூப் | | |
| கிறிஸ்தவம்: | யேசுரட்ணம் | | |

**6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.**

**"நொதேண் பெஸ்ட் இன்ஸ்ரிரியூட்"**

(சென்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

408, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டிக்குளி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்மதி நிலுவை
# BALANCE OF PAYMENT

செல்வி V. புஷ்பலதா - 12 (1985)

உலக நாடுகள் அனைத்தும் இன்று ஒன்றுடன் ஒன்று வர்த்தகத் தொடர்பு கொண்டதாகக் காணப்படுகின்றன. இவ் வர்த்தகத் தொடர்பு காரணமாக இன்று சென்மதி நிலுவை முக்கியத்துவம் பெற்றதொன்றாக விளங்குகின்றது. சென்மதி நிலுவை என்பது குறிக்கப்பட்ட காலப் பகுதியினுள் குறிப்பிட்ட ஒரு நாடு ஏனைய உலக நாடுகளுடன் சட்ட ரீதியாகவே அந்நியச் செலாவணி என்ற வடிவில் மேற்கொண்ட எல்லாக் கொடுப்பனவுகளுக்கும் பெறுகைகளுக்கும் இடையிலான மீதி ஆகும். சென்மதி நிலுவை அட்டவணை என்பது சட்ட ரீதியான இக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு முறையாகப் பதிவு செய்து வைத்திருக்கும் ஓர் பட்டியலாகும். பொருட்கள், சேவைகள், மூலதனம் என்பவற்றின் ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் சமப்படுத்தும் ஓர் நிதிப் பேரேடு எனவும் சென்மதி நிலுவையைக் குறிப்பிடுவர். சர்வதேச நாணய நிதியினால் வெளியிடப்பட்ட சென்மதி நிலுவைப் புத்தகத்திலுள்ளது போல இது பதியப்படுவது வழக்கமாகும்.

சென்மதி நிலுவை அட்டவணை நடைமுறைக் கணக்கு, மூலதனக் கணக்கு என இரு பிரிவுகளைக் கொண்டது. நடைமுறைக் கணக்கினுள் கட்புலனாகும் ஏற்றுமதி, கட்புலனாகும் இறக்குமதி, சேவைகளும் மாற்றுக் கொடுப்பனவுகளும் என்ற மூன்று விடயங்கள் உள்ளடக்கப்படும். மூலதனக் கணக்கினுள் நாணயமல்லாத் துறை, நாணயத் துறை என்ற இரு பிரிவுகள் அடங்கும். நாணயமல்லாத் துறையினுள் மூலதன உட்பாச்சல்களும், மூலதன வெளிப் பாச்சல்களும், நீண்டகாலக் கடன்களும் உள்ளடங்கும். நாணயத்துறை என்பதனுள் அரசினால் பெறப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவையும் மத்திய வங்கியினதும் வர்த்தக வங்கியினதும் பொறுப்புக்கள், சொத்துக்கள் என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் சர்வதேச நாணய நிதியுடனான கொடுக்கல் வாங்கல்களும் நாணயத் தங்கம் என்ற விடயங்கள் உள்ளடங்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்மதி நிலுவையினைக் கணக்கியல் வடிவில் இரட்டைப் பதிவு முறையில் பதிந்து கொள்வது வழக்கமாகும். எல்லாக் கொடுப்பனவு களையும் வரவுப் பக்கத்திலும் (Debit) எல்லாப் பெறுகைகளையும் செல வுப் பக்கத்திலும் (Credit) பதியப்படுவது வழக்கமாகும். இவ்வாறு இரட்டைப் பதிவு முறையில் பதியப்படுவதனாலே சென்மதி நிலுவை எப்பொழுதும் சமமாகவே இருக்கும் எனக் கூறுவர். அந்நியச் செலா வணியின் கொள்வனவில் எந்தவொரு நடவடிக்கையும் உயர்வினை ஏற்படுத்துமானால் அவையெல்லாம் வரவுப் பக்கத்தில் பதியப்படும். இதேபோல எந்தவொரு நடவடிக்கையானது அந்நியச் செலாவணியின் விற்பனையில் உயர்வினை ஏற்படுத்துகின்றதோ அவையெல்லாம் செலவுப் பகுதியில் பதியப்படும். எனவே ஒரு நாட்டின் கொள்வனவு இன்னோர் நாட்டின் பெறுகையாகவும் ஒரு நாட்டின் பெறுகை இன்னொரு நாட் டின் கொடுப்பனவாகவும் அமையும்.

சென்மதி நிலுவையில் முக்கிய ஒரு அம்சம் வர்த்தக நிலுவை ஆகும். வர்த்தக நிலுவை என்பது கட்புலனாகும் ஏற்றுமதிகளின் பெறு மதிக்கும், கட்புலனாகும் இறக்குமதிகளின் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசமாகும். வர்த்தக நிலுவை சாதகமானது என்றால் கட்புல னாகும் ஏற்றுமதிகளின் பெறுமதி இறக்குமதிகளின் பெறுமதியை விட அதிகமானது என்பதாகும். வர்த்தக நிலுவை விலை, தொகை என்ற இரண்டு விடயங்களும் உள்ளடங்கியுள்ளது. வர்த்தக நிலுவை, சென்மதி நிலுவையின் ஓர் உட்பிரிவேயாகும். வர்த்தக மாற்று விகிதம் என்பது இறக்குமதிப் பண்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள உள்நாட்டில் உற் பத்தியாக்கப்பட்ட பொருளில் எவ்வளவினை விட்டுக் கொடுக்க வேண் டும் என்பதைக் குறிக்கும் அல்லது ஒரு அலகினை ஏற்றுமதி செய்வதன் மூலம் எத்தனை அலகை இறக்குமதி செய்யலாம் என்பதைக் குறிக்கும். வர்த்தக மாற்று வீதம் என்பது சர்வதேச வர்த்தகத்தில் ஒரு பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக நேரடியாக உற்பத்தியாக்குவதற்கு ஏற்படும் சந்தர்ப்பச் செலவினையே புலப்படுத்தும் எனலாம். வர்த்தக மாற்று வீதம் வழமையாக இறக்குமதி விலைச் சுட்டெண்ணிற்குரிய ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணின் விகிதமாகவே கணிக்கப்படும். ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணை இறக்குமதிச் சுட்டெண்ணால் பிரித்து 100 இனால் பெருக்க வருவது வர்த்தக மாற்று விகிதமாகும்.

$$\text{வர்த்தக மாற்று விகிதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக மாற்று வீதம் 100 ஆனல் ஓர் அலகினை ஏற்றுமதி செய்ய ஓர் அலகினை இறக்குமதி செய்யவேண்டும் என்பதாகும். வர்த்தக மாற்று வீதம் 50 ஆனல் ஒரு அலகினை இறக்குமதி செய்ய இரண்டு அலகினை ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதாகும். வர்த்தக மாற்று வீதம் 100 ஐ விடக் குறைவாக இருந்தால் வர்த்தக மாற்று வீதம் பாதகம் எனப்படும். வர்த்தக மாற்று வீதம் 100 ஐ விட அதிகமானல் சாதகம் எனப்படும். வர்த்தக மாற்றுவீதம் சந்தர்ப்பச் செலவைப் புலப்படுத்துவதாக அமையும். வர்த்தக மாற்று வீதம் பாதகமாக இருக்கின்ற போது வர்த்தக நிலுவை சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருக்கலாம்.

சென்மதி நிலுவையில் சமநிலையின்மை காணப்படுகின்றது என்ருல் நாட்டின் பொருளாதார அமைப்பு முறையாலும் எதிர்பாராத நிகழ்ச்சிகளினுலும் உள் நாட்டில் ஏற்படும் பணவீக்கத்தினுலும், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை மாற்றத்தினுலும் ஏற்படுவதாகும். எதிர்பாராத நிகழ்ச்சிகள் என்பதனுள் காலநிலையில் ஏற்படும் மாற்றமும் அடங்கும். உள் நாட்டில் அரசியல் குழப்பங்களும் சென்மதி நிலுவையில் சமநிலையின்மையைத் தோற்றுவிக்கும். உதாரணமாக 'இலங்கையில் தொடர்ச்சியாகச் சென்மதி நிலுவை பாதகமாகவே அமைந்துள்ளது. நடைமுறைக் கணக்கில் 1981-ல் 11% வீழ்ச்சியும், 1982-ல் 13% வீழ்ச்சியும் காணப்படுகின்றது. ஆனல் இந்த ஆண்டு தேயிலை விலையேற்றத்தால் சென்மதி நிலுவை 500 கோடி மிகுநிலை காணப்படுவதாக நிதி அமைச்சர் கூறி உள்ளமை இன்றைய ஆரோக்கியமான அறிகுறியாகும். உறுதியான பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்படாமையினல் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும். பாதுகாப்புப் பொருட்களின் இறக்குமதி அதிகரிக்குமானல் இறக்குமதிச் செலவீனமும் அதிகரித்து விடும். தொழில் நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்களும் சென்மதி நிலுவையில் சமநிலையின்மையைத் தோற்றுவிக்கும். விலை மாற்றங்களும் சமநிலையின்மையைத் தோற்றுவிக்கும். குறித்த நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களின் விலை உயர்ந்தால் சென்மதி நிலுவையில் மிகை நிலை தோன்றும். அதேபோல் இறக்குமதிகளின் விலை உயர்ந்தால் சென்மதி நிலுவையில் குறைநிலை தோன்றும். எண்ணெய் விலை அதிகரிப்பு பல நாடுகளின் சென்மதி நிலுவையில் குறைநிலையை ஏற்படுத்தும். நுகர்வோரின் சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமும் அரச பொருளாதாரக் கொள்கையும் சமநிலையின்மையை ஏற்படுத்தும். இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி உள் நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் சென்மதி நிலுவை சாதகமாகலாம். ஆனால் இந்த நடவடிக்கைக்கு எதிராக மற்றைய நாடு தனது இறக்குமதித் தீர்வைகளைக் கூட்டிவிட்டால் சென்மதி நிலுவை பாதகமாகலாம்.

சென்மதி நிலுவையின் சமநிலையின்மையை நீக்குவதற்கான வழி முறைகளை நோக்கின் ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்வதுடன் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். வெளிநாட்டு நாணயமாற்றுப் பெறுமானத் தேய்வு மூலமும் தீர்க்கலாம். அதாவது உள்நாட்டுப் பொருட்களை வெளிநாட்டவர்க்கு மலிவானதாக மாற்றி விடுதல் பணச் சுருக்க நடவடிக்கையில் இறங்குதல் நாணய ரீதியான உடன்படிக்கைகளையும் விலைகளையும் குறைத்துவிடுதலை இது குறிப்பதாகும். அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் அரச ஏற்றுமதியாளர் ஆனோரையும் செலாவணிகளைத் தம்மிடமே சமர்ப்பிக்குமாறு அனுமதிப் பத்திரம் பெற்றவர்களே இறக்குமதி செய்ய முடியுமெனவும் பங்கீட்டு முறையையும் பின்பற்றுதல் நாணயப் பெறுமதியைக் குறைப்பதன் மூலமும் சென்மதி நிலுவையின் சமநிலையின்மையை நீக்கலாம். இது நாணய மாற்றுப் பெறுமதிக் குறைப்பினை ஒத்த விளைவினையே ஏற்படுத்தும். இதன் கருத்து உள் நாட்டு நாணயத்தினதும் உலோகப் பெறுமதியினையும் வெளிநாட்டு நாணயமாற்றுப் பெறுமதியினையும் குறைத்தல் என்பதாகும். எனவே வெளிநாட்டவர்கள் கொடுத்த அதே அளவு செலாவணியைக் கொண்டு கூடிய பொருட்களை அந்த நாட்டிடமிருந்து கொள்வனவு செய்யக் கூடியதாக மாற்றிவிடும். இதனால் ஏற்றுமதிக்கான கேள்வி கூடும். மறுபுறம் இறக்குமதிப் பொருட்களுக்கு உள்நாட்டில் கூடிய விலை நிலவும். இதனால் இறக்குமதிக்கான கேள்வியினைக் குறைப்பர். வெளி நாட்டு உதவியைப் பெறுவதன் மூலம் கையிருப்பிலுள்ள தங்கத்தை விற்பனை செய்வதன் மூலமும் சென்மதி நிலுவையின் குறை நிலையைத் தீர்க்கலாம். மிகை நிலை அனுபவிக்கும் நாடு வெளி நாடுகளுக்குக் கடன்களை வழங்குவதன் மூலமும் தங்கத்தைக் கொள்வனவு செய்வதன் மூலமும் மிகை நிலையைச் சமப்படுத்தும். மேலும் அந்நியச் செலாவணி பயன்பாட்டிலுள்ள கட்டுப்பாடுகளையும் தளர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MILKWHITE

## நல்லதையே செய்வோம்...

வரண்ட காலத்தில் குளங்களை ஆழமாக்குவோம்.

விஜயதசமி நாள்களில் பயன் மரங்கள் நாட்டுவோம்.

மழை பெய்யும்போது இயன்றளவு நீரைத் தேக்குவோம்.

பனையபிவிருத்தி தொழிலபிவிருத்தியாகும் என்போம்.

சுற்றுடல் சூழலைத் தூய்மையாக வைத்திருப்போம்.

நோயணுகா விதிகளையறிந்து சுகாதாரம் பேணுவோம்.

உள்நாட்டு மூலப்பொருள்களை உற்பத்திக்கு எடுப்போம்.

உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு கொடுப்போம்.

விவசாயத்துறைக்கு விரைவுநடை பழக்குவோம்.

வீண்செலவை விடுத்து வாழ்வுக்கு வழி அமைப்போம்.

சமயப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி செய்வோம்.

ஊர்கள்தோறும் கோயில்களைப் புனரமைப்போம்.

எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணுவோம்.

பெரியவர்தம் நினைவுநாள்களைக் கொண்டாடுவோம்.

கிடைத்தற்கருமையான நூல்களை அச்சேற்றுவோம்.

இயன்றளவு கல்விப்பணியை இலவசமாகச் செய்வோம்.

எல்லோரும் யோகாசனம் செய்ய வழி செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPACE DONATED BY

# Hameed Tailors

40, MAIN MARKET, JAFFNA.

**வணிகக்கலை வளம்பெற "வணிகஜோதியே"**
**வாழிய! வாழியவே!!**

சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

மலிவாகப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்

# ஐங்கரன் ஸ்ரோர்ஸ்

68, (புதிய இல: 140) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வருமான மதிப்பீடும், அது தொடர்பான சில எண்ணக் கருக்களும்

செல்வி ம. அமிர்தா 12 (*1985*)

தேசிய வருமானம் என்றால் என்ன என்பதற்கு பழம்பொருளியலாளர்கள் பல்வேறு வரைவிலக்கணத்தை கொடுத்திருந்த போதிலும், அதன் மையக்கரு ஒன்றே என்பதை கருத்திற் கொண்டு தற்காலப் பொருளியல் ஆசிரியர்களின் கூற்றை நாம் ஏற்கமுடிகின்றது. தேசிய வருமானம் என்றால் "குறிக்கப்பட்ட ஒரு நாட்டில் குறிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினுள் (பொதுவாக ஒரு வருடத்தில்) உற்பத்தியாக்கப்படுகின்ற இறுதிப் பொருட்கள், சேவைகளினது பணவடிவிலான மொத்தப் பெறுமதியே" ஆகும். என்பதே நவீன கருத்து.

இங்கு இறுதிப் பண்டங்கள், சேவைகள் என்பதும், பண ரீதியிலும் கணிக்கப்படுவது என்பதும் முக்கியமானதாகும். இங்கு மூலப் பொருட்கள், இடைத்தரப் பொருட்கள் என்பவற்றின் பெறுமதி இரு தடவை கூட்டப்பட்டுவிடாது தடுப்பதற்காகவே இறுதிப் பொருட்கள், சேவைகள் எடுக்கப்படுகின்றது. அடுத்து ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப் பட்ட மொத்த முடிவுப் பொருட்கள், சேவைகளின் பௌதீக ரீதியான பெறுமதியினைக் கணிப்பிட முடியாது. ஏனெனில் ஒவ்வொரு பொருளும் வேறு வேறு அளவுகோலாலும் அளக்கப்படுகின்றது. இதனால் தான் தேசிய வருமானம் பண ரீதியில் கணிப்பிடப்படுகின்றது. இவ்வாறு பண ரீதியில் கணிப்பிடப்படும்போதுதான் ஒரு நாட்டின் தேசிய வருமானம் இன்னொரு நாட்டின் தேசிய வருமானத்துடன் ஒப்பிட முடிகின்றது.

தேசிய வருமானம் மூன்று வழிகளில் கணிப்பிடப்படலாம்.

1) உற்பத்தி வழி 2) வருமான வழி

3) செலவீட்டு வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி வழி கணிப்பிடுதல் என்றால், உற்பத்தி நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட ஆக்கக் காரணிகளின் பெறுமதியைக் கொண்டு கணிப்பிடுதலாகும். அதாவது உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள், சேவைகள் போன்றவற்றின் பண ரீதியான பெறுமதியாகும்.


ஆக்கக் காரணிகளின் உடமையாளர்கள் ஆக்கக் காரணிகளின் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுத்தும்போது பெறப்படும் வருமானத்தின் (வாடகை, வட்டி, கூலி, இலாபம்) கூட்டுத்தொகையே வருமான வழியிலான மொத்தத் தேசிய வருமானமாகும்.

செலவு வழியில் தேசிய வருமானம் கணிப்பிடுதல் என்றால் பெற்றுக் கொண்ட வருமானத்தை உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகள் கொள்வனவு செய்வதற்குச் செலவிடப்படும் பண ரீதியில் கணிப்பிடுதல் ஆகும். தேசிய வருமானம் மூன்று வழிகளிலும் கணிப்பிடப்பட்டாலும் மூன்றும் ஒன்றுக்கொன்று சமனாகவே இருக்கும்.

மொ. தே. உற்பத்தி = மொ. தே. வருமானம் = மொ. தே. செலவு

G. N. P. = G. N. I. = G. N. E.

இதனைப் பின்வரும் வருமானத்தின் வட்டப் பாய்ச்சல் மூலம் விளக்கலாம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தித்துறை பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்வதற்காக வீட்டுத்துறையிடமிருந்து காரணிச் சேவைகளைப் பெறுகின்றன. இதற்காகக் கொடுப்பனவுகளை உற்பத்தித்துறை வீட்டுத்துறைக்கு வழங்குகின்றது. இவ்வாறு வீட்டுத்துறையினர் தாம் பெற்ற வருமானங்களைக் கொண்டு உற்பத்தித்துறையினர் உற்பத்திசெய்த பொருட்கள், சேவைகளை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்றனர்.

ஊட்டிய மதிப்பு:

ஒரு பொருளின் மொத்த உற்பத்திப் பெறுமதியில் இருந்து அப் பொருளை உற்பத்தி செய்வதற்காக ஏனைய உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்த பொருட்களின் பெறுமதிகளைக் கழித்துப் பெறப்படுவதே ஊட்டிய மதிப்பாகும்.

மாறுவிலை தேசிய உற்பத்தியும், நடைமுறை விலை தேசிய உற்பத்தியும்:

தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு முந்திய அடிப்படை ஆண்டின் விலைகளைப் பயன்படுத்திப் பொருட்கள், சேவைகளின் பணப் பெறுமதிகளை கணிப்பிடுதலே மாறுவிலைகளில் மதிப்பிடுதல் எனப்படும். அதாவது நடைமுறை ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளின் அளவினை அடிப்படை ஆண்டின் நிலையான விலைகளினால் பெருக்கிக் கூறுவதாகும். நடைமுறை விலை தேசிய உற்பத்தி என்றால் நிகழ்கால உற்பத்தியின் பெறுமதியை நிகழ்கால விலைகளிலே கணிப்பீடு செய்வதைக் குறிக்கும்.

காரணிச் செலவுப் பெறுமதியும், சந்தை விலைப் பெறுமதியும்:

காரணிச் செலவுப் பெறுமதி என்றால் உற்பத்திக் காரணிகளை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியபோது அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதிகளில் கணிப்பிடப்பட்டது என்பதே. எனவே இப் பெறுமானத்துள் அரசினால் விதிக்கப்படுகின்ற மறைமுக வரிகளோ, மானியங்களோ உள்ளடங்குவதில்லை. சந்தை விலைத் தேசிய வருமானமென்பது நடைமுறை விலைத் தேசிய வருமானத்துடன் மானியங்கள் கழிக்கப்பட்டபின், மறைமுக வரிகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத் தேசிய வருமானமும், மெய்த் தேசிய வருமானமும்:

பணத் தேசிய வருமானம் என்றால் குறித்த காலப் பகுதியில் உற்பத்தியாக்கப்பட்ட இறுதிப் பொருட்கள், சேவைகளினது பண வடிவிலான பெறுமதியாகும். மெய்த் தேசிய வருமானம் என்றால் பணத் தேசிய வருமானத்தின் கொள்வனவு ஆற்றலைப் புலப்படுத்துவதாகும்.

$$\text{மெய்த் தேசிய வருமானம்} = \frac{\text{பணத் தேசிய வருமானம்}}{\text{விலைச் சுட்டெண்}}$$

தேறிய தேசிய உற்பத்தி:

மொத்தத் தேசிய உற்பத்தியில் இருந்து பெறுமானத் தேய்வை நீக்க வருவதே தேறிய தேசிய உற்பத்தியாகும். மொத்தத் தேசிய உற்பத்தியில் பெறுமானத் தேய்வு உள்ளடங்கி இருக்கும் எனவே நாட்டின் உண்மையான தேசிய வருமானத்தைக் காணவேண்டுமாயின் பெறுமானத் தேய்வாகிய செலவினத்தைக் கழித்தல் வேண்டும்.

காரணி வருமானங்களும், கைமாற்றுமுறை வருமானமும்:

பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்காக நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகிய காரணச் சேவைகளை வழங்கி அதன் உடமையாளர்கள் பெறுகின்ற வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பனவே காரணி வருமானங்கள் ஆகும். கைமாற்று முறை வருமானங்கள் என்றால் காரணிச் சேவைகளில் இருந்து பெறப்படுவதல்ல. இத்தகைய வருமானங்கள் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு மாற்றப்படுவது மட்டுமே, உ-ம்: ஓய்வூதியம்.

தலா வருமானம்:

தலா வருமானம் என்றால் நாட்டின் தேசிய வருமானத்தில் அந் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் ஒவ்வொருவரும் எவ்வளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு குறிகாட்டியாகும். இதனைக் கணிப்பிடும்போது, மொத்தத் தேசிய வருமானத்தை அந்நாட்டு மொத்தச் சனத்தொகையால் பிரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிகஜோதி"யின் வளர்ச்சியில் எமது ஸ்தாபனத்திற்கும்
பங்களித்தமைக்கு நன்றிகள் பல வழங்கும்

# திருப்பதி ஸ்ரோர்ஸ்

- பாடசாலை உபகரணங்கள்
- அலங்காரப் பொருட்கள்
- பால் மா
- உணவுப் பொருட்கள்
- குளிர் பானங்கள்
- சோப் வகைகள்

இன்னும் பல பொருட்களைப் பெற்றிடவும்;

*We are welcome from*

# Thiruppathy Stores

No: 10, Chetty Street,

NALLUR, ☎ 22112 JAFFNA.


வளமாக வளர்ந்து வரும் வணிக ஜோதியே!

வளர்க! வளர்க!! என வாழ்த்துகின்றோம்.

ஈஸ்வரன் ஜுவல்லர்ஸ்

342, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.



# EASWARAN JEWELLERS

342, K. K. S. ROAD, ☎ 24026 JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையுடன் வாருங்கள்! நிறைவுடனே செல்வீர்கள்!!

சுத்தம், சுகாதாரமான தராதரமும், தனித்துவமான சுவையும் கொண்ட

- சைவ சிற்றுண்டிகள்
- சைவ இனிப்புத் தின்பண்டங்கள்
- மதிய சைவ உணவும், பொட்டல வசதியும்
- குளிர் பானங்கள், கனிச்சாறுகள்
- இன்னும் பல்வகைத் தயாரிப்புக்கள்

ஆர்டர்களுக்கும் உணவு வகைகளும், சிற்றுண்டி, இனிப்பு வகைகளும்
விசேடமாகத் தயாரித்து விநியோகிக்கப்படும்

ஆம்,

# ஹோட்டல் சோபிகா

என்றால்

யாழ் நகரில் ஓர் இனிய அனுபவம்!
இது உங்கள் அனுபவம்.

# BALA WELDING WORKS

- மின்சார ஒட்டு வேலைகள்
- கேற்றுக்கள், யன்னல்கள்
- இரும்புக் கதிரைகள், சுருக்குக் கேற்றுகள்
- இரும்பு வேலைகள்

செய்யுமிடம்

# பாலா வெல்டிங் வேக்ஸ்

120, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

* இரும்புக் கதிரைகள் வாடகைக்கு விடப்படும். *

உரிமையாளர்: S. K. பாலசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டிற்குப் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் தவிர்க்க முடியாதது

செல்வன் K. இந்திரமோகன் - 12 (1985)

வரவு செலவுத் திட்டம் என்பது ஓர் நாட்டின் எதிர்காலத்தில் குறிப்பிட்ட ஓர் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் வருமானத்திற்கும் செலவினங்களிற்குமிடையிலான நிலைமைகளைக் காட்டும் ஓர் கூற்றுகும். ஒரு நாடு எதிர்கால நடவடிக்கைகளைத் திறமையாகச் செயற்படுத்த வேண்டுமாயின் வரவு செலவுத் திட்டம் மிகவும் அவசியமானது. இது நாட்டின் பொருளாதார நிலைமைகளிற்கேற்ப மாறுபடலாம்.

பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் என்பது ஓர் வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வருமானம் எதிர்பார்க்கப்படும் செலவினங்களை விடக் குறைவாக இருக்குமாயின் அது பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படும். இவ் வரவு செலவுத் திட்டம் "J. M. கெயின்ஸ்" என்ற அறிஞரின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே கொண்டுவரப்பட்டது. இவ் வரவு செலவுத் திட்டத்தை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டன. எனினும் மூன்றும் மண்டல நாடுகளிற்கு இது மிகவும் தவிர்க்க முடியாததாயுள்ளது. ஏனெனில் மூன்றும் மண்டல நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாகும். ஒரு நாடு இன்னும் அபிவிருத்தியடைய முடியும் என்பதை எடுத்துக் காட்டுவது பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தின் ஓர் தன்மையாகும். இந்த வகையில் பார்க்கும்போது எமது நாட்டிற்கும் பற்றுக் குறை வரவு செல்வுத் திட்டம் இன்றியமையாததாகவும், தவிர்க்க முடியாததாகவும் அமைவதில் வியப்பில்லை.

இவ் வரவு செலவுத் திட்டம் மேற்கொள்ளப்படுவதன் காரணம் உற்பத்தியினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டமையே. தனியார் துறை உற்பத்தியினைத் திறமையாக மேற்கொள்ள முடியாத நிலையில் நாடுகள் காணப்படுவதால், அதிகமான உற்பத்திகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் அபிவிருத்தி முயற்சிகளையும் சமூகநலன் நோக்கிலான உற்பத்திகளையும் அரசாங்கமே கவனிக்க வேண்டிய நிலை காணப்பட்டமையினாலேயே பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் அமுலாக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்த நாடுகளில் அபிவிருத்தி முயற்சிகள், வேலை வாய்ப்பின்மை போன்றன மிகவும் குறைவாகவும் மூல வளங்கள் உச்சப் பயன்பாடுடையவையாகவும் காணப்படும். இவ்வகையான நாடுகளே பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றதெனில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அபிவிருத்தி முயற்சிகள் அதிகளவில் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பது தெளிவாகும் உற்பத்தி தேக்கமடைந்த நிலையுடன் வேலைவாய்ப்பின்மையும் அதிகளவில் காணப்படுகின்றது. உள்நாட்டு மூலவளங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. அத்துடன் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை துரித கதியில் அதிகரிக்கின்றது இதனால் நுகர்வுச் செலவினங்கள் மிகவும் பாரிய அளவிலே அதிகரித்து வருகின்றன. எனவே இங்கு வருமானங்களை விடச் செலவினங்கள் அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது மிகவும் அத்தியாவசியமானது. எமது நாடு ஓர் அபிவிருத்தியடைந்துவரும் நாடு. எனவே எமது நாட்டிற்குப் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பொதுவாக வறிய நாடாக இருக்கின்றன. இதே வேளையில் இந் நாடுகள் அபிவிருத்தி முயற்சிகளைப் பாரிய அளவில் மேற்கொள்ளவேண்டியிருக்கும். இந்நிலையில் வறிய நாடுகளின் வருமானம் அபிவிருத்திக்கென எதிர்பார்க்கப்படும் செலவினங்களுக்குச் சமனாக அமைய முடியாது. அத்துடன் குறிப்பிட்ட அபிவிருத்திக்கெனக் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டபோது அவ் அபிவிருத்தி முயற்சியை மேற்கொள்ளும்போது வேறும் பலபக்கச் செலவினங்கள் எழுகின்றன. இதனால் பற்றுக்குறை தவிர்க்கமுடியாததாகின்றது. இலங்கை ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாடு. எனவே அது தனது அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ளப் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டியுள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை அதிகரித்து வந்துள்ளமையை அட்டவணை காட்டுகின்றது.

(கோடி ரூபா)

| | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 3110.2 | 3880 | 4940.9 |
| வருமானங்கள் | 1610.1 | 1820 | 2603.2 |
| பற்றுக்குறை | 1487.3 | 2060 | 2337.7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே காட்டப்பட்ட புள்ளி விபரங்களின்படி வருமானத்தை விடச் செலவினங்கள் அதிகரித்துள்ளன. அதாவது வரவுக்கும் செலவுக்குமான இடைவெளி நீண்டு கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது. இவ்வதிகரிப்பு நாடு அடைந்துவரும் அபிவிருத்தியினைக் காட்டுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மற்றுமொரு முக்கியமான பிரச்சினை வேலையின்மையாகும். இப் பிரச்சினையால் பாதிக்கப்படுவோர் தொகை வருடா வருடம் அதிகரித்து வருகின்றது. இந் நிலைமையைச் சமாளிப்பதற்குத் தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியேற்படுகின்றது. இந் நிலையில் தொழில் முயற்சியை மேற்கொள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வருமானம் பற்றாக் குறையாக இருக்கும், என்வே அந் நாடு பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அதிகமாக முடிவுப் பொருட்களையே இறக்குமதி செய்கின்றன. இதனால் உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இந் நிலையைப் போக்க உற்பத்திகளை விஸ்தரிப்பது அவசியம். இதேவேளை வேலைவாய்ப்பும் ஓரளவுக்கு வழங்கப்படுகின்றது. இவற்றை மேற்கொள்வதற்கு நாட்டின் வருமானம் பற்றாக் குறையாகக் காணப்படுகின்றது. எனவே அந் நாடு பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

இவைகளை விட மூன்றும் மண்டல நாடுகளில் எதிர்பார்க்கப்படும் அதி முக்கியமான செலவினங்கள் சமூக நலன் சம்பந்தமான செலவுகள். ஏனெனில் அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மக்கள் கல்வியறிவு, சுகாதாரம் என்பவற்றில் பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர். எனவே நாடு அபிவிருத்தியடைய வேண்டுமெனில் மக்கள் கல்வியறிவு, சுகாதாரம் என்பவற்றை நன்கு பெறவேண்டும்; மக்கள் சுகதேகிகளாகவும் புத்திசாலிகளாகவும் திகழ்ந்தால்தான் நாடு அபிவிருத்தியடைய வாய்ப்பேற்படும். எனவே இவற்றிற்குப் பெருமளவு பணத்தை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் செலவு செய்யவேண்டியேற்படுகின்றது. குறிப்பாக எமது நாட்டில் இவ்வாறான செலவுகள் பாரியதாகவே காணப்படுகின்றது. இலவச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ வசதி, இலவசக் கல்வி, இலவசப் புத்தகம் போன்றவற்றை அரசு மேற்கொள்கின்றது; இதனால் இவற்றிற்கான செலவுகள் அதிக மாகவே காணப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்த மட்டில் போக்குவரத்துச் சேவைக்கு அதிகளவிலான பணம் செலவிடப்படுகின்றது. இலங்கையில் நடாத்தப் படும் போக்குவரத்துச் சேவையினுல் கிடைக்கும் வருமானம் இதற்கான செலவினங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் சிறியதாகவே காணப்படு கின்றது. சுருக்கமாகக் கூறின் போக்குவரத்துச் சேவை நட்டத்தில் இயங்கும்போதும் அதைச் சமூக நலன் கருதி அரசு தொடர்ந்து நடாத்தி வருகின்றது. இதனுல் பாரிய செலவுகள் ஏற்படுகின்றது. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாதுகாப்புச் சேவையை விஸ்தரிப்பது அவசியமாகின்றது. பாதுகாப்புச் சேவையை நடத்துவத னுல் எவ்விதமான வருமானங்களும் கிடைப்பதில்லை. இவ் வேளையில் இதற்கான செலவு அதிகமாகக் காணப்படுகின்றது. இவற்றின் காரண மாக ஒரு நாடு பற்ருக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கடைப் பிடிக்க வேண்டியுள்ளது

எமது நாட்டில் வீடற்றோருக்கு வீடமைத்துக் கொடுக்கும் திட் டத்தை அரசு அமுல்படுத்தி வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் அமைக்கப் படும் வீடுகள் இலவசமாகவே மக்களுக்கு வழங்கப்படுகின்றது. இதற்குப் பாரிய செலவினங்கள் ஏற்பட்டு வருகின்றது. இத் திட்டத்திற்கான செலவினங்கள் சென்ற ஆண்டுகளில் பத்துலட்சம் ரூபாவில் வருமாறு:

(பத்து லட்சம் ரூபா)

| | 1982 | 1983 | 1978 - 1983 |
|---|---|---|---|
| வீடமைப்பிற்கான செலவு | 854.2 | 531.7 | 4777.9 |

இத் திட்டத்திற்காக ஆண்டுக்காண்டு அதிகளவிலான பணம் செலவிடப்படுகின்றது. இவற்றினை ஈடுசெய்வதற்கு நாடு பற்ருக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கையாள்வது மிகவும் அத்தியாவசிய மாகின்றது.

1978-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் எமது நாட்டு மக்களுக்கு இன்றியமையாதது, இத் திட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் பயனாக வீணே பயனற்றுக் கிடந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றது. இது எமது நாட்டின் பாரிய அபிவிருத்தித் திட்டமாகும். இதற்குக் கோடிக் கணக்கில் பணம் செலவிடப்படுகின்றது. இத் திட்டம் சம்பந்தமான அண்மை ஆண்டுகளிற்கான செலவுகள் வருமாறு:

(பத்து லட்சம் ரூபா)

| | |
|---|---|
| 1983-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டச் செலவினம் (ஒதுக்கு) | 6.794 |
| 1982 இற்கான உண்மைச் செலவினம் | 7.130 |
| 1983 இறுதிவரை சேர்ந்த மொத்தச் செலவினம் | 18,414 |

இப்படிப் பாரிய செலவினங்களை ஈடுசெய்வதற்கு வெளிநாட்டு உதவிகளே பெருமளவு பயன்படுத்தப்படினும் அது வரவு செலவுத் திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குறை நிரப்புப் பிரேரணைகள் பற்றுக் குறையை மேலும் மோசமாக்குகின்றது.

இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் முக்கியமானது என்பது புலப்படுகின்றது. பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் ஓர் நாட்டில் கடைப்பிடிக்கப்படுகின்றதெனில் அந் நாட்டில் அதிகளவில் அபிவிருத்தியை மேற்கொள்ளவேண்டியுள்ளது எனக் காணக்கூடியதாகவுள்ளது. பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அவசியமானதெனினும் அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றதெனில், அந்நாட்டில் மேலும் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனக் காட்டுகின்றது. இப்படி அபிவிருத்தியடைந்த முதலாம் இரண்டாம் மண்டல நாடுகள்கூட பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்குமாயின், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தயாரிப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. எமது நாடு ஒரு அபிவிருத்தியடைந்துவரும் நாடு எனவே எமது நாட்டிற்குப் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம் தவிர்க்கமுடியாததாகின்றது. ஆயினும் இத்தகைய நிலை ஒரு பொருளாதார நிலைமைக்கு ஆரோக்கியமானது என்பது இதன் அர்த்தமாகாது. இவ்விடைவெளி குறைக்கப்படுவது அவசியமானதொன்றென இன்று உணரப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக ஜோதிக்கு எமது வாழ்த்துக்கள்

❋ ❋ ❋

# இரசா டீசல் என்ஜினியர்ஸ்

# RASA DIESEL ENGINEERS

180, POINT PEDRO ROAD, JAFFNA.

எல்லாவகை டீசல் பம்புகளும், இன்ஜெக்ரர்களும் திருத்துவதும், சேவிஸ் செய்வதும், உதிரிப் பாகங்களையும் வினியோகம் செய்பவர்கள்.

180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

---

வாழிய "வணிக ஜோதி" என வாழ்த்துகின்றோம்.

கலை, வர்த்தகப் பிரிவுக்கு

# விக்ஞ டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்கமும், பணச்சுருக்கமும்

செல்வன் V. சுதர்சன்,
(பழைய மாணவர்)
வர்த்தகப் பிரிவு
யாழ். பல்கலைக் கழகம்.

விலைகள் ஒருபோதும் நிலையாக இருப்பதில்லை பண்டங்களின் மொத்த நிரம்பலின் அடிப்படையில் பார்க்கும்போது மொத்தச் செலவுகள் மாறும்போதே விலைமாற்றங்கள் தோன்றுகின்றன. விரைந்தேறுகின்ற விலையும், விரைந்து குறைகின்ற விலையும் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளிலுள்ள மக்களை மாறுபட்ட வழிகளில் பாதிக்கின்றன இதனால் தான் பொருளாதார உறுதியினையும், வளர்ச்சியினையும் பேணும் நோக்கில் விலையேற்றத்தையும், விலை வீழ்ச்சியையும் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டியது அவசியமாகின்றது. இவற்றின் இயல்புகளை அறிய பணவீக்கத்தையும், பணச்சுருக்கத்தையும் அறிந்து கொள்ளுதல் சிறப்புடையது.

### பணவீக்கம் – ஒரு விளக்கம்

பணவீக்கம் பற்றிய கருத்துக்கள் காலவோட்டத்திற்கேற்ப வெவ்வேறு பொருளியல் அறிஞர்களால் வரையறை செய்யப்பட்டுள்ளது. எனினும் பொதுவாக பணவீக்கம் எனும்போது பொருட்கள், சேவைகளில் பொது விலை மட்டத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பினைக் குறித்து நிற்கின்றது. கிரௌதர் என்ற அறிஞரின் கூற்றுப்படி பணவீக்கமாவது பணத்தின் மதிப்புக் குறைவதாகும். அதாவது விலைகள் ஏறிக்கொண்டே செல்லும் என்று விளக்குகின்றார். டால்டன் (Dalton) என்ற அறிஞர் "குறைந்தளவு பொருட்களைக் கூடியளவு பணம் துரத்திச் செல்வதே பணவீக்கம்" என்கின்றார். ஏ. பி. லெர்னர் பணவீக்கத்தை நிரம்பலுக்கு மேல் தேவை மிகுதியாக இருப்பது என விளக்குகின்றார்.

எனவே இங்கு எல்லா விலையேற்றங்களையும் பணவீக்கம் எனக் கூறமுடியாது. அதாவது நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகியவை அவை செய்த சேவைகளுக்குக் கிடைக்க வேண்டியதை விட அதிகமாக பெற்றாலே பணவீக்கம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணவீக்கத்தின் காரணங்கள்:

பணவீக்கம் பல காரணங்களால் தோற்றுவிக்கப்படலாம். ஆனால் பரந்த அடிப்படையில் அதன் தோற்றத்தை 3 வகையாகப் பகுக்கலாம். அவையாவன:

1) கேள்வித் தூண்டல் பணவீக்கம்
2) செலவுத் தூண்டல் பணவீக்கம்
3) துறைசார் பணவீக்கம்

இதில் கேள்வித்தூண்டல் பணவீக்கம் எனும்போது பொருளாதாரமானது நிறை தொழில் மட்டத்திலிருக்கின்றது அதாவது உற்பத்தி பெருகாத நிலையில் மொத்தக் கேள்வியில் அதிகரிப்பேற்படுகின்றபோது பொது விலைமட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பினைக் காட்டி நிற்கின்றது. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் குறை தொழில் மட்டமே காணப்படுகின்றது. இங்கு கேள்வி அதிகரிப்பிற்கு நுகர்வோரின் வருமான அதிகரிப்பு, நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, ஏற்றுமதி வருமானத்திலேற்படும் அதிகரிப்பு போன்றன அமையலாம். இக் கேள்வித் தூண்டல் வீக்கக் கோட்பாடு நுகர்வோர் சார்ந்த கேள்வி கோட்பாடாகும்.

அடுத்து செலவுத் தூண்டல் பணவீக்கமானது உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக விலைமட்டமானது கூடிச் செல்வதனையே குறிக்கும். இவ் உற்பத்திச் செலவு அதிகரிப்பிற்கு மூலப் பொருட்களில் விலையேற்றம், கூலியுயர்வு, வரிக் கொள்கை ஆகியன காரணமாக இருக்கலாம் இங்கு செலவுத் தூண்டல் வீக்கத்திற்குக் கூலியுயர்வுக் கோரிக்கையே முக்கிய காரணம் எனக் கோட்பாட்டாளர் கருதுகின்றனர். ஏனெனில் இரண்டாவது உலக மகா யுத்தத்தினைத் தொடர்ந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏற்பட்ட தொழிற்சங்க இயக்க வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட கூலியுயர்வுக் கோரிக்கைகளும், வெற்றியும் அது தொடர்பாக ஏற்பட்ட விலையேற்றம் இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. இக் கோட்பாட்டு வீக்கத் தோற்றத்தினை விளக்கும் நிரம்பல் சார்ந்த கோட்பாடாகும்.

நீண்ட காலமாக வீக்கத் தோற்றத்தினை கேள்வித் தூண்டல், செலவுத் தூண்டல் என்ற அடிப்படையிலே விளக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் துறைசார் வீக்கம் பற்றிய விளக்கமானது அண்மைக்கால விளக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக ஜோதிக்கு எமது வாழ்த்துக்கள்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

63, 78, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



வண்ணத் துணியுகத்து, வளமார் வகையனைத்தும்

எண்ணம்போல் தேர்ந்தெடுக்க

ஏற்றதோர் எழிற்கூடம்

## KANESAN STORES

63, 78, K. K. S. Road, JAFFNA.

☎ 24025 & 23169

*With the Best Compliments*

*of*

# ANIETHAA

Y. M. C. A. Building, Chundikkuli, Jaffna.

*Dealers in:* GROCERY OILMAN GOODS & FROZEN FOODS

★ PHOTOSTAT COPYING UNDERTAKEN ★

# ★ அனிதா ★

வை. எம். சி. ஏ கட்டிடம், சுண்டிக்குளி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வணிகஜோதி'க்கு எமது நல்லாசிகள் பல'

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

மஹாலக்ஷ்மி ஜுவல்லரி மார்ட்

213 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

MAHA LUXMI JEWELLERY MART

213 A, KASTHURIAR ROAD, JAFFNA
☎ 23733

ரி. வி. உங்கள் வீடுகளில்
உத்தரவாதத்துடன்
பொருத்திக் கொள்ள
இன்றே நாடுங்கள்

உங்கள் கைக்கடிகாரங்களைச்
சிறந்த முறையில் பழுது
பார்த்துத் தருபவர்கள்.

வீனஸ் VENOS

றெக்கோடிங், றேடியோ, வாச் வேக்ஸ்
*266/1, ஸ்ரான்லி வீதி,*
யாழ்ப்பாணம்.
*( ஸ்ரீதர் சினிமா அருகாமையில் )*

பக்திப் பாடல்கள், சினிமாப் பாடல்கள், நாதஸ்வர மேளக்கச்சேரிகள்
என்பவற்றை ஒலிப்பதிவு செய்து கொள்ளலாம்.

❋ சிறந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள். ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் மொத்தக் கேள்வியானது மாற்றமற்ற நிலையில் ஒரு துறையின் கேள்வி குறைந்து மற்றத் துறையின் கேள்வி அதிகரிப்பத ஞல் குறிப்பிட்ட துறையில் மிகைக் கேள்வியானது ஏற்படுகின்றது. இக் குறிப்பிட்ட துறையில் ஏற்பட்ட மிகைக் கேள்வியே பணவீக்கத் திற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது என்பது இக் கோட்பாட்டாளர் களது வாதமாகும். அண்மைக் காலத்தில் பல நாடுகளின் பணவீக்க அனுபவத்தினை அவதானிக்கும்போது பொருளாதாரத்தின் ஒரு துறை யில் பணவீக்கமானது கூடிய தாக்கம் நிறைந்ததாகக் காணப்படுவதே இத்தகைய ஒரு கோட்பாட்டிற்கு ஆதாரமாக அமைந்திருந்தது.

இவைமட்டுமன்றி தோன்றும் காலத்தின் அடிப்படையில் பண வீக்கத்தை போர்க்காலப் பணவீக்கம், போருக்குப் பிந்திய பணவீக்கம், அமைதிக்காலப் பணவீக்கம் என்றும், இயல்பின் அடிப்படையில் அமுக்கிய பணவீக்கம், தாழும் பணவீக்கம், ஓடும் பணவீக்கம் என்றும் வகைப் படுத்தலாம். எனவே பணவீக்கத் தன்மைகள் நாட்டிற்கு நாடு வேறு படும்.

**பணவீக்க விளைவுகள்:**

பணவீக்கத்தால் ஏற்படும் விளைவுகளைப் பின்வருமாறு பிரித்து நோக்கலாம்,

1) பொருளாதாரத்தின் தேக்கநிலை
2) வீட்டுத்துறையினரின் பாதிப்பு
3) புதிய பணக்கார வகுப்பின் தோற்றம்
4) அபிவிருத்தித் திட்டத்தின் பாதிப்பு

பொருளாதாரத்தின் தேக்கநிலை எனக் கூறும்போது கூடிய இலா பத்தினைப் பெறுவதற்காக உற்பத்தியாளர்கள் இலாபம் கூடிய துறை களிலே உற்பத்திச் சாதனங்களை ஒதுக்குவார்கள். நாட்டின் அத்தியா வசிய நுகர்வுப் பொருட்கள், பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமை யாத உற்பத்தித் துறைகள் ஆகியவற்றில் முதலீட்டு பற்றுக்குறை ஏற் படுகிறது. இலங்கையில் ஆடம்பரக் கைத்தொழில் உல்லாச விடுதிகள் ஆகியவற்றில் கூடிய முதலீடுகள் முதலிடப்பட்டமையினைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இத்தகைய தவறான சாதன ஒதுக்கம் பொருளாதார வளர்ச்சியைத் தடைப்படுத்துவதுடன் தேக்க நிலையினையும் உருவாக்கும்.

வீட்டுத்துறையினரின் பாதிப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் இதில் பணவீக்கத்தில் முதலிற் பலியாகின்றவர்கள் மத்திய வகுப்பினரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த வருமானமும் உள்ள வகுப்பினருமேயாவர். அதாவது விரைந் தேறுகின்ற விலைகள் குறிப்பாக அவர்களது உண்மை வருவாயைக் குறைத்துவிடும். ஆனால் வர்த்தகர்களாயும் விவசாயிகளாயும் இருக்கின்ற நுகர்வோர் அவர்களது பொருட்கள் அதிக விலைகளுக்கு விற்கப்படுவதனால் அதிகமாக நட்டமடைய மாட்டார்கள். மட்டற்ற பணவீக்கம் ஏற்பட்டால் அது நுகர்வோர் அனைவரையும் பாதிக்கும்.

புதிய பணக்கார வகுப்பினரின் தோற்றம் எனக் கூறின் பணவீக்க காலத்தில் வருமானம் கூடிய வகுப்பினர் மேலும் வருமானத்தினை அதிகரிப்பதற்குச் சாத்தியமான சூழ்நிலை ஏற்படும். அதாவது கறுப்புச் சந்தை, கள்ளச் சந்தை, கடத்தல், பதுக்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனால் நாட்டில் பொருட் தட்டுப்பாடு ஏற்படும்போது இந் நடவடிக்கையின் பங்கும் அதிகமாகும்; இதனால் அரசிற்குக் கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட ஒரு புதிய துறையும், புதிய பணக்கார வகுப்பும் படிப்படியாக வளர்ச்சியடைந்து சமூக, பொருளாதார, அரசியல் ரீதியிலும்கூடப் பெரும் சவாலாக அமைந்துவிடும்.

அடுத்து அபிவிருத்தித் திட்டங்களின் பாதிப்பு எனக் குறிப்பிடுகையில் எதிர்பார்க்கப்படும் செலவினம் அதிகரித்து வருவதன் காரணத்தினால் அத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றப் போதியளவு நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். சிறப்பாக இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இந் நிலை காணப்படும். இதனால் அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்படும்போது பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

இவற்றைவிடச் சென்மதி நிலுவையில் சமநிலையின்மையும், கடன்பட்டோரைவிடக் கடன் கொடுத்தோர் அடையும் நட்ட நிலையினையும் விளைவுகளாகக் குறிப்பிடலாம்.

**கட்டுப்பாடுகள்:**

பணவீக்கக் கட்டுப்பாடுகளைப் பின்வரும் மூன்று பிரிவுகளினுள் அடக்கலாம்.

1) நாணயக் கட்டுப்பாடுகள் 2) நிதிக் கட்டுப்பாடுகள்
3) பௌதீகக் கட்டுப்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நாணயக் கட்டுப்பாடுகள் என்பவை நாட்டில் பண நிரம்பலை ஒழுங்குபடுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிக்கும். இது மத்திய வங்கியின் மரபு ரீதியிலான கட்டுப்பாடுகளான வங்கி வீதம், பகிரங்கச் சந்தை நடவடிக்கை, ஒதுக்கு வீதம் என்பவற்றில் தங்கியுள்ளது அதாவது வங்கி வீதத்தை உயர்த்துவதன் மூலமோ, அல்லது ஒதுக்கு வீதத்தை அதிகரிப்பதன் மூலமோ கட்டுப்படுத்தலாம். இல்லாவிடின் திறைசேரி உண்டியல்கள், ஆவணங்களை விற்பனை செய்வதன் மூலம் பண நிரம்பலைக் கட்டுப்படுத்திப் பொது விலைமட்ட அதிகரிப்பைக் கட்டுப்படுத்தலாம். நிதிக் கட்டுப்பாடுகள் எனும்போது வரிவிதிப்புக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்களால் தனது செலவு நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கும். அதாவது செலவிடத்தகு வருமானத்தினைக் குறைப்பதாலோ வரியினை அதிகரிப்பதாலோ கேள்வியைக் குறைத்து விலைமட்டத்தினை உயர்வடையாது தடுக்கலாம்.

பௌதிக கட்டுப்பாடுகள் எனும்போது அரசின் ஏனைய சில நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். அவையாவன: கட்டுப்பாட்டு விலை, பங்கீட்டு முறை, ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தல், உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கான இயக்கங்களை நடாத்துதல், கள்ளக்கடத்தல், பதுக்கல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல் என்பனவும் அடங்கும்.

## பணவீக்கத்தின் அளவுகோல்கள்;

பணவீக்கத்தின் போக்கு பொதுவாக விலைச்சுட்டெண்கள் மூலமே அளவிடப்படுகின்றன. அவ்விலைச்சுட்டெண்களான பணநிரம்பல் சுட்டெண், தேசிய வருமான சுட்டெண், வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் போன்றவையாகும். ஆனால் இலங்கையில் பணவீக்கத்தை அளவிட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை மட்டுமே ஒரேயொரு அளவுகோலாகக் கொண்டு அளவிடப்படுகின்றது.

## பணச்சுருக்கம் - ஒரு விளக்கம்:

பணவீக்கத்திற்கு நேர் எதிரான நிலையை பணச்சுருக்கம் என்கின்றோம். பணச்சுருக்கம் என்பது பணத்தின் மதிப்பு அதிகரிப்பதாகும். அதாவது விலைகள் குறைவதாகும் என்கின்றார் கிரௌதர். "விலைமட்டத்தில் தோன்றும் சரிவினால் அல்லது விலைமட்டத்தில் தோன்றும் சரிவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக வருமான அளவு சுருங்கி விரக்கூடிய நிலையுள்ளதொரு சமநிலை யின்மையைப் பணச்சுருக்கம் என்று பால் என்சிக் (Paul Ercik) கூறு கின்றார். இத்தகைய பணச்சுருக்க நிலை பொருட்கள், சேவைகளின் நிரம்பலைவிடக் கேள்வி குறைவதாலும், உற்பத்தி கூடுவதாலும், பொரு ளாதார நடவடிக்கைகள் குறைந்து வேலையின்மை மிகுவதாலும் ஏற் படும்.

காரணங்கள்:

பணச்சுருக்கத்திற்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

1) பண்டங்களின் நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு ஏற்றவாறு பண நிரம்பல் அதிகரிக்காவிடின் பணச்சுருக்கம் ஏற்படும்.

2) மிகை வரவு செலவுத்திட்டக் கொள்கை காரணமாக அதாவது தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்கு இக் கொள்கையினை மேற் கொள்ளும்போது மக்களிடம் உள்ள அதிகப்படியான கொள்வனவு சக்தி அரசுக்கு மாற்றப்பட்டு மொத்தச் செலவு குறைந்து பணச் சுருக்கம் ஏற்படலாம்.

3) பாதகமான சென்மதி நிலுவை காரணமாக பண நிரம்பல் குறைந்து பணச்சுருக்கம் தோன்றலாம்.

4) உள்நாட்டுப் பொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தையில் கேள்வி குறையும்போது அந்தளவுக்குத் தேசிய வருமானமும் குறைந்து விடும். குறிப்பாக ஏற்றுமதிகளைப் பெருமளவில் நம்பிவாழும் நாடு கள் இத்தகைய கேள்வி குறைவினால் அதிகம் பாதிப்படையும், இதன் காரணமாகப் பணச்சுருக்கம் தோன்றலாம்.

பணச்சுருக்கத்தின் விளைவுகள்:

பணச்சுருக்கத்தினால் ஏற்படும் விளைவுகளை உற்பத்தியில் தோன்றும் விளைவுகள், பகிர்வில் தோன்றும் விளைவுகள் என இருவகைப்படுத்த லாம்.

1) உற்பத்தியில் தோன்றும் விளைவுகள்:

தேவை குறைவினாலும், நிலையான செலவுகளைக் குறைக்க முடி யாது என்ற நிலையினாலும் பண்டங்களின் விலைகள் குறைந்து உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்களின் இலாபம் குறைந்து, அவர்களது உற்பத்தியளவுகளும் குறைகின்றன. அதன் காரணமாகப் பல தொழிலாளர் வேலையினை இழக்க நேரிடலாம். இதனால் வருமானமும் குறைகிறது. மொத்தத்தில் பணச்சுருக்கத்தினால் மொத்த உற்பத்தி, முதலீடு, வருமானம் போன்றவை குறைகின்றன. வேலையின்மை தோன்றுகின்றது. வர்த்தகர்கள் பெருமளவு நட்டமடைகின்றனர்.

2) வருமானப் பகிர்வில் தோன்றும் விளைவுகள்:

நிலையான வருமானம் பெறுபவர்கள் நன்மை பெறுவர். குறிப்பிட்ட வருமானத்தைக் கொண்டு அதிகமான அளவு பண்டங்களையும், சேவைகளையும் வாங்குவார்கள். ஆனால் இது விரும்பத்தக்கதல்ல. அதிகமான சேவையினையும், பண்டங்களையும் நிலையான வருமானம் பெறுபவர்கள் பெறமுடியும் என்றிருந்தாலும் இவ்வகையினர் வேலையே இழந்து மிகவும் பரிதாபமான நிலைக்கு வந்துவிடலாம். பணச்சுருக்கம் தொழிலாளர்கள் சமூகத்திற்கு நன்மை தரத்தக்கதில்லை.

கடன் கொடுத்தவர்கள் மீண்டும் கடனைப் பெறும்போது அதேயளவுக்குப் பணத்தைப் பெறுவார்கள். ஆனால் இப்போது அப் பணத்தின் வாங்கும் சக்தி அதிகமாக இருக்கும். எனவே அவர்கள் இலாபத்தைப் பெறுகின்றார்கள். ஆனாலும் இதிலும் பல இடர்கள் உண்டு. கடன் பெற்றவர்களில் பலர் அக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமலே போகலாம்.

மேலும் அரசுக்குப் பணச்சுருக்கம் பல இடர்களைத் தோற்றுவிக்கும். அரசினுடைய செலவுகளைக் குறைக்க முடியாது. ஆனால் வரி வருவாய் குறைந்துவிடும். பெற்ற கடன் சுமையும் அதிகரித்துவிடும்.

பணச்சுருக்கத்தை நீக்க வழிகள்:

இப் பணச்சுருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை நிதித்துறைக் கட்டுப்பாடுகள், நாணயக் கட்டுப்பாடுகள், பிற கட்டுப்பாடுகள் என வகைப்படுத்தலாம்.

நிதித்துறைக் கட்டுப்பாடுகள்:

அரசு தனது வரி விதிக்கும் முறைகளையும்; நிதிக் கொள்கைகளையும் மக்களின் கொடுப்பனவு சக்தியைப் பெருக்கும் வகையில் அமைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். வரிகளைக் குறைப்பது அவசியம். பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கையாளலாம். இவ் வழிகளில் பொதுமக்களிடையே பணப் புழக்கத்தை அதிகரிக்கலாம்.

நாணயக் கட்டுப்பாடுகள்:

மத்திய வங்கி வட்டி விகிதத்தைக் குறைக்கலாம். பகிரங்கச் சந்தையில் ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். ஒதுக்கு வீதத்தைக் குறைக்கலாம், தாராளமான கடன் கொள்வனவுகளைப் பின்பற்றுமாறு நிதி நிறுவனங்களுக்கு ஆலோசனை கூறலாம். இதன்மூலமும் பணப் புழக்கத்தை அதிகரிக்கலாம்.

பிற கட்டுப்பாடுகள்:

விலைக் கட்டுப்பாடு, பகிர்வுக் கட்டுப்பாடுகளை நீக்கலாம். கூடிய சேமிப்புக்களாகப் பணத்தைப் பெற்றிருந்தால் அதனைத் திருப்பிக் கொடுக்கலாம். இறுக்கமான இறக்குமதிக் கொள்கை கடைப்பிடித்தல் போன்றன அடங்கும்,

பணவீக்கமும் பணச்சுருக்கமும் - ஓர் ஒப்பீடு:

பணவீக்கம், பணச்சுருக்கம் ஆகிய இரண்டில் பணச்சுருக்கம் மிகவும் மோசமான விளைவுகளைத் தோற்றுவிக்கத் தக்கது, எனவே பணவீக்கத்தைவிடப் பணச்சுருக்கம் ஆபத்தானது.

இதற்கான காரணங்கள்:

1) பணச்சுருக்கத்தினால் தேசிய வருமானம் குறைகிறது; பண வீக்கத்தில் இந்நிலை காணப்படமாட்டாது.

2) வேலையின்மையைத் தோற்றுவித்துப் பரவலாக்குவது பணச் சுருக்கம். ஆனால் பணவீக்கத்தில் இடர்கள் ஏற்பட்டாலும் வேலை வாய்ப்பு அதிகரிப்பதால் இது விரும்பத்தக்கது.

3) பணச்சுருக்கத்திலிருந்து மக்களை வெகு விரைவில் மீட்க முடியாது. ஆனால் பணவீக்கத்திலிருந்து மக்களை மீட்பது சுலபம்;

சுருங்கக் கூறின் பணவீக்கமோ பணச்சுருக்கமோ எந்த ஒரு பொருளாதாரத்திலும் விரும்பக்கூடியதொன்றல்ல. உறுதியான விலை மட்டத்தைப் பேணுவதன் மூலமே ஆரோக்கியமான பொருளாதார சமூகத்தை உருவாக்க முடியும்; அதுவே விரும்பத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதி"க்கு நல்லாசிகள் கூறும்

# A. J. M. Textiles

147, MODEL MARKET, JAFFNA.

☎ 22706

தரம் உயர்வு! விலை மலிவு!!

★ கண்ணைக் கவரும் வண்ணச் சேலைகள்


★ இளைஞர்கள் நாடும் சேட்டிங், சூட்டிங்

★ சிறுவர், சிறுமிகளுக்குரிய றெடிமேட் ஆடைகள்

உங்கள் மனம்போல் தெரிவுசெய்ய

இன்றே விஜயம் செய்ய வேண்டிய

ஜவுளி மாளிகை



# ஏ. ஜே. எம்.

# ரெக்ஸ்ரைல்ஸ்

147 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிகஜோதி" பொலிவுற எமது நல்லாசிகள்.

# றேடியன்ற் கல்வி நிலையம்

| கலை - வர்த்தகம் 85-86 A/L | | விஞ்ஞானம் 85-86 A/L | |
|---|---|---|---|
| பொருளியல் | - திரு. வரதராஜன் | தாவரவியல் | - திரு குகாதரன் |
| கணக்கியல் | - திரு. தனபாலசிங்கம் | விலங்கியல் | - திரு ஞானேந்திரன் |
| வர்த்தகம் | - திரு ஜெயராமன் | இரசாயனம் | - திரு. மக்ஸி |
| அளவையியல் | - திரு மனோகரன் | பௌதீகம் | - பிரபல ஆசிரியர் |
| தமிழ் | - செல்வி மீரா | | |
| புவியியல் | - திரு இக்னேசியஸ் | | |
| இந்து நாகரிகம் | - செல்வி அருள்நங்கை | | |


O/L பாடங்களும் நடைபெறுகின்றது

# RADIANT INSTITUTE

## PUNKANKULAM

ARIYALAI.

Director: S SIVAMOHAN



நவீன வேலைப்பாடுள்ள

தங்க, வைர நகைகள்

விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் இடைக்கும்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

## அபிராமி ஜுவலர்ஸ்

387, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.

☎ 24181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன வர்த்தக உலகில் நிதிக் கணக்கியலின் பங்கு

திரு. பா. பாலச்சந்திரன்
உதவி விரிவுரையாளர்,
வணிகவியற்றுறை,
யாழ். பல்கலைக் கழகம்.

வியாபார நிறுவனங்கள் இலாபத்தினை உழைப்பதனை நோக்கமாகக் கொண்டவையாகும். எனவே இந் நிறுவனங்கள் தமது கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர் காலத்தினை முன் உணர்ந்து செயல்பட விரும்புபனவாக இருக்கும். இதன் காரணமாக நிறுவனங்கள் தமது கடந்தகால நடவடிக்கைகளை ஒழுங்கு முறையில் பதிவு செய்து வருவதனைக் காணலாம். இதனைக் கணக்குப் பதிவியல் எனலாம்.

இக் கணக்குப் பதிவியல் ஆரம்பத்தில் கிரேக்க நாட்டில் பொதுப் பணியில் ஈடுபடும் ஒருவன் தான் சேகரித்த பணத்தினை எவ்வாறு செலவு செய்கின்றான் என்பதனைக் காட்டுவதாகவே தோன்றியது. காலப் போக்கில் இத்தாலி நாட்டில் உள்ள பல நகரங்கள் வர்த்தகத் துறையில் முன்னேறிய காலத்தில் கணக்கு வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. இதனால் கணக்கியல் கலை வளரத் தொடங்கியது.

இக் கணக்குப் பதிவியல் ஆரம்ப காலத்தில் நிதிக் கணக்கியல் (Financial Accounting) ஆகவே வளர்ச்சியடைந்தது. நிதிக் கணக்கியல் என்னும்போது நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை

1) ஒழுங்காகப் பதிவு செய்து 2) வகைப்படுத்தி

3) அறிக்கை தயாரித்தல் செய்முறையினைக் குறிக்கும்.

இங்கு அறிக்கை என்னும்போது நிறுவனங்களின் குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய வருமானக் கூற்றுக்களையும் குறிப்பிட்ட கால முடிவில் உள்ள நிதி நிலைமைக் கூற்றினையும் உள்ளடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஒரு வியாபார நிறுவனத்தின் கணக்கியல் அறிக்கையில் அக்கறை கொண்டவர்களாகப் பின்வருவோர் காணப்படுவர் எனலாம்:

1) முகாமை
2) பங்குதாரர் அல்லது உரிமையாளர்
3) கடன் வழங்கியவர் (Creditors)
4) தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர்களது சங்கம்
5) வாடிக்கையாளர்கள் / நுகர்வோர்கள்
6) பொதுமக்கள்
7) வருமானவரித் திணைக்களம்
8) வங்கி

ஒரு வியாபார நிறுவனத்தின் உரிமையாளன் அல்லது பங்குதாரர்கள், அந் நிறுவனம் எவ்வளவு இலாபம் உழைக்கின்றது என்பதிலும் அந் நிறுவனத்தின் நிதி நிலைமை நன்ருக உள்ளதா என்பதிலும் முக்கிய அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள் எனவே இவர்களுக்காக வருமான, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய தேவை எழுந்தது.

ஒரு வியாபாரப் பொதுக் கம்பனியின் உரிமையாளரான பங்குதாரரைவிட வேறும் பலர் கம்பனியின் செயல்படும் பணத்தினை வழங்குகின்றனர். நீண்ட காலத் தவணையில் கடன் கொடுப்பவர்கள் குறுங் காலத் தவணையில் பணம் கொடுப்பவர்கள், வங்கிகள் போன்றன வியாபார நிறுவனங்களுக்குக் கடன் வழங்கும் நிறுவனங்களாக உள்ளன. வியாபார நிறுவனத்திற்குக் கடன் வழங்கும் ஸ்தாபனங்கள் வியாபார நிறுவனங்களது இலாபமுழைக்கும் தன்மை, நிதி நிலை பற்றிய விடயங்களை அறிந்த பின்னரே கடன் வழங்க முன்வரும். எனவே இவற்றினைப் பொறுத்தும் நிதிக் கூற்றுக்கள் வருமானக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய தேவை எழுந்தது எனலாம். ஆனல் இந் நிறுவனங்களது வருமான நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நம்பத்தகு தன்மையும் கொண்டவை என ஒருவர், அக் கூற்றுக்கள் தொடர்பான விடயங்கள் போன்றவற்றினை ஆய்வு செய்து, உறுதி செய்ய வேண்டும். இவரைக் கணக்காய்வாளர் என அழைப்பர். இலங்கையில் பொதுக் கம்பனிகள், பொதுக் கூட்டுத்தாபனங்களது கணக்குகளைக் கணக்காய்வாளர் நாயகம் அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் உறுப்பினர் மாத்திரமே ஆய்வு செய்யலாம். ஆனால் தனி வியாபாரம், தனியார் கம்பனி போன்றவற்றினைப் பொறுத்து கணக்காய்வாளராகப் பதிவு செய்துகொண்ட

அ) உள்நாட்டு இறைவரி மதிப்பீட்டாளர்

ஆ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல் டிப்ளோமா பெற்றவர்கள்

இ) இலங்கை கணக்காய்வுச் சேவை உறுப்பினர்கள்

ஈ) இலங்கை அரசாங்க கணக்காளர் சேவை உறுப்பினர்கள்

உ) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பிற கணக்காளர்சங்க உறுப்பினர்கள்

போன்றவர்கள் கணக்குகளை ஆய்வு செய்து உறுதி செய்ய முடியும். இவ்வாறு உறுதி செய்யப்படும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டே வியாபார நிறுவனங்களுக்குக் கடன் வழங்கும் தாபனங்கள் கடன்வழங்க முன்வரும்.

வாடிக்கையாளர், தொழிலாளர்கள், பொதுமக்கள், வருமான வரித் திணைக்களம் போன்றனவும் ஒரு வியாபார நிறுவனத்தின் கணக்கீடு பற்றிய விடயங்களில் அக்கறையுடையவர்கள் எனலாம். வாடிக்கையாளர் தமக்குத் தொடர்ந்தும் பொருட்களை நுகர்வதற்குப் பெற முடியுமா, விலையில் மாற்றம் ஏற்படுமா என்பதனை வருமான, நிதிக் கூற்றுக்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். தொழிலாளர்கள் தங்களது கூலி நிர்ணயம் பற்றிய கோரிக்கையை நிறுவனம் உழைக்கும் இலாபத் தன்மையைப் பொறுத்து முன்வைப்பர். வருமானவரித் திணைக்களம் வியாபார நிறுவனங்களது இலாபத்தின்மீது வரிவிதிக்கும்போது அவர்களுக்கும் நிறுவனங்களது வருமானநிதிக் கூற்றுக்கள் தேவைப்படுகின்றன.

இன்றைய உலகில் நிதிக் கணக்கியல் வர்த்தக உலகில் மிக இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. எனினும் ஒரு நிறுவனத்தின் முகாமையைப் பொறுத்து நிதிக் கணக்கியல் தவிர்ந்த வேறுசில விடயங்களை அளிக்கக்கூடிய வகையில் கணக்கியலானது செலவுக் கணக்கியல், முகாமைக் கணக்கியல், பணவீக்கக் கணக்கியல் என வளர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஜோதி' மேன்மேலும்
பிரகாசிக்க
வாழ்த்துகின்றோம்.

சிவசக்தி
வைத்திய நிலையம்

சகல நோய்களுக்கும்
சிகிச்சை அளிக்கப்படும்

Sivasakthy
Medical Clinic

டாக்டர் சு. ஸ்ரீவிக்னேஸ்வரன்
கண்டி வீதி,
புங்கன்குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

SPACE DONATED BY

ROYAL
PHARMACY
SALES CENTER

624, Point Pedro Road,
Nallur, Jaffna.

With the Best Compliments
from

V

Gnanachurabi
Book Company

217, Power House Road,
JAFFNA.

இனிமையின் இன்பத் தொனிப்பு
இதயம் கவரும் இசை வடிவாக
வருகிறது . . . . . எங்கே ?

நியூ வே
றெக்கோடிங் சென்ரர்
284, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

உரிமையாளர்:
J. A. சந்திரன்

பாடல்கள் எதுவாயினும் சிறந்த
முறையில் பதிவு செய்து கொள்ள
தற்பொழுது முற்றிலும் நவீன
முறையில் இயங்கி வரும்

நியூவே றெக்கோடிங் சென்ரர்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீட்டில் சொத்து மதிப்பீடு
# VALUATION OF ASSETS IN ACCOUNTING

திரு. கு. குணசிங்கம், B. Com, (Hons.)

கணக்கீட்டில் சொத்து மதிப்பீடானது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செயற்பாடாகையால் இவ் விடயம் மிக விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். எனினும் க. பொ. த. உயர்தர மாணவர்க்கும், உயர் கல்வியை மேற்கொள்பவர்க்கும் ஏற்ப விடயங்களைச் சுருக்கமான முறையில் வெளிப்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சொத்தும் அதன் மதிப்பும்:**

ஒரு வியாபார முயற்சியினால் உடைமை உரிமை கொள்ளப்படுபவை சொத்துக்கள் என வரைவிலக்கணம் செய்யப்படும். உடைமை உரிமை எனும்போது சொத்துக்கள் வியாபார நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வளங்களாகும் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. சொத்துக்களின் பெறுமதி என்பது சாதாரணமாக அச் சொத்துக்களை உடைமையாகக் கொண்டிருப்பதால் அல்லது அவற்றைப் பயன்படுத்துவதால் நிறுவனம் ஒன்றிற்குக் கிடைக்கும் நற்பயனால் வெளிப்படுத்தப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில சொத்துக்களின் மூலம் கிடைக்கும் நற்பயன்கள் எல்லையற்றவையாக அமைகின்றன. இச் சந்தர்ப்பங்களில் அச் சொத்துக்களின் அல்லது அவற்றின் நற்பயன்களின் கணக்கீடு அவசியமற்றதாகின்றது. சொத்துக்கள் சார்பான கணக்கு வைக்கும் தேவை எழுவது கணக்கீடு வரையறுக்கப்பட்ட வளங்களுடன் மட்டுமே தொடர்பு கொள்வதால் ஆகும். எனவே கணக்கீடு வரையறுக்கப்பட்ட வளங்களுடனும், வரையறுக்கப்பட்ட நற்பயன்களுடனும் தொடர்புடையது என்பது கவனத்திற் கொள்ளற்பாலது.

**சொத்து மதிப்பீட்டின் முக்கியத்துவம்:**

நிறுவன ஐந்தொகை ஒன்றின் செம்மையும், அந் நிறுவனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட இலாபமும் அந் நிறுவனத்தின் சொத்துக்களது சரியான மதிப்பீட்டில் தங்கியுள்ளது நிறுவனம் ஒன்றின் இலாபமானது இருகாலப் பகுதிகளில் அந் நிறுவனத்தின் தேறிய சொத்தில் ஏற்படும் அதிகரிப்பாலும், நட்டமானது தேறிய சொத்தில் ஏற்படும் வீழ்ச்சியினாலும் தீர்மானிக்கப்படுகின்றது. தேறிய சொத்து என்பது ஒரு நிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனத்தின் மொத்தச் சொத்துக்களில் இருந்து அதன் மொத்த நடைமுறைப் பொறுப்புக்களைக் கழிக்க வரும் தொகையெனக் கொள்ளப்படும். எனினும் தேறிய சொத்துக்கள் அந் நிறுவனத்தின் மூலதனத்துடன் சமப்படுத்தப்பட்டு, உரிமையாளரின் அக்கறைத் தொகை எனக் கூறப்படுவது மிகப் பொருத்தமுடையதாக இருப்பதுடன், அனாவசியமான சிக்கல்களையும் தவிர்க்கின்றது.

தேறிய சொத்தின் மதிப்பீடு நிறுவனத்தின் இலாபத்தை மதிப்பீட்டடிப்படையில் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக அமைவதனால் சொத்து மதிப்பீட்டில் உள்ள சகல விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்.

சொத்து மதிப்பீட்டு முறைகள்:

சொத்து மதிப்பீடுகள் பற்றிய கருதுகோள்கள் சொத்தின் சுழற்சி மாற்றத்துடன் ஒன்றிணைந்ததாகும். சொத்தின் சுழற்சி மாற்றம் என்பது குறிப்பிட்ட சொத்து ஒன்று மீண்டும் மீண்டும் திரவ நிலையை அடைதலாகும். உதாரணமாக, சரக்கிருப்பானது கடன்பட்டோராக மாறி, கடன்பட்டோரிடம் பணம் பெறும்போது காசாக மாறுவதைக் குறிப்பிடலாம். இச் சுழற்சி மாற்றம் நிகழுகின்ற காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு சொத்தின் தன்மைகள் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகைப்பாட்டிற்கேற்ப அவற்றின் மதிப்பீட்டு முறைகளும் அமைகின்றன. சாதாரணமாகச் சொத்துக்கள் பின்வரும் வகைகளாகப் பிரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுவது வழக்கமாகும்,

1) பணச் சொத்துக்களும் குறுங்காலக் கோரிக்கைகளும்
2) முதலீட்டடிப்படையில் அமைந்த சொத்துக்கள்
3) மீள் விற்பனைக்கான சொத்துக்கள்
4) சொந்தப் பயன்பாட்டிற்கான சொத்துக்கள்
5) தொட்டுணர முடியாத சொத்துக்கள்
6) நடைமுறை வேலை

1) பணச் சொத்துக்களும் குறுங்காலக் கோரிக்கைகளும்:


கையில் உள்ள காசு, வங்கி மீதி என்பவற்றுடன் உண்டியல்கள், காசோலைகள், காசுக்கட்டளைகள், தபாற்கட்டளைகள் என்பவற்றையும் பணச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. இப் பணச் சொத்துக்களின் மதிப்பீடு அவற்றின் முகப்பெறுமதியில் மேற்கொள்ளப்படுவதால் மதிப்பீடு சார்பான சிக்கல்கள் எழுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிக்குதிரை -- முயல் -- சந்திரிக்கா -- கொடி -- தேனீ

# முதற்தர கூரை ஓடுகள்




மற்றும்

★ கட்டடப் பொருட்கள்

★ பூச்சாடி வகைகள்

ஏக வினியோகஸ்தர்கள்:

# மு. தா. பொன்னம்பலம்

36 (84), கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

☎ 23493

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதி"யே வாழிய! வாழிய!!
என வாழ்த்தி
உங்களையும் வருக! வருக!! என வரவேற்கின்றோம்.

# காவேரி ரெக்ஸ் சென்ரர்

181, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

நவநாகரீகத்திற்கேற்ற

- இந்தியன், சிங்கப்பூர் சாறி வகைகளும்
- ரெடிமேட் உடுப்புக்களும்
- பிளவ்ஸ் துண்டுகளும்
- காற்சட்டைத் துணிவகைகளும்

மலிவாகக் கிடைக்கும்

# Caveery Texs Centre

181, MODEL MARKET, JAFFNA.

---

"வணிக ஜோதி"க்கு எமது அன்பளிப்பு

V

உங்கள் நினைவில் நிறைந்த

# மலாயன் கபே

யாழ்ப்பாணம். ☎ 24074

குறுங்காலக் கோரிக்கைகள் என வகைப்படுத்தப்படும் சொத்துக்கள் நிறுவனம் ஒன்றிற்கு வரவேண்டியவற்றை உள்ளடக்குகின்றது. கடன்பட்டோர், ஊழியருக்கான முற்பணங்கள், ஏனைய முற்பணக் கொடுப்பனவுகள் என்பன உதாரணங்களாகும். இத்தகைய சொத்துக்களுக்கான மதிப்பீடானது, கடந்த கால அனுபவங்களின் நிமித்தம் இவற்றைப் பெற்றுக்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. சாதாரணமாக இச் சொத்துக்களுக்கு ஐந்தொகைத் திகதியில் நியாயமான ஏற்பாடு செய்யப்பட்டுப் புத்தகப் பெறுமதியில் இருந்து கழித்துக் காட்டப்படுகின்றன. அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாட்டைத் தீர்மானிக்கும்போது கடந்த காலங்களில் கடன்பட்டோரின் நிறைவேற்றுத் தன்மை, நிகழ்காலக் கடனின் காலம், எதிர்காலத்தில் கடனைச் செலுத்துவதற்கான இயலளவு என்பன கவனத்திற் கொள்ளப்படுதல் முக்கியமானதாகும்.

2) முதலீட்டடிப்படையிலான சொத்துக்கள்:

மூலதன உயர்ச்சியை ஏற்படுத்தும் அல்லது வருமானத்தை உழைக்கும் நோக்கத்திற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள் இவ் வகையைச் சார்ந்தனவாகும். பிணைப் பத்திரங்கள், தொகுதிக் கடன்கள், பங்குகள், உண்மையான ஆதனங்கள் என்பவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்; தரப்பட்ட வட்டி வீதத்தில் வருமானத்தைத் தரும் அரசாங்க ஆவணங்கள், தொகுதிக் கடன்கள் என்பவற்றின் பெறுமதியானது கழிவுக் காசோட்ட முறையில் அல்லது சந்தைப் பெறுமதியில் தீர்மானிக்கப்படுகின்றன.

எதிர்கால வருமானம் அறியப்படாத நிலையில் உள்ள முதலீடுகளைப் பொறுத்தவரையில் அதாவது திறந்த சந்தையில் குறியிடப்பட்ட (Quoted) முதலீடுகளான பங்குகளையும் பங்குத் தொகுதிகளையும் பொறுத்தவரை அவற்றின் சந்தைப் பெறுமதியே அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது குறியிடப்படாத முதலீடுகளைப் பொறுத்தவரை மதிப்பீட்டுத் திகதியில் ஐந்தொகையில் பிரதிபலிக்கும் புத்தகப் பெறுமதியே கருத்திற் கொள்ளப்படுகின்றது.

3) மீள் விற்பனைக்கான சொத்துக்கள்:

சாதாரண வியாபாரத் தொழிற்பாட்டின்போது விற்பனை செய்யப்படும் வெளியீடுகள் (Output), முதலீடுகள் தேவைக்கு மேலதிகமாகவுள்ள சொத்துக்கள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. இச் சொத்துக்கள் ஏற்கனவே குறிப்பிட்ட குறுங்காலக் கோரிக்கைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கத் திரவத் தன்மை குறைந்தவையாகும். இச் சொத்துக்களை மதிப்பிடும் சாதாரண முறை கொள்விலை அல்லது சந்தை விலை இதில் எந்த விலை குறைவோ அந்த விலையாகும். எனினும் விற்பனை செய்யக் கூடியவற்றின் சந்தைப் பெறுமதி அல்லது விலை அறியப்பட்டு அவற்றின் விற்பனையின்போது ஏற்படக்கூடிய தரகு, வினியோகச் செலவு போன்ற மேலதிகச் செலவினங்களைக் கழித்த பெறுமதியே கணிப்பிடப்படுவது மிகப் பொருத்தமானதாகும். இம்முறை தேறிய கைக்கிட்டும் பெறுமதி என அழைக்கப்படும்.

4) சொந்தப் பயன்பாட்டிற்கான சொத்துக்கள்:

நிலையானதும், மீள்விற்பனைக்கல்லாததும், நீண்ட காலப் பாவனையுடையதுமான சொத்துக்கள் இவையாகும். உதாரணமாக காணி, கட்டடம், பொறி, இயந்திரம், மோட்டார் வாகனம், தளபாடம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வகையான சொத்துக்களின் திருப்திகரமான மதிப்பீட்டு முறை எனக் கருதப்படுவது பதிலீட்டுக்கிரய (Replacement Cost) முறையாகும். அதாவது மதிப்பீட்டுத் திகதியில் மதிப்பீட்டிற்கு உட்படும் சொத்து ஒன்றுக்குப் பதிலாக அதே இயலளவைக் கொண்ட புதிய சொத்தைப் பிரதியிடுவதற்கு ஏற்படும் செலவுத் தொகையை மதிப்பீட்டுப் பெறுமதியாகக் கருதுவதாகும்.

நிலையான சொத்துக்களின் சாதாரண மதிப்பீட்டு முறையானது அவற்றின் கொள்விலையில் இருந்து திரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்துக் கணிப்பிடுவதாகும். இதனை வரலாற்றுக்கிரய முறை (Historical Cost Method) என்பர். இதுவே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள முறையாகும்.

5) தொட்டுணர முடியாத சொத்துக்கள்: INTANGIBLE ASSESTS

பௌதீகத் தன்மையற்ற ஆனால் நிறுவனம் ஒன்றின் உழைக்கும் திறனை அதிகரிக்கும், நிறுவனத்திற்கு நற்பயன் அளிக்கும் சொத்துக்களை இது உள்ளடக்கும். பௌதீகத் தன்மையற்றவையெனக் கூறும்போது இவை கட்புலனாகாதவையாயும் தொட்டுணர முடியாதனவாயும் காணப்படுவனவாகும். இந்த வகைச் சொத்துக்கள் நிறுவனத்தின் உழைக்கும் திறனை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் தவிர்க்க முடியாத செலவினங்களுடன் தொடர்புடையனவாக அமைதலும் உண்டு. ஆரம்பச் செலவு, நன்மதிப்பு, முகாமைத்திறன், ஊழியர் திறன், விளம்பரச் செலவு, ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவு, பங்கு தொகுதிக் கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கற் கழிவு என்பவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம். இச் சொத்துக்களின் மதிப்பீடானது குறிப்பாகப் பணச் செலவொன்றுடன் தொடர்புபட்டு உருவாக்கப்படும். இச் சொத்துக்களைப் பொறுத்த வரையில் அவை உள்ளடக்கிய செலவுத் தொகை அவற்றின் பெறுமதி யாகக் கருதப்பட்டுப் பொருத்தமான முறையில் ஆண்டு தோறும் பதி வழிப்புச் செய்யப்படல் வேண்டும். இவ்வாறு செய்வதன் நோக்கம் குறிப்பிட்ட காலத்தில் இவை முற்று முழுதாகப் பதிவழிக்கப்படல் வேண்டும் என்பதற்காகவாகும். அருவச் சொத்துக்கள் அல்லது கற்பனைச் சொத்துக்கள் எனப்படுபவை உண்மையில் சொத்துக்கள் அல்லவென்றும் ஒன்றிற்கு மேற்பட்ட நிதியாண்டுக் காலங்களில் பதிவழிப்பதற்காகக் கொண்டு செல்லப்படும் செலவம்சங்கள் என வரையறுக்கப்படுவதும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

நடைமுறை வேலை:

இச் சொத்தானது மூலப்பொருள் நிலைக்கும் முடிவுப் பொருள் நிலைக்கும் இடைப்பட்ட நிலையைக் கொண்ட சொத்துக்களாகும் இவை முடிவு நிலையைப் பெறும்வரை நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிப் பதில்லை எனக் கருதப்படுகின்றன இச் சொத்தினைத் தேறிய கைக் கிட்டும் பெறுமதியில் மதிப்பீடு செய்வது பொருத்தமானதாகக் காணப் படுவதுடன் பின்வரும் விடயங்களும் கருத்திற் கொள்ளப்படல் வேண் டும்.

1) எதிர்காலத்தில் ஏதேனும் நட்டங்கள் ஏற்படக்கூடியவையாகக் காணப்படின் இச் சொத்து கிரயத்தில் கணிப்பிடப்பட்டு நட்டத் திற்கான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

2) எதிர்காலத்தில் இலாபம் காணப்படுமாயின் இலாபத்தின் ஒருபகுதி தொடர்ந்துவரும் நிதியாண்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அத் தொகையால் தேறிய கைக்கிட்டும் பெறுமதி மேலும் குறைக்கப் படல் வேண்டும்.

சொத்து மதிப்பீடுபற்றிய தத்துவங்கள்:

கணக்கீட்டில் சொத்து மதிப்பீடு சம்பந்தமாகப் பின்வரும் கோட் பாடுகள் கருத்திற் கொள்ளப்படுதல் அவசியமாகின்றது

1) நிலையான சொத்துக்கள் அவற்றின் கொள்விலையில் மதிப்பிடப் பட்டு நியாயமான அளவு பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப் படல் வேண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) நிச்சயமான சந்தை விலை வீழ்ச்சி ஏற்படுவதற்கான சான்றுகள் இல்லாதவிடத்து நிலையான சொத்துக்களின் சந்தை விலை வீழ்ச்சிக் கான ஏற்பாடு செய்தலாகாது.

3) கைகூடாத இலாபம் எதற்கும் கணக்கு வைத்தலாகாது. அதா வது சொத்து ஒன்றின் புத்தகப் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் இலாபத்தை வெளிப்படுத்தலாகாது.

4) நடைமுறைச் சொத்துக்கள் கொள்விலை அல்லது சந்தைவிலை இதில் எந்த விலை குறைந்ததோ அந்த விலையில் மதிப்பிடப்படுதல் வேண் டும்.

சொத்து மதீப்பீட்டுடன் தொடர்புபடும் கருதுகோள்கள்:

சொத்து மதிப்பீட்டுடன் பின்வரும் கருதுகோள்கள் தொடர்பு படுகின்றன.

1) தொடர்ந்தியங்கும் முழுமைக் கூறு:

மாறுபாடான கருத்துக்கள் இல்லாதவிடத்து ஒரு வியாபார நிறுவனமானது வரையறையற்ற காலத்திற்குத் தொடர்ந்து செயற் படும் என்பதை இக் கருதுகோள் புலப்படுத்துகின்றது. சொத்துக்களின் மதிப்பீட்டில் குறிப்பாக நிலையான சொத்துக்களைப் பொறுத்த வரையில். அவை நீண்டகாலத்திற்குரியனவாக அமைவதனால் அவற்றின் மதிப்பீடு சந்தைப் பெறுமதிக்கு முக்கியத்துவம் அளிக்காது அதன் கொள்விலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டியதாகின்றது. ஏனெனில் சொத்து ஒன்றின் உண்மையான பெறுமதி என்பது அதனை விற்பனை செய்வதன் மூலம் பெறும் பணத்தொகையாலேயே தீர்மானிக்க முடியும். இவ் வாறு தீர்மானிப்பின் நிறுவனம் ஒன்றின் சகல சொத்துக்களும் ஐந் தொகைத் திகதியில் விற்பனை செய்யப்பட்டுப் பணம் சேகரிக்கப்படல் வேண்டும். இது சாத்தியமற்றதாயும் நிறுவனத்தின் தொடர் தன்மை யைப் பாதிப்பதாயும் அமையும்.

2) வரலாற்றுக் கிரயக் கருதுகோள்:

இக் கருது கோளானது சொத்து ஒன்று கொள்வனவு செய்யப்படும் போது அதன் மீது செலவிடப்படும் தொகையே அதன் உண்மையான பெறுமதியாகும் என வலியுறுத்துகின்றது. அதாவது சொத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக நிலையான சொத்துக்கள் அவற்றின் உண்மைக் கிரயத்தில் மதிப்பிடவேண்டுமேயன்றி ஊக அடிப்படையில் சந்தைப் பெறுமதிக்கு முக்கியத்துவம் அளிக்கலாகாது என வலியுறுத்துகின்றது. அத்துடன் இக்கருதுகோள் தொடர்ந்தியங்கும் கருதுகோளுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது.

3) பணப்பெறுமதியின் மாறுநிலை:

வரலாற்றுக்கிரயத்திற்கு முக்கியத்துவம் வழங்கும் கருதுகோள் இதுவாகும், அதாவது சொத்து ஒன்றின் கொள்வனவின்போது செல விடும் பணத் தொகையின் பெறுமதியானது எதிர்காலத்தில் மாற்றம் அடைவதில்லை என்றும் நிலையான பெறுமதியைக் கொண்டதென்றும் கூறுகின்றது இக்கருதுகோள். இதன் அடிப்படையிலேயே சொத்துக்களின் பெறுமதி மாற்றமற்ற நிலையில் பேணப்படுகின்றன.

சொத்துக்கான நிபந்தனை:

ஐந்தொகை ஒன்றில் சொத்தாக வெளிப்படுத்தக் கூடியவை பின்வரும் மூன்று நிபந்தனைகளை ஈடுசெய்வதாக அமைதல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

1) சொத்தானது அளவிடக்கூடியதாக இருத்தல்.

2) சொத்தானது நிதிசார் கொடுக்கல் வாங்கல் ஒன்றுடன் தொடர்புடையதாக இருத்தல்.

3) அக் கொடுக்கல் வாங்கல்கள் ஒன்றிற்கு மேற்பட்ட நிதியாண்டுக் காலத்துடன் தொடர்புபடல் என்பனவாகும்.

சொத்து மதிப்பீட்டில் உள்ள சிக்கல்கள்

ஐந்தொகையொன்றில் வெளிப்படுத்தப்படும் சொத்துக்கள் அவற்றின் சரியான பெறுமதியை வெளிப்படுத்துவதில்லை என்பது முக்கிய குறைபாடாகும். அதாவது சொத்துக்கள் மதிப்பீட்டுப் பெறுமதியை வெளிப்படுத்துகின்றனவே யொழிய உண்மைப் பெறுமதியை வெளிப்படுத்துவதில்லை, தொடர்ந்தியங்கும் கருதுகோள் அடிப்படையில் சொத்தக்கள் மதிப்பீடு செய்யப்படும்போது அவற்றின் உண்மைக்கிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம், எதிர்பார்க்கப்படும் வாழ்காலம், மதிப்பீடு செய்யப்படும் தேய்வின் அளவு, இரும்புப் பெறுமதி, காலவெதியாதல் என்பன கருத்திற் கொள் ளப்படுகின்றன ஐந்தொகைத் திகதியில் சொத்து மதிப்பீட்டை மேற் கொள்ளும்போது சொத்தின் சரியான பெறுமதியை மதிப்பிடமுடியாத தாகின்றது. அதாவது சொத்தின் வரலாற்றுக் கிரயமோ. அல்லது அதன் சந்தைப் பெறுமதியோ அதன் சரியான பெறுமதியாகாது. ஏனெ னில் சொத்து ஒன்றின் சரியான பெறுமதி அதனை விற்பனை செய்வதன் மூலம் தேறும்பணத் தொகையால் மட்டுமே தீர்மானிக்கப்பட முடியும் இது தொடர்ந்தியங்கும் நிறுவனம் ஒன்றிற்குப் பொருத்தமற்றதாகின் றது. தொடர்ந்தியங்கும் தன்மையில் சொத்துமதிப்பீட்டுடன் தொடர் புடைய மேற்கூறப்பட்ட அம்சங்கள் யாவும் ஊக அடிப்படையில் அமைந்தனவேயன்றி சரியான முடிவுகளாக அமைவதில்லை. இச் சிக்க லுக்குரிய காரணிகளுள் பிரதானமானகாரணி பணவீக்கமாகும். நிறுவ னம் ஒன்றின் இலாபம் அதன் சொத்து மதிப்பீட்டினால் தீர்மானிக்கப் படுகின்றது. ஆனால் சொத்துக்களின் மதிப்பீடு திட்டவட்டமற்றதாகை யால் மதிப்பீட்டடிப்படையில் அமைந்த சொத்தின் பெறுமதி சரியான இலாபத்தை வெளிப்படுத்துவதில்லை என்ற முடிவுக்கு வரமுடியும், எனி னும் இருகாலங்களுக்கிடையிலான சொத்துக்களின் ஒப்பீடு ஓரளவிற் கேனும் நியாயமானதாக அமையவேண்டும் என்பதால் தொடர்ந்தியங் கும் தன்மையிலான சொத்து மதிப்பீடு கணக்கீட்டில் பொதுவாக ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### பயன்படுத்திய சொற்களும் ஆங்கிலப்பதமும்.

| | | |
|---|---|---|
| நற்பயன் | - | Benefits |
| நடைமுறைவேலை | - | Work in Progress |
| வரலாற்றுக் கிரயம் | - | Historical cost |
| தேறிய கைக்கிட்டும் பெறுமதி | - | Net Realisable Value |
| கருது கோள் | – | Concept |
| இரும்புப் பெறுமதி | – | Scraped Value |
| தத்துவங்கள் | - | Principles |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக உலகில் வழிகாட்டியே வருக! வருக!!
வருடாவருடம் மலர எமது நல்லாசிகள்

# சந்திராஸ்
பிரபல பாதணி விற்பனை நிறுவனம்

# CHANDRA'S
LEADING FOOTWEAR MERCHANTS

62 - 63, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

62-63, NEW MARKET,
JAFFNA.

---

பத்தாண்டு மலராக பவனி வரும் உன்னை
வாழ்த்துகின்றுள் இந்த பவானி.

# BHAVANY FURNITURE PALACE
75. (121) KASTHURIAR ROAD, JAFFNA.

DEALERS IN BEST QUALITY HOUSE HOLD FURNITURES.

சிறந்த வீட்டுத் தளபாடங்களை உடன் பெற....

## பவானி பேணிச்சர் பலஸ்
75, (121) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகக்கலையை ஆதரிக்கும் அன்பு மலரே உனக்கு
எமது நல்லாசிகள் என்றும் உண்டு.

துர்க்கா ரெக்ஸ்ற்

164, நவீனசந்தை (உட்பக்கம்)
யாழ்ப்பாணம்.

புதிய டிசைன் ❋ சேலை வகைகள் ❋ 'B' பிளவ்ஸ் துணிகள்
❋ சேட்டிங் - சூட்டிங்

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரைக்கும் தேவையான
❋ ரெடிமேட் உடைகளை ❋
தெரிவு செய்வதற்கு சிறந்த ஸ்தாபனம்

FOR ALL YOUR TEXTILE REQUIREMENTS
PLEASE VISIT!

DURKA TEXT

164, MODEL MARKET (INSIDE)
JAFFNA. ☎ 22704

---

பார்புகழும் பத்தாண்டு மலரைப் பாராட்டுகிறது 'பாரத்'

சிறந்த வர்ண, கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும்
மங்கள வைபவங்களை வீடியோ படப்பிடிப்பு செய்திடவும்
மற்றும் புகைப்படத் தேவை அனைத்திற்கும்

பாரத் ஸ்ருடியோ

82/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். ☎ 22152

நவீன சந்தையில்:
"பாரத் சென்ரர்"
178, நவீனசந்தை.
யாழ்ப்பாணம். ☎ 24265

வீடியோ திரைப்படங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# நிதி பாய்ச்சல் கூற்றுக்கள்
# FUND FLOW STATEMENTS

**Mr. T. Rajaratnam,**
*Instructor*
Poly Technical Institute,
JAFFNA.

கம்பனிகளின் வெளியீட்டு கணக்குகளில் நிதி பாய்ச்சல் கூற்று என்பதும் முக்கியமான ஓர் அங்கமாக காணப்படுகின்றது. நிதி பாய்ச்சல் கூற்று ஒரு கம்பனியின் குறிப்பிட்ட காலப்பகுதியில் (நிதியாண்டு) நிதி எவ்வாறு பெறப்பட்டது என்பதையும் அது எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்ற விபரத்தையும் விளக்கமாகக் காட்டும். அது குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன்னை காலப்பகுதிக்குரிய (ஆரம்ப) ஐந்தொகையில் இருந்து குறிப்பிட்ட காலப்பகுதியின் இறுதியில் ஐந்தொகை எவ்வாறு வேறுபடுகின்றது என்பதையும் அது காட்டுவதாக அமைகிறது. இவ்வாறு வேறுபாட்டுக்கு உரிய நிதிமூலகம் எவ்வாறு பெறப்பட்டது என்பதையும், எவ்வாறு அது பயன்படுத்தப்பட்டது என்பதையும் சமப்படுத்தி காட்டும் கூற்று எனவும் இதனை அழைக்கலாம்.

மேலே விவரிக்கப்பட்டவாறு இது பயன்படுகின்றபோதும் தற்காலத்தில் எதிர்காலம் குறித்த நிதிபாய்ச்சல் திட்டம் மிகப்பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இதன் மூலம் நிதியில் ஏற்படக் கூடிய மேலதிகத்தையோ அன்றி குறைகளையோ முன்னுரைக்கக் கூடியதாக இருப்பதுடன் முகாமைக்கு பொருத்தமான நேரத்தில் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள இது உதவுகின்றது.

இவ்வாறு கடந்தகால எதிர்கால நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறும் நிதி பாய்ச்சல் கூற்று பல முறைகளில் தயாரிக்கப்படுகின்றது. கடந்தகால நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கும் நிதிக் கூற்றுக்களில் இரண்டு முறை முக்கியத்துவம் பெறுகின்றன.

1) நடைமுறை முதலை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுவது.

2) காசு மீதியை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை உதாரணத்தை அடிப்படைப்படையாக கொண்டு விளக்கு வோம்.

உ+ம்:-

வரையறுக்கப்பட்ட கலாதரன் கம்பனியின் இரு தேதிகளிலான ஐந்தொகை வருமாறு.

| | 31-3-1983 | 31-3-1984 |
|---|---|---|
| பங்கு முதல் | 200 000 | 240 000 |
| பங்கு வட்டம் | 20 000 | 30 000 |
| பொது ஒதுக்கு | 50 000 | 70 000 |
| இலாபநட்டக் கணக்கு | 30 000 | 40 000 |
| 10% தொ: கடன் | 100 000 | 50 000 |
| நடைமுறை பொறுப்பு | 60 000 | 70 000 |
| | 460 000 | 500 000 |
| நிலையான சொத்து | 200 000 | 230 000 |
| முதலீடுகள் | 60 000 | 40 000 |
| இருப்பு | 100 000 | 140 000 |
| கடன்பட்டோர் | 70 000 | 75 000 |
| காசும் வங்கியும் | 30 000 | 15 000 |
| | 460 000 | 500 000 |

பின்வரும் தகவல்களும் தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1) வியாபார இலாபம் | | 122 000 |
| கழி: பெறுமானத் தேய்வு | 40 000 | |
| முதலீட்டு விற்பனை நட்டம் | 5 000 | |
| தொகுதிக்கடன் மீட்புக்கான வட்டம் | 5 000 | 50 000 |
| | | 72 000 |
| கூட்டு: நிலையான சொத்து விற்பனை இலாபம் | 6 000 | 6 000 |
| இவ்வாண்டுக்கான இலாபம் | | 78 000 |
| கூட்டு: கடந்தவருட இலாப நட்டக் கணக்கு மீதி | | 30 000 |
| | | 108 000 |
| கழி: கொடுக்கப்பட்ட இலாபம் | 48 000 | |
| பொது ஒதுக்குக்கு மாற்றியது | 20 000 | 68 000 |
| மீதி கீ/கொ/சென்ற இலாபம் | | 40 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இவ்வாண்டு 10/- பெறுமதியான 4000 சாதாரண பங்குகள் 2 ரூ. 50 சத பங்கு வட்டத்துடன் வழங்கப்பட்டது.

3) 50000 ரூபா பெறுமதியான தொகுதிக் கடன்கள் 10% வட்டத்துடன் மீட்கப்பட்டது.

4) நிலையான சொத்து பற்றிய மாற்றங்கள் வருமாறு:

| | கொ. விலை | பெ. தேய்வு | மீதி |
|---|---|---|---|
| 1/3/83 | 240 000 | 40 000 | 200 000 |
| கொள்வனவு | 100 000 | — | 100 000 |
| | 340 000 | 40 000 | 300 000 |
| விற்பனை | 50 000 | 20 000 | 30 000 |
| | 290 000 | 20 000 | 270 000 |
| இவ்வாண்டுக்கான பெறுமான தேய்வு | — | 40 000 | 40 000 |
| 31-3-84 | 290 000 | 60 000 | 230 000 |

நடைமுறை முதலின் அடிப்படையில் நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகின்றபோது நடைமுறை முதல் என்றால் என்ன அதை எவ்வாறு கணிப்பிடுவது என்பதையும் அறிந்துகொள்ளவேண்டியுள்ளது. நிலையான சொத்தில் உள்ளடக்கப்படாதவை நடைமுறைச் சொத்துக் களாகும். இந்த நடைமுறைச் சொத்துக்களில் இருந்து நடைமுறைப் பொறுப்புக்களைக் கழிக்க வருவதே நடைமுறை முதலாகும். எனவே வருட ஆரம்ப ஐந்தொகையில் உள்ள நடைமுறை முதலுக்கும் இறுதி ஐந்தொகையில் உள்ள நடைமுறை முதலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு அறியப்பட்டு அதை இணக்கிக் காட்டுவதாக நடைமுறை முதல் ரீதியான நிதிப் பாய்ச்சல் கூற்று அமையும்.

தரப்பட்ட உதாரணத்தில் 31-3-83 நடைமுறை முதல் (200 000 – 60 000) 140 000 ஆகும். 31-3-84 நடைமுறை முதல் (230 000 – 70 000) 160 000 ஆகும். வேறுபாடு நடைமுறைச் சொத்து நிதியாண்டில் (160 000 – 140 000) 20 000 அதிகரிப்பாகும். இவ் அதிகரிப்பை இணக்கிக் காட்டுவதற்காகவே இம்முறை அமையும். நடைமுறை முதல் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை இணக்கிக் காட்ட முற்படும்போது பல தரவுகளைப் பெற வேண்டியது அவசியமாகின்றது. இவை இரு வேறுபட்ட வகையாக அமையும் நிதி மூலகமும், நிதிப் பிரயோகமும் ஆகும். நிதி மூலகம் என்பது குறிப்பிட்ட நிதியாண்டில் நிறுவனம் பெற்றுக்கொண்ட நிதி வசதிகளைக் குறிப்பிட்ட, நிதிப் பிரயோகம் எவ்வாறு நிதிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதை விளக்கும்.

ஒரு கம்பனி நிதி மூலத்தை பல வழிகளில் பெற்றுக்கொள்ளலாம். அவற்றில் பிரதானமானவை பின்வருமாறு,

1) கம்பனியின் செயற்பாட்டினால் உழைக்கப்படும் இலாபம் இதனுடன் பணச் செலவில்லாத செலவினங்களும் கூட்டப்படவேண்டும். உதாரணமாக பெறுமானத் தேய்வு பழமையானதற்காக இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்ட தெரகை என்பனவாகும்.

2) பங்குகளை விற்பனை செய்வதனால் பெறப்படுபவை

3) நீண்டகாலப் பொறுப்புக்களை அதிகரிப்பதனால் பெறப்படுபவை

4) நடைமுறை சொத்தல்லாத சொத்துக்களை விற்பனை செய்வதனால் கிடைப்பவை

இவ்வாறு பெறப்படும் நிதி மூலமானது பின் வருபவைக்கு முக்கியமாக பிரயோகிக்கப்படலாம்.

1) கம்பனியின் செயற்பாட்டில் இழக்கப்படும் நட்டம்
2) பங்குகள் மீட்கப்படுதல்
3) நீண்டகாலப் பொறுப்புக்களை குறைத்தல்
4) நடைமுறை சொத்தல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்தல்.

மேலே குறிப்பிட்ட மூலகம், பிரயோகம் ஆகியவற்றில் ஏற்படும் வேறுபாடு நடைமுறை சொத்து, நடைமுறை பொறுப்பு ஆகியவற்றில் ஏற்படும் அதிகரிப்பு குறைவு என்பவற்றின் மூலம் சமப்படுத்திக்காட்டப்படும்.

1) செயற்பாட்டுரீதியான இலாபம் கணக்கிடும்போது கடந்த வருடத்துச்குரிய இலாபநட்டக் கணக்கு மீதி உள்ளடக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வரி பங்கிலாபங்கள் கழிக்கப்பட்டு இருக்குமானால் அவற்றை பிரயோகத்தில் காட்டுவதற்காக திரும்ப கூட்டுதல் வேண்டும். அத்துடன் நிலையான சொத்து விற்பனையால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் இதனுள் உள்ளடக்கக்கூடாது. அவ்வாறு உள்ளடக்கப்பட்டால் அவற்றை தனியாக எடுக்க வேண்டும். இதே போன்றே முதலீட்டு விற்பனைகளிலும் கையாளவேண்டும். இலாபநட்டக் கணக்கில் இருந்து பங்கீடு செய்யப்படுகின்ற தொகைகளும் முக்கியமாக ஒதுக்குக்கு மாற்றப்படுகின்றதை முற்றாக புறக்கணிக்க வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டது போல் பணச் செலவில்லாத செலவினங்களான பெறுமானத் தேய்வு பழமையாவதன் மூலம் கழிக்கப்படும் தொகைகள் கூட்டிக் கொள்ள வேண்டும். தரப்பட்ட உதாரணத்தில் இலாபநட்டக் கணக்கு மீதி 40,000 ரூபா உள்ளது. இது எவ்வாறு பெறப்பட்டது என்பது மேலதிகமாக கொடுக்கப்பட்ட தகவல் 1 ல் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. எனவே நிதி பாய்ச்சல் கூற்றுக்கான செயற்பாட்டு இலாபம் பின்வருமாறு செம்மையாக்கப்படவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 31-3-1984 மீதி | | | 40,000 |
| கூட்டு: | பொது ஒதுக்கு | 20 000 | |
| | கொடுக்கப்பட்ட பங்குலாபம் | 48 000 | |
| | பெறுமான தேய்வு | 40 000 | |
| | முதலீடு விற்பனை நட்டம் | 5 000 | |
| | தொகுதிக் கடன் மீட்பு கழிவு | 5 000 | 118 000 |
| | | | 158 000 |
| கழி: | நிலையான சொத்து விற்பனை இலாபம் | 6000 | |
| | 31-3-1983 இலாபநட்டக் க/கு மீதி | 30 000 | 36 000 |
| | செயற்பாட்டு இலாபம் | | 122 000 |

2) பங்கு விற்பனை மூலம் பெறப்பட்ட வருவாயை கணக்கிட வேண்டும். உதாரணத்தில் கொடுக்கப்பட்ட தகவல் (2) ல் 10/- ரூபா பெறுமதியான சாதாரண பங்குகள் 2-50 சத பங்கு வட்டத்துடன் பெறப்பட்ட வருவாய்

| | | |
|---|---|---|
| பங்குகள் | 4000×10 = | 40 000 |
| பங்கு வட்டம் | 4000×2·50 = | 10 000 |
| | | 50 000 ரூபாவாகும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) மூலகத்தில் அடுத்து முக்கியமானது நிலையான சொத்து விற்பனை வருவாயை கணக்கிடலாகும். இதில் முக்கியமாக இலாபம், நட்டம் கணக்கில் எடுப்பதில்லை. விற்பனை வருவாய் மட்டுமே கணக்கில் எடுக்கவேண்டும். தரப்பட்ட உதாரணத்தில் நிலையான சொத்து விற்பனை இலாபம் 6000 ரூபா என தரப்பட்டுள்ளது. இது செயற்பாட்டு இலாபக் கணிப்பில் இலாபத்தில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக விற்பனை வருவாயை கணக்கிட வேண்டும் இதற்கு தகவல் (4) இதுபற்றிக் கூறுகிறது. அதாவது நிதியாண்டு விற்பனை செய்யப்பட்ட சொத்தின் கொள்வனவு பெறுமானம் 50 000 ரூபா. இதற்காக இதுவரை உருவாக்கப்பட்ட பெறுமான தேய்வு ஒதுக்கம் 20 000 ரூபா எனவே, விற்கப்பட்ட சொத்தின் தேறிய பெறுமதி 30 000 ரூபா இது 60 000 ரூபா இலாபம் வர விற்கப்பட்டிருக்குமாயின் விற்பனை பெறுமதி 30 000 + 6000 = 36 000 ரூபாவாகும்.

4) உதாரணத்தில் முதலீட்டு விற்பனை நட்டம் 5000 ரூபா என தரப்பட்டுள்ளது, இது செயற்பாட்டு இலாபத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. நிதிபாய்சல் கூற்றுக்கு நிலையான சொத்து விற்பனை வருவாய் கணக்கிட்டது போன்று முதலீட்டு விற்பனை வருவாயும் கணக்கிட வேண்டும். 31-3-83ல் முதலீடு 60 000 ரூபாவாகவும் 31-3-84 ல் முதலீடுகள் 40 000 ரூபாவாகவும் உள்ளது. எனவே புத்தகப் பெறுமதியின் படி (60 000—40 000) 20 000 ரூபா பெறுமானமுள்ள முதலீடுகள் விற்கப்பட்டுள்ளன. இதில் 5 000 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ள தெனின் முதலீட்டு விற்பனை (20 000—5 000) வருவாய் 15 000 ரூபாவாகும்.

தரப்பட்ட உதாரணத்தில் நிதி மூலகத்தில் மேற் கூறப்பட்ட அம்சங்கள் முக்கியத்துவம் பெறுவதுபோல் நிதி பிரயோகத்திலும் பின்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1) நீண்டகால பொறுப்புக்கள் மீட்கப்பட்டுள்ளதாக தகவல் (3) குறிப்பிடுகிறது. இதில் 50 000 ரூபா தொகுதிக்கடன் 10% வட்டம் 5000 (50 000 +5 000 ) மீட்கப்பட்ட மொத்த பெறுமதி 55 000 ஆகும். இதில் பங்கு மீட்பு இடம் பெறவில்லை.

2) நடைமுறை சொத்தல்லாத சொத்து கொள்வனவாகும். தகவல் (4)ல் நிலையான சொத்து நிதியாண்டில் 100 000 ரூபாவுக்கு கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனவு செய்யப்பட்டுள்ளது என்பது தரப்பட்டுள்ளது. நிலையான சொத்து கொள்வனவு பெறுமதி *100 000* ரூபாவாகும்.

*3)* பங்குலாபம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் தொகை *48 000* ரூபாவாகும், இது செயற்பாட்டு இலாப செம்மையாக்கத்தில் கூட்டப்பட்டுள்ளது. இது பிரயோகத்தில் காட்டப்பட வேண்டும்.

நடைமுறை முதல் ரீதியிலான நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்குப்போது சிறு வேறுபாடுகளுடன் இரு முறைகளில் தயாரிக்கப்படுகிறது.

*1)* ஆரம்ப நடைமுறை முதலுடன் நிதிமூலகங்களை கூட்டி இதில் இருந்து பிரயோகங்களை கழிக்க வருட இறுதி நடை முறை முதல் பெறப்படும்.

அடுத்தபடியாக இறுதி நடைமுறை முதலில் இருந்து ஆரம்ப நடைமுறை முதலைக் கழிக்க நடைமுறை முதலின் மாற்றத்தொகை பெறப்படும். இத்தொகையை நடைமுறை முதல் அதிகரிப்புக்கான தொகைகளைக் கூட்டி நடைமுறை முதல் குறைப்புக்கானவற்றைக் கழித்துத் தேறிய நடைமுறை முதலின் மாற்றத்தை இணக்கிக் காட்டுவதாகும்.

தரப்பட்ட உதாரணத்தில் நடைமுறை முதலை அதிகரிக்கச் செய்பவை இருப்பு சரக்கின் பெறுமதி (*140 000* *100 000*) *40 000* ரூபா கடன் பட்டோர் (*75 000 – 70 000*) *5 000* ரூபாவாகும். நடைமுறை முதலைக் குறைக்க செய்பவை நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு (*70 000—60 000*) *10 000* காசு மீதி குறைவு (*30 000—15 000*) *15 000* ஆகும்.

பொதுவாக பின்வரும் ஒழுங்குக்கு இணங்க நிதி பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகின்றது.

*31-3-1984* நிதி பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| *1)* ஆரம்ப நடைமுறை முதல் | | xxx |
| கூட்டு: நிதி மூலங்கள் | | |
| வியாபாரத்தின் செயற்பாட்டு இலாபம் (பெறுமானத் தேய்வு உட்பட) | xxx | |
| பங்கு விற்பனை | xxx | |
| நீண்டகால பொறுப்பு அதிகரிப்பு | xxx | |
| நிலையான சொத்து விற்பனை | xxx | |
| முதலீட்டு விற்பனை | xxx | xxx |
| | | xxx |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழி: பிரயோகம்

| | | |
|---|---|---|
| வியாபார செயற்பாட்டு நட்டம் | xxx | |
| பங்கு மீட்பு | xxx | |
| நீண்டகால பொறுப்பு குறைவு | xxx | |
| பங்குலாப கொடுப்பனவு | xxx | xxx |
| நடைமுறை முதலின் இறுதி பெறுமதி | | xxx |

2) 

| | |
|---|---|
| நடைமுறை முதலின் இறுதிப் பெறுமதி | xxx |
| கழி: நடைமுறை முதலின் ஆரம்ப பெறுமதி | xxx |
| நடைமுறை முதலின் மாற்றம் | xxx |

நடைமுறை முதல் அதிகரிப்புகள்:

| | | |
|---|---|---|
| இருப்பு சரக்கு பெறுமதி அதிகரிப்பு | xxx | |
| கடன்பட்டோர் தொகை அதிகரிப்பு | xxx | |
| நடைமுறை பொறுப்பு குறைவு | xxx | |
| காசு அதிகரிப்பு | xxx | xxx |

கழி: நடைமுறை முதல் குறைப்புக்கள்

| | | |
|---|---|---|
| இருப்பு சரக்கு குறைவு | xxx | |
| கடன்பட்டோர் குறைவு | xxx | |
| நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு | xxx | |
| காசு குறைவு | xxx | xxx |
| தேறிய நடைமுறை முதல் மாற்றம் | | xxx |

தரப்பட்ட உதாரணப்படி நிதிப்பாய்ச்சல் கூற்றை தயாரித்தால் பின் வருமாறு அமையும்.

31-3-84 நடைமுறை முதல் அடிப்படையிலான
நிதிப் பாய்ச்சல் கூற்று.

| | | |
|---|---|---|
| 1. ஆரம்ப நடைமுறை முதல் | | 140 000 |
| கூட்டு: நிதி மூலங்கள் | | |
| வியாபாரத்தின் செயற்பாட்டு | | |
| இலாபம் பெறுமான தேய்வு உட்பட | 122 000 | |
| பங்குகள் விற்பனை | 50 000 | |
| நிலையான சொத்து விற்பனை | 36 000 | |
| முதலீட்டு விற்பனை | 15 000 | 223 000 |
| | | 363 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கழி: | பிரயோகம் | | |
| | தொகுதிக் கடன் மீட்பு | 55 000 | |
| | நிலையான சொத்து கொள்வனவு | 100 000 | |
| | பங்கிலாபம் | 48 000 | 203 000 |
| | இறுதி நடைமுறை முதல் | | 160 000 |

| | | |
|---|---|---|
| 2. | இறுதி நடைமுறை முதல் | 160 000 |
| | கழி ஆரம்ப நடைமுறை முதல் | 140 000 |
| | நடைமுறை முதல் மாற்றம் | 20 000 |

**நடைமுறை முதல் அதிகரிப்புகள்**

| | | |
|---|---|---|
| இருப்பு சரக்கு | 40 000 | |
| கடன் பட்டோர் | 5 000 | 45 000 |

**நடைமுறை முதல் குறைப்புக்கள்**

| | | |
|---|---|---|
| நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு | 10 000 | |
| காசு குறைவு | 15 000 | 25 000 |
| தேறிய நடைமுறை முதல் அதிகரிப்பு | | 20 000 |

2) இரண்டாவதாக தயாரிக்கப்படுவது எவ்வாறு எனில் ஆரம்ப இறுதி நடைமுறை முதல் கணக்கில் எடுக்கப்படுவதில்லை.

இதில் மூலகங்களில் இருந்து பிரயோகங்களை கழித்து வரும் வேறுபாட்டுத் தொகையை நடைமுறை சொத்து, நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு குறைவு அம்சங்களை கொண்டு இணக்கி காட்டுவதாகும். இது பின்வருமாறு தயாரிக்கப்படுகின்றது.

**31-3-84 நடைமுறை முதல் ரீதியிலான நிதிப்பாய்ச்சல் கூற்று**

நடைமுறை முதல் மூலகங்கள்

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு இலாபம் பெறுமான தேய்வு உட்பட | xxx | |
| பங்கு விற்பனை | xxx | |
| நீண்டகால பொறுப்பு அதிகரிப்பு | xxx | |
| நிலையான சொத்து விற்பனை | xxx | xxx |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழி:

நடைமுறை முதல் பிரயோகம்

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு நட்டம் | xxx | |
| பங்கு மீட்புகள் | xxx | |
| நீண்டகால பொறுப்பு குறைதல் | xxx | |
| நிலையான சொத்து கொள்வனவு | xxx | xxx |
| அதிகரித்த / குறைந்த நடைமுறை முதல் | | xxx |

நடைமுறை முதல் அதிகரிப்புகள்

| | | |
|---|---|---|
| இருப்பு சரக்கு அதிகரிப்பு | xxx | |
| கடன் பட்டோர் ,, | xxx | |
| காசு ,, | xxx | |
| நடைமுறை பொறுப்பு குறைவு | xxx | xxx |

நடைமுறை முதல் குறைப்புக்கள் :

| | | |
|---|---|---|
| இருப்பு சரக்கு குறைவு | xxx | |
| கடன் பட்டோர் ,, | xxx | |
| காசு ,, | xxx | |
| நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு | xxx | xxx |
| நடைமுறை முதல் அதிகரிப்பு / குறைவு | | xxx |

தரப்பட்ட உதாரணப்படி நிதி பாய்ச்சல் கூற்று:

31-3-84 நடைமுறை முதல் அடிப்படையில்
நிதிப் பாய்ச்சல் கூற்று

நடைமுறை முதல் மூலகங்கள்:

| | |
|---|---|
| செயற்பாட்டு இலாபம் பெறுமான தே. கூட்டபட | 122 000 |
| பங்கு விற்பனை | 50 000 |
| நிலையான சொத்து விற்பனை | 36 000 |
| முதலீடு விற்பனை | 15 000 |
| | 223 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழி:- நடைமுறை முதல் பிரயோகம்

| | | |
|---|---|---|
| தொகுதிக்கடன் மீட்பு | 55 000 | |
| நிலையான சொத்து கொள்வனவு | 100 000 | |
| பங்கிலாபம் | 48 000 | 203 000 |
| நடைமுறை முதல் அதிகரிப்பு | | 20 000 |

நடைமுறை முதல் மூலகம்

| | | |
|---|---|---|
| இருப்பு சரக்கு அதிகரிப்பு | 40 000 | |
| கடன்பட்டோர் | 5 000 | 45 000 |
| கழி: நடைமுறை முதல் பிரயோகம் | | |
| நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு | 10 000 | |
| காசு குறைவு | 15 000 | 25 000 |
| நடைமுறை முதல் அதிகரிப்பு | | 20 000 |

காசு மீதி அடிப்படையிலான பாய்ச்சல் கூற்று தயாரிக்கும்போது வருட ஆரம்ப காசு மீதியில் இருந்து வருட இறுதி காசு மீதியை மூலகங்கள் பிரயோகங்கள் என்பனவற்றுக்கு ஊடாக வந்தடைந்ததை விளக்குவதாகும். இதற்கான மூலகங்கள் பிரயோகங்கள் ஆகியவற்றின் தகவல்கள், நடைமுறை முதல் அடிப்படையில் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பெறப்பட்ட தரவுகள் போன்றே பெறவேண்டும். முக்கிய மாற்றம் என்னவெனில் நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பு நடைமுறை பொறுப்பு குறைவு பிரயோகமாகவும் நடைமுறை சொத்து குறைவு நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு மூலகமாகவும் கருதப்படவேண்டும். தரப்பட்ட உதாரணத்தில் இருப்பு சரக்கு ரூபா 40 000 (140 000—100 000) கடன்பட்டோர் அதிகரிப்பு (75 000—70 000) 5000 பிரயோகமாகவும் நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு (70 000—60 000) 10 000 மூலகமாகவும் உள்ளது.

காசு மீதியினை அடிப்படையாக கொண்ட நிதிப்பாய்ச்சல் கூற்று பின்வருமாறு அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 31-3-84 நிதி பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| ஆரம்ப காசு வங்கி மீதி | | xxx |
| கூட்டு:- மூலகங்கள் | | |
| செயற்பாட்டு ரீதியிலான இலாபம் | | |
| பெறுமான தேய்வு உட்பட | xxx | |
| பங்கு விற்பனை | xxx | |
| நீண்டகால பொறுப்பு அதிகரிப்பு | xxx | |
| நிலையான சொத்து விற்பனை | xxx | |
| முதலீடு விற்பனை | xxx | |
| அதிகரித்த நடைமுறை பொறுப்பு | xxx | |
| குறைவடைந்த நடைமுறை சொத்து | xxx | xxx |
| | | xxx |
| கழி: பிரயோகம் | | |
| செயற்பாட்டு ரீதியான நட்டம் | xxx | |
| பங்கு மீட்பு | xxx | |
| நீண்டகால பொறுப்பு குறைவு | xxx | |
| நிலையான சொத்து கொள்வனவு | xxx | |
| அதிகரித்த நடைமுறை சொத்து | xxx | |
| குறைந்த நடைமுறை பொறுப்பு | xxx | xxx |
| இறுதி காசு மீதி | | xxx |

தரப்பட்ட உதாரணத்தை கொண்ட் காசு அடிப்படையில் நிதி பாய்ச்சல் கூற்று பின்வருமாறு.

### 31-3-84 நிதி பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| ஆரம்ப காசு வங்கி மீதி | | 30 000 |
| கூட்டு: மூலகங்கள் | | |
| செயற்பாட்டு இலாபம் பெறுமான தே. உட்பட | 122 000 | |
| பங்கு விற்பனை | 50 000 | |
| நிலையான சொத்து விற்பனை | 36 000 | |
| முதலீட்டு விற்பனை | 15 000 | |
| நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு | 10 000 | 233 000 |
| | | 263 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழி: பிரயோகம்

| | | |
|---|---|---|
| தொகுதிக் கடன் மீட்பு | 55 000 | |
| நிலையான சொத்து கொள்வனவு | 100 000 | |
| கொடுத்த பங்கிலாபம் | 48 000 | |
| இருப்பு சரக்கு அதிகரிப்பு | 40 000 | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு | 5 000 | 248 000 |
| 31-3-84 இறுதி காசு மீதி | | 15 000 |

இவ்வாறு தயாரிக்கப்படும் நிதிப் பாய்ச்சல் கூற்றினால் பல பயன்பாடுகள் ஏற்படுகின்றன. அவற்றில் பிரதானமானவை பின்வருமாறு:

1) கம்பனியின் நிதிப் பயன்பாடு பற்றிய படத்தைத் தருகின்றது;

2) கம்பனி இயக்கத்தில் பெறப்பட்ட நிதி மூலகத்திற்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு விடை அளிக்கின்றது.

3) முதலீடுகளுக்கு உதவு தொகைகளாக எங்கிருந்து இந்த நிதி வந்தது? உதாரணமாக நிலையான சொத்து விற்பனையிலா அல்லது வேறு வருமதிகளில் இருந்தா?

4) புதிய பொறி முதலீடுகள் இதனால் நடைமுறை முதல் மாற்றம் என்ன? பங்கிலாப தொடர்புகள் என்பதையும் காட்டுகிறது.

5) பங்கு முதலில் இருந்து பெற்ற பணம் நீண்ட கால பொறுப்புக்கள் அதிகரிப்பினால் பெற்ற பணம் எவ்வாறு பயன்படுகிறது என்பதைக் காட்டுகிறது இதே போன்றே ஏனைய நிதி வருவாய்கள் எவ்வாறு பயன்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

6) நிறுவன நிதி நடவடிக்கைகள் எவ்வாறு விரிவடைந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகக்கலையைப் பரப்ப
பத்தாண்டு மலரே வருக! வருக!!

# றூபி போட்டோ

கலர் சேவிஸ்

உங்கள் கலர்ப் புகைப்படங்களைக்
குறுகிய காலத்தில்
கழுவிப் பெற்றுக் கொள்ள
ஓர் சிறந்த ஸ்தாபனம்

றூபி போட்டோ
மற்றும் கறுப்பு வெள்ளை புகைப்படங்களும்
பெற்றுக் கொள்ள

## றூபி போட்டோ

10, 14, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

'நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை'
இவற்றை அளிப்பதுதான்

# சீமாட்டி

ஜவுளி சமுத்திரம்

*Wear a Colour - Wear a Design*
*Visit*

# SEEMATI
## TEXTILE'S OCEAN

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24413

கிளை:
158, நவீனசந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24096

# BALENTHIRAS

170, Model Market, Jaffna.

திருமண வைபவங்களுக்கேற்ற
கூறைச் சேலைகள்,
இந்தியா, சிங்கப்பூர் சாறிவகைகள்,
சூட்டிங், பேபி சூட்டுக்கள்
மற்றும்
சகலவிதமான சாறிகளுக்கும் ஏற்ப
பிளவ்ஸ் துணிகளும்
ஒரே இடத்தில் மலிவாகப் பெற்றுக்கொள்ள

## பாலேந்திராஸ்

170, நவீன சந்தை, யாழ்ப்பாணம்
போன்: 23071

'ஒளிபடைத்த கண்ணினாய் வா! வாவா!'
என வாழ்த்துகின்றோம்.

# மெடிகெயர்
# கிளினிக்

எல்லாவிதமான நோய்களுக்கும்
சிகிச்சை அளிக்கப்படும்.

# Madicare Clinic

டாக்டர் வை. உருத்திரேஸ்வரன்
*A. M. P., M. D. A.*

45, புங்கன்குளம் றோட்,
அரியாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments from*

# Rotary Printing Trades

DISTRIBUTORS

NATIONAL PAPER CORPORATION, PAPER MERCHANTS

PRINTERS PROVIDERS & STATIONERS.

☎ 22558

# ரோட்டரி

# பிறின்ரிங் ரேட்ஸ்

காகிதாசி வகைகள் அச்சுமை வகைகள்

மற்றும்

அச்சுக்கந்தோர் உபகரணங்களுக்கும் வட இலங்கையில் பிரசித்தி பெற்றவர்கள்

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன விநியோகஸ்தர்கள்.

34, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகஜோதி தொடர்ந்து மலர எமது ஆசிகள்

தரமான, சுவையான

- குளிர் பானங்கள்
- சிற்றுண்டி வகைகள்
- கேக், பற்றிஸ்
- சூடான பானங்கள்

மற்றும்

விழாக்கள், களியாட்டங்கள் அனைத்திற்கும் தேவையானவற்றை

குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ள

சாவகச்சேரியில் தனித்துவமான நிறுவனம்

# கிரியோன் கூல்பார்

2, நவீன சந்தை, சாவகச்சேரி.

"வணிக ஜோதி"க்கு எமது அன்பளிப்பு

V

# சுகி இன்டஸ்ரீஸ்

(தரமான அப்பியாசப் புத்தகங்களின் உற்பத்தி நிறுவனம்)

அரசடி லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கியல் கோட்பாடுகளும் அதன் வரையறைகளும்

செல்வி ப. ராஜினி 12 (*1985*)

இன்றைய நவீன வர்த்தக உலகில் கணக்கியலானது இன்றியமையாத ஒன்ருகக் காணப்படுகின்றது. எவ்வாறு ஆதிகால மனிதன் தனது பழமை மிக்க கொள்கைகளிலிருந்து விடுபட்டு நவீன உலகினை உருவாக்கினுனே அதேபோல் கணக்கியலானதும் ஓர் படிமுறை வளர்ச்சியினூடாக வளர்ந்து இன்று நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், பாரிய கைத்தொழில் அமைப்பின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத ஒன்ருகக் காணப்படுகின்றது. எனவேதான் கணக்கியல், கணக்கியல் கோட்பாடுகள் என்பவற்றினை ஆரம்பத்திலிருந்து சுருக்கமாக நோக்குதல் நன்மை பயக்கத்தக்க ஒன்ருகும்.

ஆரம்ப காலத்தில் கணக்கியலானது கிரேக்க, உரோம தேசங்களில் இருந்து தோன்றி இன்று உலக நாடுகள் முழுவதும் பரவிக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் காணப்பட்ட வியாபார நடவடிக்கைகள் குறிப்பேட்டில் மாத்திரமே பதிவு செய்யப்பட்டது. அதன் பின்பு காசேடு, பேரேடுகள் போன்றவற்றிற்கு மாற்றப்பட்டு அதிலிருந்து நிலுவைச் சமன்பாடு தயாரிக்கப்பட்டது. பின்பு இவைகளின் ஆதாரத்துடனும், துணையுடனும் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. எனவேதான் இவ்வாருக படிமுறை வளர்ச்சியினூடாக வளர்ந்துவந்த கணக்கியல் சில கோட்பாடுகளை உருவாக்கிவிட்டது எனலாம். அதாவது கோட்பாடு என்று கூறும்போது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் பொதுவான ஆதாரம் அல்லது அடிப்படை என்பதனைக் குறிப்பதாக அமைகிறது. எனவேதான் ஆரம்ப காலங்கள் தொட்டு பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகள் அல்லது கற்பிதங்கள் மரபு ரீதியாகப் பின்பற்றப்பட்டு வந்து இன்று கணக்கியல் கோட்பாடுகளாகக் காணப்படுகின்றன.

எவ்வாருயினும் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு அடிப்படையான கணக்கு வைப்பு விதிகள், மரபுகள், முறைகள் என்பவற்றினை நாம் கணக்கியல் கோட்பாடுகள் என வரையறுத்துக் கொள்ளக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக உள்ளது: எனவேதான் மரபு ரீதியாகத் தோன்றிய கோட்பாடு கள் எல்லோராலும் பின்பற்றப்படுவதற்குச் சில சிறப்பியல்புகளைக் கொண்டதாகக் காணப்பட வேண்டும். அவையாவன:

1) எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்படுதல் வேண்டும்.

2) குறிப்பிட்ட ஓர் தொழில் பற்றி அறிய விரும்புபவர்களுக்கு அது பொருள் கொடுக்கக் கூடியதாக அல்லது உபயோகமான தகவல்களை அளிப்பதாக அமைய வேண்டும்.

3) கோட்பாடானது தேவையற்ற சிக்கல்களையும் வீண் செலவுகளையும் தவிர்த்து நிறைவேற்றப்படக் கூடியதாய் இருக்க வேண்டும்.

4) குறித்த நோக்கத்தினை நிறைவேற்றக் கூடியதாக இருக்க வேண்டும்.

5) கோட்பாடானது ஒத்துப் பார்ப்பதற்குரிய தன்மைகளை கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் கோட்பாடுகள் மேல்வரும் சில சிறப்பியல்புகளை கொண்டு காணப்படுதல் வேண்டும் என கருதப் படுகிறது இன்று பின்வரும் கணக்கியல் கோட்பாடுகள் கணக்கியல் நிபுணர்களினால் பின்பற்றப்படுவதாக காணப்படுகிறது அவற்றினை சுருக்கமாக ஆராய்வோம்.

1) தொழில் முறைக் கோட்பாடுகள் (BUSINESS ENTITY CONCEPT)

இக் கோட்பாட்டின் அடிப்படையில் கணக்கியல் தொழில் நிறுவனங்களுக்கு உரிமையான உரிமையாளர்கள் வேறு, நிறுவனம் வேறு என்ற அடிப்படையில் இரு துருவங்களாகக் காட்டப்படுகிறது. எனவே தான் இக் கோட்பாட்டின் அடிப்படையில் ஓர் நிறுவனத்தின் ஐந் தொகையினை நோக்கும் போது உரிமையாளன் உரிமை அல்லது சொந்த மூலதனமானது பொறுப்புக்கள் பக்கத்தில் காட்டப்படுகிறது.

வியாபார அமைப்புக்களில் கம்பனி அமைப்பானது மட்டுமே சட்டத்தின் கீழ் தனி மனிதனாக கருதப்பட்டு உரிமையாளர்களிடம் இருந்து வேறுபடுத்தப்படுகிறது. என்றாலும் கூட தனிமுயற்சி, பங்குடமை என்பன கணக்கியலில் இருந்து வேறுபடுத்தப்பட்டு முழுமையற்ற நிறுவனங்களாக காட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) தொடர்ந்து இயங்கும் கோட்பாடு (GOING CONCERN CONCEPT)

இக் கோட்பாட்டின் அடிப்படையில் நிறுவனமானது தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. எனவேதான் இன் நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பில் வருமதிகளும் சென்மதிகளும் காட்டப்படுகின்றன. எதிர்காலத்தில் நிறுவனம் இயங்காது என்ற அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படும் போது அவை முழுமை வாய்ந்த ஓர் விளக்கத்தினைக் கொண்டதாக காணப்படமாட்டாது. செம்மையான கணக்குகள் தயாரிக்கப்படுவதற்கு இக் கோட்பாடு பின்பற்ற வேண்டும் என்று கணக்கியல் நிபுணர்கள், பட்டயக் கணக்காளர்கள் வலியுறுத்துகிறார்கள். இக் கோட்பாடு, ஐந்தொகை தயாரிப்பிற்கு இன்றியமையாத ஒன்றாகும்.

3) காலக் கோட்பாடு (PEIODIC CONCEPT)

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அவைகள் ஓர் குறிப்பிட்ட காலப்பகுதியுடன் தொடர்புபட்டதாக அமைதல் வேண்டும் எனக் கருதப்படுகிறது. இதனால் தான் வியாபார இலாப நட்டக் க/கு, ஐந்தொகை என்பன ஒரு குறிக்கப்பட்ட நிதியாண்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு காலப்பகுதியுடன் தொடர்புபடுத்தப்படுவதால் ஒவ்வொரு வருடத்திற்கான இலாபத்தினையும் ஒப்பீடு செய்ய முடிகிறது.

4) கொள்கைமாறாக் கோட்பாடு (CONISISTENCY CONCEPT)

இக் கோட்பாட்டின் அடிப்படையில் ஓர் நிறுவனம் குறிப்பிடப்பட்ட நிதியாண்டில் எந்த நடைமுறையினைப் பின்பற்றுகின்றதோ அதே நடைமுறையினை அடுத்துவரும் ஏனைய ஆண்டுகளிலும் பின்பற்ற வேண்டும் என்பதாகும்.

உதாரணமாக:- ஒரு குறிப்பிட்ட நிறுவனம் குறிப்பிட்ட நிதியாண்டில் ஒடுங்கு பாக முறையில் பெறுமானத் தேய்வினைக் கணிப்பிட்டால் அவ் முறையினையே அடுத்துவரும் ஆண்டுகளில் பின்பற்ற வேண்டும் இதனை விடுத்து நிறுவனம் ஒரு வருடத்தில் ஒடுங்குபாக முறையிலும் அடுத்த வருடத்தில் நேர்கோட்டு முறையிலும் பெறுமானத் தேய்வினைச் செய்தால் அது நிதிக் கூற்று தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுவதுடன் தவறான அபிப்பிராயத்தினையும் விளக்கத்தையும் ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) பண அளவுக் கோட்பாடு (MONEY MEASUREMENT CONCEPT)

பணமானது வியாபார நடவடிக்கைகளில் உண்மைத் தன்மையினை வெளிப்படுத்துவதினால் கணக்கியலில் கணக்கு வைப்பில் பணத்தினைக் கொண்டு மட்டும் அளவிடப்படக் கூடிய நிகழ்ச்சிகளையே பதிவு செய்ய வேண்டும்.

உதாரணமாக:- ஒரு நிறுவனத்தில் பல்வேறு வகையான சொத்துக்கள் காட்டப்படும் போது அவை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் போது அவைகளை எண்ணிக்கையில் காட்டாமல் பணப் பெறுமதிகளின் அடிப்படையில் காட்டப்பட வேண்டும் எனவே இக் கோட்பாட்டின் படி கணக்கு வைப்பில் பணத்தைக் கொண்டே கணக்கு வைக்க வேண்டும்.

6) உண்மைக் கோட்பாடு (MATERIALITY CONCEPT)

கணக்கியலில் நிறுவன நடவடிக்கைகளில் பொருள் சார முக்கியத்துவம் இல்லாதவைகளை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. ஓர் நடவடிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததா அல்லது முக்கியத்துவம் அற்றதா என்பது நிறுவனங்களைப் பொறுத்து அமையும். சில நிறுவனங்கள் தமது இலாபநட்டக் கணக்குகளை அல்லது ஐந்தொகையை ரூபா சதங்களில் காட்டலாம்; பெரும் தொகைகளில் காட்டலாம்.

அதேபோல், சில நிறுவனங்கள் நீண்டகாலப் பயன்பாடு தரக் கூடிய வருமானச் செலவுகளை எத்தனை ஆண்டுகளில் பதிவழிக்க வேண்டும் என்பதனை தீர்மானிக்கின்றது.

7) வருமானத்தினையும் செலவினையும் இயவு படுத்தும் கோட்பாடு (MATCHING CONCEPT)

இக் கோட்பாட்டின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது நிதியாண்டில் ஏற்பட்ட செலவுகள் ஏற்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும் என கூறுகிறது.

உதாரணம்:- நிதியாண்டில் ஏற்பட்ட விற்பனை போன்ற வருமானங்களை அவ்வாண்டில் ஏற்பட்ட செலவுகளுடன் ஒப்பீடு செய்வதன் ஊடாக இலாபம் கணிக்கப்படுகிறது. அதாவது நிதியாண்டில் ஏற்பட்ட வருமானம் அவ் நிதியாண்டில் ஏற்பட்ட எல்லாச் செலவுகளுடனும் ஒப்பிடப்படுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) அட்றுக் கோட்பாடு (ACCURAL CONCEPT)

ஓர் நிறுவனத்தின் வருமானங்கள் பெறப்பட்டால் என்ன பெறு விட்டால் என்ன செலவினங்கள் செலுத்தினுல் என்ன செலுத்தாவிட்டால் என்ன, வருமானங்கள் பெறப்பட்டதாகவும் செலவினங்கள் இறுக்கப்பட்டதாகவும் காட்டப்பட வேண்டும். இதனுல் தான் இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படும் போது பெறப்பட வேண்டிய வருமானங்கள் அவ்வருட வருமானமாக சேர்த்துக் கொள்ளப்படுகிறது. அதே போல் சென்மதியான செலவுகள் அவ்வருடச் செலவுகளாக கருதப்பட்டு கணக்கில் சேர்க்கப்படுகிறது. இக் கோட்பாடு கணக்கு வைப்பில் முக்கியத்துவம் பெற்ற ஒன்ருகும்.

9) பழமை பேணல் கோட்பாடு (PRIDANCE CONCEPT)

இக் கோட்பாட்டின் அடிப்படையில் இலாபத்தினை எதிர்பார்க்காதே, ஆனுல் ஏற்படக் கூடிய நட்டங்களை ஈடு செய் என்ற தத்துவம் வலியுறுத்துகிறது அதாவது ஒரு பொருளுக்கு இரண்டு விலைகள் கணிப்பிடப்படும் சந்தர்ப்பத்தில் அவ் விலைகளில் எது குறைவோ அதனையே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இக் கோட்பாடு வலியுறுத்துகிறது.

உதாரணமாக:- நிறுவனத்தில் நிதியாண்டு முடிவில் கணிப்பிடப்படும் இறுதி இருப்பு ஆனது சந்தை விலை, கொள்விலை இந்த இரண்டு விலைகளில் எது குறைவோ அதனையே கணக்கில் எடுத்தல் வேண்டும் என்பதாகும்.

10 இரட்டை விளைவுக் கோட்பாடு (DUAL AS POST CONCEPT)

நிறுவனத்தினுல் தனக்கென உரிமையாகக் கொள்ளப்பட்ட நிதி வளங்கள் சொத்துக்களாகவும் நிறுவனத்தின் வளங்களுக்கு எதிராக வெளியார் கொண்டுள்ள கோரிக்கைகள் பொறுப்புக்களாகவும் கருதப்படுகின்றன. எந்த வகையிலும் ஒரு நிறுவனத்தின் சொத்துக்களின் பெறுமதிக்கு மேலாக பொறுப்புக்கள் இருக்க முடியாது, என்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சொத்துக்கள் = பொறுப்புக்கள் ஆக அமைகிறது. இதில் இருந்து அறியக்கூடியது யாதெனில் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் இரண்டு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதாகும்.

உதாரணமாக:- ஒரு கடன் கொடுத்தோருக்கு காசினை வழங்கும் போது சொத்தான காசு குறைகிறது. அதேவேளை பொறுப்பும் குறைகிறது எனவே இது இரண்டு தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

1) கிரயக் கோட்பாடு (COST CONCEPT)

இக் கோட்பாட்டின் படி ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகள் கொள்விலையிலேயே பதிவு செய்யப்பட வேண்டும் என்பதாகும். ஒரு பொருளின் அல்லது சொத்தின் பெறுமதி கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படினும் கூட அப்பொருள் என்ன பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்பட்டதோ அப் பெறுமதியையே பதியப்பட வேண்டும்.

உதாரணமாக:- கொழும்பில் 10,000/=க்கு கொள்வனவு செய்யப்பட்ட ஓர் இயந்திரம் மட்டக்களப்புக்கு கொண்டு சென்ற போது 12,000/= ஆக உயர்வடைந்து காணப்படுமாக இருந்தாலும் கொள்வனவு செய்யப்பட்ட 10,000/= பெறுமதியிலேயே பதியப்பட வேண்டும்.

12) வெளிப்படுத்தும் கோட்பாடு (DISCLOSURE CONCEPT)

தொழில் நிறுவனத்தைப் பற்றி தப்பான அபிப்பிராயம் ஏற்படாது இருப்பதற்கு நிதிக்கூற்றுக்களுக்கு புறம்பாக புறக்குறிப்புக்களோ அல்லது பின்னிணைப்புக்களோ வெளியிடப்பட வேண்டும். நிறுவனத்தின் உண்மையினை வெளிக் கொள்வதற்கு இக் கோட்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஐந்தொகையில் பின்புறக் குறிப்புக்கள் இடம் பெறுகிறது.

இவ்வாறாக பல்வேறுவிதமான கோட்பாடுகள் காணப்பட்டாலும் கூட அவற்றினை ஏற்றுக் கொள்வதில் பல சிக்கல்கள் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கியல் நடவடிக்கைகள் பணத்தினை அடிப்படையாகக் கொண்டே பதிவு செய்யப்படுகிறது. இவ்வாறான பணப் பெறுமதியில் (பணத்தின் கொள்வனவு வலுவில்) அடிக்கடி மாற்றம் ஏற்படுகிறது. எனவேதான் பணவீக்க / பணச்சுருக்கங்கள் இலாபத்தினை தாக்கத்திற்கு உள்ளாக்குவதனால் உண்மையான நிலையினைக் காட்டாது விடலாம். அத்துடன் இக் கோட்பாடுகளின் அடிப்படையில் கணக்கியல் நடவடிக்கைகளின் பெறுமதி மட்டுமே கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் கணக்கியலில் அளவிடப்பட முடியாத முகாமைத் தீர்மானங்கள், நன்மதிப்பு, என்பனவற்றிற்குப் பணப்பெறுமதியில் எவ்வளவு மதிப்பு எனக் குறிப்பிடப்பட முடியாது; எனவே கோட்பாடு என்பது பயனற்ற ஒன்றாக காணப்படுகிறது. அத்துடன் கணக்கியலில் வருமானங்கள், செலவுகள் என்பனவற்றிற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பொருளாதார வருமானங்களும் செலவுகளும் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை.

அத்துடன் ஒப்பீடு செய்வதிலும் கூட இங்கு சிக்கல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக ஓர் நிறுவனம் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்வினை மேற்கொள்ளும்போது அவ் நிறுவனத்தினை நாம் ஒடுங்குபாக மீதி முறையில் அல்லது குறைந்து செல் மீதிமுறையில் பெறுமானத் தேய்வினை மேற்கொள்ளும் நிறுவனத்துடன் ஒப்பீடு செய்வது கடினமானதாகும். ஏனெனில் இரண்டு நிறுவனங்களிலும் பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகள் வேறுபட்டவையாக காணப்படுவது ஆகும்,

எனவேதான் மரபுரீதியாக பின்பற்றப்பட்டு வந்த கற்பிதங்கள் கோட்பாடு ஆக மலர்ச்சி பெற்று வளர்ந்து வந்தாலும் கூட அவற்றினை ஏற்றுக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படத்தான் செய்கிறது. எவ்வாறாயினும் வளர்ந்து வரும் இன்றைய நவீன உலகில் கணக்கியல் கோட்பாடுகள் இன்றும் கணக்கியலில் பின்பற்றப்பட்டு வருவதனையும், கோட்பாடுகள் வளர்சியடைந்து வருவதனையும் நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகஜோதிக்கு எமது நல்லாசிகள்

★ அருள்ஸ் ★

கடைச்சற் தொழிற்சாலை

அழகிய கடைச்சல் வேலைகள் (மரம்)
தளபாடங்கள்
மற்றும் சகல விதமான
தச்சு வேலைகளுக்கும்

எம்மிடம் ஒருதரம் விஜயம் செய்யுங்கள்

அருண்ஸ்
584, துண்டி வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

---

மங்கையரின் மனமகிழ்ச்சிக்கேற்ற
சேலை ரகங்கள்
ஆடவர் ரசனைக்கேற்ற
றெடிமேட் ஆடைகள்
மற்றும்
கைக்கடிகாரம், ரீ. வி. டெக்
போன்ற அலங்கார, ஆடம்பரப்
பொருட்கள், கொலோன் வகைகள்
அனைத்திற்கும்

ஹப்பி ரெக்ஸ்ற்

149 - 168 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T' Phone: 24197

கிளை: 2-ம் கட்டிடம், நவீன சந்தை,
மேல் மாடி, யாழ்ப்பாணம்.
T' Phone: 22056

கிளை: 19, நவீன சந்தை மேல் மாடி,
யாழ்ப்பாணம்.

---

நவநாகரீகத்திற்கேற்ப
சேட்டிங், சூட்டிங், பேபி சூட்கள்

இந்தியன், சிங்கப்பூர்
சாறி வகைகள்

சகலவிதமான சாறிகளுக்குமேற்ற
பிளவ்ஸ் துணிகள்

யாவற்றையும் மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

சண்முகம் ரெக்ஸ்

37, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

---

- சகலவிதமான
  ஆங்கில மருந்து வகைகள்
- அதி குளிரூட்டப்பட்ட
  உணவு வகைகள்
- சாய்ப்புச் சாமான்கள்
- சத்திரசிகிச்சை உபகரணங்கள்
- எல்லாவிதமான
  பால்மா வகைகள்

நியாய விலையில் பெற்றுக்கொள்ள

JAFFNA PHARMACY

ஜவ்னா பார்மசி

மொத்த சில்லறை வியாபார ஸ்தாபனம்

12 (38), மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலர் என்ருல் இதுவன்றே மலர்"

என எல்லோரும் வாழ்த்தவேண்டுமென வாழ்த்துகின்ரேம்.

இப்பொழுது எங்கும் விற்பனையாகின்றது

**N. I.** **என். ஐ.**

சைக்கிள் ரயர்கள் ரியூப்புகள்

★ நீடித்த பாவிப்பு ★ சொகுசான ஓட்டம் ★

விலை: டயர் ரூ. 46-70 ரியூப் ரூ. 16-00

# நோர்தேண் இன்டஸ்ரீஸ்

112, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 23158


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வுக்கோர் உதவிக்கரம்! உங்களுக்கோர் வழிகாட்டி!!

# ஷப்ரு

நிதித்துறையில் உங்கள் உற்ற தோழன் அவனே!

குறுகிய கால முதலீட்டிற்கு
அதி உயர் வட்டி தரும்
ஒரே நிறுவனம்

# ★ SHABRA ★

நிதிப் பிரச்சனைகளைச் சுலபமாகத் தீர்க்க
உங்கள் தோழனையே நாடுங்கள்.

61, நியூபுல்லர் வீதி.
கொழும்பு - 4
☎ 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 22073

---

*With The Best Compliments From*

# Veto Trades

REGD. ELECTRICAL CONTRACTORS

DEALERS IN ELECTRICAL, AUTOMOBILE ACCESSORIES, P. V. C. PIPES, CABLES, MOTORS AND STARTERS.

## VETO TRADES

4, STANLEY ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலாப நட்டக் கணக்கு தொடர்பான முக்கிய கணக்கீட்டு விகித ஆய்வு

செல்வன் V. சிவகுருநாதன், 12 (*1985*)

1. மொத்த லாப விகிதம்:

விற்பனைக்கும் மொத்த லாபத்துக்கும் உள்ள தொடர்பினை அறிந்துகொள்ள உபயோகிக்கப்படுகின்றது. மொத்த லாபம் என்பது விற்ற சரக்கின் கொள்விலையைவிட விற்பனை விலை கூடுதலாக இருப்பதைக் குறிக்கும். இதனை விகிதாசாரமாகவோ அல்லது வீதாசார மாகவோ கணிப்பிடலாம். சாதாரணமாக இது வீதாசார அடிப்படையிலேயே கணிப்பிடப்படுவது வழக்கம். ஒவ்வொரு 100 ரூபா விற்பனைக்கும் கிடைத்த லாபம் எவ்வளவு என்பதை இது காட்டுகின்றது.

இதன் உபயோகம்

1) கடந்தகால இலாப நட்டங்களுடன் ஒப்பிட உதவுகின்றது.
2) ஒரே தன்மையுடைய வேறு வியாபாரத்துடன் ஒப்பிட உதவுகின்றது.
3) விற்பனைப் பாதீட்டுடன் ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கணிக்க உதவுகின்றது.
4) எதிர்கால திட்டமிடலுக்கு உதவுகின்றது.
5) மோசடிகள் ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய உதவுகின்றது.

மொத்தலாப வீதத்தை அதிகரிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்:

1) விற்பனை விலையை அதிகரித்தல்.
2) கொள்வனவுச் செலவுகளைக் குறைத்தல்.
3) ஆக்கச் செலவுகளைக் குறைத்தல்.
4) இறுதி இருப்பின் பெறுமதியைக் கூட்டி மதிப்பிடல்.
5) விற்பனை அளவை அதிகரித்தல்.
6) மூலப்பொருள் செலவைச் சிக்கனமாக்கல்.

2. தேறிய லாப விகிதம்:

விற்பனைக்கும் தேறிய லாபத்துக்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளக் கணிப்பிடப்படுகின்றது. தேறிய லாபம் என்பது மொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபத்தில் இருந்து அதனை உழைப்பதற்கு ஏற்பட்ட செலவுகள் அனைத்தையும் கழித்துவரும் தொகையாகும். இதுவே தொழிலின் உண்மையான இலாபத்தை எடுத்துக்காட்டுகின்றது. இதுவும் விகிதாசார அடிப்படையிலோ அல்லது வீதாசார அடிப்படையிலோ மதிப்பிடப்படலாம். சாதாரணமாக இதுவும் மொத்த லாபத்தைப் போன்று வீதாசார அடிப்படையிலேயே கணிப்பிடப்படுகின்றது. வரிக்கு முன் உள்ள தேறிய லாபமா அல்லது வரி கழித்தபின் உள்ள தேறிய லாபமா எடுக்க வேண்டும் என்பதில் இருந்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் வரிக்கு முன் உள்ள தேறிய லாபத்தை எடுப்பதே சிறந்ததாகக் கூறப்படுகின்றது.

இதன் உபயோகம்:

1) தொழிலின் உண்மையான இலாபத்துக்கும் விற்பனைக்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ள உதவுகின்றது.
2) ஒரே தன்மையுடைய ஏனைய தொழில்களுடன் ஒப்பிடலாம்.
3) கடந்தகால தேறிய லாபத்துடன் ஒப்பிடலாம்.
4) செலவுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க உதவுகின்றது.

இதில் மாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள்:

1) மொத்த லாபத்தில் ஏற்படும் மாற்றம்
2) செலவுகளில் ஏற்படும் மாற்றம்.
3) ஏனைய வழிகளில் கிடைக்கும் வருமானங்களில் ஏற்படும் மாற்றம்.

சில தொழில் நிறுவனங்களில் கடந்த காலத்தை விட மொத்த லாபவீதம் குறைவாகக் காணப்பட்டாலும் தேறிய லாப வீதம் அதிகரித்துக் காணப்படலாம். இதற்கான காரணங்கள்:

1) செலவு குறைவடைதல்.
2) ஏனைய வருமானங்கள் அதிகரித்தல்.
3) அரசாங்க சலுகைகள் என்பனவாம்.

3. புரள்மான வீதம்:

புரள்வு என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நடந்த தேறிய விற்பனையைக் குறிக்கும். புரள்மான வீதம் குறிப்பிட்ட காலப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் எத்தனை தடவைகள் பொருட்கள் சராசரியாக விற்பனை செய்யப்பட்டன என்பதைக் காட்டுகின்றது. இதன்மூலம் விற்பனையின் வேகத்தினை அறிந்து கொள்ளலாம். விற்ற சரக்கின் கொள்விலையைச் சராசரிக் கையிருப்பால் பிரிப்பதன்மூலம் மதிப்பிடப்படுகின்றது சரக்கிருப்பானது விற்பனை விலையில் மதிப்பிடப்பட்டிருப்பின் விற்பனையை சராசரி இருப்பால் பிரித்தல் வேண்டும். எனினும் இது ஒரு சராசரிப் புரள்வே தவிர எந்தக் காலங்களில் கூடிய புரள்வு எப்போது குறைந்த புரள்வு என்பதை இது வெளிப்படுத்தாது. இதன் உபயோகம்:

1) பொருட்கள் சராசரியாக எத்தனை தடவைகள் விற்பனை செய்யப்பட்டன என்பதை அறிந்து கொள்ளலாம்.
2) கடந்த காலத்துடன் ஒப்பிடலாம்.
3) எதிர் காலத்திற்குத் திட்டமிட உதவுகின்றது.
4) ஒரே தன்மையுடைய ஏனைய தொழில்களுடன் ஒப்பிடலாம்,
5) நிர்வாகத்தின் திறமையை அறியலாம்.
6) கையிருப்புக் காலத்தை அறியலாம்.

இதில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்:

1) கொள்விலையில் ஏற்படும் மாற்றங்கள்.
2) விற்பனை அளவில் ஏற்படும் மாற்றம்.
3) கொள்வனவு அளவில் ஏற்படும் மாற்றம்.
4) கொள்வனவுச் செலவில் ஏற்படும் மாற்றம்.
5) இறுதிச் சரக்கிருப்புப் பெறுமதியில் ஏற்படும் மாற்றம்.
6) உற்பத்திச் செலவில் ஏற்படும் மாற்றம்.

இதனை அதிகரிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்:

1) தரமான பொருட்களைக் கொள்வனவு செய்தல்.
2) கடன் விற்பனையை அதிகரித்தல்.
3) இருப்பைக் குறைத்தல்
4) கொள்வனவுச் செலவுகளைக் குறைத்தல்
5) விளம்பரத்தின் மூலமும் வேறு வழிகளிலும் விற்பனையை அதிகரித்தல்.
6) புதிய கிளைகளைத் திறத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# M. G. M.

# Video Home

A name for quality Video
Recorded Cassettes &
Release of Latest Video Films.

*We buy and sell*
RECORDED VIDEO FILMS
& DEAL IN
T. V. & DECK SPARES.

**M. G. M. VIDEO HOME**
28, Modern Market, Upstairs,
JAFFNA.

---

# THARAN STUDIO

9, 8, Modern Market, Jaffna.

துரித சேவையில் றபர்சீல்
சினிமா சிலைட்ஸ்
பிளாஸ்ரிக் போட்
சில்ஸ்கிறீன்
லேபல் டிசைன்
புளொக்ஸ்

மற்றும் சகலவிதமான ஓவிய
வேலைகளுக்கும்

↓

## தரன் ஸ்ரூடியோ

9, 8, நவீன சந்தை. யாழ்ப்பாணம்.
☎ 23858

---

''வணிக மலரின் மலர்ச்சியே
எங்கள் மகிழ்ச்சி''

வட இலங்கையில்
பிரபல புத்தகக் களஞ்சியம்
மக்மிலன் புத்தகசாலை

சகலவிதமான நூல்களையும்
சஞ்சிகைகளையும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

## மக்மிலன்
## புத்தகசாலை

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

---

''வணிக ஜோதியே தொடர்ந்து
மலர்ந்து நறுமணம் பரப்புவாயாக''

நாடுங்கள் . . . . .
றிக்கோ ஐஸ்கிறீம்
றிக்கோ சுவீற்ஸ்

நல்கும் தேன் சுவை
உங்கள் உள்ளங்கள் மறவா
இன்பச்சுமை

## றிக்கோ ஹோட்டல்

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22464 & 23889


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகக்கலை பயிலும் மாணவர்களுக்கு

வரப்பிரசாதமாக **வணிகஜோதி** மலர

எமது இதயம் நிறைந்த **வாழ்த்துக்கள்**

# குரொஸ் ட்ரவல் சேர்விஸ்

## (பிறைவேற்) லிமிட்டெட்

## CROSS TRAVEL SERVICE (Pte) LTD.

உலகின் எப்பாகத்திற்குச் செல்லவேண்டுமானாலும்
உங்கள் பிரயாணச் சீட்டுக்களை
யாழ். நகரிலேயே பதிவு செய்து கொள்வதற்கும்
மிகக் குறைந்த கட்டணத்தில்
பேர்லின் (BERLIN) செல்வதற்கான பிரயாணச் சீட்டுக்கள்
மற்றும் சகல ஒழுங்குகளையும்
துரிதமாகச் செய்து கொள்வதற்கும்
உடன் நாடுங்கள்

குரொஸ் ட்ரவல்
சேர்விஸ்

இத்துடன் தொலைத்தொடர்பு சேவையையும்
ரெலெக்ஸ் (TELEX) சேவையையும்
நொடிப் பொழுதில் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்

☎ *22040, 22060, 22816, 22817, 22820, 22821, 22822.*

**Telex:** *22207* (CTS) CE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட மலராகப் பவனிவரும் "வணிக ஜோதி"க்கு
எமது வாழ்த்துக்கள்

யாழ். நகரில் இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ப
அழகான, உறுதியான சகலவிதமான வீட்டுத் தளபாடங்களுக்கும்
சொகுசான மெத்தை வகைகளுக்கும்

# சிற்றி பேணிச்சர்

97 (157), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ சகலவிதமான தளபாடங்களும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். ★

# City Furniture

97 (157), KASTURIAR ROAD, JAFFNA.

---

"வணிக ஜோதி"யை வாழ்த்துகின்றோம்.

வாசகர்களை வரவேற்கின்றோம்,

யாழ். நகரில் தூய சைவ உணவிற்கு
முன்னணி வகிப்பவர்கள்

## ஸ்ரீ தாமோதர் விலாஸ்

❋ ❋ ❋

சுத்தமான, சுவையான பலகாரங்களுக்கு
உங்கள் உள்ளங்கள் நாடவேண்டிய இடம்

# ஸ்ரீ தாமோதர விலாஸ்

239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக வங்கிகள்

# MERCHANT BANKS

செல்வன் கு. சதீஸ் 12 (*1985*)

பல உலக நாடுகளின் நிதி அமைப்புக்களில் வியாபார வங்கிகள் அண்மைக் காலங்களில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. நிதி நிறுவனங்களின் தொழிற்பாட்டில் வியாபார வங்கிகள் ஈடுபடாத பொழுதும் நாடுகளில் நிதி அமைப்புக்களின் வளர்ச்சியையும் நிதி நிரம்பலையும் துரிதப்படுத்துவதில் வியாபார வங்கிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றதனால் இவைகள் நிதி அமைப்புக்களின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றன. வியாபார வங்கிகளின் தோற்றத்திற்கு இங்கிலாந்தே காரண கர்த்தர்வாக அமைகின்றது. இங்கிலாந்து கட்டியெழுப்பிய சாம்ராஜ்ஜியத்தில் உள்ள நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஏற்பட்ட ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் தொடர்பாக நிதி வழங்கலை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டே ஆரம்ப காலத்தில் வியாபார வங்கிகள் இங்கிலாந்தினால் ஆரம்பிக்கப்பட்டன. காலப்போக்கில் நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு வியாபார வங்கிகளின் தொழிற்பாடும் மாற்றி அமைக்கப்பட்டன. தற்காலத்தில் வியாபார வங்கிகள், வணிக வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களிடம் இருந்தும் பணம் வைத்திருப்போரிடம் இருந்தும் பணம் தேவைப்படும் முதலீட்டாளர்களுக்கு பணத்தைப் பெற்றுக் கொடுப்பதை பிரதான தொழிற்பாடாகக் கொண்டு செயற்படுகின்றன, ஆனால் வியாபார வங்கிகளின் தொழிற்பாடுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றதனால் அவற்றின் தொழிற்பாட்டை திட்டவட்டமாக வரையறை செய்ய இயலாது, இங்கிலாந்தில் நிதியைப் பெற்றுக் கொடுப்பதை தொழிற்பாடாக கொண்டு செயற்படும் வியாபார வங்கிகள் அமெரிக்காவில் நிதி முகாமையிலும் முதலீட்டு முகாமையிலும் ஈடுபடுகின்றன. இவ்வாறு வியாபார வங்கிகளின் தொழிற்பாடுகள் நாட்டுக்கு நாடு மாற்றமடையும் பொழுதும் வழமையான வணிக வங்கிகளின் தொழிற்பாட்டில் ஈடுபடாது இருப்பதே வியாபார வங்கிகளின் முக்கியமான ஒரு பொதுப்பண்பாகக் கருதப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தில் உதயமாகிய வியாபார வங்கிகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வடக்கு அமெரிக்க நாடுகளிலும் தொடர்ந்து பல வருட காலமாக செயற்பட்டு வந்தன, ஆனால் 1960ம் ஆண்டு வரைக்கும் ஆசிய நாடுகளில் வியாபார வங்கிகள் திட்டவட்டமான அடிப்படையில் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை 1960ம் ஆண்டுக்கு பின்பே ஆசிய நாடுகளில் வியாபார வங்கிகள் அவற்றின் வளர்ச்சித் தேவைக்கு ஏற்றவாறு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. ஆசிய நாடுகளில் ஏறத்தாழ 102 வியாபார வங்கிகள் தற்பொழுது செயற்பட்டு வருகின்றன. சிங்கப்பூர், கொங்கொங், மலேசியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, பாகிஸ்தான், தெற்கு வியட்னும் ஆகிய ஆசிய நாடுகளிலேயே இவைகள் செயற்பட்டு வருகின்றன.

இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பே வியாபார வங்கிகள் தாபிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. கட்டுப்பாடில்லாத பொருளாதாரம் வியாபார வங்கிகள் தாபிக்கப்படுவதற்கு அத்தியாவசியமான ஓர் ஆக்கக் காரணியாகவும் முன்னோடியாகவும் கருதப்படுகின்றது. 1977ம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பதவிக்கு வரும் காலம் வரையும் பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகள் பெருமளவில் ஏற்படுத்தப்பட்டன. தனியார்துறை முதலீடுகள் சுதந்திரமாக மேற்கொள்ளப்படககூடிய சூழ்நிலை இலங்கையில் உருவாக்கப்படவில்லை. 1977ம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டு தாராளக் கொள்கை செயற்பாட்டில் கொண்டுவரப்பட்டது. இதன் பிரதிபலனாக தனியார் துறையினர் சுதந்திரமாக முதலீடுகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு இலங்கையில் உருவாக்கப்பட்டது பிறநாட்டு வங்கிகள் பெருமளவில் தாபிக்கப்பட்டன. பிறநாட்டு முதலீட்டாளர் வருகைக்கு கூடுதலான உற்சாகங்கள் அளிக்கப்பட்டன. இத்தகைய தாக்கங்களினால் நாட்டில் நிதியை திட்டமிட்ட அடிப்படையில் வழிநடத்துவதற்காகவும் முதலீட்டாளர்களுக்கு வேண்டிய நிதியை பெற்றுக் கொடுப்பதற்கும் வியாபார வஙகிகளின் சேவைகள் அத்தியாவசியமானதாக கருதப்பட்டது. எனவேதான் தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்பே இலங்கையில் வியாபார வங்கிகள் உருவாக்கப்படுவதற்குச் சாதகமான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. 1982-ம் ஆண்டில் இருந்தே இலங்கையில் வியாபார வங்கிகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. முதன் முதலாக இலங்கைவங்கி, ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் லிமிட்டெட் (Sri Lanka Marchant Ltd.) என்ற வியாபார வங்கியை ஆரம்பித்தது. இதன் பின்பு மக்கள் வங்கி இங்கிலாந்தில் உள்ள கைனஸ் மகோன் என்ற நிறுவனத்துடன் இணைந்து கூட்டுமுயற்சியாக மக்கள் வியாபாரவங்கி லிமிட்டெட் (People Merch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ant Bank Ltd) என்ற வியாபார வங்கியை ஆரம்பித்தது. இவற்றுடன் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் அண்மையில் இலங்கையில் தாபிக்கப்பட்ட சில குத்தகைக் கம்பனிகளும் வியாபார வங்கிகளின் சில தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

வியாபார வங்கிகள் திறமையாக செயற்படுவதற்கு சில அத்தியாவசியமான குணநிசயங்கள் இருத்தல் வேண்டும். தீர்மானங்களை எடுக்கக் கூடியவர்கள் பெருமளவில் வேலைக்கு அமர்த்தப்படுவதுடன் தொழில் முயற்சித் தாபனங்களின் சார்பில் துரிதமான தீர்மானங்களை எடுக்கக் கூடிய திறமை வியாபார வங்கிகளில் காணப்படுதல் வேண்டும். முதலீட்டுச் சுற்றுடல் தொடர்பாகத் தகுந்த தகவல்களைச் சேர்த்து முதலீட்டாளர்களுக்கு வழங்குவதுடன் நவீன ஆலோசனைகளைத் தொழில் முயற்சியாளர்களுச்கு வழங்கி சேவைக் கட்டணத்தை வருமானமாகப் பெறுவதில் அக்கறை செலுத்துதல் வேண்டும். வியாபார வங்கிகள் நிதி நிறுவனங்களிடம் இருந்து தொழில் முயற்சியாளர்களுக்கும் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகளுக்கும் நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஈடுபடுகின்றன. மேலும் புதிதாக முதலீடுகளை ஆரம்பிப்பவர்களுக்கு வருமானம் அளிக்கக்கூடிய முதலீடுகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதையும் ஏற்கனவே முதலீடுகளைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு திறமையான செயற்திட்டங்களை உருவாக்கி அவற்றைத் திறமையாகச் செயற்படுத்துவதற்கு ஏற்ற ஆலோசனைகளை வழங்குவதையும் பிரதான தொழிற்பாடாகக் கொண்டு செயற்படுகின்றன. ஏற்கனவே செயற்படும் தொழில் முயற்சியாளர்கள் தொடர்ந்து பல வருட காலத்திற்கு இலாபகரமாகச் செயற்படுவதற்கு ஏற்ற ஆலோசனைகளையும் தொழில் முயற்சியாளருக்கு வழங்குகின்றன. வியாபார வங்கிகளின் தொழிற்பாட்டினால் நாட்டில் பெருமளவில் சேமிப்பு ஏற்படுகின்றது. நிதி வழங்கல் தகுந்த முதலீடுகளுக்கு வழிநடாத்தப்படுகின்றன. இதனால் முதலீட்டு வளர்ச்சியும். உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட்டுத் தனியார் துறையில் வளர்ச்சி துரிதப்படுத்தப்படுவதுடன் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து ஏற்றுமதிகள் துரிதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கப்படுகின்றது. ஆனால் வியாபார வங்கிகள் வைப்புக்களை ஏற்றல், கடன்களை வழங்குதல், காசோலைகளின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற வணிக வங்கிகளின் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதில்லை, இலங்கையில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட வியாபார வங்கிகளால் பெருமளவு பொருளாதார பலாபலன்களை அனுபவிப்பதுடன் எதிர்காலத்தில் மேலும் பல வியாபார வங்கிகள் தாபிக்கப்படும் எனத் திட்டவட்டமாக எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக மாணவர் மன்றம்
தொடர்ந்து செழிப்புற்றுச் சிறப்பாக
இயங்க வாழ்த்துகின்றோம்.

V

சாந்தி ரயர் வேக்ஸ்
218/2, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 24085 தந்தி: 'செல்வம்ஸ்'

விமாகி
உள்நாட்டு வெளிநாட்டு
செரமிக்ஸ் பொருட்கள்
எஸ்லோன் பைப் அன் பிற்றிங்ஸ்
பிளவூட் கதவுகள்
அனைத்திற்கும்
விமாகி
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24043
கிளை:
விமாகி எலெக்றிக்கல் சென்ரர்,
68/1 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24278

With the Best Compliments
from

Nallur Video Centre
For Lastest Original
Video Films

NALLUR VIDEO CENTRE
19, Murugaser Lane,
NALLUR - JAFFNA,
Sri Lanka.

வாழிய "வணிக ஜோதி"
என வாழ்த்துகின்றோம்.

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

கோபால் அன் சன்ஸ்
23. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதி" ஆண்டுதோறும் புதுப் பொலிவுடன்

வெளிவர வாழ்த்துகின்றோம்.

V

## எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை, கோப்பாய்.

## A/L

வர்த்தக - விஞ்ஞானம் - கலை

வகுப்புகளுக்கு

யாழ் நகரில் பிரபல்யம் பெற்ற நிறுவனத்தினர்

THE EXPRESS INSTITUTE KOPAY

கல்வியே கண்

# எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Chellappa & Co.

DEALERS IN SPARES OF ALL JAPANESE MOTOR VEHICLES

AUSTIN, PUGEOT & VOLKSWAGEN

AUTHORISED DISTRIBUTOR - C. W. E.

## Chellappa & Co.

**41, STANLEY ROAD,** **JAFFNA.**

☎ 23022 (EXTENSION) ☎ 23363 (RESIDENCE)

உங்கள் மங்களகரமான வைபவங்களில்

வீடியோ படப்பிடிப்புக்கு

V

# சித்ராலயா ஸ்ருடியோ

யாழ்ப்பாணம். ☎ 22522



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடையில்லா வணிகம்

செல்வன் இ. பிரபாகர் 12 (*1985*)

உலக நாடுகளிடையே பொருட்களானது எந்தவித தடைகளும் இல்லாது; உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், வெளி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் எனும் வேறுபாடுகள் எதுவும் இல்லாமல், தேவையை அனுசரித்துப் பரிமாற்றம் செய்யப்படு வதையே நாம் தடையில்லா வணிகம் என்று குறிப்பிடுகின்றோம். அர சாங்கமானது தன்து வருமானம் கருதி இறக்குமதி செய்யும் பொருட்களின் மீது அதாவது வெளிநாட்டுப் பொருட்களின் மீது வரிவிதிக்கலாம். ஆனால் அப்பொருட்களுக்கு இணையாகவே உள்நாட்டுப் பொருட்களை யும் சந்தைப் படுத்தினால் தடையில்லாத வணிகமானது பாதிக்கப் படாது சிறப்புற்று விளங்கும் என்பதோடு அந்த நாடும் தடையில்லா வணிகநாடாகவே விளங்கும்.

இத்தடையில்லா வணிகமானது நடைமுறையில் சாத்தியமான தாகவும். சிறப்பான்தாகவும் விளங்குவதற்கு நாடுகளிடையே தூய போட்டி சந்தை நிலவுதல் அவசியமாகும், என்பதோடு அங்கு கிடைக் கப் பெறும் மூலவளங்கள் முழுவதும் முழுமையாகவும், திறமையாகவும் பயன்படுத்தல் வேண்டும். அத்தோடு பொருட்களின் விற்பனை செய்யப் படும் விலையானது அவற்றின் உற்பத்தி செய்யப்படும் செலவின் இறு திச் செலவிற்கு சமனாக இருத்தல் அவசியம், இறுதியாக தடையில்லா வணிகத்தில் கணிக்கப்படும் இவ்விலையில் உற்பத்தியில் மொத்த மதிப் பினைக் கணக்கிட்டு அதன் மூலம் சேமநலம் அளக்கப்படக்கூடியதாய் இருத்தல் வேண்டும். மேற்கூறிய காரணிகள் சாதகமானதாக அல்லது பலமானதாக அமையும் இடத்து தடையில்லா வணிகமானது சாத்திய மானதாக அல்லது சிறப்பானதாக நடைமுறைக்கு அமைய ஏதுவா கின்றன.

தடையில்லா வணிகமானது சர்வதேச ரீதியாக தோற்றுவிக்கப் படுகின்ற பணவீக்க நிலமையினால் பலவீனமடைவதாலும், உள் ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீக்க சக்திகள் இல்லாத போதிலும் சிறிய கட்டுப்பாடற்ற வணிக நாடுகள் குறிப்பாக ஏனைய நாடுகளில் நிலவுகின்ற வீக்க அழுக்கங்களி னல் தாக்கப்படுகின்றதனுல் இத்தடையில்லா வணிகமானது நடை முறையில் சாத்தியமானதாக அமைய அச்சுறுத்தலாக இருக்கின்றது.

தடையற்ற வணிகத்தின் மூலம் ஒரு நாட்டிற்கு கிடைக்கக் கூடிய சாதகமான விடயங்களை ஆராய்வோமாயின்; தொழிற் பகுப்பின் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்படுமாயின் அதன் மூலம் அப் பொருளின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ள முடி யும். ஒரு நாடு தான் அவ்வாறு தேர்ச்சி பெற்ற ஓர் உற்பத்தித் துறையில் அதிக ஈடுபாடுகாட்டி அதிக உற்பத்தியினை பெருக்க முடியும். அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அவ்வாறு உற்பத்தி செய்யமுடியாத பொருட்களை இறக்குமதி செய்யவும்; நாடுகளிடையே எவ்வித தடையுமின்றி பண்டங் கள் பரிவர்த்தனையாகும்போது நாடுகளின் உண்மை வருமானம் உயர வும் இத்தடையற்ற வணிகமானது வாய்ப்பளிக்கின்றது எனலாம்.

மேலும் தடையற்ற வணிகமானது போட்டியை அடிப்படையாக கொண்டதாகும். போட்டியானது முன்னேற்றத்தை தூண்டும். தடை யற்ற வணிகமானது மேலும் இப்போட்டியை தூண்டும். இவ்வாறு போட்டி ஏற்படுவதனுல் தொழில் துறைகளுக்கான தொழில்நுட்பவிய லானது மேலும் முன்னேற்றமடைய; வெளிநாட்டு பொருட்களின் தரத் திற்கேற்ப உள்நாட்டு உற்பத்தியானது செப்பநிடப்பட்டு அல்லது புதுப் பிக்கப்பட்டு அதன் தரமும் உயர்வடைய வழிவகுக்கிறது. அடுத்து தடையில்லா வணிகமானது. போட்டியைக் காத்து பொருட்களுக்கான சந்தையை விரிவாக்கி பேரளவு உற்பத்தியை தூண்டி குறைந்தபட்ச செலவினைக் கொண்ட தரமான உற்பத்தியினை நடைமுறைப் படுத்து வதற்கு, உற்பத்திக் காரணிகள் மிகுதியாக வருவாய் நோக்கி பெயரும். திறமையான பொருளியல் போக்கிற்கு ஆதாரமாக அமைகிறது. மேலே எடுத்தாளப்பட்ட நன்மைகளை தொகுத்து நோக்குமிடத்து

1. இறக்குமதி வியாபாரம் அபிவிருத்தியடையும்.
2. தரமான பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இயந்திர, மூலப்பொருட்கள் இறக்குமதியினால் கைத்தொழில் அபி விருத்தி ஏற்படும்.

4. குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

5. விரும்பிய பொருளை கட்டுப்பாடின்றி தகுந்த அளவில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறான சாதகமான அம்சங்களை இவ்வணிகமானது கொண்டிருந்தாலும் சில குறைபாடுகளுக்கும் ஆளாக வேண்டிய நிர்ப்பந்தமுடையதாகவே காணப்படுகிறது. இவ்வணிகமானது சிறப்பானதாக அமைவதென்றால் பொருள்சார் உத்தமநிலையினை உருவாக்கும் வகையில் விலையமைப்பு அவசியம். புறச்சிக்கனங்களும் அதற்கான இழப்புக்களும்; நிறுவனங்கள் அல்லது உற்பத்தி காரணிகளிடையே போட்டியின்மையும்; நிறைவேலை அமைப்பினை தனியார் துறையினர் நிறுத்தாததும் ஆகிய காரணங்களினால் விலையமைப்பானது தனது செயற்பாட்டினை இழக்க தடையில்லா வணிகமும் பாதிப்புக்குள்ளாகின்றது. ஒரு நிறுவனத்தின் புறச்சிக்கனங்களோ சிக்கன இழப்புக்களோ நிலவும்போது சமூக இறுதி நிலை மதிப்பு வேறுபட்டிருக்கும். புதிய தொழில் நிறுவனங்களில் நடப்பதுபோல தனியார் செலவுகள் சமூக செலவினைமீறி உற்பத்தியாளர் புதிய செலவுகளை குறைக்க வழிசெய்யும்; புதிய செலவுகளை உள்ளடக்கும் முறையில் இறக்குமதிகள் மீது வரிவிதிக்கவும் நேரிடும். இவ்வாறு உருவாகும் அகச்சிக்கனங்கள் பொருளியல் நிலைமையினை உத்தம அளவிற்கு கீழே இறக்கிவிடும். இதனால் தடையில்லா வணிகமும் பாதிக்கப்படும்.

மேலும் தடையில்லா வணிகத்தின் மூலம் கிடைத்திடும் நன்மைகள் அனைத்தையும் நிறைவேலை வாய்ப்பினை மூலமே பெறமுடியும். ஆனால் உலகில் பெரும்பாலான நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாகவே இருப்பதனால் அங்கு வேலையில்லாமை நிலை அதிகரித்து காணப்படுகின்றது. எனவே இவ்வாறான நாடுகளில் தடையில்லா வணிகமானது குறைபாடுடையதாகவே காணப்படும். மேலும் தடையில்லா வணிகத்தின்மூலம் நன்மைகள் அனைத்தையும் பெறவேண்டுமாயின் நாடுகளிடையே காணப்படும் மூலவளங்களானது முழுமையாகவும் திறமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் பயன்படுத்தப்படுதல் அவசியம். ஆனால் பல உலகநாடுகளிடையே மூலவளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாததுடன் திறமையின்றியும் பயன்படுத்தப்படுகின்றன, இவ்வாறான காரணங்களினால் தடையற்ற வணிகமானது குறைபாடுடையதாக காணப்படுகின்றது. மேலும் இவ்வாறான குறைகளை எடுத்து நோக்குவோம்.

1. அந்நிய செலவாணி சேமிப்பு இல்லை

2. அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்கு அந்நிய செலவாணி பிரச்சனை,

3. உள்நாட்டு உற்பத்தி பாதிப்பு

4. அவசியமற்ற ஆடம்பர பொருள் இறக்குமதி

5. உற்பத்தி பாதிப்பால் வேலைவாய்ப்பின்மை.

## தடையில்லா வணிகமும் இலங்கையும்

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமானது 1978ம் ஆண்டு காலப் பகுதியில் குறிப்பிடக்கூடிய மாற்றத்திற்கும் தாக்கத்திற்கும் உட்பட்டது. இக்காலப் பகுதியில் நாட்டின் வெளிநாட்டு வர்த்தகமானது பாதகமாக சென்றதுடன் இன்றுவரை நீடிக்கும் ஒன்றாகவே காணப்படுகின்றது. இத்தகைய நிலை 1977ம் ஆண்டு நவம்பரில் புதிய அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட தடையற்ற வணிககொள்கையினால் ஏற்பட்டதாகும்.

எந்தவொரு நாட்டிலும் தடையில்லா வணிகமானது பின்பற்றப்படும்போது ஆரம்பகாலங்களில் அந்த இறக்குமதியின் அளவு அதிகரிப்பதன் மூலம் இறக்குமதிச் செலவானது அதிகரிப்பதும் அதனைத் தொடர்ந்து வர்த்தகநிலுவையில் குறைவு ஏற்படுவதும் இயற்கையானதாகவே உள்ளது. இந்தநிலை சீர்பட இறக்குமதி செலவினைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் ஏற்றுமதி அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் உள்நாட்டு ஏற்றுமதிகள் அதிகரிக்க எவ்வித வாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பும் இல்லை, இறக்குமதியானது தொடர்ந்தும் அதிகரிக்க வாய்ப்புண்டு. அத்துடன் இலங்கையின் வர்த்தக, தொழில் நுட்ப வளர்ச்சியானது ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சியினைப் போன்று வளர்ச்சியுடையதாக இருப்பின் உற்பத்தி பொருட்களும் தர முடையதாக இருக்கும். ஆனல் இலங்கையைப் பொறுத்த வரையில் கைத் தொழில் வளர்ச்சி ஏற்படாததுடன் ஏற்றுமதியில் அதிக முக்கியத்து வம் வாய்ந்த அல்லது முன்னுரிமை பெறும் பொருட்கள் முதல் விளை வுப் பொருட்களாகவே இருக்கின்றது. ஆனல் தரரீதியில் முன்னுரிமை பெறும் பண்டங்களுக்கே இவ்வணிகமானது வாய்ப்பளிக்க கூடியதாகவே இருக்கும்.

மேலும் இலங்கையைப் பொறுத்தவரை இவ்வாறு இவ்வணிக மானது பாதகமாக அமைவதற்குரிய காரணங்களை ஆராயுமிடத்து இவ் வர்த்தக திட்டம் ஏற்கனவே உயர்ந்து காணப்பட்ட இறக்குமதி செல வின் அளவிற்கு ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கமாக கொண்டுவரப்பட்ட போதும் குறுகிய காலத்தின் ஏற்றுமதி தொகை யினை விட இறக்குமதித் தொகை கூடிய வருமானத்தை கொடுத்ததினல் பலர் ஏற்றுமதி துறையிலிருந்து இறக்குமதிதுறையிற்கு சென்றதும்; ஏற் மதிகளில் அரசாங்கம் தங்கியிருக்க முற்படுகின்றபோது ஏற்றுமதி அமைப் பினை எடுத்து நோக்குவோமாயின் மரபுரீதியான ஏற்றுமதிகள், பெரு மளவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. 1977ம் ஆண்டு காலப்பகுதியில் 72% மாக இருந்த ஏற்றுமதிகள் 1981ம் ஆண்டு காலப்பகுதியில் 52.4% மாக வீழ்ச்சியடைந்தது. இவ் ஏற்றுமதிகளுக்குப் பதிலாக கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி இவ்வாண்டு காலப்பகுதியில் அதிகரித்தன. ஆனல் கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி துணிகளும், தைத்த ஆடைகளும், பெற்ருேலியப் பொருட்களுமே முக்கிய இடத்தை வகித் தன. இவ் ஏற்றுமதிகள் அதிகரிப்பது நல்லதோர்நிலை எனினும், இவ் ஏற்றுமதிகள் நிலையானதாகவும் எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடியனவா கவும் இல்லாத காரணங்களினல் தடையற்ற வணிகமானது இலங்கை யைப் பொறுத்தவரை பாதகமான நிலையையே எதிர்நோக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதி"யை வருக! வருக!!
என வரவேற்கின்றது சாவகச்சேரி.


இலங்கையில் கல்லூரி மட்டத்தில்
தொடர்ந்து வெளிவரும்
ஒரேஒரு வணிக மலரான
உன்னை வாழ்த்துகின்றோம்

தரமான
புகைப்பட பிரதிகளுக்கு

ஜீவனு போட்டோ
கண்டி வீதி, சாவகச்சேரி



"வணிகஜோதி"யின் வாசகர்களே!
வருக! வருக!! என உங்களை
வரவேற்கிறோம்.

சூடான குளிரான பானங்களுக்கும்
சிற்றுண்டி வகைகளுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

செல்வம் கூல்பார்
இல 7, நவீனசந்தை சாவகச்சேரி



சேலைகளுக்கு அச்சடிப்பதற்கான
பெயின்றுக்கள், மற்றும் சகலவித
சாமான்களும், திருமண வைபவத்
திற்கான தலையலங்காரப்
பொருட்களும்.

❋ அழகு சாதனப் பொருட்கள்
❋ அன்பளிப்பு பொருட்கள்
❋ நூல்வகை, லேஸ், பட்டன்
❋ பாடசாலை உபகரணங்கள்

அனைத்திற்கும்
நாடவேண்டிய ஸ்தாபனம்

தங்கம்
7, நவீனசந்தை, சாவகச்சேரி.



★ நவநாகரீக டிசைன்களுக்கும்
★ உத்தரவாதத்திற்கும் ★
★ உறுதியான வேலைப்பாட்டுக்கும் ★

இன்றே விஜயம் செய்யுங்கள்

வீ. எம். கே.
தங்கமாளிகை
தங்க, வைர நகை வியாபாரம்
கண்டி றோட், சாவகச்சேரி
☎ 288



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் தொடர்பும் செய்தித் தொடர்பு சாதனங்களும்

செல்வி ரூத் ஜெயமாலினி ஆறுமுகம் 12 (*1985*)

தகவல்களையும் செய்திகளையும் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு பரிமாறிக் கொள்ளுதல் செய்தித் தொடர்பு எனப்படும். தற்காலத்தில் செய்தித் தொடர்பானது சகல துறைகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது என்றபோதிலும் வர்த்தகத்தின் விருத்திக்கு செய்தித் தொடர்பு மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது அதாவது ஓர் நிறுவனம் வேறு நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் சர்வதேச சந்தையைப் பெற்றுக் கொள்வதற்கும் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ள விற்பனைக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கும் சமநிலை விலையைப் பொருள்களிற்கு ஏற்படுத்துவதற்கும் சர்வதேசக் கம்பனிகளின் வளர்ச்சியைப் பெருக்குவதற்கும், சந்தை ஆராச்சிகளை செய்வதற்கும், நுகர்வோர் பொருட்களையும், சேவைகளையும் இலகுவில் பெற்றுக் கொள்வதற்கும் போட்டி நிறுவனங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் செய்தித்தொடர்பு அதன் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

செய்தித் தொடர்பை ஓர் நிறுவனத்தின் சார்பாக வைத்துப் பிரிப்போமாயின் அதனை இரண்டாகப் பிரிக்கலாம்.

1) உள்ளகத் தொடர்பு:- ஓர் நிறுவனத்திற்குள் மேற்கொள்ளப்படும் தொடர்பு உள்ளகத் தொடர்பு எனப்படும்.
2) வெளியகத் தொடர்பு:- ஓர் நிறுவனத்திற்கு வெளியே மேற்கொள்ளும் தொடர்பு வெளியகத் தொடர்பு எனப்படும்.

மற்றும் செய்தித் தொடர்பை ஓர் நாடு சார்பாகப் பிரிப்போமாயின் அதனை இரண்டாகப் பிரிக்கலாம்.

1) உள்நாட்டுத் தொடர்பு
2) வெளிநாட்டுத் தொடர்பு

ஒவ்வொரு நாட்டிலும் செய்தித் தொடர்புக்கு பல நிறுவனங்கள் இயங்கி வருகின்றன இலங்கையில் செய்த்தி தொடர்புக்கென ஆரம்பகாலத்தில் தபால் தந்தித் திணைக்களம் இயங்கி வந்துள்ளது. ஆனல் தற்பொழுது இந்நிறுவனம் இரண்டாகப் பிரிந்து தபாற்திணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் [Postal Department] தொலை தொடர்புத் திணைக்களம் [Telecommunication Department] எனும் நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. வெளிநாட்டு செய்தித் தொடர்புகளுக்கு பொறுப்பாக கொழும்பு கடல் கடந்த செய்தித் தொடர்பு சேவை [overceas Telecommunication Service] எனும் ஓர் பிரிவும் இயங்குகின்றது.

செய்தித் தொடர்பு தொடர்பு கொள்ளப்படும் முறைகளைப் பொறுத்து 3 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்,

1. வாய்மொழிமூலம் செய்தித் தொடர்பு
2. எழுத்து மூலம் செய்தித் தொடர்பு
3. இயந்திரம் மூலம் செய்தித் தொடர்பு

ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு செய்திகளை அனுப்புகின்ற பொழுது செய்தியின் தன்மை செய்தி செல்லவேண்டிய காலமும் நேரமும், செய்தி அனுப்புவதன் தேவையும் முக்கியத்துவமும் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு செய்தித் தொடர்பு சாதனங்கள் வேறுபடுகின்றன. அவையாவன :-

தபால் அட்டை:- [POST CARD]

இச் சாதனம் மூலம் மிகவும் குறைந்த செலவில் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளக் கூடியதாயுள்ளது. இச்சாதனத்தின்மூலம் செய்திகளை இரகசியமாக அனுப்பமுடியாமையும், செய்திகள் சென்றடைவதற்கு காலதாமதம் ஏற்படுவதும் குறைபாடாகவுள்ளது

கடிதம்:- [LETTER]

இது உள்நாட்டினுள்ளும் வெளிநாடுகளுடனும் செய்திகளைப் பரிமாற உதவும் ஓர் சாதனமாகும். இதன்மூலம் நீண்ட செய்திகளை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்பக் கூடியதாயுள்ளது. இலங்கையில் தபாற்றிணைக்களத்தால் இச் சேவை நடாத்தப்படுகின்றது. இச்சாதனம் மூலம் தகவல்களை உடனடியாகப் பெறமுடியாமை குறைபாடாகக் காணப்படுகின்றது.

தந்தி:- [TELEGRAM]

குறுகிய செய்திகளை விரைவாக அனுப்புவதற்கு இச்சாதனம் பயன்படுத்தப்படுகின்றது. ஒருவர் தந்திமூலம் செய்தியை அனுப்ப வேண்டுமாயின் தபால் அலுவலகத்திற்கு சென்று ஓர் குறிப்பிட்ட படிவத்தைப் பெற்று அனுப்பவேண்டிய தகவலை எழுதி ஒப்பமிட்டு தபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகத்திடம் வழங்க வேண்டும். சொற்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டணம் அறவிடப்படும் அல்லாவிடின் தொலைபேசி வைத்திருக்கும் ஒருவராயின் தொலைபேசி மூலமாக அஞ்சல் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தனது தொலைபேசி இலக்கத்தைக் கூறி செய்தி விவரத்தையும் அனுப்பப்பட வேண்டியவர் பெயர், முகவரி போன்ற விபரங்களை எடுத்துக் கூறினல் தந்தி உரியவருக்கு சமர்ப்பிக்கப்படும்.

கம்பியில்லாத் தந்தி:-

வானொலித் தந்தி போன்று அலை மூலமாக செய்தியைக் கொடுத்து பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும். இம்முறை கம்பியில்லாத் தந்தி முறை எனப்படும். பிரதானமாக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இச் செய்தித் தொடர்பு சாதனம் வழங்கப்பட்டுள்ளது, கப்பல்கள், ஆகாய விமானங்கள் போன்றவற்றிலும் இவை காணப்படுகின்றன. இச் சாதனத்தைப் பயன்படுத்தவோ, இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

தொலைபன்னி:-

ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு மிகவும் சொற்ப நேரத்தில் செய்திகளைப் பரிமாறும் ஓர் முறை இதுவாகும். இத்தொடர்பு சாதனத்தின் மூலம் அவசரமான செய்திகளையும் உடனுக்குடன் பரிமாறக் கூடியதாயுள்ளது. இம்முறை இருவழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. நேர்பாதை 2. மாற்றுப்பாதை

தொலைபேசி இலக்கத்தைச் சுழற்றுவதன் மூலம் நேரடியாகத் தொடர்பு கொள்ளுதல் நேர்பாதை எனப்படும். மாற்றுப்பாதை என்பது தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள தொலைபேசி இயக்குனருடன் தொடர்பு கொண்டு அவரினூடாக குறிக்கப்பட்ட தொலைபேசியை வைத்திருப்பவருடன் தொடர்பு கொள்வதைக் குறிக்கும்.

அகநிலை தொடர்பு:- ( INTERCOM )

மிகவும் பெரிய உற்பத்தி நிறுவனங்களில் அல்லது வியாபார நிறுவனங்களில் அவற்றின் பிரிவுகளுக்கிடையே செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளகத் தொடர்புச் சாதனமாக இன்ரக்கொம் பயன்படுத்தப்படுகின்றது. ஓர் இடத்தில் இருந்து குறிக்கப்பட்ட ஒரு நபர் தன்னியக்க முறையில் பொத்தான் ஒன்றை சுழற்றுவதன் மூலம் விரும்பிய பிரிவுடன் நேரடியாகத் தொடர்பினை ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடிகின்றது. இம்முறை மூலம் வியாபார நிறுவனங்கள் விரைவாகவும் அந்தரங்கமாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள முடியும்.

தொலை அச்சு:- (TELEX)

நவீனமானதும் மிக விரைவாக செய்திகளை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்ப உதவும் ஓர் சாதனமாக தொலை அச்சு (TELEX) விளங்குகின்றது. இலங்கையில் சர்வதேச தொலை அச்சு தொடர்பாடல் சேவை முதலில் 1963 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டதாகும். தற்பொழுது இச்சேவை தொலைத்தொடர்புத் திணைக் களத்தாலும், தனியார் தொடர்பு நிலையத்தினாலும் நடாத்தப்படுகின்றது. வானொலி அலைபோன்ற ஒரு அலைமூலம் தொலை அச்சுக் கருவிகள் மூலமாக செய்மதி ஒன்றுக்கு செய்தி அனுப்பப்பட்டு அதன் மூலம் எந்த நாட்டுக்கு செய்தி கிடைக்க வேண்டுமோ அந்தநாட்டு செய்மதி மூலமாக அந் நாட்டில் உள்ள தொலை அச்சுக் கருவிக்கு செய்தி அனுப் பப்பட்டு இயக்குனர் எவரும் இல்லாமலே செய்தியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயுள்ளது. செய்தித் தொடர்பு சாதனம் ஒன்றைத் தெரிவு செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்.

1) செய்தியின் தன்மை
2) செய்தியை அனுப்புவதற்கு எடுக்கும் செலவு.
3) செய்தியை அனுப்புவதற்கு எடுக்கும் நேரம்
4) செய்தி அனுப்ப வேண்டிய தேவையின் முக்கியத்துவம்.

இலங்கையின் செய்தித் தொடர்பானது 1977 ஆம் ஆண்டுக்குப்பின் பலமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது எனக் கூறலாம். அதாவது பல இடத்திற்கு நேரடித் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல நாடுகளுடன் ரெலக்ஸ் செய்தித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தனியார் செய்தித் தொடர்பு நிலையங்களை நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதாரணம்

1) குளோபல் கொம்யூனிகேசன்
2) யூனிவேசர் ரெலக்ஸ்

எனவே இம்மாற்றங்களினால் பொதுமக்கள் காலதாமதமின்றி சகல நாடுகளுடனும் தொடர்பு கொள்ளக்கூடியதாயுள்ளது. அதுமட்டுமன்றி வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு இச் செய்தித் தொடர்பு பெரிதும் துணை புரிந்துள்ளது; என்றபோதிலும் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடு மிடத்து இலங்கையில் செய்தித் தொடர்பானது இன்னமும் வளர்ச்சி யடைய வேண்டியதாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் பிரிவும் அதனுல் ஏற்படும் விளைவுகளும்

செல்வன் K. சிறிதரன் 12 (*1985*)

ஆரம்ப காலத்தில் மனிதன் தனக்குத் தேவையான பொருள் களைத் தானே தனித்து உற்பத்தி செய்து வந்தான் இந் நிலை காலப் போக்கில் மாற்றமடைய ஆரம்பித்தது. 19ஆம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாக ஓர் மாற்றம் ஏற் பட்டது. அதாவது தொழிற்புரட்சியின் பின்னர் உற்பத்தி அதிகரித் தது. பேரளவு உற்பத்தியினுல் இயந்திரங்களின் உபயோகம் ஆரம்ப மாக்கப்பட்டது. இதன் விளைவாக தொழிற்பிரிவு எனும் ஓர் முறை உருவாகிற்று. இம்முறையினுல் உற்பத்தியை அதிகளவு பெருக்கக் கூடிய தாயிற்று அடம்சிமித் எனும் பொருளியல் அறிஞர் "தேசங்களின் செல்வம்" எனும் ஒரு நூலில் ஓர் குண்டூசியை ஒருவர் செய்வதிலும் பார்க்க ஒரு குண்டூசி செய்யும்பொழுது செய்யப்படும் பல்வேறு வேலை களை 18 பேர் செய்வார்களாஞல் உற்பத்தி பன்மடங்காக அதிகரிக்கும் என விளக்கினுர். எனவே ஒரு தொழிலை ஒருவர் செய்வதிலும் பார்க்க அதனைப் பலர் பிரித்துச் செய்யும் பொழுது சுலபமாகவும், சிக்கனமாக வும் செய்யக் கூடியதாயுள்ளது. அது மட்டுமன்றி தொழிலாளர் ஓர் குறிக்கப்பட்ட தொழிலில் தேர்ச்சியடையவும் கூடியதாயுள்ளது. இப்படி யாக ஒரு பொருளின் பல்வேறு பகுதிகளை வெவ்வேறு ஆட்களால் உற் பத்தி செய்த்ல் தொழிற் பிரிவு எனப்படும்.

தொழிற் பிரிவானது தொழிலாளரிடையே தேர்ச்சியை வளர்ப் பது போலவே ஒரு நாட்டில் உள்ள தொழிலாளர்கள் தொழில் அடிப் படையில் பிரிக்கப்பட்டு ஓர் இடத்திற்கு ஒருவகை எனப் பிரிக்கப்பட்டு அமையுமாயின் அவ்விடத்து மக்கள் அக் குறிக்கப்பட்ட தொழிலில் தேர்ச்சியடைவர். உதாரணமாக யப்பான் தேசத்தை எடுத்துக் கொள் வோமாஞல் இங்கு குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் பல ஒவ்வொரு குடும்பமும் ஒரு பொருளில் ஏதாவது ஒரு பாகத்தையே செய்கின்றன. இவ்வாறு பல்வேறு பாகங் களாகச் செய்யப்பட்ட பொருள்களை பின்னர் தொழிற்சாலை எனப் படும். ஓர் இடத்தில் ஒன்றுகப் பிணைக்கப்படுகின்றது. இப்படியாக யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான் செய்தமையால் அங்கு முதலீட்டுச் செலவு ஒருபுறம் குறைவாகக் காணப்படுகின்ற பொழுது மொத்த உற்பத்தி அதிகமாகவும் செலவு குறைவாக இருப்பதாகவும், அப் பொருள்களின் விலை குறைவாக இருப்ப தாகவும் கூறப்படுகின்றது.

தொழிற் பிரிவின் அனுகூலங்கள்

1) தொழிலாளர் தேர்ச்சியடைவர்:- ஒவ்வொரு தொழிலாள ரும் குறிக்கப்பட்ட ஓர் தொழிலையே அத்தொழிலில் தேர்ச்சியடைகின் றனர்.

2) காலதாமதமின்மை:- ஒருவர் ஒரு பொருளை தனித்து உற் பத்தி செய்வதாயின் ஒரு பகுதி வேலையை முடித்த பின்னர் மற்றதைச் செய்ய முற்படும் பொழுது காலதாமதம் ஏற்படும். ஆனல் ஒரே வேலையை நாள்முழுவதும் செய்வதாயின் காலதாமதம் ஏற்படாது இதனல் உற்பத்தி பெருகும்.

3) இயந்திரங்களை உபயோகிக்க இடமளிக்கும் இதனல் உற் பத்தி அதிகரிக்க இடமளிக்கின்றது:- அதாவது தொழிற் பிரிவு மூலம் ஒரு பொருளை செய்யும் பொழுது இயந்திரங்களை உபயோகிக்கக் கூடிய தாயுள்ளது. இதனல் ஒவ்வொரு பொருளும் ஒரே மாதிரியானவையாக செய்யக்கூடியதாயுள்ளது. இப்படியாக செய்வதனல் ஒன்றுக்குப் பதி லாக இன்னொன்றை உபயோகிக்கக் கூடியதாயுள்ளது. மற்றும் இயந் திரங்களை உபயோகிப்பதால் மனிதனல் செய்ய முடியாத வேலையை செய்யக்கூடியதாயும், மனித சக்தியைக் குறைவாகப் பயன்படுத்தவும் கூடியதாகவும் உள்ளது. இதனல் சராசரி உற்பத்தி செலவைக் குறைக் கக் கூடியதாகவும் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாயும் உள்ளது.

4) களைப்பின்மை:- ஒரு தொழிலாளி குறிப்பிட்ட ஒரு வேலை யையே செய்வதாலும், உற்பத்தியில் இயந்திரங்களை உபயோகிப்பதாலும் அவர் உடம்பு களைப்படைய மாட்டாது.

தொழிற்பிரிவின் பிரதி கூலங்கள்

1) அலுப்புத் தன்மை தோன்றும்:- ஒருவர் ஓர் குறிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகஜோதி மலர்வுக்குத் தமது நல்லாதரவை

வழங்கிய சகல விளம்பரதாரர்களுக்கும்

மன்றம் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றது.

வணிகக்கலை வளர

# வணிகஜோதி

தொடர்ந்து மலர

அதனை நுகரும் நீங்கள் யாவரும்

**தயவுசெய்து எமது விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்**


Principal Lines of Business

FINANCE - NEW / RECONDITIONED VECHICLES

**INSURENCE ALL TYPES**

DEPOSITS -- TERM

SPECIAL DEPOSIT CERTIFICATES

**CENTRAL FINANCE CO. LTD.**

250, K K S. ROAD, SIVANKOVILADY, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# JAFFNA TUTORIAL COLLEGE

341, NAVALAR ROAD, JAFFNA.

STENO TYPIST (English & Tamil Medium)

PITMANS (London) & G. C. E. பரீட்சைக்குரிய

ஆங்கிலம்-தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் நடைபெறுகின்றன.

*Class:* WHOLE WEEK (Time: 8 a. m. to 6 p. m.)

(DURATION ONE HOUR)

- BY EXPERIENCED TEACHERS
- TYPEWRITERS IN GOOD CONDITION

CLASSES ACCORDING TO EACH STUDNTS CONVENIENCE

---

# Comteck Institute

* **COMPUTER PROGRAMMING BASIC IN B. B. C.**

B. B C COMPUTER: இலங்கை, பிரித்தானிய பல்கலைக் கழகங்களில் பயன்படுத்துவதும், இலங்கை கல்விச்சேவையினர் ரூபவாஹினியில் பயிற்சிக்கு பயன்படுத்துவதும்)

* **NURSING AIDES**

உப தாதிப் பயிற்சி - வட இலங்கையில் வேறு எந்தவொரு தனியார் நிறுவனமும், இப் பயிற்சியை நடாத்துவது இல்லை.

* **I. A. B.** (LONDON)

விபரங்களுக்கு:

## COMTECK INSTITUTE

NO: 14, ST. PETERS LANE, JAFFNA.

☎ 24355

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேலையை ஒவ்வொருநாளும் மீண்டும் மீண்டும் செய்வதனுல் அலுப்புத் தோன்றும்.

2) வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும்:- தொழிற் பிரிவில் இயந்திரங்களை உபயோகிக்க இடமளிப்பதால் எவ்வளவுக்கு இயந்திரங்கள் கூடுதலாக உபயோகிக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது எனப் பொதுப்படையாகக் கூறலாம். இன்று தாஞக இயங்கும் இயந்திரங்கள் கூடுதலாக உபயோகிக்கப்படுவதனுல் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. எனவே தொழிற் பிரிப்பு முறை இயந்திரங்களை உபயோகிப்பதற்கு உதவியாக இருப்பதால் தாஞக இயங்கும் இயந்திரத்திற்கு அது வழிவகுத்துள்ளது. இதனுல் உற்பத்தி பெருகினுலும் கூட வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது.

3) ஒரு தொழிலில் தேர்ச்சி மாற்றுத் தொழிலில் இடமளியாது:- தொழிற் பிரிவின் அடிப்படையிலேயே தொழிலாளர் ஒரேஒரு தொழிலில் மட்டும் தேர்ச்சியுடையவராக இருப்பதால் அவரிற்கு அத் தேர்ச்சியில் வேலையில்லையாயின் வேறு தொழிலில் வேலை செய்யும் சந்தர்ப்பம் குறைவாகி விடும்.

எனவே தொழிற் பிரிப்பில் ஒருவர் குறிக்கப்பட்ட வேலையை தொடர்ந்து செய்வதனுல் அத் தொழிலில் அலுப்புத்தன்மை ஏற்படுதல் ஒரேஒரு தொழிலை மட்டும் செய்யும் தன்மை ஏற்படுதல். மற்றும் இயந்திரங்களை அதிகளவில் பயன்படுத்துவதனுல் வேலையில்லாப் பிரச்சினை ஏற்படுதல் போன்ற சில குறைபாடுகள் காணப்பட்டாலும் கூட உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் தொழிற் பிரிவிலேயே காணப்படுகின்றது. அதாவது இங்கு ஒவ்வொரு வேலையையும் ஒவ்வொரு தொழிலாழியே செய்வதனுலும், இயந்திரங்களை தொழிலில் ஈடுபடுத்துவதனுலும், தொழிலாளர்களைப் பின்றியும், கால தாமதமின்றியும், ஒரே மாதிரியாக பொருள் உற்பத்தி செய்யக் கூடியதாகவும் உள்ளது. இதனுல் உற்பத்திச் செலவைக் குறைக்கக் கூடியதாகவும் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாகவும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வணிக ஜோதி' தொடர்ந்தும்
மணம் பரப்ப எமது நல்லாசிகள்

சாவகச்சேரியில்
போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும்

தமிழ், ஆங்கில
தட்டச்சு வேலைகளுக்கும்

நினைவில் நிலைக்க வேண்டிய
ஸ்தாபனம்

**விக்ரர்**
**போட்டோஸ்ரற்**

9, நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி.

'வணிக உலக மலர்ச்சிக்கு
வணிக ஜோதியே நீயும் வழிகாட்ட
வேண்டுமென வாழ்த்துகின்றோம்

**முருகன்**
**அரிசி ஆலை**

கண்டி வீதி, சாவகச்சேரி.

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்

**Murugan Rice Mill**
*Dealers in Agro Chemicals & Poulty Food*

Kandy Road, Chavakachcheri.

வர்த்தக மாணவ மன்றத்தினரின்
பணி தொடர எமது நல்லாசிகள்

**இக்ஸ்**
**கல்வி நிலையம்**

கைதடி - நாவற்குழி - தச்சன்தோப்பு

5ஆம் வகுப்புத் தொடக்கம்
10ஆம் வகுப்பு வரைக்கும் எல்லாப்
பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்
களினாலும் பயிற்றப்பட்ட
திறமைமிக்க ஆசிரியர்களினாலும்
கற்பிக்கப்படுகின்றன.

**Hicks Institute**
Navatkuli - East,
KAITHADY.

WITH BEST COMPLIMENTS FROM

*S. Sinnathurai & Co.*

*Dealers in:*
Motor Spares, Vespa Scootrs (*Italy*)
Suzuki Motor Cycles (*Japan*)
ISUZU, BENZ GENOME
Spares

S. Sinnathurai & Co.
*25, Stanley Road, Jaffna.*
*T' Phone:* 23357


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலி அபிவிருத்தித் திட்டமும் நாட்டின் சுபீட்சமும்

செல்வன் ந. முரளீகரன் 11 (*1986*)

இலங்கையின் பொருளாதாரத்தை துரிதகதியில் வளர்ச்சியடையச் செய்து, இலங்கை நங்கைக்கு 'அபிவிருத்தி' எனும் ஆபரணத்தை அணிவதற்காக தற்போதைய அரசாங்கத்தால் முடுக்கி விடப்பட்டுள்ள பாரிய பலநோக்கு அபிவிருத்தித் திட்டமே மகாவலி அபிவிருத்தி திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் விவசாயத்துறை மட்டுமல்லாது கைத்தொழில் துறையும் வளர்ச்சியடைவதுடன் நீர் மின்வலுவையும் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும். அத்துடன் மதயானைபோல் தாண்டவமாடும் வேலையில்லாப் பிரச்சனையையும் ஓரளவிற்கேனும் அடக்கி விடலாமென நம்பப்படுகிறது. இப்பாரிய அபிவிருத்திதிட்டம் தென்கிழக்காசிய நாடுகளிற்கே ஒரு மணிமுடியாகத் திகழ்கிறது. ஆமாம் தென்கிழக்காசியாவிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாரிய அபிவிருத்தி திட்டம் இதுவென்றால், அது மிகையாகாது.

"ஒரு துளி நீர் தானும் — வீணாக
கடலில் சங்கமிக்க அனுமதியோம்,"

என்று பொருளாதார முழக்கமிட்டவன் மாமன்னன் பராக்கிரமபாகு. அன்று அவன் விட்டுச் சென்ற குளங்களும், கால்வாய்களும் இதற்கு சான்று பகரும். இவன் காலத்தில் தன்னிறைவு அமைப்பு மிளிர்ந்தது. பார்க்கும் இடமெங்கும் பச்சைப் பசேலென காட்சியளிக்கும் செந்நெற் களனிகள் தான். மக்கள் தமக்குத் தேவையான அளவு நெல்லைப் பெற்றுக் கொண்டனர். காலங்கள் பல உருண்டோடின. சனத்தொகையும் இமயமென உயர்ந்தது; உணவுப் பிரச்சனை என்ற பிசாசு மக்களைப் பயமுறுத்தத் தொடங்கியது. சிந்தித்தது அரசு; இறுதியாக மகாவலியாளே கை கொடுத்தாள். முழுக்க முழுக்க அந்நிய நாட்டு உதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, 40% ஆன அபிவிருத்தி வேலைகள் தற்சமயம் நிறைவுபெற்று விட்டன. விளைவுகளை மறுகணமே உணரத் தொடங்கி விட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பொருளாதாரத்துறையிலே முதுகெலும்பாக விளங்கும் மகாவலி ஆற்றின் விபரத்தை சற்றுச் சுருக்கமாகவே ஆராய்வோம்; மகாவலி ஆறுனது, இலங்கையின் மத்திய பிரதேசமாம் மத்திய மலே நாட்டின் மத்திய பகுதியிலுள்ள ஹோட்டன் சமவெளியில் ஆரம்பமாகி அலே அலேயாக ஊற்றெடுத்து நீண்டு நிறைந்தோடி கிழக்குப்பகுதியாகிய திருகோணமலேயின் கண்ணுள்ள கடலிலே சங்கமிக்கிறது. இவ்வாறுனது என்றும் வற்றுத நீர்வளத்தினேயும், பல கிளே நதிகளேயும் தன்னகத்தே கொண்டுள்ளது. 320 கிலோ மீற்றர் நீளமான மகாவலி, உமா ஓயா, பதுலே ஓயா, லொக்கல் ஓயா போன்ற கிளே நதிகளேயும் கொண்டுள்ளது.

இம் மகாவலி திட்டத்தின் முதற் கட்டமாக பொல்கொல்லே எனும் இடத்திலே மகாவலி ஆற்றுக்குக் குறுக்கே பெரியதொரு அணேக்கட்டு அமைக்கப்பட்டு, அங்கே நீர் தேக்கி வைக்கப்படும். பின் அங்கிருந்து உக்குவெல வரை அமைக்கப்பட்ட நீண்ட சுருங்கை வாயிலாக மகாவலியாற்றின் நீர் வடமத்திய மாகாணத்திற்கு திசை திருப்பப்படும். இவ்வாறு திசை திருப்பப்பட்ட நீரானது துங்கு ஓயா, சுது கங்கை போன்ற ஆறுகளுடன் சேர்ந்து அம்பன் கங்கைக்குள் பிரவேசிக்கிறது. பின் அங்கிருந்து அனுராதபுரத்திலுள்ள நுவரகலாவிய பிரதேசத்திற்கு திசை திருப்பப்படும்.

மகாவலி பாரிய அபிவிருத்தி திட்டமானது மூன்று பெரும் கட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டமும் பல வேலேத்திட்டத்தை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இவ்வேலேத் திட்டத்திலே பின்வரும் ஐந்தும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது,

அ) கொத்மலேஓயா நீர்த்தேக்கத் திட்டம்

ஆ) இரண்தெணிகல நீர்த்தேக்கத் திட்டம்

இ) விக்டோரியா நீர்த்தேக்கத் திட்டம்

ஈ) மொறக்காகந்த நீர்த்தேக்கத் திட்டம்

உ) மதுறு ஓயா நீர்த்தேக்கத் திட்டம்

இப் பாரிய வேலேத் திட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நாடுகள் உதவியளித்து வருகின்றன. அவையாவன, ஜப்பான், இங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாந்து, மேற்கு ஜேர்மனி, கனடா, பிரான்ஸ் என்பனவாம். இத் திட்டத்தின் மூலம் 3,40,000 ஹெக்டேயர் (Ha) காணிக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் 5,00000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கலாமென நம்பப்படுகிறது. 1,50,000 குடும்பங்களையும் இத்திட்டத்தின் மூலம் குடியேற்ற முடியும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் பல நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், வரண்ட பிரதேசங்களிற்கு நீர்ப்பாசன வசதியளித்து, விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யவும், நீர் மின் வலுவை உற்பத்தி செய்வதுமே இதன் பிரதான நோக்கமாகும். மகாவலி அபிவிருத்தி திட்டம் பின்வரும் மேலதிக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது.

அ) கைத்தொழிற்றுறையை அபிவிருத்தி செய்தல்,

ஆ) மக்கள் குடியேற்றங்களை உருவாக்குதல்.

இ) வேலைவாய்ப்பை வழங்குதல்.

ஈ) வெள்ளப் பெருக்கைத் தடுத்தல்.

உ) மீன் பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

மேற்குறித்த இலக்குகளை அடைந்தால், நாட்டின் பொருளாதாரத்துறை வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பல அனுகூலங்கள் கிடைக்கப் பெறினும், ஒரு சில பிரதி கூலங்களும் ஏற்படத்தான் செய்கின்றன. இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்படுதல். வன விலங்குகள் அழிக்கப்படுதல், மண்ணரிப்பு ஏற்படுதல், மழை வீழ்ச்சி குன்றுதல் போன்றனவற்றோடு அன்னியக் கடன்களுக்கான வட்டியும் குறித்துச் சொல்லக்கூடியது. எது எவ்வாறுயினும் மகாவலி அபிவிருத்தித் திட்டமே நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யும் என்பதே முடிந்த முடிவாகும்.

மகாவலி அபிவிருத்தியே நாட்டின் அபிவிருத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகக் கலை வளர்க்கும்
"வணிக ஜோதி"யே
நீடூழி நீ வாழி.

சகலவிதமான
கட்டிடப் பொருட்களுக்கும்

V

★ அம்பாள்
றேட் சென்ரர் ★

234, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 23818

அன்பளிப்பு:

டயாஸ் பம்

உற்பத்தியாளர்கள்!

டயானி இன்டஸ்றீஸ்
தெல்லிப்பளை.

டயானி
எலெக்றிக்கல்ஸ்

245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

☎ 23772

நியூ லங்கா றேடர்ஸ்
222, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

சகலவிதமான
✱ வைண்டிங் பொருட்களுக்கும்
✱ வெளியிணைப்பு இயந்திரங்களுக்கும்
✱ உதிரிப்பாகங்களுக்கும்

New Lanka Traders
222, Stanley Road, Jaffna.

With Best Compliments From

V

Televoice
Engineers
Electronic Repairs

184A, NAVALAR ROAD,
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொதுக் கூட்டுத்தாபனங்கள்

க. தேவராஜா,
உதவி விரிவுரையாளர்,
வணிக, முகாமையியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**அறிமுகம்:**

கம்பனிகளின் நோக்கமான இலாபத்தையும், திணைக்களங்களின் நோக்கமான சேவையையும் ஒன்ருகக் கொண்ட வகையில் பொதுத் துறை நிறுவனங்களில் ஒன்ருக அமைக்கப்படுவதே கூட்டுத்தாபனங்களாகும். 19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் ஏற்பட்ட தலையிடும் கொள்கை என்ற அரசாங்கத்தின் போக்கினுல் உற்பத்தி வர்த்தக நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் ஆதிக்கத்தினை அதிகரிக்கும் பொருட்டு பொதுக் கூட்டுத்தாபனங்கள் உருவாக்க முயற்சி தொடங்கப்பட்டன. நாட்டு நலன் கருதியும், மக்கள் நலன் கருதியும் தனியாருடன் அரசாங்கமும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்ற கொள்கையினுல் பொதுக் கூட்டுத்தாபனங்கள் உருவாக்க முயற்சி தொடங்கப்பட்டன. அந்த வகையில் அரசசாங்கத்தினுல் மூலதனமிடப்பட்டு இலாபத்தையும், சேவையையும் நோக்கமாகக் கொண்ட வகையில் உருவாக்கப்படுவனவாகப் பொதுக் கூட்டுத்தாபனங்கள் காணப்படுகின்றன. ஆனுலும் அபிவிருத்தியடைந்த நாட்டுக் கூட்டுத்தாபனங்கள் எல்லாம் அடிப்படையில் இலாபத்தையும், குறைவிருத்தி நாட்டுக் கூட்டுத்தாபனங்கள் எல்லாம் சேவையினையும் நோக்கமாகக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடியும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பே, அரசாங்கம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கூடியளவில் நேரடிப் பங்குகொள்ளத் தொடங்கியமையினுல் அதன் பின்னரே பொதுக் கூட்டுத்தாபனங்கள் இலங்கையில் முக்கியம் பெறத் தொடங்கின. 1940-ம் ஆண்டுக் காலப் பகுதியிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகம், தேயிலைப் பிரசார சபை போன்ற கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்படத் தொடங்கப்பட்டாலும், ஐம்பதிலிருந்தே இலங்கையில் பொதுக் கூட்டுத்தாபனங்கள் முக்கியம் பெறத் தொடங்கின. இலங்கையில் பொதுக்கூட்டுத்தாபனங்கள் என்பதற்குள் கூட்டுத்தாபனம், சபை, அதிகார சபை என்ற மூன்று பெயருடனும் இருக்கும் அமைப்புக்கள் அடக்கப்படும். இவை மூன்றும் அரசாங்கத்தால் மூலதனமிடப்பட்டு, நிர்வகிக்கப்படுவதனுல் ஒரே பண்பைக் கொண்டனவாகக் கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தாபனங்கள் என்றால் என்ன என்பதற்கு இலங்கையில் 1971-ம் ஆண்டில் 38-ம் இலக்க நிதிச் சட்டமே வரைவிலக்கணம் கூறுகின்றது. இது 'பொதுக் கூட்டுத்தாபனம் என்பது கொடை அல்லது கடன் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தின் முழுதான அல்லது பகுதியான மூலதனத்தைக் கொண்டு கம்பனிக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறேதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஒரு அமைப்பு" என வரையறுக்கப்படுகின்றது. இந்த வகையில் வெவ்வேறு நோக்கங்களுக்கென உருவாக்கப்பட்டிருக்கும் இருநூறுக்கும் மேற்பட்ட கூட்டுத்தாபனங்கள் இலங்கையிலிருப்பதனை இப்பொழுது காண முடியும்.

கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்படும் முறை:

இலங்கையில் கூட்டுத்தாபனங்களை உருவாக்க ஒரு முறை காணப்படவில்லையென்றும், பல முறைகள் பின்பற்றப்படுவதாகவும் கொள்ளலாம். இலங்கையில் பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கென உருவாக்கப்பட்ட முதலாவது சட்டமாக 1955-ம் ஆண்டு "அரச ஆதரவு பெற்ற கூட்டுத்தாபனச் சட்டம்" என்பது காணப்படுகின்றது. இலங்கைக் கூட்டுத்தாபனங்களது குறைபாட்டினைப் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட 1953-ம் ஆண்டு அரச வர்த்தக நிறுவனங்களின் ஆணைக்குழு" என்பதன் சிபார்சுக்கமையவே அச்சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் அதிக நிர்வாகப் பொறுப்பைக் கொண்ட திணைக்களங்களினின்றும் கூட்டுத்தாபனங்களைப் பிரித்தெடுத்து ஒவ்வொன்றுக்கும் தனித்தனி இயக்குனர் சபை கொடுப்பதனையே நோக்கமாகக் கொண்டிருந்தது ஆனால் புதிய கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட இச்சட்டம உதவவில்லை. இதனால் புதிய கூட்டுத்தாபனங்களை உருவாக்க வேறு சட்டங்களை அரசாங்கம் காலத்துக்குக் காலம் உருவாக்கி வந்துள்ளது.

புதிய கூட்டுத்தாபனங்களை உருவாக்கவென முதன்முதல் இயற்றப்பட்ட சட்டமாகக் காணப்படுவது 1957-ம் ஆண்டு "கைத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டம்" என்பதாகும். இதன்கீழ் உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட பல கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. சீமெந்து, கடதாசி, மட்பாண்டம், ஒட்டுப்பலகை போன்ற கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டதற்கான பொதுச் சட்டம் இதுவேயாகும்.

கைத்தொழில் அபிவிருத்திக்கெனப் பொதுக் கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டதைப்போல் வர்த்தக அபிவிருத்திக்கெனவும் 1970-ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணிக ஜோதி" பத்தாண்டு விசேட மலருக்கு

எமது நல்லாசிகள்

சிறந்த அச்சு வேலைகளுக்கு

# ஸ்ரீ பார்வதி அச்சகம்

536, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 22689

★ மொனிரேஸ்

★ அப்பியாசப் புத்தகங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்;

## ஸ்ரீ பார்வதி அச்சகம்

(அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைக்கு முன்பு)

கண்டி வீதி, அரியாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்கள் உணவைச் சுவையூட்டுங்கள்!**

எமது கற்பகம் விற்பனை நிலையங்களிலும் தனியார் நிலையங்களிலும் தற்போது விற்பனைக்கு வந்துள்ளன.

❋ பனம் சிரப் ❋ பனம் கோடியல் ❋ பனம் ஜாம்

# பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம்,

☎ 23801, 22094

கற்பகம் விற்பனை நிலையங்கள்:

- ப. நோ. கூ. ச. கட்டிடம், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
- யாழ். மாநகரசபைக் கட்டிடம், 32, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்
- பொதுச் சந்தை சதுக்கம், மட்டக்களப்பு.
- பிரதான வீதி, மன்னார்.
- 224, காலி வீதி, பம்பலப்பிட்டி.

❋ வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு உண்டு. ❋

---

*With the Best Compliments from*

# Japanese Motor Trades

DEALERS IN MOTOR SPARES

SPECIALISTS IN SPARES OF

ALL JAPANESE MOTOR VEHICLES

46, (256), STANLEY ROAD, JAFFNA.

T' Phone: 23479

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் "வியாபாரக் கூட்டுத்தாபனச் சட்டம்" என்ற ஒன்றை அரசாங்கம் உருவாக்கியது. இச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பல கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. ஒன்றிணைக்கப்பட்ட ஏற்றுமதிகள் கூட்டுத்தாபனம், சலுசல, ரக்ரர் கூட்டுத்தாபனம் போன்ற பல வர்த்தகக் கூட்டுத்தாபனங்களுக்குப் பொதுவாக ஒரு சட்டமே காணப்படுகின்றது.

இலங்கையில் கைத்தொழில் வர்த்தகத் துறைகளின் வளர்ச்சிக்கெனக் கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டதைப்போல் கமத்தொழிலின் அபிவிருத்திக்கெனவும் 1972-ம் ஆண்டில் "கமத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டம்" என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. நிலச் சீர்திருத்தச் சட்டம், தேசியமயச் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட பெருந் தோட்டங்களை நிர்வகிக்கவே இக் கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டன. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை, மரமுந்திரிக் கூட்டுத்தாபனம் போன்றன கமத்தொழிலின் அபிவிருத்திக்கென உருவாக்கப்பட்டவையாகும்.

கைத்தொழில், வர்த்தக, கமத்தொழில் சார்ந்த சட்டங்கள் மட்டுமன்றி, விசேட சட்டங்களின் மூலமும் இலங்கையில் கணிசமான அளவு கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கூட்டுத்தாபனத்தை உருவாக்க ஒரு சட்டமே இயற்றப்படலாம். அது விசேட சட்டம் எனக் கருதப்படும். இலங்கைப் போக்குவரத்துச் சபை, கப்பல் கூட்டுத்தாபனம், ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் போன்றவை விசேட சட்டத்தினால் உருவாக்கப்பட்டவையேயாகும்.

1957-ம் ஆண்டு கைத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டம், 1970-ம் ஆண்டு வியாபாரக் கூட்டுத்தாபனச் சட்டம், 1972-ம் ஆண்டு கமத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டம் ஆகிய மூன்றின் கீழும் "உருவாக்கற் கட்டளை அல்லது கூட்டிணைத்தற் கட்டளை" என்ற ஒன்றை வெளியிடுவதன் ஊடாகப் புதிய கூட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்கச் சட்டம் இடமளிக்கின்றது. உருவாக்கற் கட்டளை என்பது புதிய கூட்டுத்தாபன உருவாக்கத்திற்கான அனுமதியைப் பாராளுமன்றத்தில் பெற்று அதனை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதாகும். இதில் புதிய கூட்டுத்தாபனத்தின் பெயர், அமைவிடம், நோக்கம், மூலதனம் போன்ற பல விபரங்கள் காட்டப்பட்டிருக்கும். இதனால் பழைய பொதுச்சட்டங்களின் கீழ் உருவாக்கற் கட்டளையை வெளியிட்டோ அல்லது விசேட சட்டமொன்றின் பிரகாரமோ இலங்கையில் கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட முடியுமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு முறைகளினாலும் இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கும் இலங்கைக் கூட்டுத்தாபனங்களை நோக்கங்களின் அடிப்படையில் ஆறு பகுதிக்குள் அடக்கலாம். அவையாவன:

1. உற்பத்திக் கூட்டுத்தாபனங்கள்:

இவை கைத்தொழில் உற்பத்தியை, கமத்தொழில் உற்பத்தியை அல்லது சேவை உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிருக்கும். குறிப்பாக சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஜனவசம போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

2. வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள்:

இவை உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டிருப்பவையாகும். சலுசல, இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் போன்றவற்றை வர்த்தகக் கூட்டுத்தாபனங்களாகக் குறிப்பிடலாம்.

3. நிதிக் கூட்டுத்தாபனங்கள்:

தனியார் கொண்டிருக்கும் மூலதனப் பற்றுக்குறைப் பிரச்சினையை இல்லாமல் செய்யும் பொருட்டு நீண்ட கால, குறுங்காலக் கடன்களை வழங்குவதற்கெனப் பல நிதிக் கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

4. அபிவிருத்திக் கூட்டுத்தாபனங்கள்:

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டும் இலங்கையில் பல கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை, கல்லோயா அபிவிருத்திச்சபை போன்றவற்றை அபிவிருத்திக் கூட்டுத்தாபனங்களாகக் குறிப்பிடலாம்.

5. ஆராய்ச்சிக் கூட்டுத்தாபனங்கள்:

இலங்கையில் கைத்தொழில் தொடர்பானதும் கமத்தொழில் தொடர்பானதுமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவெனப் பல கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CISIR) இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சமூக சேவைக் கூட்டுத்தாபனங்கள்:

தனியார் ஒரு பொழுதும் சமூகசேவையில் ஈடுபட விரும்புவதில்லை யென்பதனால் சமூக சேவைக்கென இலங்கையில் அரசாங்கமே பல நிறுவனங்களை உருவாக்கியுள்ளது. சாகித்திய மண்டலம், இலங்கைப் பல்கலைக்கழகம் போன்றவை சமூக சேவைக்கெனவே உருவாக்கப்பட்டவையாகும்.

கூட்டுத்தாபனங்களின் நிர்வாக அமைப்பு:-

இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள் ஆகியன ஒரேவகைப்பட்ட நிர்வாக அமைப்பினையே கொண்டிருக்கின்றன. இவற்றில் ஆகக் கூடிய அதிகாரத்தைக் கொண்டவராக ''தலைவர்'' என்ற ஒருவர் காணப்படுவார். ஆனால் கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்துக்கென இயக்குனர் சபை யொன்று பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் மூன்று பேருக்கு மேல் 7 பேர் வரை உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இந்த இயக்குனர் சபையிலிருந்து ஒருவர் முகாமை இயக்குனராக தெரிவு செய்யப்படுவார். ஆனால் கூட்டுத்தாபன் மொன்றுக்கு தேவையான பொது முகாமையாளர், பகுதி முகாமையாளர் போன்றோரை இயக்குனர்சபையே தெரிவு செய்யும். இதனால் கூட்டுத்தாபனங்களின் முழு நிர்வாகப் பொறுப்பும் இயக்குனர் சபைக் குரியதேயாகும்.

கூட்டுத்தாபனங்களுக்கான இயக்குனர் சபை உறுப்பினர்கள் ஒரே முறையில் தெரிவு செய்யப்படுவதில்லை என்றும், வேறுபட்ட பல முறைகளினால் அவர்கள் தெரிவு செய்யப்படுவதாகவும் கொள்ளலாம். குறிப்பாக பின்வரும் நான்கு முறைகளிலும் இயக்குனர்கள் நியமிக்கப்படுவர்.

1. ஒரு அமைச்சரினாலே சில கூட்டுத்தாபனங்களுக்கான முழு இயக்குனர் சபை உறுப்பினர்களும் நியமிக்கப்படுவர். வழமையில் சம்பந்தப்பட்ட கூட்டுத்தாபனத்துக்கு பொறுப்பான அமைச்சரே முழு இயக்குனர்சபை உறுப்பினர்களையும் நியமிப்பார். குறிப்பாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கான இயக்குனர்கள் வர்த்தக அமைச்சினாலேயே நியமிக்கப்படுவர்.

2. பல அமைச்சர்களினாலும் சில கூட்டுத்தாபனங்களுக்கான இயக்குனர்கள் தெரிவு செய்யப்படுவர். வழமையில் ஒரு கூட்டுத்தாபனம் பல அமைச்சுக்களது பணியை ஆற்றுவதாக இருப்பின் பல அமைச்சர்கள் அதற்கான இயக்குனர்சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வர். குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக அரச அச்சுக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் சபையில் மூன்று பேர் தகவல் ஒலிபரப்பு அமைச்சினாலும், இரண்டுபேர் கல்வி அமைச்சரினாலும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

3. வெளி உத்தியோகத்தர்களே சில கூட்டுத் தாபனங்களின் இயக்குனர்களாக தெரிவு செய்யப்படுகின்றனர். ஒருவர் வகிக்கும் பதவியின் பிரகாரம் இந் நியமனம் இடம் பெறும். குறிப்பாக மக்கள் வங்கியின் இயக்குனர் சபையில் கூட்டுறவு அபிவிருத்தியின் ஆணையாளர் இயக்குனராக இருப்பதனைக் குறிப்பிட முடியும்.

4. சங்கங்களதும் கழகங்களதும் நியமன உறுப்பினர்களும் இயக்குனர் சபையில் இடம்பெறுவதுண்டு ஒரு கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய அமைப்புக்களே இத்தகைய இயக்குனர்களை நியமிக்கும். குறிப்பாக இலங்கைக் கட்டடங்கள் பணியகம் என்பதன் இயக்குனர் சபையில் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனம் (CIE) இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகம், இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CISIR) ஆகியவற்றின் நியமன உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

சில கூட்டுத்தாபனங்களில் நிர்வாகத்துக்கென இயக்குனர் சபை இல்லாத வேளையில் தற்காலிக நிர்வாகத்துக்கென தகுதிவாய்ந்த அதிகாரி (Competent Authority) என்ற ஒருவர் நியமிக்கப்படுவது வழக்கம். அரச நிறுவனங்களின் தற்காலிக நிர்வாகத்துக்கென நியமிக்கப்படும் முழு நிறைவேற்று அதிகாரம் கொண்ட உத்தியோகத்தரே (Executive) தகுதிவாய்ந்த அதிகாரியாவார். இவர் பெரும்பாலும்

அ. இயக்குனர் சபை வழமையான நிர்வாகத்துக்கென இல்லாதபோதும்

ஆ. நிறுவனமொன்றைப் பற்றிய படிப்பு (Study) மேற்கொள்ளப்படும் போதும்

இ. தனியார் நிறுவனங்களை அரசாங்கம் சுவீகரிக்கும் பொழுதும்

ஆகிய மூன்று சந்தர்ப்பங்களில் நியமிக்கப்படுவார். பெரும்பாலும் தனியாரிடமிருந்து 'வியாபார சுவீகரிப்புச் சட்டம்'' என்ற ஒன்றன் பிரகாரம் நிறுவனங்கள் சுவீகரிக்கப்படும் பொழுது ஏற்படும் நிர்வாக இடைவெளியை நிரப்பவே தகுதிவாய்ந்த அதிகாரி நியமிக்கப்படுகின்றார். B, C, C, இலங்கை வர்த்தகக் கம்பனி போன்ற தனியார் நிறுவனங்கள் சுவீகரிக்கப்படும் பொழுது தனியார் நிர்வாகம், அரச நிர்வாகம் ஆகியவற்றுக்கிடையில் தகுதிவாய்ந்த அதிகாரியின் நிர்வாகமே காணப்பட்டதெனலாம். இத்தகைய தகுதி வாய்ந்த அதிகாரியின் நிர்வாகமும் கூட்டுத்தாபனங்களில் காணப்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தாபனங்களின் விலையிடற் கொள்கை:

இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டுத்தாபனங்களின் உற்பத்திப் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் எவ்வாறு விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன எனக் கூறுவதே விலையிடற் கொள்கையாகும். இலங்கைக் கூட்டுத்தாபனங்கள் எவ்வாறு விலைகளைக் குறிக்கின்றன என்பதனைப் பற்றி ஆராய்ந்த 1971ம் ஆண்டைய "ராஜபக்ஷ குழு" என்பது இலங்கைக் கூட்டுத்தாபனங்களில் ஒரு விலைமட்டுமன்றி ஒன்றுக்கு மேற்பட்ட விலை குறிக்கப்படும் முறைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டியது. அவை,

1. சில கூட்டுத்தாபனங்கள் தனியார் துறையினரைப் போன்றே ஆக்கச்செலவை மையமாகக் கொண்டு விலை குறிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக சீமெந்து, கடதாசி, மட்பாண்டம் போன்ற உற்பத்தியிலீடுபட்டிருக்கும் கூட்டுத்தாபனங்கள் எல்லாம் ஆக்கச் செலவை மையமாகக் கொண்டே விலைகளைக் குறிக்கின்றன. இங்கெல்லாம் ஆக்கச் செலவு கூடும் பொழுதோ அல்லது இலாப அளவு அதிகரிக்கப்படும் பொழுதோ விற்பனை விலை அதிகரிக்கப்படும்.

2. சில கூட்டுத்தாபனங்கள் ஆக்கச் செலவை மையமாகக் கொள்ளாமல் அமைச்சரது உத்தரவின் அடிப்படையில் விலையைக் குறித்துக் கொள்கின்றன. இலங்கை மின்சார சபையானது தனது மின் அலகுக் கட்டணங்களை தீர்மானிக்கும் பொழுது எரிபொருள் மின்சக்தி அமைச்சரது உத்தரவினைக் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கின்றது. இதனால் சம்பந்தப்பட்ட அமைச்சினால் விலை குறிக்கும் கொள்கையினை சில கூட்டுத்தாபனங்கள் கொண்டிருக்கின்றன.

3. சில கூட்டுத்தாபனங்கள் அவற்றுடன் சம்பந்தப்பட்ட சங்கங்கள், கழகங்கள் ஆகியவற்றின் ஆலோசனையுடன் விலை குறிக்குமாறு வேண்டப்படுகின்றன. இவை ஆக்கச் செலவையோ அன்றி அமைச்சரது விருப்பத்தையோ கருத்தில் கொள்வது கிடையாது. இலங்கைப் போக்குவரத்துச் சபையானது தனது பஸ் கட்டணங்களைத் தீர்மானிக்கும் பொழுது பயணிகள் சபை, கட்டண சபை ஆகிய இரு அமைப்புகளின் ஆலோசனையையும் பெற்றுக் கொள்வது வழக்கம்.

இதனால் ஆக்கச் செலவின் அடிப்படையிலும், அமைச்சரின் கட்டளையிலும், சங்க அல்லது கழக ஆலோசனையிலுமாக இலங்கைக் கூட்டுத்தாபனங்களின் விற்பனை விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கூட்டுத்தாபனங்களின் கட்டுப்பாடுகள்:

கூட்டுத்தாபனங்கள் அரச உடமையாதலால் அவற்றைக் கட்டுப் படுத்தும் அதிகாரமும் அரசாங்கத்துக்கே உண்டு. இலங்கைக் கூட்டுத் தாபனங்களின் நிர்வாகச் சீர்கேடுகளையும், மோசடிகளையும் ஆராயவென ''பொதுத்துறை நிறுவனங்களின் ஆணைக்குழு'' (COPE) என்ற ஒன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. அதனைவிட மூவகைக் கட்டுப்பாட்டு முறை களையும் இலங்கைக் கூட்டுத்தாபனங்கள் கொண்டிருக்கின்றன. அவை,

1. அரசாங்கக் கட்டுப்பாடுகள்
2. பாராளுமன்ற கட்டுப்பாடுகள்
3. சட்டக் கட்டுப்பாடுகள் என்பனவாகும்.

அரசாங்கக் கட்டுப்பாடு என்பது அமைச்சராலும் திறைசேரியி னாலும் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகளைக் குறிப்பதாகும் அமைச் சர் இயக்குனர்களைத் தெரிவு செய்தல், நோக்கங்களைத் தீர்மானித்தல் இலாபங்களைப் பகிர்ந்தளித்தல் ஆகிய நடபடிக்கைகளில் கட்டுப்பாடு களைக் கொண்டிருக்கின்றார். மாறாக திறைசேரி பாதீடுகளைத் திட்டமிட் டுக் கொள்வதிலும் நிதிப்பயன்பாட்டிலும் கட்டுப்பாடுகளைக் கொண் டிருக்கின்றது. இவ்வாறு சம்பந்தப்பட்ட அமைச்சரினாலும், திறைசேரி யினாலும் கொண்டு நடாத்தப்படும் கட்டுப்பாடுகளே அரசாங்கக் கட்டுப்பாடுகளாகும்.

பாராளுமன்றக் கட்டுப்பாடு என்பது இலங்கைப் பாராளுமன்றத் துக்குக் கூட்டுத்தாபனங்கள்மேல் இருக்கும் அதிகாரங்களைக் கருதுவ தாகும். கூட்டுத்தாபனங்களை உருவாக்குதல், விஸ்தரிப்புச் செய்தல், முடிவுக் கணக்குகளைப் பரிசோதித்தல், தலைப்புச் செய்தல் போன்ற அதிகாரங்கள் பாராளுமன்றத்துக்கே வழங்கப்பட்டுள்ளன சட்டக் கட்டுப்பாடென்பது நீதித்துறைக்கிருக்கும் அதிகாரங்களைக் கருதுவ தாகும். கூட்டுத்தாபனங்களை உருவாக்கிய சட்டத்துக்கும், நாட்டின் பொதுச் சட்டத்திற்கும் கட்டுப்பட்டே கூட்டுத்தாபனங்கள் இயங்க வேண்டியிருக்கும். இதனால் கூட்டுத்தாபனங்களும் சில அரச அமைப்புக் களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் எனலாம்.

### கூட்டுத்தாபனங்களின் இலாப உழைப்பு:

கூட்டுத்தாபனங்களில் பெருமளவு அரச நிதியே ஈடுபடுத்தப் பட்டிருப்பதனாலும், அவை நாட்டின் அபிவிருத்திக்கென உருவாக்கப் பட்டிருப்பதனாலும் தனியார் நிறுவனங்களைப்போல் இலாப உழைப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் கொடுப்பதில்லை. இதனால் சேவை என்பதே பெரும்பாலான கூட்டுத்தாபனங்களின் கொள்கையாகக் காணப்படுகின்றது. இந் நிலைமை இலங்கையின் பெரும்பாலான கூட்டுத்தாபனங்களை நட்டம் பெறும் நிலைக்கு ஆளாக்கியிருக்கின்றது இந் நிலைமையை மாற்றிக் கூட்டுத் தாபனங்களெல்லாம் கட்டாயமாக இலாபம் உழைக்கவேண்டும் என்றும், இல்லாவிடில் அரச மாஆலைக் கூட்டுத்தாபனத்தைப்போல் கலைக்கப்பட வேண்டி வரும் என்பதுமான கடுமையான போக்கை இலங்கை அரசாங் கம் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது. ஆனாலும் இலங்கையில் உரு வாக்கப்பட்டிருக்கும் ஆராய்ச்சி, அபிவிருத்தி, சமூக சேவைக் கூட்டுத் தாபனங்கள் எக் காரணம் கொண்டும் இலாபத்தைப் பெறமுடியாது. ஆனால் உற்பத்தி, வர்த்தகம், நிதி ஆகிய தொழிற்பாடுகளில் ஈடுபட் டிருக்கும் கூட்டுத்தாபனங்கள் கட்டாயமாக இலாபம் உழைத்தல் வேண்டும் என அரசாங்கத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளன.

உற்பத்திக் கூட்டுத்தாபனங்கள், வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நிதிக் கூட்டுத்தாபனங்கள் போன்றவை தனியார் துறையினரைப்போல் கட்டாயமாக இலாபம் உழைக்கவேண்டும் என்பதற்குப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன. அவையாவன:

1) கூட்டுத்தாபனங்கள் தம்மை விஸ்தரித்துக் கொள்ளத் தொடர்ச்சியான மேலதிக முதலீட்டினை வேண்டி வருகின்றன. இத் தகைய மேலதிக முதலீட்டு நிதியை இலகுவாகப் பெறுவதற்கான வழி கூட்டுத்தாபனங்கள் இலாபத்தை உழைப்பதுதான் என்பதனால் இலாப உழைப்பு அவசியமாகின்றது.

2) கூட்டுத்தாபன்ங்கள் எப்பொழுதுமே பெருமளவான நிர்வாகச் செலவுகளையும், ஏனைய மேலதிகச் செலவுகளையும் கொண்டிருப்பதனால் அவற்றை இலகுவில் சமாளித்துக் கொள்ள இலாப உழைப்பு அவசிய மாகின்றது.

3) கூட்டுத்தாபனங்களில் பெருமளவான கடன் நிதிகள் ஈடு படுத்தப்பட்டிருப்பதனால் அவற்றுக்கான வருடாந்த வட்டியும், கடன் மீளச் செலுத்துகைக் கட்டணமும் ஒழுங்காகச் செலுத்தப்பட வேண்டி வரும். இதனை நிலுவையின்றிச் செலுத்த இலாப உழைப்பு அவசிய மாகின்றது

4) இலங்கைக் கூட்டுத்தாபனங்களில் பெரும்பாலானவை ஊழியர் களை உற்சாகப்படுத்துவதற்கென நிதி சார்ந்த நலன்களையும், நிதி சாராத நலன்களையும் வழங்கி வருவது வழக்கம். அவ்வடிப்படையில் உபகாரப்பணம், சம்பள அதிகரிப்பு போன்ற நிதிசார்ந்த நலன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், இலவச போக்குவரத்து வசதி, இலவச மருத்துவ வசதி போன்ற நிதி சாராத நலன்களையும் வழங்க இலாப உழைப்பு முக்கிய மாகின்றது.

5) இலங்கைக் கூட்டுத்தாபனங்களின் நட்டங்களெல்லாம் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு இறுதியில் வரிகள் ஊடாக பொது மக்களின் மேல் சுமத்தப்படுவது வழக்கம். இதனால் அரசாங்கம் நேர் வரிகளையோ அல்லது நேரில் வரிகளையோ அதிகரிக்காதிருக்க இலாப உழைப்பு அவசியமாகின்றது.

இவை போன்ற பல காரணங்களினாலேயே இலங்கை அரசாங்கம் பெரும்பாலான கூட்டுத்தாபனங்களில் இலாப உழைப்பை வலியுறுத்தி வருகின்றது.

இலங்கைக் கூட்டுத்தாபனங்களின் குறைபாடுகள்:

இலங்கைக் கூட்டுத்தாபனங்கள் எந் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டனவோ அவை அடையப்படவில்லையெனில் அவை கூட்டுத்தாபனங்களின் குறைபாடுகளாகக் கருதப்படும். இலங்கைக் கூட்டுத்தாபனங்கள் எல்லாவற்றையும் எடுத்து நோக்கும்பொழுது பின்வரும் பிரதான குறைபாடுகள் அவற்றில் காணப்படுகின்றன.

1) இலங்கைக் கூட்டுத்தாபனங்களின் நோக்கம் சம்பந்தப்பட்ட அமைச்சரால் தீர்மானிக்கப்படுவது வழக்கமாதலால் அமைச்சர் மாறுகின்ற பொழுதெல்லாம் கூட்டுத்தாபனங்களும் தமது நோக்கத்தை மாற்றிக் கொள்ளவேண்டியிருக்கின்றன. இதனால் நிலையான நோக்கமொன்றைக் கொண்டிருப்பதோ அன்றி அடைவதோ கூட்டுத்தாபனங்களால் முடியாததாகின்றது.

2) இலங்கைக் கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான இயக்குனர் சபை சுதந்திரமாக இயங்க முடிவதில்லையென்பது இன்னொரு குறைபாடாகும். இயக்குனர் சபை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் தெரிவு செய்யப்படும் வழக்கம் இருப்பதனால் எப்பொழுதுமே சுயமாகத் தீர்மானங்களை எடுக்கவும் நடைமுறைப் படுத்தவும் முடிவதில்லை.

3) இலங்கைக் கூட்டுத்தாபனங்களில் கணிசமானவை சரியான தொழிற்சாலை அமைவிடத்தைக் கொண்டிருக்கவில்லை. மூலப்பொருள், தொழிலாளர், வலுப் பொருள் வசதி, போக்குவரத்து வசதி, சந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி போன்றவற்றைக் கருத்தில் கொள்ளாது புத்தளம், காலி போன்ற இடங்களில் சீமேந்து தொழிற்சாலை போன்றவற்றைக் கொண்டிருப்பது கூட்டுத்தாபனங்களின் சிறப்பான இயக்கத்தை தடை செய்கின்றது.

4. கூட்டுத்தாபனங்களில் காணப்படும் திறனற்ற முகாமை என்பது பிரதான குறைபாடாகும். அரசியல் காரணங்களின் அடிப்படையில் நிர்வாகிகள் தெரிவு செய்யப்படும் வழக்கம் கூட்டுத்தாபனங்களில் இருப்பது நிர்வாகத் திறமையின்மையைப் பல கூட்டுத்தாபனங்களில் தோற்றுவித்திருக்கின்றதெனலாம்.

5. வேலையில்லாப் பிரச்சினையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பெருந்தொகையான மக்களுக்கு கூட்டுத்தாபனங்களில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலைமை அளவுக்கதிகமான வேலைவாய்ப்பு கூட்டுத்தாபனங்களில் இடம்பெற வழிவகுத்துள்ளது.

6. கூட்டுத்தாபனங்கள் நிதிபெறும் வாய்ப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையினால் நிதிப்பற்றாக்குறை என்பது கூட்டுத்தாபனங்களில் இடம் பெற்று வந்த பெரும் குறைபாடாகும். இதனால் வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதனை நிதிப்பற்றாக்குறை தடைசெய்துள்ளதெனலாம்.

7. பெரும்பாலான கூட்டுத்தாபனங்களில் செலவுக் கட்டுப்பாடின்மை என்பது ஒரு பெரும் குறைபாடாக காணப்படுகின்றது. கூட்டுத்தாபனங்கள் அரசாங்க உடமையென்றிருப்பதனால் எவரும் செலவைக் கட்டுப்படுத்த முயல்வதில்லை. இதனாலேயே கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனம் போன்றவை தமது உற்பத்திப் பொருட்களுக்கு பெருமளவிலான ஆக்கச் செலவைக் கொண்டிருப்பதுடன் சிக்கனமின்மையையும் அனுபவிக்கின்றன.

8 நட்டமடைந்து வருதல் என்பதும் பல கூட்டுத்தாபனங்களின் குறைபாடாகும். கூட்டுத்தாபனங்கள் சேவையையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கும் கொள்கையினால் பல கூட்டுத்தாபனங்கள் தொடர்ச்சியான நட்டத்தை அடைந்து வருகின்றன. இவை போன்ற பல்வேறு குறைபாடுகள் இலங்கையின் கூட்டுத்தாபனங்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனங்களின் குறைபாடுகளைப் போக்க தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள்:

இலங்கைக் கூட்டுத்தாபனங்கள் பெருமளவான குறைபாடுகளைக் கொண்டிருந்தமையினால் அவற்றைக் குறைக்கும் நோக்குடன் 1977-ல் பதவிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் பல சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கைக் கூட்டுத்தாபனங்கள் கொண்டிருந்த மூலதனப் பற்றாக் குறைப் பிரச்சினையைப் போக்கவென நிதிபெறும் பலவழிகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. தொழிலாளருக்கு பங்குவழங்குதல் போன்ற நடபடிக்கைகளை தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் அமுல்படுத்தியதுடன், ஒரே நோக்கம் கொண்ட இரண்டு அல்லது மேற்பட்ட கூட்டுத்தாபனங்களை ஒன்றிணைக்கவும் நடவடிக்கை யெடுத்தது. குறிப்பாக கைத்தொழில் கைத்தொழில் கடன் கூட்டுத் தாபனம் (AICC) அரச ஈட்டு வங்கி ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து "அரச ஈட்டு முதலீட்டு வங்கி" என்ற ஒன்றை ஏற்படுத்தியதனூடே அதிக மூலதனம், செலவுக் கட்டுப்பாடு ஆகிய நன்மைகளைப் பெற வழி வகுத்தது.

2. திறனற்ற முகாமையை இல்லாமல் செய்யும் நோக்குடன் இயக்குனர்களுக்கு முகாமைப்பயிற்சி வழங்கும் திட்டத்தை நடைமுறைக் குக் கொண்டு வந்தது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வழங்கப்படும் இம்முகாமைப் பயிற்சி திறன்மிக்க முகாமையாளர்களைப் பெற்றுக் கொடுத்தது.

3. மேல்மிஞ்சிய ஊழியர் என்ற குறைபாட்டை இல்லாமல் செய் யும் முகமாக ஊழியர் குறைப்புத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. சுயமாக விலகும் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை போன்றவற்றில் சன்மானக் கொடுப் பனவுகளை அமுல்படுத்தும் அதே நேரத்தில் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் போன்றவற்றில் கட்டாயமாக ஊழியர் விலக்கப்பட்ட திட்டத்தையும் கடைப்பிடித்தது.

4. கூட்டுத்தாபனங்களில் காணப்பட்ட சுதந்திரமற்றதும் திறனற் றதுமான நிர்வாகத்தைப் போக்க, சில கூட்டுத்தாபனங்களின் நிர்வா கத்தை தனியாரிடம் ஒப்படைத்துள்ளது. தேசிய புடவைக் கூட்டுத் தாபனம் போன்றவற்றின் நிர்வாகம் தனியார் துறையினரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

5. கூட்டுத்தாபனங்களின் இயக்கத்தை திறனுள்ளதாக்கும் பொ ருட்டு போட்டி அமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இப்போட்டி இலங் கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு எதிராக தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை இயங்க விட்டமையையோ, மறுபுறத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு எதிராக தனியார் பஸ்சேவையை அமுலுக் குக் கொண்டு வந்தமையையோ கருதுவதாக இருக்கும்.

6. கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்தை திறமையாக்கும் பொருட்டு நிர்வாகப் பரவலாக்கம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் செய்வதும் நடைமுறைப்படுத்துவதும் கீழ்மட்டத்தில் விட்டு வைக்கப்பட்டுள்ளன இலங்கைப் போக்குவரத்துச்சபை ஒன்பது பிராந்திய சபைகளை ஏற்படுத்தியமைக்குக் காரணம் நிர்வாகத் திறமையைப் பெற்றுக் கொள்வதற்கேயாகும்.

7. பெரும்பாலான கூட்டுத்தாபனங்கள் அடைந்து வந்த நட்டத்தைத் தவிர்க்கும் நோக்கமாக இலாப நோக்க வலியுறுத்தலை இந்த அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. இதனாலேயே நட்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்களை மூடிவிடுவதெனத் தீர்மானித்துள்ளது. இதனால் நட்டமடையும் நிலையைப் பெரும்பாலான கூட்டுத்தாபனங்கள் தவிர்த்துள்ளன.

8. கூட்டுத்தாபனங்களில் சில தமது தொழிற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு உதவியாகத் துணை நிறுவனங்களாக அரச கம்பனிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே இலங்கை வங்கியானது "இலங்கை வியாபாரிகள் வங்கி லிமிட்டட்" என்பதனையும், மக்கள் வங்கியானது இங்கிலாந்தின் கின்னஸ் மஹோரன் கம்பனி லிமிட்டட் என்பதன் துணையுடன் "மக்கள் வியாபாரிகள் வங்கி லிமிட்டட்" என்பதையும் உருவாக்கியுள்ளன.

மேற் கூறியன போன்ற பல நடவடிக்கைகளை இலங்கைக் கூட்டுத்தாபனங்களின் குறைபாடுகளைப் போக்க அரசாங்கம் எடுத்துள்ளதாகக் கூறலாம்.

முடிவுரை:

தனியார்துறை அமைப்புக்களில் கம்பனி முக்கியம் பெற்று வருவதைப்போல் பொதுத்துறை அமைப்புக்களில் முக்கியம் பெற்றிருப்பதாகப் பொதுக் கூட்டுத்தாபனங்கள் காணப்படுகின்றன. திணைக்களங்களை விடவும், அரச கம்பனிகளை விடவும் கூட்டுத்தாபனங்களே திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திக்கு உதவ முடியும் என்பதனால் கூட்டுத்தாபனங்களே பெரிதும் விரும்பப்படுகின்றன. இதனாலேயே காலத்துக்குக் காலம் திணைக்களங்கள் பல கூட்டுத்தாபனங்களாக மாற்றம் பெற்றுள்ளன. குறிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை ஆகியன ஆரம்பத்தில் கூட்டுத்தாபனமாக இருந்தமையே ஆகும். அதே போன்றே வர்னூர்தித் திணைக்களம், விமானத்தள அதிகார சபை என்பதாக மாற்றம் பெற்றுள்ளது. இதன் வரிசையில் தொலைத் தொடர்புத் திணைக்களம், இலங்கைப் புகையிரதத் திணைக்களம் என்பனவும் கூட்டுத்தாபனங்களாக மாற்றம் பெற இருக்கின்றன. இதனால் இலங்கையில் கூட்டுத்தாபன அமைப்புக்கள் இப்பொழுது முக்கியம் பெற்று வருவதாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வணிக ஜோதி என
வாழ்த்துகின்றோம்.

## சிவம் வெல்டேஸ்

சகலவிதமான எலக்றிக் வேலைகள்
காஷ் - வெல்டிங் வேலைகளும்
கேற் - கிறில்களும்

சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

**சிவம் வெல்டேஸ்**
370, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

---

யாழ் நகரில் "கிளீன்கட்"
- அன்புக் குழந்தைகளுக்கு அழகிய ஆடைகள்
- நவநாகரீக நங்கையர் உடைகள்
- பாடசாலை சீருடைகள்

## கிளீன் கட்
## *Kleen Khut*

- போட்டோஸ்ரட் பிரதிகள்
- தட்டெழுத்து வேலைகள்
- ரோனியோ பிரதிகள்

உயர்தரமான காகிதத்தில்
தெளிவான முறையில் பெற்றுக்கொள்ள

**கிளீன் கட்**
239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

---

அன்பளிப்பு... 'வணிகஜோதி'க்கு

## செந்தில்ஸ்
# SENTLS

சுவையான சிற்றுண்டி வகைகளுக்கு

செந்தில்ஸ்

52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

---

For

- PHOTOS
- PHOTOSTATING
- VIDEO CASETTE
- COLOR PRINTS

APPROCH

# GEMINI PHOTO

15/1, Power House Road,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விஞ்ஞானங்களில் புள்ளி விபரவியலின் பங்கு

செல்வன் பெ. பசில் ஜெனதாஸ் 12 (1985)

சமூக விஞ்ஞானம் என்பது மனித நடத்தையைப் பற்றி ஆராய்கின்ற அறிவுத்துறையைக் குறிக்கின்றது சமூக விஞ்ஞானங்கள் ஆராயும்) விடயங்கள் தனிமனித நடத்தையைப் பற்றியதாக அல்லது சமூகத்தின் நடத்தையைப் பற்றியதாக அமையும். இதனுள், பொருளியல், அரசியல், உளவியல், வரலாறு, சமூகவியல் போன்ற துறைகள் உள்ளடக்கப் படுகின்றன.

சமூக விஞ்ஞானங்கள் ஒரு காலப்பகுதியில் சிலரால் விஞ்ஞானம் என ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனென்றால் இதனை ஆராய்வது கடினமாக இருந்தமையாலும் ஆய்வுக்கு ஓர் தெளிவான ஆய்வுமுறை இல்லாமையாலும் அந்நிலை காணப்பட்டது. ஆனால் புள்ளிவிபர முறையின் அறிமுகத்தின் பின்னால் எல்லோராலுமே சமூக விஞ்ஞானங்களும் விஞ்ஞானமே என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புள்ளிவிபரவியல் என்பது தரவுகளை சேகரித்து ஒழுங்குபடுத்தி தொகுத்து ஏற்புடைய முடிவுகளைப் பெறுவதும் பின்னர் அம் முடிவில் இருந்து பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ள உதவுவதுமான விஞ்ஞான முறையைக் குறிக்கும். இது விஞ்ஞான ஆய்வுகளில் மிக முக்கிய முறையாகக் காணப்படுகின்றது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு பலவழிகளிலும் இம்முறை உதவுகின்றது. சமூக விஞ்ஞான ஆய்வுகளில் சான்று ஒப்புமை போன்ற முறைகளிலும் பார்க்க பன்மடங்கு பயனுள்ளதாக புள்ளிவிபரமுறை காணப்படுகின்றது. இன்று இம்முறை இயற்கை விஞ்ஞானங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது என்ற போதிலும், சமூக விஞ்ஞான ஆய்வுகளிற்கு பெரிதும் பயனுடையதாகக் காணப்படுகின்றது. இயற்கை விஞ்ஞானங்கள் போன்றே சமூக விஞ்ஞானங்களும் விஞ்ஞானமாகக் கொள்ளப்படுவதற்கு இம் முறையே காரணமானதாகும். இக் காரணத்தால் பொருளியல், அரசியல், உளவியல், சமூகவியல் போன்ற சமூக விஞ்ஞானங்களின் வளர்ச்சியில் புள்ளிவிபரவியல் ஓர் தனித்துவமான முறையாக இருந்து வருகின்றது. இதனால் அத்துறைகள் மென்மேலும் வளர்ச்சியடையக் கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிவிபரவியல் முறையானது சமூக விஞ்ஞானங்களைப் பொறுத்த வரையில் பின்வரும் பயன்பாடுகளை உடையதாகக் காணப்படுகின்றது.

1. விபரிப்புப் பயன்பாடு:

தரவுகளைத்திரட்டி சராசரி காண்பதன் மூலம் குறிக்கப்பட்ட ஒரு துறையைப் பற்றி விபரிக்கவும் தரவுகளை வைத்துக் கொண்டு வேறு துறைகளைப்பற்றி விபரிக்கவும் பயன்படுகின்றது. உதாரணமாக ஒரு நாட்டின் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்கான குடித்தொகைக் கணிப் பீட்டை எடுத்துக் கொண்டால் அதனைக் கொண்டு பல அம்சங்களை விபரிக்கக்கூடியதாயுள்ளது அந் நாட்டின் குடித்தொகை வளர்ச்சி, இறப்புப் பிறப்பு விகித அதிகரிப்பு, உற்பத்திக்கும் மக்கள் தொகைக்கு மிடையிலான தொடர்பு, வேலைவாய்ப்பு போன்ற பல விடயங்களை விபரிக்கலாம். இதே போன்றே ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை எடுத்துக் கொண்டால் அதில் இருந்து சனத்தொகையின் அளவு, வேலை யற்றோர் அளவு, போன்ற பல அம்சங்களை விபரிக்கக்கூடியதாயுள்ளது. இதனால் ஒரு காலப்பகுதியின் நிலைமைகளை இன்னொரு காலப் பகுதியின் நிலைமைகளுடன் ஒப்பிட்டறிய உதவுகின்றது.

2. எதிர்வுகூறல் பயன்பாடு:

எதிர்வு கூறல்பயன்பாடு என்பது சமூக விஞ்ஞான ஆய்வுகளில் முக்கியமான ஓர் அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. கிடைக்கப்பட்ட தரவுகளை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் எப்படி இருக்கும், எதிர் காலத்தில் என்ன என்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பன போன்ற செயற்திட்டங்களுக்கு இம் முறை உதவுகின்றது. உதாரண மாக ஓர் குறிக்கப்பட்ட காலப்பகுதியில் குறிக்கப்பட்ட ஒரு நாட்டின் குடித்தொகைக் கணிப்பீட்டை எடுத்துக் கொண்டால் எதிர்காலத்தில் என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம், எதிர்காலத்தில் குடித்தொகை வளர்ச்சியை எப்படிக் கட்டுப்படுத்தலாம், தொழில் வாய்ப் புக்களை எவ்வாறு அதிகரிக்கலாம் என்பன போன்ற விடயங்களை திட்ட மிட்டு நோக்குவதற்கு இந்த எதிர்வு கூறல் பயன்பாடு உதவுகின்றது.

3. விவரணப் பயன்பாடு:

பொருளாதார ஆய்வுகளிலும் குடும்பக்கட்டுப்பாடு போன்ற ஆய் வுகளிலும் சில பொதுப்படையான எதிர்பார்ப்புக்கள் அவசியமாகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. இதற்கு இவ் விவரணப் பயன்பாடு உதவுகின்றது. விபரிப்புப் பயன்பாட்டில் இருந்து இவ் வர்ணனைப்பயன்பாடு வித்தியாசமான தொன்றுகும். வர்ணனைப்பயன்பாடு என்பது ஓர் மேல் எழுந்த வண்டிகளை ஊகங்களின் அடிப்படையில் கூறுவதாகும். சுமார் 50 ஆண்டுகளின் பின் பொருளாதார நிலைமை எவ்வாறிருக்கும். குடித்தொகைப் பெருக்கம் எவ்வாறிருக்கும் நாகரீகத்தின் வளர்ச்சி எவ்வாறிருக்கும் என்பன போன்ற கருத்துக்கள் வர்ணனைப்பயன்பாடுகளாகும், சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்கு இது அவசியமான தொன்றுகக் கருதப்படுகின்றது. இம் முறையில் காரணகாரியத் தொடர்பின் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது இம் முறை எடுத்துக் கொண்ட விடயத்தை நன்கு வகுத்துத் தரவுகளைத் திரட்டுவதால் தெளிவான ஓர் ஆய்வு முறையாக விளங்குகின்றது உதாரணமாக குடித் தொகைக் கணிப்பீட்டில் பால், வயது, மொழி, இனம், மதம் போன்ற அடிப்படையில் வகுத்துத் திரட்டப்படுகின்றன. இம் முறையில் தரவுகளை நீண்டகாலம் சேகரித்து வைத்து மீண்டும் மீண்டும் ஆராய முடிகின்றது. இதனுல் பல முடிவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயுள்ளது.

சமூக விஞ்ஞானங்களில் புள்ளிவிபரவியல் முறையானது பல பயன்பாடுகளையுடையதாகக் காணப்படுகின்ற போதிலும் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன, அவையாவன

1) புள்ளி விபரங்கள் மூலம் தரவுகள் திரட்டப்படும்போது தரவு தருபவர் குறைத்து அல்லது கூட்டி விபரங்களைத் தரலாம். உதாரணமாக வருமானத் தரவுகள், வருமானவரிக்கு சமர்ப்பிக்கும் புள்ளி விபரங்கள் இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் ஆய்விற்கு பூரண வெற்றியளிக்க மாட்டாது,

2) புள்ளிவிபரவியல் முறையில் ஆய்வுக்கு தரவுகளைத் திரட்டும் ஒருவன் நடுநிலை வகிக்காது தரவுகளைத் திரட்டுவானுகில் அது செம்மையற்ற மாதிரிகளைக் கொண்ட தரவுகளாகக் காணப்படும். இது ஆய்வுக்குப் பூரண பயனளிக்கமாட்டாது. அதாவது ஆய்வுக்குரிய தரவுகளைத் திரட்டும் ஒருவன் ஆசை, பற்று, விருப்பு, வெறுப்பு, அதிகாரம் போன்றவற்றினுல் ஒருபக்கம் சார்ந்து திரட்டப்படும் தரவுகள் நடுநிலை வகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது திரட்டப்படும் தரவுகளாகும். உதாரணமாக ஒரு கட்சிக்குரிய ஆதரவை ஆராய்கின்ற சமூகவியலாளன் அக்கட்சியின் மேலுள்ள பற்றின் காரணம் குறிப்பிட்ட தொன்றாக இருக்க மிகைப் புள்ளி விபரம் காட்டலாம். அதேபோல சமூகநல உதவிப்பணம், உணவு முத்திரை என்பவற்றிற்கு சிபார்சு செய்யும் விடயத்திலும் பக்கச்சார்பான தவறான புள்ளிவிபரம் அளிக்கப்படலாம். இதனால் ஆய்வில் பூரண பயன் கிடைக்கமாட்டாது.

3) தரவுகளைத் திரட்டப்படுகின்ற பொழுது சமசந்தர்ப்பம் கொடுத்து திரட்டப்படாத தரவுகள் பூரண பயனைத்தராது. உதாரணமாக ஒரு கல்லூரியில் பேச்சாற்றல் மிகுந்த மாணவர்கள் எத்தனைபேர் உள்ளனர் என்பதனைக் கணிப்பிட மாணவர்களுக்கு சமசந்தர்ப்பம் வழங்காது திரட்டப்படும் தரவுகள் ஆய்வுக்கு வெற்றியளிக்கமாட்டாது.

4) ஆய்வாளன் ஓர் குறிக்கப்பட்ட ஆய்வுக்கான தரவுகளைச் சேகரிக்கின்றபொழுது அவ் ஆய்வுக்குரிய சில தரவுகளை நோக்காமலும், சேகரிக்காமலும் விடுவதனால் ஆய்வில் பூரண வெற்றியடைய முடியாது. உதாரணமாக வரலாற்று ஆய்வாளன் ஒருவர் ஓர் வரலாற்று உண்மையை நிறுவுவதற்கு பல ஆதாரங்களை நோக்க வேண்டியவராக இருக்கின்றான். அதில் சிலவற்றை மட்டும் நோக்கி முடிவெடுப்பாராகில் அவ் ஆய்வில் பூரண வெற்றி கிடைக்கமாட்டாது.

சமூகவிஞ்ஞானங்களில் புள்ளிவிபர முறையால் ஏற்படும் சில குறைபாடுகள் காணப்பட்டாலும் கூட இதன் முக்கியத்துவம் சமூகவிஞ்ஞானங்களில் அதிகமானதாகும். மனித நடத்தைகள் பற்றிய விபரங்கள் யாவும் சமூக விஞ்ஞானங்களில் புள்ளிவிபரங்களினூடாகவே பெறப்படுகின்றது. இக்காரணத்தால் இன்று புள்ளிவிபரவியல் தனித்து ஓர் துறையாகக் கொள்ளப்படுகின்றது. சமூக விஞ்ஞானங்களில் கண்டறிந்த உண்மைகளையெல்லாம் சேகரித்து தெரிந்து பாகுபடுத்தி முடிவுகளைப் பெறுவதற்கு புள்ளிவிபரமுறை உதவுபதால் புள்ளிவிவர முறையானது சமூக விஞ்ஞானங்களில் உயிர் நாடியாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS FROM

**T. V. RATHY**

For

RADIO REPAIRS

&

SALES

T. V. SPARE PARTS

**RATHY WATCH WORKS**

For

WATCH REPAIRS

**Rathy Stores**

For

SALES

WATCH

&

FANCY GOODS

*With the Best Compliments from*

# Trans Lanka Marketing Ltd

No. 1, FIRST FLOOR, NEW MODEL MARKET, JAFFNA.

SOLE DISTRIBUTORS FOR

**ARPICO PRODUCTS**

DEALERS IN

**Readymade Garments**

**"TRANCE"**

☎ 23027

*With The Best Compliments From*

# RAJI ENTERPRISE

FOR

READY MADE GARMENTS

&

TEXTILES

## RAJI ENTERPRISE

11, GRAND BAZAAR, JAFFNA.

PERSONAL CLASSES FOR:

## G. C. E. (A/L)

## PURE / APPLIED

**Tutor:**

## RAVIMOHAN

74A. CLOCK TOWER ROAD,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவையியல் ஒரு கண்ணோட்டம்....

செல்வன் T. ரெக்ஸ் சுரேந்திரா 12 (1985)

பல்கலைக் கழகங்கள் ஸ்தாபிக்கப் பட்டதிலிருந்து இன்றுவரை உயர்கல்வி மட்டத்தில் அளவையியல் ஒருபாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் இதன் முக்கியத்துவமே ஆகும். பொதுவாக அளவையியல் இரண்டு காரணங்களினால் முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றது.

1. நியாயம் அல்லது அறிவு பற்றிய சிறந்த விமர்சனமாக இது விளங்குவது.
2. கொள்கை ரீதியாகப் பயில்கின்றபோது ஏற்படுகின்ற மன மகிழ்வும் அதன் பயிற்சியினால் பெறப்படும் பயன்களுமாகும்.

அளவையியலின் தோற்றத்தை அல்லது ஆரம்பத்தை நோக்குகின்றபோது அதன் கோட்பாடுகள். அதன் தொடர்புகள் பெருமளவிற்கு மெய்யியலுடன் தொடர்புடையதாக அமைந்திருந்தது. தற்காலத்தில் அளவையியலின் கோட்பாடுகள், பெருமளவில் கணிதத்துடன் தொடர்புடையதாக அமைந்திருக்கின்றது. இதற்குச் சான்றாக நவீன குறியீட்டு அளவையியலைக் கணித அளவையியல் எனச் சிறப்பித்துக் கொள்கின்றனர். அளவையியல் என்ற பதம் மரபு ரீதியான கண்ணோட்டத்திலும் தற்காலக் கண்ணோட்டத்திலும் வேறுபட்ட பதத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. மரபு ரீதியான கண்ணோட்டத்தில் உய்த்தறி அளவையியல் அல்லது நியம அளவையியல் தொகுத்தறி அளவையியல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாக அளவையியல் என்ற பதம் பிரயோகிக்கப்பட்டது. தற்காலக் கண்ணோட்டத்தில் உய்த்தறி அளவையியல், தொகுத்தறி அளவையியல், குறியீட்டளவையியல். இந்திய அளவையியலின் மூல தத்துவங்கள் என்றவகையில் குறிக்கக் கூடியதாகப் பிரயோகிக்கப்படுகின்றது. மரபு வழி விளக்கத்தில் அளவையியல் என்பதற்குப் பின்வருமாறு வரையளவு கொடுக்கப்படுகின்றது. சிந்தனை பற்றிய விஞ்ஞானம்'' ஒரு அறிவியலாகும் இதனது முக்கிய குறிக்கோள் அறிவைப்பற்றிய மிகத் தெளிவான விளக்கத்தைத் தருவதாகும். இவற்றை நாம் தெளிவாக நோக்கவேண்டுமாயின் சிந்தனை என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? என்பதையும், அதன் விளைவுகள் என்ன? என்பதையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். பேராசிரியர் வெல்ரன் மக்கன் (Welton Macon) என்பவர் மனிதன் பசிக்கும்போது தானாகவே அவன் உணவருந்திக் கொள்வது போன்று, அவன் இயற்கையாகவே சிந்திக்கும் திறன் கொண்டவன் ஆவான் என்று கூறியுள்ளார். எனவே இவ்விதம் இயல்பாகவே அமைந்த இத்திறன் எமக்கு ஒரு பிரச்சனை அல்லது தேவை ஏற்படுகின்றபோது அதனைப் பூர்த்தி செய்தற்பொருட்டு நமது அகத்தே தொழிற்படுவதாகும் எனவும் கூறியுள்ளார். அதாவது குறிப்பிட்ட பிரச்சனையை அல்லது தேவைகளைத் தீர்ப்பதற்குரிய முடிவைத் தரும். இதனையே நாம் பொதுவாக அறிவெனக் குறிப்பிடுகின்றோம். மனிதன் தனது வாழ்வைச் சிறப்பித்துக் கொள்வதற்காகவே இயற்கையைப் பூரணமாக விளங்கிக் கொள்ளும் பிரச்சினை தோன்றியது. இதனைத் தீர்க்கத் தோன்றிய சிந்தனையின் விளைவாக அறிவியல், நாகரீகம், செயற்திறன் தோன்றின.

இவ் வளர்ச்சிக்கு இச் சிந்தனை மட்டும் தனித்துக் காரணமாகக் கூற முடியாது உள்ளது. சிந்தனையை வெளிப்படுத்துகின்ற மொழியும் முக்கியத்துவம் பெறுகின்றது. அறிவிப்புச் சாதனங்கள் அல்லது தொடர்பு சாதனங்கள் அனைத்திற்கும் அடிப்படையாகிய மொழி இல்லாதிருக்குமேயானால் விலங்குகளைப் போலவே மனிதனும் தனது வாழ்வை உயர்த்துவதற்கு வழிவகை கண்டிருக்கமாட்டான் எனப் பேராசிரியர் வெல்ரன் (WELTON) மொழி இன்றியமையாததெனஎடுத்துக் காட்டுகின்றார், தற்கால உளவியல் ஆராய்ச்சி சிந்திப்பதற்கு மொழி அவசியம் அன்று என்பதனை மொழி அறிவற்ற பாலர்களை ஆராய்ந்ததன் மூலம் நிரூபித்துள்ளது. ஆனால் சிந்தனை வளர்ச்சியடைவதற்கு மொழி அத்தியாவசியமானது என்ற அடிப்படையில் வெல்ரனது (Welton) கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு உயிரினங்களினதும் ஆரம்பத்திலிருந்து அறிவு வளர்ச்சியடைகின்றது என ஒரு நிலை இருக்குமாயிருந்தால் இன்றைய முன்னேற்றத்தினைக் கற்பனை செய்திருக்கவும் முடியாது. முன்னையவரின் அனுபவங்களை நாம் பெறக்கூடியதாக இருந்தமையினாலே இத்தகைய முன்னேற்றம் சாத்தியமானதாக அமைந்து காணப்படுகின்றது.

எனவே முன்னையவர்களின் அனுபவங்களைப் பெறுவதற்கு மொழி உதவியாக அமைகின்றது. நிகழ்காலத்தில் ஒவ்வொருவரும் தமது சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பெறப்படுகின்ற முடிவுகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் நாம் சிந்தனை மூலம் அறிந்தவற்றை ஞாபகப்படுத்திக் கொள்வதற்கும் இம் மொழி உதவுகின்றது. பொதுவாக நமது அறிவு மொழி ரீதியான வாத அமைப்பிலே வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த ரீதியில் மொழியின் ஈரடி இயல்பு (உ + ம்: தையலிலை) தெளிவின்மை ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக. அளவையியல் மொழியின் விபரிப்புப்பயன்பாட்டை ஆராய்ந்து திடமாகவும் தெளிவாகவும் பதங்களைப் பிரயோகிப்பதற்குரிய வழிவகைகளை விளக்கியுள்ளது.

இவ்விதம் மொழியின் உதவியுடன் எமது முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ள சிந்தனையைப்பற்றி அளவையியல் ஏன் ஆராய வேண்டுமென்ற கேள்விக்கு விடை காண்போமாயின் அளவையியலுக்குக் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணத்தினை விளங்கிக் கொள்ளலாம். நாம் சிந்திக்கும்போதும் தவறுக்குள்ளாகின்றோம், என்பதை நமது அன்றாட அனுபவங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். மனிதனின் அபூர்வ படைப்பினைச் அவனின் செயல்திறனுக்குட்பட்டு அதிவேகமாகச் செல்லுகின்ற வாகனங்களைக் குறிப்பிடலாம். ஆனால் இவை எச்சந்தர்ப்பத்தில் விபத்துக்குள்ளாகின்றன என்பதை எம்மால் ஊகிக்க முடியாமலும் அவற்றை முற்றாகத் தவிர்க்க முடியாதிருப்பதையும் நாம் காணக் கூடியதாகவும் இருக்கின்றது. எனவே ஒரு மனிதனின் சிந்தனையில் ஏற்படும் தவறுதலான மாற்றமே இவற்றுக்குக் காரணமாக அமைகின்றது. எனவே கி. மு. 4 ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த அரிஸ்ரோட்டில் (Aristotal) என்பவர் தனது அனுபவத்தில் இதே நிலைமைகளை அவதானித்தார். இவ் அவதானத்திலிருந்து அவரது மனதில் இருந்து ஓர் கேள்வி எழுந்தது. அதாவது நாம் என்றும் சரியான வழியில் சிந்திப்பதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாதா? என்பதாகும். அவ்விதம் ஏற்படுத்திக் கொள்கின்றபோது தவறுகளிலிருந்து எம்மை வழிப்படுத்திக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் அதற்கு வழிவகுக்கும் முறையில் சிந்தனையினை ஆராய்ந்தார்.

சிந்தனையானது சரியான முறையில் தொழிற்படும்போது என்ன முறையில் தொழிற்படுகின்றது என்பதையும் தவறான முறையில் தொழிற்படுவதன்மூலம் எவ்விதம் தொழிற்படுகின்றது என்பதையும் ஆராய்ந்து அவற்றை ஒப்பீடு செய்வதன் காரணமாக சிந்தனை சீரான முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்படுவதற்குரிய பிரமாணங்களையும் அமைத்துக் கொண்டார். சிந்தனை விதிகள் என ஒருமை விதி, முரணுமை விதி, நடுப்பத விலக்கு விதிகளைக் கூறினர். இவ்விதம் அமைந்தவற்றைத் தொகுத்து அளவையியலை அறிமுகப்படுத்தினர். எனவேதான் இவரை அளவையியலின் ஆரம்ப நாயகன் அல்லது அளவையியலின் தந்தை எனச் சிறப்பித்துக் கூறுகின்றன. அரிஸ்ரோட்டில் (ARISTOTAL) என்பவர் அளவையியலுக்கு ஆற்றிய மிக முக்கியமான தொண்டு. அவரால் அமைக்கப்பட்ட 'முக்கூற்று நியாயம்' ஆகும். இன்றுவரை இந் நியாயம் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. சுருங்கக் கூறின் சிந்திப்பதற்குரிய வழிவகைகளைக் காட்டி எம்மைச் சீராகச் சிந்திக்கப் பழக்குவதே அளவையியலின் நோக்கமென மரபுவழி முறை வற்புறுத்துகின்றது.

அரிஸ்ரோட்டினால் [Aristotal] தோற்றுவிக்கப்பட்ட அளவையியல் நியம அளவையியல் அல்லது உய்த்தறி அளவையியல் எனப்படும். இவ் அளவையியலின் நோக்கம் சிந்தனை தொழிற்படுகின்ற வடிவத்தை வரையறை செய்வதாகும். அதாவது எந்தவொரு சிந்தனையும் முக்கூற்று வடிவில் அமையுமென இது நிர்ணயிக்கின்றது. எனவே உய்த்தறி அளவையியல் முறையானது எடுகூற்றுக்களிலிருந்து முடிவினை இன்றியமையாத முறையில் அனுமானிப்பதற்குரிய வழிவகைகளை எடுத்துக் கூறுகின்றது. இவ் உய்த்தறி அளவையியலில் கவனிக்கவேண்டிய பண்பு நடைமுறை உண்மைகளை நோக்குவதில்லை. எடுகூற்றுக்கள் தவறுதலாக இருந்தாலும் முடிவு இம் முறையில் எடுத்துக்காட்டப்பட்ட விதிகளுக்கு அமைந்ததாகக் காணப்பட்டால் வாய்ப்பானதாகக் கொள்ளப்படும். ஆகவே உய்த்தறி முறையில் எடு கூற்றுக்களிலிருந்து இன்றியமையாத முறையில் முடிவினைப் பெறுவதை மரபு வழித் தர்க்கத்தில் தன்னிசைவுடமை அல்லது இசைவுடமை என எடுத்துக்காட்டப் படுகின்றது.

பிரான்சிஸ் பேக்கன் ( Francis Bacon ) என்ற தர்க்கன், இவர் ஆங்கில நாட்டைச் சேர்ந்தவர். இவர் தன்னிசைவை அடிப்படையாகக் கொண்ட அளவையியலானது சிக்கலான உலகத் தோற்றப்பாட்டினை விளக்கப் போதியதல்ல என்பதை முதலில் எடுத்துக் காட்டினர். அதாவது உய்த்தறி அளவையியலில் அமைந்துள்ள எடுகூற்றுக்கள் உண்மையானவையா? அவற்றிலிருந்து பெறப்படும் முடிவுக்கு அவை போதிய ஆதாரங்களாகுமா? பெறப்பட்ட முடிவுகள் நடைமுறை நேர்புகளுடன் பொருந்துகின்றதா? என்பவை முக்கியமாக நோக்கப்படவேண்டும். இவற்றிற்கு தன்னிசைவை அடிப்படையாகக் கொண்ட உய்த்தறிமுறை போதியதல்ல. இவற்றை விளக்கக்கூடிய தொகுத்தறி முறையினைப் புதிய தந்திரம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தினர். இதன் விளைவாகவே தொகுத்தறி முறையின் தந்தை எனக் கூறப்படுகின்றார். இவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட தொகுத்தறி முறை பூரணதத்துவம் வாய்ந்ததாக அமையவில்லை. இவருக்குப் பின்னர் தோன்றியவர்களால் இது திருத்தி அமைக்கப்பட்டது.

தொகுத்தறி அளவையியல் என்பது நாம் எவ்வாறு பொது உண்மைகளைப் பெற்றுக் கொள்கின்றோம் என்பதை விளக்குகின்றது. தனிப்பட்ட நிலைமைகளைப் பெற்றுக் கொள்வது என்பதை ஆராய்ந்து அவற்றுள் விளங்கும் பொது இயல்பினை வெளிக்கொண்டு வருகின்ற முறையினையே தொகுத்தறி எனலாம். இவ்விதம் பொது முடிவினைப் பெறுவதற்கு பல முறைகள் பிரயோகிக்கப்படுகின்றன. எனவே தொகுத்தறி அளவையியலின் முக்கிய இயல்பு - தாஞகை அமைகின்ற முடிபு-நடைமுறை நேர்புகளுடன் பொருந்தக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதாகும். அவ்விதம் பொருந்துமாஞல் உண்மை என்றும் பொருந்தத் தவறின் பொய்யானவை எனவும் கைவிடப்படுகின்றது. சுருங்கக் கூறின் தனிப்பட்டவற்றிலிருந்து பொது முடிவுகளைப் பெறுவதற்குரிய வழிவகைகளையே தொகுத்தறிமுறை எடுத்து விளக்குகின்றது எனலாம். மரபு வழித் தர்க்கத்தில் அறிவென்பது தன்னிசைவுடமை, பொருளுண்மை ஆகிய இரண்டையும் உள்ளடக்கியிருக்க வேண்டுமென எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆகவே உய்த்தறிமுறை தன்னிசைவுடமையை அமைக்கத் தொகுத்தறிமுறை பொருளுண்மையை அமைக்க இரண்டும் சேர்ந்து முழுமையான அல்லது வலிதான அறிவைத் தருகின்றதென்பதை ஏற்றுக் கொண்டு உய்த்தறி, தொகுத்தறி ஆகிய முறைகளை அளவையியலுக்குள்ளடக்கினர்கள். இரண்டு நெறிகளும் தோற்றத்தைப் பொறுத்து முரண்படினும் அவை இணையும்போது முழுமையான எளிதான அறிவை நிர்ணயிக்கின்றது. உய்த்தறியானது பொது உண்மையிலிருந்து தனிப்பட்ட அல்லது சிறப்பு நிலைக்கு அது பொருந்துகின்றதா? அல்லது பொருந்தவில்லையா? என்பதை நோக்குகின்றது. இவ்வழியில் முரண்படினும் இரண்டும் ஒன்றுக்கொன்று உதவும் முறையில் வலிதான அறிவை நிர்ணயிக்கின்றன என மரபு வழியில் ஏற்கப்படுகின்றது. வெல்ரன் (Welton) மரபு ரீதியில் அளவையியலை நோக்கி மேற்கூறிய விளக்கத்தை உள்ளடக்கிய வகையில் வலிதான பகுத்தறிவின் இலக்கணங்கள் பற்றிய அறிவு எனச் சுட்டிக் காட்டியுள்ளார். மேலெடுத்துக் காட்டப்பட்ட அளவையியல் பற்றிய மரபு ரீதியான வரைவிலக்கணம் டாக்டர் ஆர். டி குணரத்தின (கலாநிதி) [ Dr. R. D. Gunaratna] என்பவரிஞல் தவருனதென எடுத்துக் காட்டப்படுகின்றது, எனவே நவீன கண்ணோட்டத்தில் அளவையியல் என்பது வர்தங்களின் நியம வாய்ப்புப் பற்றிய ஆராய்வு என வரையறுக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இச் சிறப்பு மலருக்கு ஆதரவு நல்கி வரவேற்கும்
## தங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்

திரு. க. தர்மகுணசிங்கம், தம்பிலுவில் ம. வி., தம்பிலுவில்.
திரு. C. N. செல்வராஜா, தம்பிலுவில் ம. வி., தம்பிலுவில்.
திரு. ச. நாகராசா, தம்பிலுவில் ம. வி., தம்பிலுவில்.
திருமதி. கௌ. சரவணபவானந்தன், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
திருமதி. S. மகேந்திரன், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
o திரு. ஆ. சிவலிங்கம், தமிழ் ம. வி., தலவாக்கொல்லை
செல்வி. S. கமலேஸ்வரி, Durussalam M. V. Thihariya.
திருமதி. ப. பத்மநாதன், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
திருமதி. ம. சுந்தரலிங்கம், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
திருமதி. R. அச்சகம்பிள்ளை, திருக்குடும்ப கன்னியர்மடம் (ஆங்.) யாழ்ப்பாணம்
திருமதி. T. சிவலோகநாதன், திருக்குடும்பகன்னியர் மடம் (ஆங்.) யாழ்ப்பாணம்
திருமதி. C. இராஜரட்ணம், திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்.) யாழ்ப்பாணம்
o திரு. வி. நகுலேசசர்மா, புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை
செல்வி. அ. சந்தையா, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
திருமதி, T. S. யோகீஸ்வரன், இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
திருமதி. நீ. நகுலேசபிள்ளை, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
o செல்வி M சின்னத்தம்பி, விவேகானந்த ம. வி., கொழும்பு - 13
திரு. க. நாகராசா, யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்
o திரு. ஐ. ஏபிரகாம்லிங்கன், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்
செல்வி. பொ. செல்லையா, யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்
o திரு. க. யோகவனம், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. நா. இராஜரத்தினம், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. செ. கனகேந்திரம், கிளிநொச்சி ம. வி., கிளிநொச்சி
செல்வி S. N. செல்லையா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
திருமதி A. அலோசியஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
திருமதி. ப. மகாலிங்கம், வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்
திரு. S. இராசதுரை, வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்
திரு. சு. கணேசன் வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்
திரு. க. சுந்தரகாந்தன், முத்துத்தம்பி ம. வி., யாழ்ப்பாணம்
திருமதி அ. சிவபாதசுந்தரம், முத்துத்தம்பி ம. வி., யாழ்ப்பாணம்
திருமதி. ம. சண்முகலிங்கம், முத்துத்தம்பி ம. வி., யாழ்ப்பாணம்
திரு. மா. பாக்கியநாதன், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
o திரு. அ. யோசெவ்ஸ், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. வீ. தியாகராஜா, புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. C. R. J. சூரியகுமார், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. J. A. J. அருமைநாதன், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. R. A. இலகரத்தினம், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. அ. அகஸ்ரின், பரி யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்
o திரு. செ. ப. ஜீவானந்தம், பரி யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.
திருமதி லெ. பரராசசிங்கம், மகாவித்தியாலயம், நயினாதீவு
செல்வி இ. வீரசிங்கம், புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா, யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்,
திரு. பொ. வில்வராசா, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. சே. சிவசுப்பிரமணியசர்மா, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்
o திரு. செ. பாலராமன், சன்மார்க்க ம. வி, யாழ்ப்பாணம்
o திரு. N. தளபாலசிங்கம், விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
o திரு. க. சண்முகநாதன், ஆனைப்பந்தி இ. கி. மி. மகளிர் ம. வி., மட்டக்களப்பு
திரு. S. தெய்வநாயகம், கோட்டைமுனை ம. வி., மட்டக்களப்பு
திரு. ந. சுந்தரமூர்த்தி, கோட்டைமுனை ம. வி., மட்டக்களப்பு
திரு. K. பேரம்பலம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்
செல்வி நா. வேலுப்பிள்ளை, கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்
திரு. S. சாந்தலிங்கம், கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்
திரு. மா. புவனேந்திரன், வட்டக்கச்சி ம. வி., வட்டக்கச்சி
திரு. எஸ். இராஜகுலசிங்கம், வயாவிளான் ம. ம. வி., வயாவிளான்
திரு. K. R. சுரேந்திரம் KG/Sulaimaniya M. M. V., Kannattota
o திரு. இ. அமிர்தலிங்கம், கொழும்புத்துறை துரையப்பா ம. வி., யாழ்ப்பாணம்

o - பழைய மாணவர்கள்

## பழைய மாணவர்களும் அபிமானிகளும்

திரு. ஐ. முருகையா, 292 (540) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
திரு. பொ. தர்மேந்திரன், 7. ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
திரு. வ. செந்தில்ராஜன், "செந்திலகம்" 21, விதானையார் வீதி, யாழ்ப்பாணம்
திரு. V. சுதர்சன், 6/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்
செல்வி இ. இரஞ்ஜனி, 100, கண்டிவீதி, யாழ்ப்பாணம்
செல்வி ஏ. பரிமளவல்லி, 39, பாரதி வீதி, யாழ்ப்பாணம்
திரு. சு. சண்முகரட்ணம், 52, ஆனந்தகுமாரசுவாமி றோட், யாழ்ப்பாணம்
திரு. சி. சிவமோகன், 198, கனகரட்ணம் வீதி, யாழ்ப்பாணம்
திரு. M யோகராஜா, 392, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
செல்வி நா. சசிதா, 52, நொத்தாரிஸ்லேன், அரியாலை, யாழ்ப்பாணம்
திரு. ம. பூவேந்திரன், 7, வைரவர்கோவில் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்
திரு. வ. அருளானந்தம், 33/14 முதலியார் ஒழுங்கை, நல்லூர் தெ. யாழ்ப்பாணம்
திரு. பொ. கணேசநாதன், 24, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பா[ணம்
திரு. D. ஜெயராமன், 255, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
திரு. பொ. சபேசன், 74, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்
திரு. க. வரதன், "புஸ்பமகால்", 4ம் வட்டாரம், நயினாதீவு
செல்வி சா. திருமகள், "கலைச்சோலை", 6ம் வட்டாரம், நயினாதீவு
செல்வி M அருளானந்தம், அச்சுவேலி
செல்வி G. சந்திரசேகரன், 263, பிரதான வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்
செல்வி S. தம்பிராஜா, 7ம் மைற்கல், சங்கானை
செல்வி சி. மீரா, 9, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
திரு. இ. கருணாகரன், 159/3, நொத்தாரிஸ் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்
திருமதி V. சிறிதரன், 165/1, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்
செல்வி த. தேவராணி, 22, புறாடிலேன், அரியாலை, யாழ்ப்பாணம்
செல்வி ச. மதிவதனி, 11/2 நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

பொருளாளர், வ. மா. மன்றம்.
31-10-1984



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி மறப்பது நன்றன்று.....

❋ ஆசிகளை வழங்கி மலரினைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும்,

❋ விடயதானங்களை அளித்து மலரின் நறுமணம் கமழச்செய்த விரிவுரையாளர்களுக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும்,

❋ ஆக்கமும் ஊக்கமும் தந்து மலர் வெளியீட்டுக்கு பல வழிகளிலும் உதவிபுரிந்த அதிபர் திரு. S. V. ஆறுமுகம் அவர்கட்கும்

❋ தம்மால் இயன்றவரை எமது மன்ற வளர்ச்சிக்காக அயராது உழைத்து உற்சாகம் ஊட்டி, ஜோதியின் வெளியீட்டுக்கு உதவிய மதிப்புக்குரிய உபகாப்பாளர் திரு. வ. க. பாலசுப்பிரமணியம் அவர்கட்கும்

❋ எமது வெளியீட்டு விழாவில் கலந்து ஆசியுரை நல்கச் சம்மதித்த நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி, வர்த்தக வட்டாரக் கல்வி அதிகாரி திரு. S. சிவராஜா, எமது முன்னை நாள் அதிபர் திரு. இ. சச்சிதானந்தம்; நிறுவகர் நினைவுரை நிகழ்த்திய வித்துவான் திரு. வீ. கதிரவேலு; வெளியீட்டுரை நல்கிச் சிறப்பித்த பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் பழைய மாணவர் திரு. சோ. சிவசுந்தரம், முதற்பிரதியைப் பெற்று ஊக்குவித்த வைத்திய கலாநிதி திருமதி. மனோரஞ்சிதம் வாமதேவன் (பழைய மாணவி) அவர்கட்கும்,

❋ ஆய்வுரை நல்கி ''வணிகஜோதி''யை மேம்படுத்திய பேராசிரியர் திரு. N பாலகிருஷ்ணன் (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக் கழகம்) அவர்களுக்கும், திரு. அ. இரத்தினம் (வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்தொழில் நுட்பநிறுவனம்) அவர்களுக்கும்,

❋ தேடியபோதெல்லாம் முன்வந்து இன்முகத்துடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிய திரு. க. வை. தனேஸ்வரன் அவர்கட்கும்,

❋ மாணவரது அளவையியல் ஆக்கங்களை சரிசெய்துதவிய வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் ஜனப். எம். எஸ். எ. எம். முகுதார் அவர்கட்கும்,

❋ தேவையான சந்தர்ப்பங்களில் மன்ற வளர்ச்சிக்காகவும், ஜோதியின் பொலிவுக்காகவும், எமது பணிகளை நெறிப்படுத்தி உதவிய உபகாப்பாளர்களான திரு. R. மருதலிங்கம், திருமதி பா. கனகரத்தினம், திரு. க. பழனிவேற்பிள்ளை ஆகியோர்களுக்கும், பகுதித்தலைவர் திரு. சி. உபயசேகரம் அவர்கட்கும்,

❋ இம்மலரைச் சிறப்புற அமைக்க உற்ற நண்பர்களாகவும், அச்சிட்டு வனப்புடன் திகழவைத்த சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களாகவும் செயற்பட்ட செட்டியார் அச்சக முதல்வர்களுக்கும், ஊழியர்களுக்கும்,

❋ சுற்றில் எமது அழைப்பை ஏற்றுச் சபையைச் சிறப்பிக்கும் எமது வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும்,


எமது இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

இதழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PENTAGON MILLS & INDUSTRIES

ENGINEERS, MILLERS & BUILDING CONTRACTORS.



SPECIALISTS IN LATHE WORKS, CARPENTRY WORKS,
MILLING FOOD STUFT, MILLING TIMBER
AND
BUILDING CONSTRUCTIONS

*Manufactors of:*

CIRCULER SAW MILL, HORIZONTAL SAW MILL,
WOOD WORKING MACHINES, COLLAPSIBLE GATES,
PLAIN GATES, STEEL TRUSSES, IRON GRILLS,
SPIRAL STAIR CASES, BALCONY RAILINGS,
HAND RAILINGS AND STEEL FURNITURE ETC.

**271, Kachchcri Nallur Road,**

**NALLUR,** **JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PUNITHA

## JEWELLERY MART

**32, KASTHURIYAR ROAD, JAFFNA.**

★ நவநாகரீக டிசைன்களுக்கு

★ உத்தரவாதத்திற்கு

★ உறுதியான வேலைக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்!

★ ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். ★

# புனிதா

## ஜுவல்லறி மார்ட்

32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org